
श्रीलंकायाः प्रथम गुरुपीठाधिपते;अशीतितम
जयन्ति महोत्सव अनुस्मरणे प्रकाशितम्

குரு பீடாதிபதியின் 80வது

# ஜெயந்தி விழா மலர்

जयन्ति पुष्पम्



அருள்ஜோதி

## சிவஸ்ரீ ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார்

(இலங்கையின் முதலாவது இந்து மத குரு பீடாதிபதி)

ஸ்தாபகர்: ஸ்ரீ தேவி ராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம், இல. 98, நாயன்மார்கட்டு, நல்லூர், யாழ்ப்பாணம்.

2002 - 08 - 06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகில இலங்கை இந்து மத குரு பீடாதிபதி
டாக்டர் ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார்
அவர்களின்

# 80 வது

# ஜெயந்தி விழா மலர்


பதிப்பாசிரியர்

திருமதி. ஹேமா சண்முகசர்மா

*B.A. (Cey.) Dip in Education*

*Dip in Journalism*

ஆசிரிய ஆலோசகர்

மேல் மாகாணம்



*வெளியீடு*

ஸ்ரீதேவி குருகுல சபாபீடம்

நாயன்மார்கட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்





எமது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய
தந்தையார் அவர்களின் பாதகமலங்களுக்கு
இம்மலரைச் சமர்ப்பணம் செய்கிறோம்

சிவஸ்ரீ சாம்பசிவ சண்முகநாதக் குருக்களும் சகோதரர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரும்பினின் வலியரேனும் எழுத்தறிவில்லாரேனும்
மருப்பினாற் பாரதத்தை வரையினிற் பொறித்தான் தன்னை
விருப்பொடு அர்ச்சனையியற்றி விரதமுமநுட்டித்து அன்னோன்
திருப்பதும் மறவார் என்றும் திருவருள் பெறுவரன்றே

(விநாயக புராணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குருபீடாதிபதியின் பதினாறு செல்வப் பேறுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலரின் இதழ்களாக.....

* ஆசிச் செய்திகள்

* கட்டுரைகள்


1. சிம்மம் என்றொரு சிவாச்சாரியார் 1-11

2. ஓம் சக்தி - ஸ்ரீதேவி மகத்துவம் 16-17
சிவஸ்ரீ டாக்டர் சாம். சண்முகநாத சிவாச்சாரியார்

3. மங்களம் தரும் வேதம் - ஆகமம் - யாகம் 24-38
பிரம்மஸ்ரீ - சாம்பசிவ - சோமாஸ்கந்த சிவாச்சாரியார்

4. வைஷ்ணவ நெறி 42-43
சோ. சந்திரகாந்த குருக்கள்

5. பூதசுத்தி 46-47
சிவஸ்ரீ சிவ நித்தியானந்தக் குருக்கள்

6. நலங்கள் பல நல்கும் நவக்கிரகங்கள் 51-54
சிவஸ்ரீ சாம் தணிகாசலக் குருக்கள்

7. ஆலயமும் பிரார்த்தனையும், மனிதப்பிறவியின் உயர் நோக்கத்தை நிறைவுசெய்கின்றன. 55-60
சிவஸ்ரீ சாம் அகிலாண்டேஸ்வரக் குருக்கள்

8. உள்ளிருக்கும் உள்ளானை பூஜித்தல் 63-64
பிரம்மஸ்ரீ கிருஷ்ணானந்தசர்மா

9. சைவமும் வைஷ்ணவமும் 77-78
கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள் அவர்களின் பதிவேட்டிலிருந்து

10. வேதோ (அ) கிலோ தர்ம மூலம் 86-89
சிவஸ்ரீ பால ரவிசங்கர சிவாச்சாரியார்

11. மெய்ஞானத்தில் விஞ்ஞானம் 92-93
பிரம்மஸ்ரீ நீ. சுதாந்தசர்மா




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. கேதார கௌரி தத்துவம் 99-100
எஸ். ஜெகதாம்பாள்

13. நாற்பாதத்தில் இறைவன் 104-105
சிவஸ்ரீ ஆ. மணிவண்ண சிவாச்சாரியார்

14. வைரவக் கடவுள் 107-108
சிவஸ்ரீ டாக்டர் சாம் மணிக்குருக்கள்

15. சைவத்தின் தொன்மை 109-110
சிவஸ்ரீ கௌரி கணேசக் குருக்கள்

16. திருமறையும் திருமுறையும் 113-114
சிவஸ்ரீ சாம்பசிவ ஜெகதீஸ்வரக் குருக்கள்

17. குருகுல வாசம் 116-117
சிவஸ்ரீ து. உமாசங்கரக் குருக்கள்

18. ஆலய வழிபாட்டில் பாலஸ்தாபனத்தின் சிறம்பும் விலக்கப்பட வேண்டிய விக்கிரகங்களும் 119-124
சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள்

19. அந்தர் மாத்ருஹ நியாசம் 125-129
சிவஸ்ரீ பு. சரவணபவானந்த குருக்கள்

20. பெரிய புராணத்தில் அந்தணர்கள் 131-134
சிவஸ்ரீ சண்முகவடிவேல்

21. திருஊஞ்சற் பாமாலை 135-139
குருபீடாதிபதி சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்முக ஆளுமைப் பண்பாளர்

"லோகா சமஸ்தா சுகினோ பவந்து" என உலக சேமத்துக்காய் நாள் தோறும் நாதனைத் தொழுதேத்துவது அந்தணர் குலம். முப்போதும் திருமேனி தொட்டுப் பூஜிக்கும் பேறுபெற்றவர்கள் அந்த உத்தமர்கள். அக்னிகாரியம் செய்து உச்சரிக்கும் மந்திர த்வனியாலே இயற்கைச் சக்திகளையே தம் வசப்படுத்துபவர்கள் இவர்கள். ஆத்மார்த்த பூஜை செய்து ஆத்ம பலத்தை வளப்படுத்துபவர்கள் இவர்கள். உதாத்தம், அநுதாத்தம் என்று சொல்லக்கூடிய வகையிலே மந்திரங்களை நியமம் தவறாது உச்சரிக்கும் திறமையுள்ளவர்கள் அந்தணர்கள். வேதம், ஆகமம் வகுத்த விதிப்படி அம் மந்திரங்களை கையாள்பவர்கள் இவர்கள். தர்மகாரியங்கள் பலவற்றைச் செய்து உத்தமப் பேறு உடையவர்களாகத் திகழ்பவர்கள் இவர்கள்.

இவ்வுத்தம தோன்றல்கள் பலர் இப்புனித பூமியிலே காலத்துக்குக் காலம் தோற்றம்பெற்று உலக நிலைபேற்றுக்குக் காரணமாக இருந்திருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் நாம் என்றும் நன்றிக்குரியவர்களே.

இந்த வகையில் இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் பிறந்து, நடுப்பகுதியிலே சமுதாயம் பயனுற வாழ்ந்து நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலே அமரத்துவம் எய்தியவர் இன்றைய ஜயந்தி விழா நாயகன் சிவஸ்ரீ-ஸ்கந்த-சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்கள். இந்த நூற்றாண்டில் வாழ்ந்த அந்தண சிரேஷ்டர்களில் சிறப்பிடம் பெறுகின்றவர் இவர்.

சுமார் அரை நூற்றாண்டு காலத்துக்கு மேல் அவர் ஆற்றிய சமயப் பணிகளின் அறுவடைகளாகத் திகழ்பவர்கள் அவருடைய புத்திரர்கள். இன்று உலகளாவிய ரீதியில் இவர்கள் ஆற்றிக்கொண்டிருக்கும் இறைகாரியங்கள் யாவும் தந்தையின் சிறப்பாற்றற் தன்மைகளுக்குச் சான்றுகளாக அமைகின்றன. குருபீடாதிபதியின் பன்முக ஆளுமைத் தன்மைகளால் கவரப்பட்டவர்கள் பலர் இன்று நம்மிடையே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இவர்களின் அனுபவங்களை எல்லாம் இயன்ற வகையில் தொகுத்து அச்சுப் பதிவாக்கி வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணம் அவரின் புத்திரர்களின் மனதிலே நிலைத்திருந்தது. அந்தப் பயனுள்ள சிந்தனையானது செயல்வடிவம் பெறுகின்ற புனித நன்நாள் தான் இன்றைய தினம். இன்றைய நன்நாளிலே அவருடைய நற்பண்புகள் அனைத்தையும் நாமும் மனதிற்கொண்டு எமது வாழ்க்கைப் பயணத்திற்கான நல் அனுபவங்களாகக் கொள்வோமாக.

பதிப்பாசிரியரின் சிந்தனைத்துளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சிம்மம் என்றொரு சிவாச்சாரியார்....

## (குருபீடாதிபதியின் வாழ்க்கை விபரங்கள்)

"குருபீடாதிபதி"
"சிவாகமசிரோமணி" "வித்யாசாகரம்" "சிவபூஜாதுரந்தர்"
கலாநிதி – அருள்ஜோதி,

## ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சார்யார்

**M. I. H. & M. D. G. & D. A. M.**



இந்து சமயத்திலே குரு, ஆசார்யார் என்ற இருபதங்கள் முக்கியத்துவமுடையன. குரு என்றால் அஞ்ஞான இருளை அகற்றி ஞான ஒளியையூட்டுபவர் என்று அர்த்தப்படும்.

'ஆசார்யார்' என்றால் அவர் சாஸ்திரங்களை ஆராய்ந்தும், அவை காட்டியவழி நடந்தும், ஏனையவர்களுக்குமதைப் போதிப்பதோடு ஏனையோரையும் அதன் வழி நடக்கச் செய்யும் ஒருவரே என 'அமரகோஸம்' நிகண்டு விளக்கந்தருகின்றது.

மேற்கூறிய லக்ஷணங்கள் அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்றவராக, இலங்கையின் முதலாவது இந்துமத குருபீடாதிபதி அமரர் ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் விளங்கினார். தோற்றத்தால் மட்டுமல்ல கல்வி கேள்விகளாலும் அவரது சமகாலப் பிராமண சிரேஷ்டர்கள் மத்தியில் ஜாம்பவானாகத் திகழ்ந்தார். 'சிவாச்சார்ய சிம்மம்' என்ற பட்டம் அவருக்கே உரித்தான, வேறுயாருக்கும் பொருந்தாத பட்டம் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறான சிறப்புக்களை உடைய சாம்பசிவ சிவாச்சாரியார், நல்லூர் கந்தசாமி கோவிலடியைப் பூர்வீகமாகக் கொண்டவர்.

நல்லூர் கந்தசாமி கோவிலை மையமாகவைத்து நல்லூரில் சைவத் தமிழ் பண்பாடு வளர்ந்து வந்தது. யாழ்ப்பாண இராச்சியம் நல்லூரைத் தலைநகராகக் கொண்டு ஆளப்பட்டு வந்தது. நல்லூர் என்றவுடனே எம் நினைவிற்கு வருவது நல்லூர்க் கந்தனின் திருக்கோவிலே. யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்திகள், தென்னகத்திலிருந்து பிராமணக் குடும்பங்களை கொணர்ந்து, ஆலயத்தை சூழவுள்ள பகுதிகளில் குடியமர்த்திக், கந்தனின் பூசை வழிபாடுகள் குறைவின்றி நடைபெற ஏற்பாடு செய்தனர். சாம்பசிவ சிவாச்சாரியாரின் முன்னோர்களும் இத்தகையவர்களே.

ஷடமர்ஷன கோத்ரம் - ஆபஷ்தம்ப சூத்திரத்தைச் சேர்ந்த பண்டிதர் சபாபதிக் குருக்களின் மைந்தனும், நல்லூர் வயிரவர் கோவில் ஐயா என மக்கள் மத்தியில் நன்கு அறிமுகமானவருமான ஸ்கந்ததாசக் குருக்கள் அவர்கள் மாந்திரீகத்தில் வல்லவராயும், புராணபடன வித்தராயும் விளங்கியவர். ஆத்மாவின் பொருட்டு ஆத்மார்த்தத்தையும், உலக மக்களின் நலன் வேண்டி பராசுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாக்களை செய்கிறதாகிய பொறுப்பினை ஸ்கந்ததாசக் குருக்கள் ஏற்றுச் செவ்வனே செய்துவந்தார் அவரும் அவரது இல்லாள் தர்மாம்பாளும் சேர்ந்து செய்த இல்லறம் என்னும் நல்லறத்தினால், வாய்த்த பிள்ளையாக இப்பூலகிலே சாம்பசிவக் குருக்கள் அவர்கள் அவதரித்தார்கள். அவருடன் உடன் பிறந்த சகோதரர்களாக பாலசுப்பிரமணியக் குருக்கள், இரத்தினக் குருக்கள், சச்சிதானந்தக் குருக்கள், சாரதாம்பாள், கமலாம்பாள், திருஞானசம்பந்தக் குருக்கள், ஞானாம்பாள், ஸ்ரீ ராஜாம்பாள் ஆகியோர் பிறந்தார்கள்.

"அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுகலான்"

எனும் பொய்யாமொழி வாக்கிற்கேற்பக் குருக்கள் ஐயா அவர்களின் இளமைக்காலம் அமைந்திருந்தது. இக வாழ்வுக்கேற்ற கலைகளைப் பயின்றதுடன் சமஸ்கிருதக் கல்வி கேள்விகளிலேயும் சிறந்துவிளங்கினார். குருக்கள் ஐயா அவர்கள் தமது 'ஆரம்ப, உயர் கல்வியை பரமேஸ்வராக் கல்லூரியிலே கற்றார். அவர் கல்விகற்ற பரமேஸ்வராக் கல்லூரியே இன்றைய யாழ் வளாகமாகும். வேதாகமங்களைச் சிதம்பர சாஸ்திரிகளிடத்துக் கற்றார் 'பிராசீன' பாடசாலையில் பண்டித வகுப்பில் கற்றுத் தேர்ந்து பண்டிதர் பட்டமும் பெற்றார். அங்கேயே சம்ஸ்கிருத பாலபண்டிதர் பரீட்சையில் சித்தியெய்தி 'பாலபண்டிதர்' பட்டமும் பெற்றார்.

கணீரென்ற சிம்மக்குரலாலும் எதற்கும் அஞ்சா நெஞ்சுரமும், நேர்மைத் திறனும், தவறை இடித்துரைக்குத் தன்மையும் தனது நியாயங்களைத் தக்க சான்றுகளைக் காட்டி நிறுவந்தன்மையும், சமயோசித புத்தியும், அவருக்குக் குருமார்கள் மத்தியில் தனியான கௌரவத்தையும், மரியாதையையும் பெற்றுக்கொடுத்தன. சிவாச்சாரியாருக்கிருந்த பல்துறைத் திறமைகள் பல்வேறு பரிமாணங் களில், பல்வேறு தளங்களிலும் அவரை இனங் காட்டியுள்ளன.

அவரது ஆளுமைகளை, முக்கியமான மூன்று தளங்களிற் காணலாம்.

1. மதகுருவாக (Clergical Leader) ஐந்து தசாப்தங்களுக்கு மேலான சேவை.
2. சமூக சேவை.
3. கலைப்பணி என்றவாறாக அவை அமையும்.

நீண்டதொரு குருத்துவப் பாரம்பரியத்தின் வழிவந்த சிவாச்சாரியார் அவர்கள்,

பிரதிஷ்டா பிரதம குருவாக
போதகாச்சாரியராக
மகோற்சவ குருவாக
உபநயன குருவாக
வைதீக விவாஹ குருவாக
தீக்ஷா குருவாக
அபரக் கிரியை வல்லுனராக

என்றவாறு பல அம்சங்களிலும் முத்திரை பதித்துக்கொண்டவர். கிரியைகள் ஆற்றும் போது ஏற்படும் விளக்கக் குறைபாடுகள், ஐயப்பாடுகளை தனக்கேயுரிய பாணியில் விளக்கங்கொடுத்துத் தீர்த்துவைக்கும் திறமை அவரிடமேயிருந்தது. இதற்குதாரணமாக ஒரு சம்பவத்தை மட்டும் குறிப்பிடலாம்.

1972ம் ஆண்டு சிவராத்திரி விரதம் எப்போது அனுஷ்டிக்கப்பட வெண்டுமென்பதில் இரண்டு விதமான கருத்துக்கள் நிலவின. ஒருசாரார் "மார்ச் மாதம் 13ம் திகதியே அனுஷ்டிக்கப்பட வேண்டு"மென வாதிட்டனர். இன்னொரு சாரார் "பெப்ருவரி 13ம் திகதியே சிவராத்திரி விரதம், அன்றுதான் அதை அனுஷ்டிக்க வேண்டும்" என்று மாறுபட்ட கருத்துக்கள் நிலவிய நேரத்தில் சைவச் சான்றோர்கள் ஒன்றிணைந்து, சரியான திகதியை அறிவிக்க எழுவர் கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுவை அமைத்தனர். அவர்களில் சாம்பசிவ சிவாச்சாரியாரும் ஒருவராவர். இறுதியில் அக்குழுவில் அறுவர் சேர்ந்து மார்ச் 13ம் திகதியே அனுஷ்டிக்க வேண்டுமென அறிவித்தனர். ஆனால் இவர் மட்டும் அதை ஏற்காது பெப்ருவரி 13ம் திகதியே விரதம னுஷ்டிக்கப்பட வேண்டுமென ஆணித்தரமாகக் கூறினார். ஆகமங்களிலிருந்தும், சோதிட நூல்களில் இருந்தும் ஆதாரங்களுடன் வாதிட்டார். இது அன்று பெருஞ் சர்ச்சையைத் தோற்றுவித்தது இவர் தனது பக்க நியாயங் களுடன் பத்திரிகைகளில் கட்டுரைகளை இது தொடர்பாக எழுதி வெளியிட்டார். அவ்வாறான ஒரு 'புலமை சார்ந்தவராக' யாழ் - நாயன் மார்கட்டு சாம்பசிவ சிவாச்சாரியார் விளங்கினார்.

அன்னாரது இல்லமான நாயன்மார்கட்டு அருள்ஜோதி நிலையத்தில் ஒரு நூலகமே யிருந்தது. மிக அருமையான, தேடற்கரிய நூல்களையெல்லாம் அவர் தேடிப் பாதுகாத்து வைத்திருந்தார். புத்தகங்களென்றால் அவருக்கு உயிர். அவர் நூல்களுக்குச் செலவிட்ட தொகையோ ஏராளம்.

சைவ சித்தாந்த சாத்திரங்கள்,
வேதாகமஞ் சம்பந்தப்பட்டவைகள்
புராண இதிஹாஸங்கள்
ஜோதிட நூல்கள்
மாந்திரிக ஏடுகள்
வைத்திய நூல்கள்

திருமுறைகள் அடுத்த பந்தியில் நூல்களும் அங்கிருந்தன. பல அந்தண சிரேஷ்டர்களும், அறிஞர் பெருமக்களும் பழமரத்தை நாடிவரும் பறவைகள் போல சாம்பசிவ சிவாச்சாரியாரைத் தேடிவந்து தமது சந்தேகங்களை நிவர்த்தி செய்வர். மிக அரிய பத்ததித் திரட்டுகள் அவரிட மிருந்தன. இன்று அவை புத்தகங்க ளாக அவரது புத்திரர்கள் மூலம் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

1960களில் "ஆபஸ்தம்பபூர்வப் ப்ரயோகம்" பாகம் 1, பாகம் 2 என்ற நூல்களை உரையெழுதி வெளியிட்டு, இலங்கையில் மட்டுமல்லாது தமிழகத்திலும் பெரும் பாராட்டுக்களைப் பெற்றவர் ஏராளமான சிறு நூல்கள், துண்டுப் பிரசுரங்கள், மாத வெளியீடுகள் என்பனவற்றில் அவரது ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. இன்னும் ஏராளமான கையெழுத்துப் பிரதிகள் அச்சு வாகனமேறாமல் உள்ளன. அவை படிப்படியாக வெளிவரும். அவற்றில் ஆபஸ்தம்ப அபரப்பிரயோகமும் ஒன்றாகும்.

நயினை ஐ. கைலாஸநாதக் குருக்கள் இவரின் தீட்சா குருநாதராவார். தனது குருநாதருடன் இணைந்து குருத்துவம் செய்த பெருமைக்குரியவர் சிவஸ்ரீ சாம்பசிவ சிவாசாரியார் அவர்கள்.

சுன்னாகம் சோமாஸ்கந்தக் குருக்கள்
இணுவில் இராமநாதக் குருக்கள்
கோப்பாய் வைரவநாதக் குருக்கள்
உரும்பிராய் சபாரத்தினக் குருக்கள்
ஊரெழு வைத்திய நாதக் குருக்கள்
வட்டுக்கோட்டை க.த. குருமூர்த்திக் குருக்கள்,
காரைநகர் கணபதீஸ்வரம் குருக்கள்
நியாயசிரோன்மணி - கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள்
நாராயண சாஸ்திரிகள்
நல்லூர் குமாரசாமிக் குருக்கள்
பேராசிரியர் கா. கைலாஸநாதக் குருக்கள்

போன்றோர் இவரது சமகால அந்தண சிரேஷ்டர்கள் என்பதுடன், இவருடன் இணைந்து குருத்துவமுஞ் செய்துள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னாரது குடும்ப வாழ்க்கை

சாம்பசிவக் குருக்கள், முள்ளியவளைக் கல்யாண வேலவர் ஆலயத்தின் குருவாகத் திகழ்ந்த பிரம்மஸ்ரீ கணேசையர், செல்வ நாயகி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி கௌரியம் பாளையும், தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோவில் பூஜா பரம்பரையைச் சேர்ந்த ஜெகதீஸ்வர ஐயர் பிரஹத்குஜாம்பாள் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி செல்லம்மாளையும் திருமணஞ் செய்து

சண்முகநாதக் குருக்கள்
தணிகாசலக் குருக்கள்
ஜெகதாம்பாள்
கனகாம்பிகை
விஜயலக்ஷ்மி
கௌரி கணேசக் குருக்கள்
சோமாஸ்கந்தக் குருக்கள்
செந்தில் நாதக் குருக்கள்
தேவ மனோகரி
சரவணபவக் குருக்கள் (ஐயப்பதாசன்)
பங்கஜவல்லி
நித்திய லக்ஷ்மி
பிரகதாம்பாள்
ஜெகதீஸ்வரக் குருக்கள்
ஸ்ரீ சரஸ்வதி
அகிலாண்டேஸ்வரக் குருக்கள்

ஆகிய பிள்ளைகளைப் பெற்று மகிழ்ந் திருந்தனர்.

மூத்தவர் சண்முகநாதக் குருக்கள் பாடசாலைக் கல்வியுடன், ஆயுர்வேத கல்வியை இலங்கை ஆயுர்வேத கல்லூரியிற் கற்றுப் பட்டம் பெற்றவர். தந்தை வழிவந்த மருத்துவக் கல்வியறிவும் அவருக்கு துணைபுரிந்தது. இவர் கட்டுடையைச் சேர்ந்த சிவசுப்பிரமணியக் குருக்கள் (சுப்பையாக் குருக்கள்) தம்பதி களின் புதல்வி ராஜராஜேஸ்வரியை மணந்து பிள்ளைச் செல்வங்களுடன் இலண்டன் மாநகரில் சிறப்பாக வாழ்ந்து கொண்டிருக் கின்றார். இலண்டன் வாழ் இந்துகளின் கடமைகளை நிறைவேற்றி வருகின்றார்.

அடுத்தவர் தணிகாசலக் குருக்கள், நல்லூர் கணபதீஸ்வர குருகுலத்தில் படித்து பால பண்டிதர், சமஸ்கிருத பண்டிதர் பரீட்சைகளில் தேறி, மிகுந்த புலமையாளராக விளங்கு கின்றார். நல்ல சாரீர வளம் உடையவர். தெல்லிப்பளை சதாசிவ ஐயரின் கனிஷ்ட புதல்வி ஜெயலட்சுமியை மணந்து புத்திர பாக்கியங்களுடன் தென்னாபிரிக்கா முத்து விநாயகர் தேவஸ்தானத்திற் கடமையாற்று கின்றார்.

சாம்பசிவ சிவாச்சாரியாரின் சிரேஷ்ட புத்திரி ஜெகதாம்பாள் கதாபிரசங்கம் செய்வதில் வல்லவர். நல்ல சாரீரமுடைய இவர் புராணக் கதைகளை மிக அழகான முறையில் கதாபிரசங்கம் செய்யும் திறமையுள்ளவர். இலங்கை வானொலியில், சைவ நற்சிந்தனை நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு சிறப்பிப்பவர். தந்தையின் இறுதிக் காலம் வரை அவருடன் கூடவே இருந்து அவருக்குப் பணிவிடைகள் புரிந்தவர்.

அடுத்த புத்திரி கனகாம்பிகை. இவர் பறாளாய்-சுழிபுரம் வைத்தீஸ்வரக் குருக்கள் புத்திரன் சிவஸ்ரீ நித்யானந்தக் குருக்களை மணந்து கனடாவில் வசிக்கின்றார்.

அடுத்தவர் விஜயலக்ஷ்மி. சங்கானை இலுப்பைத்தாழ் - முருகமூர்த்தி கோவில் ஆதின குரு சிவானந்தக் குருக்களின் கனிஷ்ட புத்திரன் நித்தியானந்தக் குருக்களைக் கரம்பிடித்துப் புத்திரச் செல்வங்களுடன் சீருஞ்சிறப்புமாக வாழ்ந்து வருகின்றார்.

அடுத்தவர் கௌரி கணேசக் குருக்கள் அவர்களும் தந்தையாரைப் போலவே கிரியைகளை அழகாகவும், நேர்த்தியாகவும், செய்வதில் வல்லவர். சமய உண்மைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எளிய உதாரணங்கள் மூலம் விளக்கும் ஆற்றல் அவரிடத்தில் உண்டு. ஜோதிஷம், சிற்பசாத்திரம், ஓவியம் வரைதல் என்பன வற்றிலும் வல்லவராகத் திகழ்ந்தார். முள்ளிய வளை கார்த்திகேச ஐயரின் புதல்வி ரதிதேவியை இல்லாள் ஆக்கி வன்னி மாவட்டத்தின் முதன்மைக் குருவாகத் திகழ்ந்தார்.

வன்னி மாவட்டத்தின் பிராமணர்களின் வைதீகக் கிரியைகளைச் செய்து வந்த அவரை 29.09.2001 அன்று காலன் அவரை கவர்ந்து விட்டான். பல சாதனைகளைச் சாதிக்க வேண்டிய அவர் அவற்றைச் சாதிக்காமலே சிவபதமடைந்தமை பேரிழப்பாகும்.

கனிஷ்ட புத்திரன் சோமாஸ்கந்தக் குருக்கள், நல்லூர் கண பதீஸ்வர குருகுலத்திற் பயின்று சமஸ்கிருத பாலபண்டிதர், பண்டிதர் பட்டங்களையும், சித்தாந்த சாஸ்திரத்தில், சித்தாந்த பண்டிதர், சித்தாந்த வித்தகர் முதலிய பட்டங்களையும் பெற்றவர். சிறுவயதில் இருந்தே வில்லிசைக் கலையின் மீதுகொண்ட ஆர்வத்தினால் அதைத் துறைபோகக் கற்று "ஸ்ரீதேவி வில்லிசைக் குழுவினர்" என்ற பெயரில் அநேக வில்லுப்பாட்டுகளை ஏராளமான கோவில்களில் செய்து 'ஸ்ரீதேவி ஐயா' என அனைத்து மக்கள் மத்தியிலும் பிரபலமானவர். ஆகமஞ் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சிகளில் ஈடுபாடு கொண்டு அவற்றை துறைபோகக் கற்று கட்டுரைகளாகவும், நூல்களாகவும் வெளியிட்டு வருகின்றார். இவர் மீசாலை குமாரசாமிக் குருக்கள் சாரதா தம்பதிகளின் புதல்வி சுசீலா தேவியை வதுவை செய்து பிள்ளைகளுடன் ஆனந்தமாக வசிக்கின்றார். இப்பொழுது மலேஷியாவில் குருத்துவப் பணியாற்றி வருகின்றார். இவர் வெளியிட்ட ஆகமச்சித்திரம் பாகம் 1, பாகம் 2 என்பவை பலராலும் பாராட்டப்பட்டவை.

அடுத்தவர் செந்தில்நாதக் குருக்கள், வட்டுக்கோட்டை சபாபதி சர்மா தம்பதிகளின் புதல்வி கமலாம்பிகையை மணந்து கொழும்பில் வசிக்கின்றார். யாழ். நாயன்மார்கட்டு பட்டாணி ஆதிபைரவர் தேவஸ்தான தர்மகர்த்தாவாகவும், கொழும்பு விவேகானந்தா மேட்டுத்தெரு ஸ்ரீராஜராஜேஸ்வரி அம்மன் கோவில் தர்ம கர்த்தாவாகவும் விளங்குகின்றார். மணிகண்ட சேவா பீடத்தை அமைத்து வருடந்தோறும் சபரிமலையாத்திரை மேற்கொண்டு வருகின்றார்.

கனிஷ்ட புத்திரி தேவமனோகரி புதிய கதிரேசன் கோவில் பிரதம குருவான கந்தர்மடம் நாகராஜக் குருக்களை மணந்து இனிதே வாழ்ந்து வருகின்றார்.

சாஸ்த்தா குருபீடாதிபதியாகத் திகழ்கின்ற கலாநிதி சாம்பசிவ சரவணபவன் ஐயப்பதாஸக் குருக்கள் கொழும்பு மாநகரிற் சர்வதேச இந்துமத குருபீடத்தை ஸ்தாபித்து சமய, சமூக, கலைப் பணிகள் புரிந்து வருகின்றார். நல்லூர் கணபதீஸ்வர குருகுலத்தில் நியாய சிரோமணி. கி. சுப்பிரமணிய சாஸ்திரிகளிடத்திற் பயின்றவர்.

கொழும்பு கிராண்ட்பாஸ் ஞான பைரவர் தேவஸ்தான பிரதமகுரு உரிமையாளர் பாலகிருஷ்ண ஐயர் தம்பதிகளின் புதல்வி சுபாஷினியை விவாகஞ்செய்து மழலைச் செல்வங்களுடன் சீருஞ்சிறப்புமாக வாழ்ந்து வருகின்றார். தன் தந்தையின் ஞாபகார்த்தமாக 'அருள்ஜோதி' என்னும் சமய இதழை வெளியிட்டு வருகின்றார். 19 வருடமாக அனேக பக்தர்களைச் சபரிமலை யாத்திரைக்கு, அழைத்துச் செல்கின்றார். சபரிமலை ஸ்ரீ சாஸ்தாபீடம் என்ற அமைப்பினூடாகவே இதை யாற்றி வருகின்றார். ஐயப்ப ஆராதனையில் மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர், பிராமணர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கு உடனுக் குடன் உயர்மட்டங்களுடன் தொடர்பு கொண்டு செய்கின்ற செல்வாக்கு மிக்கவராகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திகழ்கின்றார்.

பங்கஜவல்லி: இவர் நெடுந்தீவு தியாகராஜக் குருக்களின் மகன் பத்மநாதக் குருக்களைத் திருமணம் செய்து புத்திரச் செல்வங்கள் நால்வரைப் பெற்று முகத்துவாரம் பிள்ளையார் கோவிலில் சீரும் சிறப்புமாக வாழ்ந்து வருகிறார்.

கனிஷ்ட புத்திரி நித்யலக்ஷ்மி வட்டுக் கோட்டை சபாபதிக் குருக்கள் மகன் பரமேஸ் வரக் குருக்களை மணந்து 'கொட்டாஞ்சேனை யில் வாழ்ந்து வருகின்றார்'

பிரகதாம்பாள் மாவிட்டபுரம் வீணியவரை ஸ்ரீராஜேஸ்வரி அம்மன் கோவில் தர்மகர்த்தா துரைச்சாமி ஐயர் அன்னபூரணி அம்மா தம்பதிகளின் புத்திரர் மணிவண்ணக் குருக்களைக் கரம்பிடித்து மலேஷியா மாநகரில் புத்திரர்களுடன் சகல ஐஸ்வர்யங்களுடன் வசித்து வருகின்றார்.

கனிஷ்ட புத்திரர்களில் ஒருவரான ஜெகதீஸ்வரக் குருக்களவர்கள், தன் தந்தை யிடமிருந்தும். கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள், பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் போன்றோரிடத்திலும் கற்றவர். சாதகஞ் செய்வதில் இவருக்கு நிகர் இவரே. தமிழ கத்துக் கணபாடிகள் கூட பார்த்து வியந்து நிற்குமள விற்கு வேதங்களை ஓதுவதும், பத்ததி வாசிப்பதுமான திறமைகள் உடையவர். தமிழகத்துப் பத்ததி வித்தகர்களுக்கு நிகராக பத்ததி வாசித்து பாராட்டுக்கள் பெற்ற சந்தர்ப்பங்கள் அனேகம். மல்லாகம் பழம்பதி விநாயகர் தேவஸ்தான ஆதினகர்த்தா முத்தையாக் குருக்கள்-நாகேந்திர சர்மா, ஞானாம்பாள் தம்பதிகளின் கனிஷ்ட புதல்வி நர்மதாவை விவாஹஞ் செய்து புத்திர செல்வங்களுடன், கொழும்பு மாநாகரில் வசித்து வருகின்றார். கடந்த 15 வருடமாக, யாழ்ப்பாணத் திலும், கொழும்பிலும் ஸ்ரீதேவி குருகுலம் அமைத்து அந்தணச் சிறுவர்களுக்கு வேதாக மங்களை கற்பித்து வருகின்றார்.

இவரிடம் கல்வி கற்றவர்கள் இன்று வெளி நாடுகளிலும் உள்ளூரிலும் மிகவும் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றார்கள்.

"ஸ்ரீதேவி குருகுல சபரி பீடம்" என்ற அமைப்பைத் தாபித்து அடியார்களை சபரிமலைக்கு அழைத்துச் செல்கின்றார். பூதசுத்தி, அந்தர்யாகம் என்பனவற்றை இறுவெட்டு (C.D) வடிவில் முதன்முதலில் இலங்கையில் வெளியிடுபவரும் இவரே.

அடுத்தவர் ஸ்ரீசரஸ்வதி, தெல்லிப்பளை சதாசிவ ஐயரின் மைந்தன் வைத்தியநாதக் குருக்களை மணந்து கொழும்பு மாநகரில் சீரும் சிறப்புமாக வாழ்ந்துவருகின்றார்.

இளைய புத்திரர் அகிலாண்டேஸ்வரக் குருக்கள், நியாய சிரோமணி கி. சுப்பிர மணியசாஸ்திரிகளிடத்திலும், பேராசிரியர் சா. கைலாஸநாதக் குருக்களிடத்திலும் தன் தந்தையாரிடத்திலும் கற்றவர். தெல்லிப்பழை சிவசாமிக் குருக்கள், சரஸ்வதி அம்மா தம்பதிகளின் புதல்வி வடிவாம்பிகையை திருமணஞ் செய்துகொண்டவர். நல்ல சாரீரவளமுடைய அகிலாண்டேஸ்வரக் குருக்கள் ஊரெழு கண்ணகையம்மன் தேவஸ்தானத்தினால் "கிரியா தத்துவ நிதி" என்ற பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர். அண்மையில் ஸ்ரீ வித்யா குருகுல கலாசாலை யினால் 'ஸ்தோஸ்திர கானமணி' என்ற பட்டம் கப்பித்தாவத்தை சண்முகரத்தின சர்மா அவர்களால் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்கள் பதினாறு மக்கட் செல்வங்களையும் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்திருந்தார். மக்கள், மருமக்கள், பேரக்குழந்தைகள் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலகலப்பாகவும், சந்தோஷமாகவும் நாயன்மார்கட்டு அருள்ஜோதி இல்லத்தில் வசித்து வந்தார். அன்னாரது பேரனான மணிவண்ணைக் குருக்கள்-பிரகதாம்பாள் தம்பதிகளின் கனிஷ்ட புத்திரன் பிருந்தாபசர்மா கணப்பொழுது கூட தாத்தாவைப் பிரியாமல் தாத்தாவுடனேயே வசித்து வந்தவர். சாம்பசிவ சிவாச்சாரியாரும் தனது பேரனின் மீது உயிரையே வைத்திருந்தார்.

நாள் தோறும் சிவபூஜையை நியமமாக, விஸ்தாரமாகச் செய்துவந்தவர் சாம்பசிவ சிவாச்சாரியார். தனது இல்லத்தில் நித்யாக்னிகாரியம் செய்பவர். அவரது பொலிவு, தேஜஸ் என்பன எல்லோரையும் அவர் பால் கவர்ந்துவிடும்.

**வைத்தியத் துறையில் சாம்பசிவ சிவாச்சாரியார்**

சிவாச்சாரியார் அவர்கள் ஆயுர்வேதம், சித்தமருத்துவம், ஹோமியோபதி, அலோபதி, அக்குபஞ்சர், விஷக்கடி வைத்தியம் என்பனவற்றில் நிபுணத்துவம் மிக்கவராக விளங்கிய அதே நேரத்தில் மனநோய் நிபுணராகவும் (Psychiatrist) விளங்கினார். மனப்பிறழ்வுகளால் (Mental disorder) பாதிக்கப்பட்ட அனேகர் இவரது சிகிச்சைகளாற் பூரண குணமடைந்து இன்றுமவரை வாயார வாழ்த்துவதைக் காணலாம்.

அவருக்கிருந்த வழிவந்த மாந்திரிக அறிவுப் புலமையும், அற்புத தெய்வீக சக்திகளும், வைத்திய அறிவும் ஒன்றிணைந்து சடங்கு நிலைப்பட்ட (Ritual) சிகிச்சையாக இவரது சிகிச்சை முறைகள் அமைந்தன.

இலங்கையின் பிரதமராக ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க இருந்த காலத்தில், அவரது நெருங்கிய உறவினர் ஒருவர் தீராத நோயால் அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்த பொழுது சாம்பசிவ சிவாசாரியார் அவர்களின் பெருமை களைக் கேள்வியுற்ற அவர்கள் விஷேட விமானம் மூலம் கொழும்புக்கு அவரை அழைத்திருந்தார்கள். சிவாச்சாரியார் அவர்கள் மிகவும் அற்புதமான முறையில் அந்நோயைக் குணப்படுத்தினார். அதற்காக இலங்கையரின் கௌரவ விருதான 'மாந்திரிகபூஷணம்' என்ற பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

சிவாச்சாரியாரின் இல்லம் ஒருநோய் தீர்க்கும் வைத்தியசாலை போலவே இருந்து வந்துள்ளது. மணி மந்திர ஔஷத நிலையம்' என்ற பெயருடைய அவ்வில்லத்தில், பிரதி செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் மக்கள் கூட்டம் அதிகமாக இருக்கும். குடாநாட்டின் பெரிய பிரபலஸ்த்தர்கள் கூட அன்னாரிடம் ஆசிபெறவருவர். அந்தளவிற்குச் சமுகத்திற் செல்வாக்கு மிக்கவராக விளங்கினார்.

அங்கு ஸ்ரீதேவி ராஜராஜேஸ்வரி அம்பாளை ஏறக்குறைய 50 ஆண்டுகளாக உபாசித்து வந்தார். 25 வருடங்களுக்கு முன்னர் வீட்டிலேயே அம்பாளுக்கு அழகுற ஆலயம் அமைத்துப் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷே கத்தையும் முறைப்படி செய்தார். அங்கு நவராத்திரி காலங்களிற் ஸ்ரீசக்ரபூஜையை மிக விஸ்தாரமாக செய்வது அவரது வழக்கமா யிருந்தது.

சிவாச்சாரியார் அவர்கள் கலைத்துறையில் நன்கு பிரகாசித்தவர். ஓவிய. சிற்பக் கலைகளில் விற்பன்னராக விளங்கினார். ஆகம சம்பந்தமான விளக்கப்படங்கள் வரைதல், யாகங்களுக்குரிய படங்கள், யந்திரங்கள், கொடிச்சீலைகள் வரைதல் என்பனவற்றில் விற்பன்னராக விளங்கினார்.

அவர் புராண படன வித்தகராயும் விளங் கியவர். திக்கம்-செல்லையா என்ற புகழ்பெற்ற புராணபடன வித்தகரிடத்திற் புராண படனங் கற்றவர். பெரியபுராணம், திருவாதவூரடிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புராணம், கந்தபுராணம் என்பனவற்றிற்கு அழகாகத், தெளிவாகப் பொருள் கூறுவார். சங்கானை கூடத்து மனோன்மணியம்மன் ஆலயத்திற் தொடர்ந்து பல வருடங்களாக திருவாதவூரடிகள் புராணத்திற்கு வியாக்கியானஞ் செய்துவந்தவர்.

சாம்பசிவ சிவாச்சாரியார் அஸ்த்ர, சித்ர வித்தைகளையும் கற்றவர். வாள் வீச்சு, சிலம்பம், மல்யுத்தம், என்பனவற்றில் நிபுணராகவும், பயிற்றுவிப்பாளராகவும் விளங்கியவர். சோதிடக் கலையிலும் வல்லவராக விளங்கினார். மிக நுணுக்கமான ஆராய்ச்சிகள் செய்தவர். முகூர்த்த நிச்சயம் செய்வதில் வல்லவராகத் திகழ்ந்தார். பல சோதிடஞ் சம்பந்தமான கட்டுரைகளையும், கருத்தரங்குகளையும் செய்துள்ளார். இலங்கை வாணியர் கழகத்தின் ஆயுட்கால அங்கத்தவராகவும் இருந்தவர்.

குருபீடாதிபதியவர்கள் பன்மொழி வல்லுனர் (Multilinguistic) சம்ஸ்கிருதம், ஹிந்தி, மலையானம், தெலுங்கு, தமிழ் மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர். யாழ். பரமெஸ்வராக் கல்லூரியில் கல்வி கற்றகாலங்களில் வேத பாராயணஞ் செய்து, பேராசிரியர்களின் பாராட்டைப் பெற்றவர்.

திருவாவூர் ஹோமியோபதி ஆய்வுகளுக்கான நிலையத்தில் பட்டம்பெற்றவர். இலங்கை ஆயுர்வேத வைத்தியசாலையின் அங்கீகரிக்கப்பட்ட வைத்தியராகவும் செயற்பட்டவர். தமிழில் பண்டிதர் பட்டம்பெற்றவர். வடமொழியிற் பாலபண்டிதர் பரீட்சையில் சித்திபெற்றவர்.

குருத்துவத்துறையில் அவர்பெற்ற பட்டங்கள் வருமாறு:

- "சிவாஹம சிரோமணி" இது நல்லையாதீன முதலாவது குருமஹா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தம்பிரானவர்களால் வழங்கப் பட்டது. இதனைவிட
- சிவாஹமஞானி. - சிவாச்சார்ய சிம்மம், - வித்யா ஸாகரம், - சிவாகம கலாநிதி - சிவாகம கிரியாசாகரம் - சாஸ்த்ரக்ஞர்

போன்ற பட்டங்களும் இவருக்குக் கிடைத்தன.

இவ்வாறான திறமைகள் மூலம் அவர் பல்துறைசார் நிபுணராக (Multitalented Person) விளங்கினார். இவ்வாறு குருமார்களுக்கெல்லாம் இலட்சியக் குருவாகத் திகழ்ந்தார்.

அன்னார் அமரத்துவடைந்தமைபற்றி பேராசிரியர் நா. சுப்பிரமணிய ஐயர் கூறும்போது: 'சாம்பசிவ சிவாச்சாரியாரின் இழப்பானது குருத்துவப் பாரம்பரியத்தில் ஏற்பட்ட இடைவெளியாகும். (Vacuum) அந்த இடைவெளி எக்காலத்திலும், எவராலும் நிரப்பப்பட முடியாத இடைவெளி. அன்னார் பல்கலைக்கழக மட்டத்தில் இருந்திருப்பின் எங்களைப் போன்றவர்கள் சாதித்திருப்பதைக் காட்டிலும் 10 மடங்கு அதிகமாகச் சாதித்திருப்பார்' என்றார்.

அன்னார் குருமார்களுக்கெல்லாம் தலைமைக் குருவாக, குருபீடாதிபதியாக 1994ம் ஆண்டு அனைத்துக் குருமார்களாலும் தேர்ந்தெடுக்கப்பட்டு 04.01.1994 அன்று பீடாரோஹண விழாவுங் கண்டார்.

ஒரு பீடாதிபதி எப்படி இருக்கவேண்டுமோ, என்னென்ன லக்ஷணங்கள் அடையப்பட்டிருக்க வேண்டுமோ அவையெல்லாம் சாம்பசிவ சிவாச்சாரியாரிடத்தில் நிறைந்து காணப்பட்டது.

நாட்டில் இடம்பெற்ற அசாதாரண நிலைமைகளால் குருபீடாதிபதியவர்களும் இடம்பெயர்ந்து கொழும்பிலே வசிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. கொழும்பிலும் ஆன்மீகப் பணிகள் ஆற்றிவந்தார். மலேஸியா மாநகரில் பகான் மாநிலத்தில் அமைந்துள்ள "பெந்தொங் மாரியம்மன் ஆலய" பிரதிஷ்டா மஹா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பாபிஷேகம், "ஜோகூர்பாரு" மாநிலத்தில் அமைந்துள்ள பொந்தியான் மாரியம்மன் கோவில் கும்பாபிஷேகம், கோலாலம்பூர் ப்ருக்வில் - ஸ்ரீ கிருஷ்ணன் கோவில் மஹா கும்பாபிஷேகம் என்பனவற்றில் கலந்து சிறப் பித்தவர்.

மலேஷியாவிலே தனது ஆன்மீகப் பணிகளிடையே தனது மூத்த பேரனான சண்முகநாத-குமரகுருபரசர்மாவின் விவாகத்தை நடாத்தி வைப்பதற்காகத் தாய்நாடு திரும்பினார். எல்லோரும் போற்றும் வகையிலே வைதிக முறைப்படி தமது பேரனின் கல்யாணத்தைச் சிறப்பாக நடாத்தி வைத்தார்.

அடுத்த சில நாட்களிலே அதாவது 06.02.1997 அன்று சரியாக ஒரு வாரத்தின் பின் தமது சம்பந்தியான சதாசிவ ஐயரின் இரண்டாவது புத்திரனின் சீமந்த வைபவத்தைச் சிறப்பான முறையிலே நடாத்தி வைத்துவிட்டு வீடு திரும்பினார். வீடு திரும்பிய அவர் இரவு முழுதும் கண்விழித்துப் பத்ததிகளை ஆராய்ந்து எழுதிக்கொண்டிருந்தார். அவருடைய இறுதி மூச்சுவரை வைதீகத்தை மேற்கொண்டது அவருக்குப் பெருமை சேர்க்கும் விடயமாகும். அவருடைய நித்யாக்னி, நித்ய சிவபூஜைப் பலன்களினாலே அவர் படுக்கையிலே கிடந்து கஷ்டப்படாது வானுலகு எய்தியமை குறிப் பிடத்தக்க அம்சமாகும். 06.02.97 பிரதோஷமும் மாத சிவராத்திரியும் கூடிய இரவு பன்னிரண்டு மணிக்குமேல் அன்னாரது உயிர் சிவலோகப் பிராப்தியடைந்தது. இப்படியான ஒரு நாளிலே அவர் வானுலகு எய்தியமை அவருடைய பூஜை முதலிய கர்மாக்களுக்குப் பெருமை சேர்ப்ப தாகும். பல்வேறுபட்ட பரிமாணங்களிலே சுடர்விட்டுப் பிரகாசித்த அந்தச் சுடர், ஒளிவீசி அணைந்தமை சைவ உலகிற்குப் பேரிழப்பாகும். அவர் விண்ணுலகம் சென்றாலும் அங்கிருந்து அவர் நமக்கெல்லாம் குருவருள் நல்லாசிகள் வழங்கிக்கொண்டுதான் இருக்கிறார் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. குருநாமம் வாழ்க

### சிவாச்சார்யார் அவர்கள் நடாத்திவைத்த கும்பாபிஷேகங்கள் மஹோற்சவங்கள்

- குருபீடாதிபதியின் முதற் கும்பாபிஷேக காலம் 1939ம் ஆண்டு சங்கானை சிலம்பப்புளியடி வைரவர் ஆலயத்தில் நவாலியூர் சாமி-விஸ்வநாதக் குருக்களுக்குச் சாதகராக இருந்து நடத்தியமை குறிப்பிடத்தகதக்கது.

- மண்டைதீவு மாரியம்மன் கோவிலில் கும்பாபிஷேகம் மட்டுமல்ல நித்ய நைமித் யங்களையும் புராணபடன வகுப்புக்களையும் நடத்திவந்தவர். இன்றுங்கூட அவருடைய மாணவர்கள் அங்கேயிருக்கிறார்கள். மண்டைதீவு அவருடைய இன்னொரு ஊர் என்று சொன்னால் மிகையில்லை. அந்தளவிற்கு மண்டைதீவு மண்ணுடன் நெருங்கிய தொடர்புடையவர். ஆதலினாலேயே மாரியம்மன் ஆலய அர்ச்சகராக அவரது சகோதரர் ஸகந்த பால சுப்பிரமணியக் குருக்களை அவர் நியமித்தார். - பருத்தித்துறை சிவன் தேவஸ் தானத்திலேயும் 10 வருடங்களாகச் சிவாச் சார்யப் பணிபுரிந்தவர். இவற்றைவிடப் பின்வரும் ஆலயங்களிலும் கும்பாபிஷேக, மஹோற்சவ சிவாச்சாரியாராக பணிபுரிந்துள்ளார்.

- கவுணாவத்தை வைரவர் ஆலயம்
- பறாளாய் பிள்ளையார் தேவஸ்தானம்.
- வளலாய் பிள்ளையார் கோவில்
- கொழும்புத்துறைப் பிள்ளையார் தேவஸ்தானம்
- கோண்டாவில் - காளி கோவில்
- காரைநகர் - பாலாவோடை அம்மன் தேவஸ்தானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- களபூமி முருகன் தேவஸ்தானம்
- காரைநகர் - கண்ணகை அம்மன் கோவில்
- உரும்பராய் - கற்பகப்பிள்ளையார் கோவில்
- சுன்னாகம் - ஐயனார் கோவில்
- வட்டுக்கோட்டை - மணியகாரன் கோவில்
- வேலணைப் பெருங்குளம் அம்மன் கோவில்
- கொழும்பு டிவாஸ்லேன் கிரான்ட்பாஸ் ஸ்ரீஞானவைரவர் தேவஸ்தானம்
- நாவலப்பிட்டி - முத்துமாரியம்மன் கோவில்
- கண்டி - குறிஞ்சிக் குமரன் கோவில்
- சங்கானை கூடத்து மனோன்மணி அம்பாள் தேவஸ்தானம்
- சங்கானை - கப்பண்டாஓடை ஞானவைரவர் தேவஸ்தானம்
- சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணியம்மன் கோவில்
- அனுராதபுரம் - முருகமூர்த்தி கோவில்
- வேலக்கைப் பிள்ளையார் கோவில்
- தட்டாதெரு - நாச்சிமார் கோவில்
- நல்லூர் - சட்டநாதர் கோவில்
- காலி - சிவன்கோவில்
- தம்பலகாமம் - கோணேஸ்வரர் கோவில்
- நல்லூர் - சிவன் கோவில்
- சங்கானை - இலுப்பைத்தாழ் முருகமூர்த்தி கோவில்
- மாவிட்டபுரம் - வீணியவரை ராஜராஜேஸ்வரி அம்மன் தேவஸ்தானம்
- மல்லாகம் - பழம் பிள்ளையார் கோவில்
- மட்டக்களப்பிலும் யாழ்ப்பாணத்திலும் பல்வேறு ஆலயங்களிலே கும்பாபிஷேக, மஹோற்சவ, உற்சவங்களைப் பிரதம குருவாகவும் போதகராகவும், சாதகராகவும் இருந்து நடாத்திவைத்துள்ளார்.

அவரது மாமனார் புத்தூர் வைத்யநாதக் குருக்களுடனும், மேலும் தனது தீக்ஷா குருவாகிய நயினை 'பிரதிஷ்டா பூஷணம்' சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் அவர்களுடனும், தனது தம்பியராகிய அரியாலை கு. பாலசுப்பிரமணியக் குருக்கள் அவர்களுடனும், அவர் மாமனாராகிய சிவாகமஞானபானு இணுவில் சிவஸ்ரீ இராமநாதக் குருக்கள் அவர்களுடனும், அவரது மைத்துனர் கிரியாகலாபணி Dr. நா. சோமாஸ்கந்த குருக்கள் அவர்களுடனும், உரும்பிராய் 'பண்ணிசைச் செல்வர்' முத்துக் குமாரசாமிக் குருக்கள் அவர்களுடனும், உரும்பிராய் பிரதிஷ்டா கிரியாசாகரம் சிவஸ்ரீ சபாரட்ணக் குருக்கள் அவர்களுடனும், அச்சுவேலி வேதாகம வித்தகர் சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள் அவர்களுடனும் "வியாகரண சிரோன்மணி" - சீதாராம சாஸ்திரிகள், "நியாய சிரோன்மணி" கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள், "அலங்கார பூஷணம்" - நல்லூர் குமாரசுவாமிக் குருக்கள், சித்தங்கேணி சிவசாமிக் குருக்கள், "வேதாகம கிரியாசாகரம்" வைரவநாதக் குருக்கள், ஆகமப்பிரவீனா பி.பா. பஞ்சாட்சரக் குருக்கள், வடகோவை சித்தாந்தபானு சுப்பிரமணியக் குருக்கள், பிரதிஷ்டா சிரோன்மணி கோப்பாய் வை.மு. பரமசாமிக் குருக்கள் ஊரெழு பா. வைத்யநாதக் குருக்கள், பேராசிரியர் கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள் ஆகியோருடனும் கலந்து சாதகாச்சாரியாராகவும், போதகாச்சாரியாராகவும், நூற்றுக்கும் மேற்பட்ட கும்பாபிஷேகங்களை நடத்தி வைத்த பெருமைக் குரியவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் இதுமட்டுமல்ல மூன்றாவது தலைமுறையில் குமரகுருமணி டாக்டர் சாம் சண்முகநாதக் குருக்கள், தற்போதைய குருபீடாதிபதி கிரியாகலாப முத்தாமணி சுதுமலை ஐ. மகேஸ்வரக் குருக்கள், "சகலாகம சம்கிரஹர்" நா. சர்வேஸ்வரக் குருக்கள், சிவாகம கிரியாரத்னம் சிவஸ்ரீ சிவ நித்யானந்தக் குருக்கள், சாஸ்தாபீடாதிபதி ஐயப்பதாஸன் சாம்பசிவ சரவணபவ குருக்கள், மறைவண்ணர் து. மணிவண்ணக் குருக்கள், ஊரெழு சோ. வாகீஸ்வரக் குருக்கள், புன்னாலைக் கட்டுவன் சித்தாந்த பண்டிதர் ஜெகதீஸ்வரக் குருக்கள், பண்டிதர் சாம் தணிகாசலேஸ்வர குருக்கள், சாம் கௌரி கணேசக் குருக்கள், மட்டுவில் கிரியா தத்வநிதி ச. சோமாஸ்கந்தக் குருக்கள், ஆகமப்பிரவீணா கைலை வாமதேவக் குருக்கள், ஆகமப்பிரவீணா கு. குகனேசக் குருக்கள் நீர்கொழும்பு, அமெரிக்கா, கிரியாக்ரம ஜோதி சிவஸ்ரீ ச. சிவநாதக் குருக்கள், கிரியா சிரோன்மணி க. இராமச்சந்திரக் குருக்கள் (மலேசியா), மஞ்சத்தடி கிரியாபூஷணம் பால ஜெகன்னாதக் குருக்கள், கிரியாதத்வ நிதி சாம் - அகிலாண்டேஸ்வரக் குருக்கள் இன்னும் பல சிவாச்சாரியார்களோடு கும்பாபிஷேகங்களில் கலந்துகொண்டு அருளாசி வழங்கி நடத்தி வைத்ததும் பெருமைக்குரியது.

மேலே முதலிற் கூறப்பட்ட விப்ரசிரேஷ்டர்கள் வாழ்ந்த காலத்தில் குருபீடாதிபதி வாழ்ந்ததும், குருபீடாதிபதி வாழ்ந்த காலத்தில் அவரோடு வாழ்கின்ற விப்ரசிரேஷ்டர்களின் பெருமையும் பொன்னெழுத்துக்களிற் பொறிக்கப்பட வேண்டும்.

மேலும் திருக்கேதீஸ்வரத்திலே நடந்த சிவபூஜை மாநாட்டிலே தான் கைப்பட எழுதிய ஆத்மார்த்த "சிவபூஜா விதி" எனும் நூலை தனது மைந்தனான சாம்பசிவ ஜெகதீஸ்வரக் குருக்களைக் கொண்டு சாதகம் செய்து தனது குருநாதர் பிரதிஷ்டாபூஷணம் ஐ. கைலாசநாதக் குருக்களின் பாராட்டுதல்களைப் பெற்றது குறிப்பிடத்தக்க அம்சமாகும். அக் கைப்பிரதிப் புத்தகமான ஆத்மார்த்த சிவபூஜா விதி, அவருடைய முதலாவது சிரார்த்த தினத்தன்று ஸ்ரீதேவி குருகுலத்தார் நூலுருவில் வெளியிட்டதும் குறிப்பிடத்தக்க ஒன்று. தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பதற்கிணங்க குருக்கள் ஐயா அவர்கள் பெற்ற ஞான பலத்தை எல்லோரும் பெறவேண்டுமென்ற பெருநோக்கிலே அப்புத்தகம் இலவச வெளியீடாக அமைந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

குழந்தாய் நம்பிக்கை ஒன்றே முற்று முடிவான நிலையாகும் ஒருவனிடம் நம்பிக்கை இருக்குமானால் அவன் தன்னுடைய குறிக்கோளை அடைந்த மாதிரித்தான்.

— அன்னை சாரதாதேவி

உண்மை, அன்பு, இவற்றையே கடவுள் விரும்புகிறார். ஆகவே நீ உன்னுடைய சாதனை, சொல், செயல் ஆகியவற்றில் உண்மையானவனாக இரு நீ பேறு பெற்றவன் என்பதை உணர்வாய்.

— அன்னை சாரதாதேவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**K. RAJAPPA GURUKKAL**
Saivasidhantha Agama Sagaram
Sivagama Zana Banu
Sivagama Seiver

Heriditary Sthanikar & Archakar
Sri Ekambaranarhar &
Kailasanathar Temble

45, E.K. Sannarhi Street, Kancheepuram - 631 502.
Ph: 04112 - 23948 : 04112 223948 - 224493

# பீடாதிபதியின் குமாரர்களின் பணிகள் சிறக்கவேண்டும்



ஸ்ரீ அருள்ஜோதி குருபீடாதிபதி ஸ்ரீலஸ்ரீ சாம்பசிவ சிவாச்சாரியரது 80ஆம் ஆண்டு நினைவு மலராக ஆத்ம பஞ்சகம் என்ற அரிய நூல் வெளிவர இருப்பது கேட்டு மகிழ்வுறுகிறோம். இச்சுபதினம் இலங்கை வாழ் மக்களுக்கு அரும்பெரும் நன்னாளாகும். ஏற்கனவே இவர்தம் குமாரர்கள் சோமாஸ்கந்தன் ஜெகதீசன் ஆகியோரது முயற்சியில் சில ஆண்டுகளுக்கு முன் வெளிவந்த சிவ ஆகமச் சித்திரங்கள் என்ற நூல் ஆகம நூல்களிலிருந்து திரட்டியதான வடிவுக்கேற்ற சித்திரங்களும் தசாயுத அஷ்டமங்கலச் சித்திரங்களும். குண்டங்களின் வரைபடங்களும் யாகசாலை அமைப்பதற்குப் பேருதவி புரியும் என்பதில் ஐயமில்லை. இவர்கள் முன்பு வெளியிட்ட வைணவ நிதி (இரண்டாம் பாகம்) சம்பந்தமான படங்களும் வைணவ ஆலயங்களுக்கு இன்றியமையாதவை. இன்று வெளியிடப்படும் "ஆகமபஞ்கமம்" எனும் ஒலிநாடா என்ற இந்த சரீர ஸ்தூல ஆத்ம பூத சுத்தியை விளக்குகின்றது. நித்யநைமித்திகய பூஜாகாலங்களில் ஆச்சாரியார் நடத்தும் பஞ்ச சுத்தி க்ரமத்தின் போது தன்னை ஒருமுகப்படுத்திக் கொண்டு சிவனருளில் திளைத்துச் செயல்படும் செயல்முறைகளின் பொருளுணர்ந்து அனுபவிப்பதற்கு வழிசெய்யும். பார்க்கும் பக்தர்களை அதன் விளக்கமறிந்து தம்மையும் குருவின் தாளிற் பணிந்து போற்றச் செய்யும் தூண்டுகோலாகும். இத்தகைய சைவசமயச் சடங்கு முதலான தொண்டுகளை மென்மேலும் தொடர்ந்து ஆற்றி உலகிற் கீர்த்தியும், செல்வமும் அடைந்து நீடூழி வாழ காஞ்சி காமாஷி நாதன் தாளினைப் பணிந்து குருபீடாதிபதிகளின் குமாரர்கள் அனைவரையும் வாழ்த்துகிறோம்.

இப்படிக்கு
ஸத்யோஜாதசிவம்
க. ராஜப்பாக் குருக்கள் - காஞ்சிபுரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகன் சாம். ஜெகதீஸ்வரக் குருக்கள் நர்மதா தம்பதிகளின்
சீமந்த விழாவில் குருபீடாதிபதி தம்பதிகள்



குருபீடாதிபதி மூத்த பேரனுக்கு உபநயனம் நிகழ்த்துகிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நல்லை சிவன் தேவஸ்தான கும்பாபிஷேகத்தில் கலந்து கொண்ட குருபீடாதிபதி அவர்களுக்கு பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் அவர்கள் காளாஞ்சி வழங்கிக் கௌரவிக்கிறார். அருகில் பாப்பா குருக்கள்



குலதெய்வமாகிய நாயன்மார்கட்டு ஸ்ரீ தேவி ராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் யந்திர பூஜையின்போது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஶ்ரீலங்கா நகராதீச ஜகத்குரு பதாச்ரய: |
ஶ்ரீ ஸ்கந்த ஸாம்பசிவாசார்ய ஸச்சிஷ்யோ மஹ: |
[illegible] ஶிவ [illegible] |
[illegible] ஶிவாசார்ய [illegible] ||

இலங்கையின் முதன்மை சிவகுரு பீடாதிபதி அருள்ஞான அருள் ஜோதி அருள்மிகு ஸ்ரீ ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களின் (வைரவிழா) எண்பதாவது ஜயந்தி விழா நினைவாக குருவந்தனம், விசேஷ சந்தி, பூதசுத்தி, அந்தர்மாத்ருகா, பஹி: மாத்ருகா, அந்தர்யாகம் மற்றும் சிவாகம சிறப்புத் தன்மைகள் பலவற்றை உள்ளடக்கிய ஜயந்தி விழா மலர் ஒன்று வெளியீடு செய்வதை மிகவும் மனச்சந்தோஷமாகவும் பரிபூர்ண திருப்திகரமாகவும் வரவேற்கிறேன்.

மேலும் சைவாகமப் புத்தகங்கள் வெளியீடு செய்வதில் இலங்கை தலைமை இடமாக விளங்குவது மிகவும் ஆனந்தத்திற்கும் ஆச்சரியத்திற்கும் உள்ளதாக இருக்கிறது. "மஹான் பவதி ப்ரஜயா பசுபி: ப்ரம்ம வர்ச்சசேனு" என்ற வேதவாக்கியத்தின் ஸ்ருதி நிர்ணயபடி ஸ்ரீஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியாருடைய வம்ஸ விருத்திகளான புத்திரர்களில் ஒருவரான சிவஸ்ரீ சா. ஜெகதீஸ்வரக் குருக்கள் அவர்கள் தமது சகோதரர்களுடன் சேர்ந்து இறுவெட்டு (C.D.) ஒன்றையும், வெளியீடு செய்வதை அன்புடன் வரவேற்கிறேன்.

இப்படிக்கு
Pr. G. ஸ்ரீநிவாஸ சாஸ்திரி
கபாலீஸ்வர தேவஸ்தானம்,
மயிலாப்பூர்,
தமிழ்நாடு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர்: ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய ஸ்வாமிகள்
குருமஹா சந்நிதானம் ஆதிமுதல்வர்

ஆதீன முதல்வர்: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய ஸ்வாமிகள்
இரண்டாவது குருமஹா சந்நிதானம்

தொலைபேசி: 021-2870

நல்லூர், யாழ்ப்பாணம்,
இலங்கை.



## நினைவு எங்களுடன் இருக்க வேண்டும்

அன்பு நெஞ்சத்தீர்!

சிவஸ்ரீ சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களின் நினைவை மக்களின் மத்தியில் நிதர்சனமாக்கும் பொருட்டு நூல் ஒன்று வெளிவருவது மகிழ்ச்சியைத் தருகின்றது. அந்தணர்க்கேயுரிய லட்சணங்களுடன் வாழ்ந்து பல ஆலயங்களிலும், பொது வைபவங்களிலும் சிவாச்சாரியாராகப் பணியாற்றி நல்லை ஆதீனத்தினுடைய பிரதம சிவாச்சாரியாராகவும் எனது குருவாகவும் அமைந்தவர். ஆதீன வளர்ச்சியிற் கண்ணும் கருத்துமாகத் தொண்டாற்றிய பெருமை சிவாச்சாரியார் அவர்களையே சாரும். அகில இலங்கை இந்து குருமார் ஒன்றியத்தின் குரு பீடாதிபதியாக இருந்து பிரமணர்களையும், ஏனைய மக்களையும் ஆன்மீகப் பாதையில் இட்டுச் சென்ற பெரியவர் இவர். பிராமணர்களுக்குரிய ஓதல், ஓதுவித்தல், ஈதல், ஏற்றல், வேட்டல், வேட்பித்தல், ஆகிய ஆறு கடமைகளையும் நிறைவாகச் செய்து அந்தணர் பாரம்பரியத்துக்குப் பெருமை சேர்த்தவர். இவர்களுடைய பணிகளை இன்று இவரின் பிள்ளைகள் செய்துகொண்டு இருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது. சாம்பசிவ சிவாச்சாரியாருடைய நினைவு எங்களுடன் இருக்க இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரியார் ஸ்வாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Tele: General 552641
Fax: General 554978

OFFICE MEMO

ඉන්දු ආගමික කටයුතු පිළිබඳ අමාත්‍යාංශය
இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு
MINISTRY OF HINDU RELIGIOUS AFFAIRS
248 - 2/1, Galle Road, Colombo - 4

# அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களின் 80வது ஜயந்தி தின நினைவுரை



ஆடித் திருவாதிரை நட்சத்திரத்தன்று இந்துமத குருபீடாதிபதி அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களின் 80வது ஜயந்தி தினத்தை நினைவுகூர்ந்து வெளியிடப்படும் மலருக்கு எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வேதம், ஆகமம், புராணம் என்பவற்றில் பாண்டித்தியம் மிக்கவராக விளங்கிய சிவாச்சாரியார் அவர்கள் தமது வாழ்நாள் முழுவதும், இறைபணியிலும், ஆன்மீகத் தொண்டிலும் சமய வளர்ச்சிக்கும் பெரும்பங்காற்றி வந்தவர். அவர் தமது வாழ்வின் இறுதிக் காலப்பகுதியில் இந்துமத குருபீடாதிபதியாக விளங்கி இந்துக் குருமார் சமூகத்திற்கு வழிகாட்டியாக விளங்கிய பெருமைக்குரியவர்.

அன்னார் பற்றிய நினைவுகள் அவர் வெளியிட்ட நூல்கள் மூலமாகவும், அவர் ஆற்றிய செயற்பாடுகள் மூலமாகவும் அனைவராலும் என்றென்றும் நினைத்துப் போற்றப்படுகின்றன. சிவாச்சாரியார் அவர்களின் 80வது ஜயந்தி தினத்தை அனுட்டிக்கும் இவ் வேளையில், அவர் விட்டுச் சென்ற பணிகள் மென்மேலும் தொடரப்பட வேண்டும் என விழைகின்றேன். அவர் தம் நினைவைப் போற்றி விழா எடுக்கின்ற அனைவரும் பாராட்டுக்குரியவர்கள். அவர் புதல்வர்களில் ஒருவரான ஸ்ரீதேவி குருகுல அதிபர் சாம்பசிவதாசன் சாம்பசிவ ஜெகதீஸ்வரக் குருக்கள் அவர்களால் இவ்விழாவில் ஆத்ம பஞ்சகம் என்னும் இறுவெட்டு (CD) ஒன்று வெளியிடப்படுவது இந்து மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமையும்.

தி. மகேஸ்வரன் பா.உ.
இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர்.


110/3, விஜேராம மாவத்தை,
கொழும்பு-07

381, பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓம் சக்தி
## ஸ்ரீ தேவி மகத்துவம்



விரிந்த புனலை ஆடையாக உடுத்திருக்கும் இந் நிலவுலகின் கண்ணே எண்ணற்கரிய பிறவியினை எடுத்து ஆறறிவுக் கணக்கில் எண்ணப் படும் ஒப்பற்ற மானிடப் பிறவியின ராகப் பிறந்ததன் பயனாக நாம் இங்கே அடைய வேண்டிய பயனை அடைய வேண்டும். நாம் ஏன் பிறந் தோம்? யாருமே இதுபற்றிச் சிந்திப்ப தில்லை. உண்டு களித்து நல்லாடை உடுத்து புகழோடு வாழ்வதற்கா கவா? இல்லை! முற்பிறப்பிலே செய் திருக்கின்ற ஆகாமியம், பிராரத்தம், சஞ்சிதம் என மூவகை வினைகளி னாலே நமது பிறப்புத் தீர்மானிக்கப்ப டுகின்றது. எஞ்சியிருக்கின்றதாகிய சஞ்சித வினையினை அனுபவித்தற் பொருட்டு நாம் இவ்வுலகிலே பிறக் கின்றோம். ஆதலினாலே இங்கே வந்து மேலும் பாவ வினைகளைச் செய்யாமல் நல்லவற்றைச் செய்து நற்பயனடைய வேண்டும். வந்த வேலையை விட்டுப் பந்தற்காலைப் பிடிப்பது போல் நமது பிறப்பின் மகத்துவத்தை அறியாத மானிடப் பதர்களாகக் காலம் தள்ளுகின்றோம்.

"அரிது, அரிது மானிடராகப் பிறத்தல் அரிது" என்கிறார் ஔவை. மனிதன் என்ற சொல் மன் என்ற வடமொழி வினையடியில் இருந்து பிறந்தது. இதை அடிப்படையாக வைத்துதான் பலமொழிகளிலே மனிதன் குறிப்பிடப்படுகின்றான். மன் என்றால் நினைத்தல் என்று பொருள். நினைத்தலைச் செய்யக்கூடிய கருவியாக மனதை வைத்தி ருப்பவன் மனிதன். யாரை நினைக்க வேண்டும்? என்ற கேள்விக்கு,

"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தந்த இறைவனை"

என்கின்றார் அப்பர். எல்லாம் வல்ல பரம் பொருளாகிய சிவபெருமானின் திரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாடலினாலே இவ்வுலக இயக்கத் திலே வாழும் ஆன்மாக்களுக்குச் சோதனை களைத் தந்து சிவன் கடுமையாக நடந்து ஆட்கொள்கின்ற அதே நேரத்தில் கருணை யோடு அருள்தந்து அனைத்துலகிற்கும் தாயாய் நின்று காத்து ரக்ஷிப்பாள் தான் சர்வலோகமாதா பாமரஜனபாலினி ஸ்ரீ ஆதிபராசக்தி - அன்னை ஸ்ரீதேவி

ஒரு தாயானவள் தனது குழந்தை களுக்கு எந்த நேரத்தில் என்ன தேவை? குழந்தை ஏன் அழுகின்றது.? என்று அதற் கான காரணத்தையறிந்து போஷிப்பவள். இதுபோலவே நாம் அன்னை ஸ்ரீதேவியிடம் குறைகளைச் சொல்ல வேண்டிதில்லை. அவளுக்கே தெரியும். தன் குழந்தையாகிய பக்தனுக்கு என்ன வேண்டுமென அறிந்து அனுக்கிரகம் செய்வாள். அருட் சக்தியாம் ஆதிபராசக்தி ஆயிரமாயிரம் வடிவங்களிலே அடியவர்க்கு அருள் புரிகின்றாள்.

பிரபஞ்சத்திலே உள்ள சராசரங் களனைத்துக்கும் ஸ்ரீ தேவி அவ்யாஜாத கருணா மூர்த்தியாக ஜெகன்மாதாவாக இருக்கின்ற தன்மையினாலே அவளது குழந்தைகளாகிய நாம் எல்லோரும் அவளை எப்படி உபயோகித்தாலும் வணங்கினாலும் அதை ஏற்று நமக்கு எல்லா சௌபாக்கியங்களையும் அருள்வாள். உள்ளன்போடும் தூய பக்தியோடும் வழிபடல் வேண்டும்.

“நம மந்தரம் நோ யந்திரம் ததபிச நஜானே ஸ்துதி மஹோ
ந சாஹ்வானம் த்யானம் தத பிச நஜானே ஸ்துதி கலா
நஜானே முத்ராஸ்தே ததபிச நஜானே விலபனம்
ப்ரம் ஜானே மாத, த்வதனு சரணம் க்லேச ஹரணம்”

எனச் சொல்லியிருக்கின்றார்கள் பெரியவர்கள்.

மேலும் அம்பாள் ஸுப்ரரஸானி அதாவது சீக்கிரமாக சந்தோஷமடைந்து பிரசன்னமாகி அருள் பாலிப்பாள். இவ்விதம் திடபாவனையோடு சரணாகதி அடைந்தால். கன்றைவிட்டு அகலாத பசுவைப் போல மாத்ரு வாக்சல்யத்துடன் அனுக்கிரகித்துக் காப்பாள்

வாக்ஸல்ய ஸஹிதா தேனு - யாத வத் ஸமனு வ்ரஜேத்
தாதனு கச்சேத் ஸாதேவி ஸ்வபக்தம் சரணாகதம்

அத்தகைய தன்மையுடையவளான அன்னை ஸ்ரீ தேவி ராஜராஜேஸ்வரியினுடைய உபாசகரும் இலங்கை இந்துமத குரு பீடாதியும், எமது தந்தையும் குருவுமான ஸ்கந்த - சாம்பசிவாச்சாரியார் அவர்களின் **80** வது ஜயந்தி தினத்தை ஒட்டி வெளியிடப்படும், ஜயந்தி மலர், மற்றும எமது சகோதரர் சாதக கலாமணி சாம்பசிவ சிவதாஸன் - ஜெகதீஸ்வரக் குருக்கள் அவர்களினால் வெளியிடப்படும் “ஆத்ம பஞ்சகம்” பூதசுத்தி, விசேஷசந்தி, அந்தர்மாத்ருகா, பஹிர் மாத்ருகா அந்தர்யாகம் முதலியனவும் குருவந்தனமும் அடங்கியதாகும். இவ்வெளியீடுகள் சிறப்பான பயனை அளிக்க வேண்டுமென வாழ்த்தி அவர்களின் பணிகள் சிறக்க இறைவனை வேண்டுகிறேன்.

குருமணி உபந்நியாசரத்னம்
சிவஸ்ரீ டாக்டர் சாம் சண்முகநாத சிவாச்சாரியார்
வெம்பிளி, இலண்டன்
“சர்வே ஜனாக சுகினோ பவந்து”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாவை ஆதீனகர்த்தா

## மஹா ராஜ ஸ்ரீ சு.து. ஷண்முகநாதக் குருக்கள்

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில்

## இலங்கையின் முலாவது இந்து மத குரு பீடாதிபதி அவர்களுடைய

# 80வது ஜயந்தி தின நினைவுரை



अग्निहोत्रं च जुहुयात् आद्यन्ते द्युनिशोर्द्विजः ।
दर्शेन चार्धमासान्ते पौर्णमासेन चैव हि ।
सस्यान्ते नवसस्येष्ट्या तथर्त्वन्ते द्विजोऽध्वरैः
पशुना त्वयनस्यादौ समान्ते सौमिकैर्मखैः ॥

द्युनिशोः – अहोरात्रयोः [illegible] (மழை)
[illegible] पक्षयोरन्ते इति
सस्यान्ते – सस्यपाकान्ते
नवसस्येष्ट्या – आग्रयणेष्ट्या
अध्वरैः – चातुर्मास्यैः
पशुना – निरूढपशुबन्धेन
समान्ते – वत्सरान्ते
सौमिकैः – सोमयज्ञैरिति

காலை மாலை வேளைகளில் அக்னி ஹோத்ரத்தையும், பக்ஷங்களது முடிவில் தர்ஸபூர்ணமாஸ இஷ்டிகளையும், புதிதான தான்யங்கள் கிடைத்ததும் அக்ரயணேஷ்டியையும், இருதுக்களின் முடிகல் சாதுர் மாஸ்யங்களையும், அயனத்தின் இறுதியில் பசுபந்தத்தையும் வர்ஷத்தின் முடிவில் ஸோமயாகங்களையும் பிராமணவுத்தமர்கள் அவசியம் லோகரக்ஷணைகளிற்காக ஆற்ற வேண்டும். இவை பிறப்புரிமையோடு இணைந்த அறம் இவற்றை ஒழுங்காகக் கடைப்பிடிப்பவர் பிரம்ம ஞானிகளாவர்.

பிரம்மஞானிகளாக விளங்குவதற்குப் பிறந்ததிலிருந்தே ஒருவர் மகாத்மாவாகவும், சகல ஜீவன்களுக்கும் மாதா, பிதா, குருவாகவும், ஒருவருக்கொருவர் குருமூர்த்தியாகவும் அதிதியாகவும், தத்தம் தேகத்தில் வாசஞ்செய்யும் தேவதைகளை உபசரிப்பவர்களாகவும் வாழ வேண்டியதவசியம் மேலும் கர்ப்பாதானம் முதலான கர்மாக்களை முறையாக விதிப்படியாற்றி, அன்னத்தால் போஷிக்கும் பிதாபோன்றும், குருவாக விளங்கியும், கல்பசூத்திரங்கள், உபநிடதங்கள் வேதங்கள் ஆகியவற்றைக் கற்பித்து "ஆசார்யராக" விளங்கியும், ஒருபகுதி வேதத்தை முழுமையாக கற்பித்து வியாகரணம் முதலான வேதங்கங்ளையும் விளங்கவைத்து உபாத்தியாயனாக விளங்கியும், ஆச்சிரமதர்மங்களுடே தீட்சை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களோடு இணைந்து செயல்பட்டு அனைத்து தர்மங்களது செயற்பாடுகளினால் குருக்களாகவும் விளங்க வேண்டும். மேற்கூறிய தர்ம கைங்கர்யங்களைக் கடைப்பிடிப்பதே ப்ரம்மஞானிகளாக அமைவர். "குருக்கள்" என்ற ஜீவபதம் பிராமண வம்ஸத்திற்கு மாத்திரமே உரியது. இதனை சர்வ ரிஷி வம்ஸத்தினரும் அறியத்தந்துள்ளனர். சிவன்தான் குருக்களாவார். குரு மூர்த்தமாக எழுந்தருளித்தான் மாணிக்கவாசகருக்கு சிவம் அனுக்கிரகம் செய்ததை அவதானிக்கலாம். மேற்கூறிய சிவாம்ஸலக்ஷணங்களோடு காலஞ் சென்ற பேராசிரியர் கைலாஸநாதக் குருக்களது தந்தையார் வாழ்ந்து காட்டியமையை உலகு அறியும். அவரைத் தொடர்ந்து பேராசிரியர் அவர்களும், இவர்களைப் பின்பற்றி நாயன் மார்கட்டு சாம்பஸிவ சிவாசார்யரும் பரம ஜானிகளாக வாழ்ந்ததாற்தான் நாட்டில் சிறிதளவாவது தர்மச் சொத்து நிலைத்திருக்க மக்களை ரக்ஷித்தது. சாம்பஸிவ சிவசாரியார் நித்ய கர்மானுஷ்டானங்களைச் சரிவர இயற்றுபவர். சிவபூஜை தவறாது செய்பவர், தனக்கென வாழாது பிறர் நலனுக்காக பிரார்த்திப்பவர். இதனாற்தான் சமூகம் இவரை இந்து மத குரு பீடாதிபதியாக அமர்த்தியது.

இந்தப் பூமியில் ஸம்வத்ஸரங்கள் சுழன்று கொண்டே இயங்குகின்றன. மானிட வர்க்கமும் இந்தச் சுழற்சிக்குள் சிக்கி எதையெதையோவெல்லாம் ஆற்றிக்கொண்டுதான் இருக்கிறது. தர்மமும் தர்மகாரியங்களும் அருகிவருகின்றன. இதற்குக் காரணங்கள் பலவுண்டு ஆச்சிரம தர்மங்களை அவமதிப்பவனும், அதர்மங்களைக் பெருக்குபவனும், உலோகாயத பற்றுக்களால் ஆக்கிரமிக்கப்பட்டவனும், சுயநலன்களில் நாட்டங் கொண்டவனும், சமயானுஷ்டானங்களைப் பின்பற்றாதவனும், ஆலய சேவைகளில் ஈடுபடாதவனும், மெல்ல மெல்ல பெருக்கமெடுத்து நன்னீர் கொண்ட குடத்துள் ஒருதுளி விஷம் கலந்து முழு நீரையும் விஷமாக்கியது போன்று, தர்மச் சமூகத்தில் மேற்கூறிய பஞ்சமாபாதங்களது செயற்பாடுகளால் இந்த தர்மத் துவீபமும் சீரழிந்து பாழடைகிறது.

எங்கும் சண்டையும் சச்சரவுகளும் நிகழ்கின்றன. ஒழுக்கமும் குன்றுகிறது. பயபக்தி மங்குகிறது. சோகமும் துயரமும் அழிவும் வளர்ச்சிகொண்டு மனித தர்ம சுபாவங்களைக் கலக்கியடிக்கிறது. மாயாவாதமே முன்னின்று முனைப்பாகச் செயல்படுகிறது. இவற்றைத் தோற்றுவித்த கைங்கர்யங்களை இன்றும் முன்னெடுத்து வளர்க்கும் கிறீஸ்து மத பாதிரிகளும், அரசியல் வாதிகளும் அவை தமக்குரிய கடமைகளெனப் பிதற்றி வின்று பிரல்யப்படுத்தி நாட்டை நாசம் செய்யும் செயற்பாடுகளுக்கு உந்துசக்தியாக உதவிநிற்கின்றனர்.

இக்கால கட்டத்திற்தான் பிரம்மஞானியான சாம்பசிவ சிவசாரியாரும் குருதிலகமாக வாழ்ந்து, தனது குலதர்மாச்சிரமங்களால் மனித சமூகத்தையும், முன்புகூறிய பிதா, குரு, ஆசார்யா, உபாத்யாய, ஈற்றில் குருக் களாகனின்று உய்விக்க தனது கர்மானுஷ்டானங்களைத் தேவர்களது துணைகளோடு இயற்றி வந்தமையை உலகு நன்கறியும். இவர் இலட்சத்தில் ஒரு ஆத்மாவாகவே விளங்கினார். சிவபூசையைக் கண்ணுங்கருத்துமாக இயற்றியவர். தான் பெற்ற செல்வம் பிறரும் அனுபவிக்க வேண்டுமென்ற உணர்வுடையவர் ஆச்சிரம தர்ம வாழ்வின் மூலம் முன்னெடுக்க வேண்டிய கிரியைகளது பத்ததிகளை, பெரும் பொருள் வசதியில்லாதிருந்தும் தாமாற்றும் கிரியைகளினால் கிடைத்த தக்ஷிணைகள் மூலம் நூல்வடிவில் அச்சிட்டு வெளியீடும் செய்துள்ளார். வெகு சிலரே இதன் பயனைப் பெற்று உயர்ச்சி கொள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறவில்லை. இதனாற்தான் அவர் மறைந்தும் கயுக தர்ம கெடுபிடிகள் சமூகத்தில் தொற்றி னின்று வளர்ச்சி காண்கிறது. உலகின் க்ஷேமத்திற்காக உயிர் வாழுந்த இருஷி வம்ஸம் 2500 வருடங்களிற்கு முன் பிறப் பெடுத்த மாயாவாதப் பிடிக்குள் வாழ இயலாது அவ்வம்ஸம் முற்றாக மறைந்தது.

சங்கராச்சார்ய சுவாமிகளும், நாயன்மார் களும் தொடர்ந்து வந்த அவ்வழிவைத் தடுத்து நிறுத்தி, நாட்டைப் புனிதமாக்கினர். இப்போ கலியுகம் பிறந்து 5000 வருஷ மாகிறது. மீண்டும் மாயாவாதமும் பறங்கிக் கலாசாரமும் நீர்மேல் படரும் பாசிபோன்று வளாச்சி காண்கிறது. ஆறுமுகநாவலர் இதனைக் கண்டு இயன்றமட்டில் இச்சிவ பூமியைக் காப்பதற்கு முயன்றும் முடிய வில்லை. இனிச் சமூகந்தான் உணர்வுபெற வேண்டும். ஒவ்வொரு இந்துவும் சமயா னுஷ்டானங்களில் ஈடுபட்டு சிவசம்பந்தமான சேவைகளை முன்னெடுத்து, எமது குருமணி சாம்பசிவ சிவாசாரியார் காட்டிய வழியில் நாட்டங் கொண்டு ஒன்று திரண்டு ஒருமித்தும் செயலாற்ற வேண்டிய அவசரமும் அவசிய மும் இருக்கிறது. அப்போதுதான் இந்த ஞாலம் சிவபூமியாக மலரும். இப்போ பாரத நாட்டில் இத்தகைய விழிப்புணர்ச்சிக்கு சிவசேனை செயற்படுமாப்போல இங்கேயும் ஓர் சில சேனை தோன்றவேண்டும் இது அவசியமாகிறது.

இம்மை மறுமை வீடு, மூன்றையும் பெறும் மார்க்கமாகவே ஆச்சிரமதர்ம வாழ்க்கையை நாம் பின்பற்ற வேண்டும். இதுதான் சாம்பஸிவ சிவாசார்யரது பிரசங்கம் அறம் செய்து அதன்மூலம் தம்மை மனிதன் பக்கு வப்படுத்த வேண்டும். திருவள்ளுவரும் இதனை, "சிறம்பினுஞ் செல்வமுமீனு மறத்தினூஉங் காக்க மெவனோவுயிர்க்கு" என்றும், "ஒல்லும் வகையா லறவினையோ வாதே செல்லும் வாயெல்லாம் செயல்" என்றும் மனம், வாக்கு, காயம் இவ் மூன்றாலும் தர்மம் செய்யக்கடவர். என்றும் அறியத்தந்துள்ளார். இத்தகைய பண்பாட்டு அடிப்படையில் வாழ்ந்த எமது ஆப்த நண்பனும், பரமேஸ்வராக்கல்லூரியில் சகமாணவனாகக கல்வி பயின்றவரும் மக்களால் போற்றப்பட்டவருமான நாயன் மார்கட்டு சாம்பசிவ சிவாசார்யார் பரம ஞானியினது 80வது ஜய்ந்தி தினமான ஆடித் திருவாதிரையன்று அவரது ஞாபகார்த்தமாக மலரொன்று வெளிவருகிறது.

அவரது மைந்தன். சிவஸ்ரீ-ஜெகதீஸ்வர சிவாசாரியர் இந்தப் புனிதமான தர்மத்தை முன்னெடுக்கிறார். தந்தையின் மேல் அள வற்ற பாசங்கொண்டவர். தந்தைவழினின்று வாழ்பவர், நக்கிரன்போன்று வர்ணாச்சிரம தர்மங்களை நடப்பிப்பவர் தகுதியானதோர் பிரசுரத்தைத் தகுந்த சமயத்தில் வெளியீடு செய்யத் துணிந்தமையை யானும் பாராட்டு கிறேன்.

யாவரும் சிறப்புடன் இனிதே வாழ மாவை முருகப்பெருமானை நினைத்து பிரார்த்தித்து அனைவரையும் ஆசீர்வதிக்கின்றேன்.

மஹா ராஜஸ்ரீ சு. து. ஷண்முகநாதக் குருக்கள்
மாவை ஆதீனகர்த்தா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை.

# Sri Durgadevi Devasthanam

Tellippalai, Sri Lanka.

தலைவர்:
துர்க்காதுரந்தரி, சிவத்தமிழ்ச்செல்வி
கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J.P.
President:
**Durgaduranthari, Sivathamilselvi**
**Dr. Miss Thangammah Appacuddy, J.P.**

---

## வாழ்த்துரை




'அந்தணர் என்போர் அறவோர் மாற்றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான்.'

என்பது வள்ளுவர் வாய்மொழி. அறச்செயல்களிலும், ஆன்மீக நெறிமுறைகளிலும் தலைமைத்துவம் வகித்த குடும்பம் அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களுடைய குடும்பமாகும். அந்தணர்கள் மத்தியிலும், ஆன்மீகவாதிகள் மத்தியிலும் இவர்கள் ஆற்றிய அருளுரையைப் பலதடவைகளில் நான் கேட்டு மகிழ் வடைந்துள்ளேன். அவர் கற்றகல்வியும், பின்பற்றிய அறவொழுக் கங்களும் சர்வதேச இந்துமத குருபீடத்தை அலங்கரித்து நின்றது. அமரராகிவிட்ட அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவசிவாச்சாரியாரின் எண்பதாவது ஆண்டு முத்துவிழா அன்னாரின் பிள்ளைகளினாலும் மற்றும் அன்பர்களினாலும் எடுக்கப்படுவது குறித்து நான் பெருமகிழ்ச்சியடைகிறேன். பிராமண சமாஜத்தின் தனிப்பெரும் தலைவராக விளங்கியவர் அமரர் ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் ஆவார். கடந்த காலங்களில் எமது நாட்டுக் கோயில்களை அருளுரைகளினாலும், கிரியைகளினாலும் புனிதப்படுத்தியவர் சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்கள். நல்லை ஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்திலே சிவாச்சாரியாரின் நிகழ்ச்சிகள் அடிக்கடி நிகழ்வதுண்டு. இந்துமதம் சம்பந்தமாக ஏற்படும் ஐயங்களுக்கு உடனுக்குடன் பதில் கொடுத்து தெளிவுபெற வைத்தவர் ஐயா அவர்கள். வேத, ஆகம, புராண சம்பந்தமான எந்தவிதமான ஐயங்களுக்கும் தெளிவான பதில் அளித்தவர் இப்பெரியார். 1993ம் ஆண்டு இலங்கை இந்துமத குருமார் ஒன்றியம் தேர்தல் மூலம் தெரிவுசெய்த தலைமைக் குருபீடாதிபதி இவராவர் என்பது பாராட்டுக்குரியது. எனவே அமரரான குருக்கள் ஐயா அவர்களின் சேவைகளை நினைவுகூர்ந்து அன்னாரின் மக்கட் செல்வங்களை மகிமைப்படுத்தி எமது மண்ணில் சைவம் தழைக்க வேண்டும் என்று பிரார்த்தித்து அமைகின்றேன்.

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
சமாதான நீதிபதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'கிரியா கலாபமுத்தாமணி'
'பிரதிஷ்டா கலாநிதி' - சிவஸ்ரீ சி. குஞ்சிதபாதக் குருக்கள்
பிரதம குரு
கோச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் கோவில்
(தலைவர் அகில இலங்கை சிவப்பிராமண சங்கம்)

# வாழ்த்துரை



எல்லாம்வல்ல எம்பெருமானுக்குப் பூஜை முதலிய கர்மங்களைச் செய்யும்போது புறப்பூஜை செய்ய முன்பு அகப்பூஜை அதாவது ஆத்ம பூஜை செய்தல் முக்கியம். இதை அந்தர்யாகம், பூதசுத்தி என்பார்கள். இந்த, எமது உடம்பானது பஞ்சபூதங்களாலானது. அப்படிப்பட்ட உடம்பை சுத்தி செய்யாது நிர்மலமான சிவனை எழுந்தருளிச் செய்து பூசித்தல் கூடாது.

தூல தேகத்தை ஸ்நானத்தாற் சுத்திசெய்யலாம். சூக்ஷ்ம தேகத்தை பூத சுத்தியால் சுத்தமாக்கியே பூசிக்கவேண்டும். அப்படிச் சுத்தம் செய்யும்போது ஜீவனைத் துவாதசாந்தத்திலுள்ள சிவனிடம் சேர்ப்பித்து பஞ்சபூதங்களைச் செயலிழக்கச் செய்து மந்திரத்தால் சுத்திசெய்து காலாக்னியால் தேகத்தைத் தகித்து, பின்பு அமிர்த தாரையினால் நனைத்து, பின்பு ஆத்மாவைக் கொண்டுவந்து இருதய கமலத்தில் வசிக்கச் செய்து, ஆத்ம சிவனைப் பூசித்து அனுமதி பெற்றே புறப்பூஜை செய்தல்முறை.

அந்த வகையில், ஆத்மார்த்தம், பரார்த்தம் என்கிறவற்றைச் சிறப்பான முறையிற் கைக்கொண்டவர் இலங்கை இந்து மத குருபீடாதிபதி சிவாகமஞானி, அருள்ஜோதி டாக்டர் ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சார்யார் அவர்கள். அவர் நித்ய சிவபூஜை, நித்யாக்னி ஹோம வழிபாடுகளினாலே சிறந்த தேஜஸுடன் விளங்கியவர். அவரது 80வது ஜயந்தி தினத்தை அவரது பிள்ளைகள் மிகவும் சிறப்பான முறையிலே கொண்டாடுகிறார்கள். ஜயந்திமலர் ஒன்றையும் வெளியிடுகிறார்கள்.

மேலும் அவரது புதல்வர்களில் ஒருவரான சாகித்ய சம்கிரகர், சாதககலாமணி சாம்பசிவ ஜெகதீஸ்வர சிவாச்சாரியார் அவர்கள் தமது தந்தையின் ஞாபகார்த்தமாக 'ஆத்ம பஞ்சகம்' எனும் C.D. இறுவெட்டு ஒன்றினையும் வெளியிடுவதையிட்டு பெருமையடைகிறோம்.

சாதகாச்சாரியாராக தனக்கென ஒரு தனியிடத்தைப் பிடித்துக்கொண்ட ஜெகதீஸ்வர சிவாச்சார்யார் அவர்கள் தமது கனீரென்ற குரல் வளத்திலே இவ் 'ஆத்ம பஞ்சகம்' C.D. வெளியிடுவதைப் பாராட்டி, அவருடைய முயற்சிகள் மென்மேலும் சிறப்புற வேண்டுமென எல்லாம் வல்ல பொன்னம்பலவாணேஸ்வரப் பெருமானைப் பிரார்த்தித்து நல்லாசிகளைக் கூறியமைகிறேன்.

சுபம்

சிவஸ்ரீ சி. குஞ்சிதபாதக் குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

பேராசிரியர் கலாநிதி V. கோபாலகிருஷ்ண ஐயர்,
இந்து நாகரிகப் பேராசிரியர்,
கலைப்பீடாதிபதி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

இலங்கை இந்துமத குருபீடாதிபதியாக விளங்கிய சிவாகமஞானி அமரர் சிவஸ்ரீ அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களது எண்பதாவது ஜயந்தி தினத்தைக் குறிக்கும் வகையில் சிறப்பிதழ் ஒன்று வெளிவருவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். எமது சமூகத்திற்கும் ஒரு பாரம்பரியத்திற்கும் சிறந்த வழிகாட்டியாக விளங்கி, தம் வாழ்நாளில் பெரும் பகுதியை ஆத்மீகப் பணிக்கு அர்ப்பணித்த பெருந்தகை. தலைசிறந்த சிவாச்சாரியராக விளங்கிய இவர், வேதம் சிவாகமம், இதிகாசம், புராணம், சோதிடம் மாந்திரீகம் வைத்தியம் எனப் பலதுறைகளில் பாண்டித்யம் பெற்று எமது குருபாரம்பரியத்திற்குச் சிறந்ததொரு அணிகலனாகத் திகழ்ந்தவர். வைதிகம், ஆகமம் சார்ந்த சமயக்கிரியைகளில் ஆற்றல் மிக்கவராகத் திகழ்ந்து இத்துறைகள் சார்ந்த ஐயங்கள் எழுந்தவேளை தக்கவிளக்கங்கள் தருவதிலும் வல்லவராக விளங்கினார். மேலும் இத்துறை சார்ந்த பல விளக்க நூல்களையும் கிரியை நூல்களையும் எழுதி வெளியிட்டவர். தமது சொற்பொழிவுகள் மூலம் மக்கள் மத்தியில் ஆத்மீக சிந்தனைகளைப் பரப்பியவர். நல்லை ஆதீனத்தின் ஆஸ்தான குருமணியாகத் திகழ்ந்தவர்.

அருள்ஜோதி சாம்பசிவ சிவாச்சாரியார் யாழ்ப்பாணத்தில் இந்து மத குருபீடாதிபதியாகத் தெரிவான போது அனைவராலும் நன்கு மதிக்கப்பெற்றவர். அப்பெருந்தகையின் எண்பதாவது ஜயந்தி விழா எமது பண்பாட்டிற்கும் சமயத்திற்கும் சமூகத்திற்கும் பெருமை சேர்க்கும் விழாவாகும்.

இவ்வரிய வைபவத்தை அவரது புதல்வர்கள் முன்னின்று நடாத்துவது பாராட்டிற்குரியது. தமது தந்தையாரின் ஆத்மீக சிந்தனைகளுக்குத் தக்க வகையில் செயல்வடிவம் கொடுத்து வருகின்றனர். இப்பெரியாரது எண்பதாவது ஜயந்தியைக் குறிக்க வெளிவரும் இம்மலர் சகல நிலைகளிலும் சிறக்க வாழ்த்துகின்றேன்.

இந்தப் பணியில் தம்மை இணைத்துக்கொண்டுள்ள அன்பு நெஞ்சங்கள் அனைவருக்கும் அருள்ஜோதி அமரர் சாம்பசிவ சிவாச்சாரியாரின் குருவருள் சிறக்க வேண்டுமென வாழ்த்துவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். அருள்ஜோதி அமரர் குருபீடாதிபதியின் வழியில் ஆத்மீகப் பணி சிறக்க எமது நல்வாழ்த்துக்கள்.

பேராசிரியர் V. கோபாலகிருஷ்ண ஐயர்

திருநெல்வேலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மங்களம் தரும் வேதம்

ஆகமம் - யாகம்

பிரம்மஸ்ரீ சாம்சிவ சோமாஸ்கந்த சிவாச்சாரியார் (நல்லூர்)

பிரதம குரு

ஓம் என்ற மூலமந்திரத்தை விளக்க வந்தது வேதாகமம். அது ஈஸ்வரனின் அருளையும், புருஷர்களுக்கும் உலகத்திற்கும் உள்ள தொடர்பையும், தொடர்பினால் ஏற்படுகின்ற பாசத்தையும் விடுவிக்கின்ற முறையினையும், பாசத்தை விட்டதனால் மனிதன் (பசு) சர்வேஸ்வரனின் திருவருளுக்குப் பாத்திரமாகின்றான் என்பதையும் விளக்குகிறது.

மேற்கண்ட கருத்தை விளக்க வந்ததுதான் நான்கு வேதங்களும் அதன் முடிவாக அமைந்த உபநிஷத்தங்களும், அதன் பிறகு வந்த ஆகமங்களும் ஆகும்.

## ஆகமத்தின் பொருள்

வேத சிவாகமங்கள் இறைவனது திருமுகங்களில் இருந்து தோற்றம் பெற்றன. என்பது முடிவு வேதங்களாகக் கொள்ளப்படுபவை இருக்கு, யசுர், சாமம் அதர்வம் என்பனவாகும். ஆகமங்கள் காமிகம் முதல் வாதுளம் ஈறாக இருபத்தெட்டு எனக் கொள்ளப்படுகிறது.

1) ஆ - என்பது பாசம், க- என்பது பசு, ம - என்பது பதி, (உலகம், ஆன்மா, கடவுள்) ஆகவே முப்பொருள் உண்மையை விளக்க வந்ததுதான் ஆகமம் என்று புலப்படுகின்றது.

2) ஆ -என்பது சிவஞானம் க- என்பது மோட்சமும் ம - என்பது மலநாசமும் ஆகும். ஆன்மாக்களிடத்தில் இருக்கும் மும்மலங்களையும் நாசம் செய்து சிவஞானத்தைத் தோற்றுவித்து மோடசத்தைக் கொடுக்கவல்லது ஆகமமேயாகும்.

இதனை மணிவாசகர் கூறுகையில் "ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க" என்று திருவாசகத்தில் கூறுகின்றார்.

## ஆகமங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1) காமிகம் | 2) யோகஜம் | 3) சிந்தியம் | 4) காரணம் | 5) அசிதம் |
| 6) தீப்தம் | 7) சூக்குமம் | 8) சகச்சிரம் | 9) அஞ்சுமான் | 10) சுப்பிரபேதம் |
| 11) விஜயம் | 12) நிச்சுவாசம் | 13) சுவாயம்புவம் | 14) ஆக்கினேயம் | 15) வீரம் |
| 16) ரௌரவம் | 17) மகுடம் | 18) விமலம் | 19) சந்திரஞானம் | 20) முகவிம்பம் |
| 21) புரோற்கீதம் | 22) லலிதம் | 23) சித்தம் | 24) சந்தானம் | 25) சர்வோக்தம் |
| 26) பாரமேசுரம் | 27) பிரணம் | 28) வாதுளம் | | |

முதலியன. இதனுள் 207 உபாகமங்களும் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாகமங்கள் மந்திரமெனவும், சித்தாந்த மெனவும், பெயர் பெறுகின்றன. இந்த இருபத்தெட்டுக் சிவாகமங்கள் ஒவ்வொன்றுக்கும் கோடி கிரந்தமாக இருத்தெட்டு கோடி கிரந்தங்கள் உள்ளன. இவை

1) ஞனபாதம் 2) யோகபாதம் 3) கிரியாபாதம்
4) சரியபாதம் என்று நான்கு பாதங்களாக அமைந்துள்ளன.

1) பதி, பசு, பாசம் (கடவுள், ஆன்மா, உலகம்) என்னும் முப்பொருளின் உண்மையை ஞானபாதம் விளக்குகின்றது.

2) பிராணாயாமம் முதலிய அங்கங்களோடும் கூடிய சிவயோகத்தை யோக பாதம் விளக்குகின்றது.

3) மந்திரங்களின் உத்தாரம், சந்தியாவந்தனம், பூசை செபம், ஓமம் என்பவற்றையும் விளக்கி, சமய தீட்சை, விசேஷ தீட்சை நிர்வாண தீட்சை ஆசாரியாபிஷேகம் முதலியவைகளைக் கிரியபாதம் விளக்குகின்றது.

4) சமயசாரங்களையும் அதன் நுட்பங்களையும் தொண்டு செய்கின்ற வழிமுறைகளையும் சரியாதபாதம் விளக்குகின்றது.

இந்த இருபத்தெட்டு சிவாகமங்கள் சிவபெருமானது ஒவ்வொரு அவயவத்தைப் பொருத்துவது போல அமைந்துள்ளது.

ஆகமங்களின் விஷயங்கள் வேதங்களில் நேரிடையாகக் கூறப்படாமல் சுலோகமாகச் சொல்லப்பட்டுள்ளன. மேலும் வேதச் சொற்கள் நுட்பமான சொற்களினாலும், ஆகமங்கள் எளிய சொற்களினாலும் (விரிவுரை போன்று) அமைந்துள்ளன. வேத வாக்கியங்கள் சுலோகமாதலால் பல பொருளாகக் கொள்ளப்படும். ஆகமம் தெளிந்து உணர்த்தும் விரிவுரையாகப் பொருள் கொள்ளக் கூடியதாகும்.

## வேதாந்தம்

வேதங்களின் முடிவாக அமைந்த உபநிஷதங்கள் தான் வேதாந்தமாகும். வேதம் + அந்தம் (முடிவு) = வேதாந்தம் இந்த வேதாந்தத்திற்கு விளக்கம் அளிததவர்கள் தாம் ஆதிசங்கரர் இராமனுஜா மத்துவர் முதலியோர். பிறகு இவர்கள் பிரம்ம சூத்திரத்திற்கு விளக்கம் செய்யும்போது தங்கள் விளக்கத்திற்கு அத்வைதம், விசிஷ்டாத்வைதம், துவைதம் என்று பெயர் சூட்டினர்.

## இருக்குவேத உபநிஷதங்கள்

இந்த இருக்கு வேதம் 21 சாகைகளைக் கொண்டது

1) ஐத்ரேய 2) கௌஷீதகீ 3) நாதவிந்து 4) ஆத்மப்பிரபோதம்
5) நிருவாண 6) முத்கலை 7) அட்சமாளிகை 8) திரிபுரை
9) சௌபாக்கியம் 10) வக்விருச்சானை

என்ற பத்து உபநிஷதங்கள் கொண்டதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வேதம் 180 சாகைகளைக் கொண்டது. இதனுள் 51 உபநிஷதங்கள் உள்ளன. அவை

| | | |
|---|---|---|
| 1) கடவல்லி | 18) தட்சணாமூர்த்தி | 35) அம்சம் |
| 2) தைத்ரியம் | 19) சாரீகம் | 36) பரமஹம்சம் |
| 3) பிரமம் | 20) யோகசிகை | 37) சுபாலம் |
| 4) கைவல்லியம் | 21) ஏகாச்சுரம் | 38) மந்திரிகை |
| 5) சுவேதாச்சுவதரம் | 22) அட்சியம் | 39) நிராம்பலம் |
| 6) கர்ப்பம் | 23) அவதூதம் | 40) திரிசிகி |
| 7) நாராயணம் | 24) கரம் | 41) மண்டலம் |
| 8) அமிர்தவிந்து | 25) சரசுவதி | 42) அத்துவதாரகம் |
| 9) அமிர்தநாதம் | 26) உத்திரவிருதயம் | 43) பைங்கலம் |
| 10) காலக்கினிருத்ரம் | 27) யோககுண்டலினி | 44) பிட்சு |
| 11) சர்வசாரம் | 28) பஞ்சப்பிரமம் | 45) துரியாதீதம் |
| 12) சுரிகை | 29) பிரானாக்கினி, கோத்ரம் | 46) அத்தியாத்துவம் |
| 13) சுகரகசியம் | 30) கலிசந்தரணம் | 47) தாரசரம் |
| 14) தேசோவிந்து | 31) வராகம் | 48) யாக்ஞவல்கியம் |
| 15) தியானவிந்து | 32) ஈசாவசியம் | 49) சாட்டியாயனி |
| 16) பிரமவித்தியை | 33) பிருகதாரணியம் | 50) யோகசிகை |
| 17) யோகதத்துவம் | 34) சாபாலம் | 51) கந்தம் |

**சாமவேத உபநிஷதங்கள்**

இந்த வேதம் 1000 சாகைகளைக் கொண்டது. இதனுள் 16 உபநிஷதங்கள் உள்ளன.

| | | |
|---|---|---|
| 1) கேணம் | 7) யோகசூடாமணி | 13) குண்டிகை |
| 2) சாந்தோக்கியம் | 8) தரிசனம் | 14) சாவித்திரி |
| 3) ஆருணி | 9) வாசுதேவம் | 15) உருதிராக்க சாபாலம் |
| 4) மைத்திராயணி | 10) சந்நியாசம் | 16) சாபாலம் |
| 5) மைத்திரேயி | 11) மகத்து | |
| 6) வச்சிரசூசிகம் | 12) அவ்வியக்கம் | |

முதலியன ஆகும்.

**அதர்வண வேதம்**

இவ்வேதம் 50 சாகைகளைக் கொண்டது. இதனுள் 31 உபநிஷதங்கள் உள்ளன.

| | | |
|---|---|---|
| 1) பிரச்சினம் | 2) முண்டகம் | 3) மாண்டூக்கியம் |
| 4) அதர்வசிரசு | 5) அதர்வசிகை | 6) பிருகச்சாபலம் |
| 7) நிருசிம்மதாபினி | 8) நாரதபரி | 9) விராசகம் |
| 10) சீகை | 11) சரபம் | 12) திரிபாத்வீய மகாநாராயணம் |
| 13) இராமரகசியம் | 14) இராமதாபினி | 15) சாண்டில்யம் |
| 16) பரமஹம்சபரி | 17) அன்னபூரணை | 18) சூரியன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19) ஆத்மம் 20) பாசுபதம் 21) பரப்பிரம்மம்
22) திரிபுராதபினி 23) தேவி 24) பாவனை
25) பஸ்மசாபாலம் 26) கணபதி மகாவாக்கியம் 27) கோபாலதபனம்
28) கிருஷ்ணம் 29) ஹயக்கிரீவம் 30) தத்தாத்ரேயம்
31) காருடம

முதலியன ஆகும்.

வேதத்தின் ஞானகாண்டமும் ஆகமத்தின் ஞான காண்டமும் முப்பொருள் உண்மையை விளக்க வந்தவையாயும் சனகாதி முனிவர்கள் கூறுகையில் சித்தாந்தத்தின் கருத்துகளை வேதமும், ஆகமங்களும், தன்னகத்தே நிறுத்தியும் பல்வேறு வழிகளைக் காட்டியும் உண்மைப் பொருளை உள்ளவாறு வேதாகமங்கள் விளக்குகின்றன என்று தெளிவுபடுத்தியுள்ளனர். இவ்வாறான வேதங்கள் - ஆகமங்கள், ஆகமங்களில் தெய்வத் திருமேனிகளுக்கு உரிய யாகங்கள் யாவும் இன்றைக்கும் திருக்கோயில்களில் நிகழ்த்தப்படுகின்றன. யாகசாலைகள், யாகமந்திரங்கள், யாக திரவியங்கள், அபிஷேகங்கள், உபசாரங்கள் யாவும் பல நிலைகளில் விரிவாகவும், சுருக்கமாகவும், நிகழ்த்தப்பட்டு வருகின்றதை யாவரும் அறிவர்.

யக்ஞம், யாகம், ஹோமம், வேள்வி ஓமம் என்ற சொற்கள் ஒரே பொருளைத் தருவனவாகும். கடமை என்ற சொல்லிற்கு நம் முன்னோர்கள் வகுத்த சொற்களாகும். இறைவனுக்கு யாகம் செய்து வழிபடுவதும் ஒரு நல்ல கடமையாகும். யாகத்தின் மூலமாக முழுமையான பலனை அடையலாம். யாகத்தின் ரூபமாக சிவன் விளங்குகின்றார் என்பதனை யக்ஞ ரூபய நம என்ற பதம் விளக்குகின்றது.

## ஐவகை யாகம்

1) சிவனை எண்ணுதல் , சிவபூசை செய்தல் கர்மயாகம் ஆகும்
2) உடம்பை வளர்க்காது விரதம் இருந்து ஐம்புலனை அடக்குதல் தவயாகமாகும்
3) சிவமூலமந்திரம் (பஞ்சாட்சரம்) ருத்ரம் முதலான மந்திரங்களைச் செபித்தல், ஜயயாகம் ஆகும்
4) சதாகாலம் சதா சிவனைத் தியானித்தல் தியான யாகம் ஆகும்.
5) தியானத்தினால் இறைவனது அருளால் ஞானத்தைப் பெற்று அந்த ஞானாதீதத்தில் திளைத்திருப்பது ஞானயாகம் ஆகும்.

## மற்றைய யாகங்கள்

கணபதி முதலான அனைத்துத் தெய்வங்களுக்கு யாகாதி விசேஷங்கள் உண்டு. இவை தவிர ஆன்மாக்களின் இஷ்ட காம்யங்கள் பூர்த்தி செய்யும் யாகங்களும்உண்டு. சிறப்பாக ஏககாலத்தில் பிரதான மூர்த்தியோடு இந்திராதி முதலான அனைத்து விசேஷ மூர்த்திகளுக்கும் திருக்கோயில்களில் கும்பாபிஷேகம் என்ற முறையில் பல விசேஷ யாகங்கள் பல காலங்களோடு அனுசரித்து செய்யப்படுவதாகும். இந்த யாகங்கள் சிறப்பினுள் சிறப்பாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாகசாலையின் பதங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| குகபதம் | - 1 | காலம் பதம் | - 152 | விஷ்ணு பதம் | - 112 |
| சக்தி பதம் | - 8 | நியதி பதம் | - 160 | பிரம்ப பதம் | - 120 |
| நாக பதம் | - 18 | வித்யா பதம் | - 168 | கண பதம் | - 192 |
| பிந்து பதம் | - 24 | ராக பதம் | - 176 | சித்த பதம் | - 200 |
| சதாசிவ பதம் | - 32 | வேத பதம் | - 184 | ஆரஷ பதம் | - 208 |
| சதாசிவ பதம் | - 40 | தத்வ பதம் | - 64 | யக்ஷ பதம் | - 216 |
| மகேசுர பதம் | - 48 | புவன பதம் | - 72 | கதர்வ பதம் | - 224 |
| சுத்தவியத்பதம் | - 56 | மந்ர பதம் | - 80 | கந்தவர்வ பதம் | - 232 |
| சுத்தமாயா பதம் | - 128 | பத பதம் | - 88 | ரக்ஷ பதம் | - 240 |
| மிச்ரமாயா பதம் | - 136 | வர்ண பதம் | - 96 | மாநவ பதம் | - 248 |
| கலா பதம் | - 144 | ருத்ர பதம் | - 104 | | |

## யாக சமித்துக்கள்

01. வெள்ளெருக்கு
02. பலாசு
03. கருங்காலி
04. நாயுருவி
05. அரசு
06. மா
07. வில்வம்
08. வன்னி
09. அத்தி
10. ஆல்
11. பலா
12. புன்னை
13. மகிழ்
14. மூங்கில் (முள் நீக்கியது)
15. மாதுளை
16. கிளுவை
17. அறுகு
18. சந்தனக்கட்டை
19 வெள்ளெருக்கு
20. வெட்டி வேர்
21. விளாமிச்சை வேர்
22. அகில்
23. செஞ்சந்தனக்கட்டை
24. தேவதாரு
25. பாதிரி
26. செண்பகம்
27. அசோகம்
28. குங்கிலியம்
29. நெல்லி
30. மாவிறகு (1அடி நீளம் கைப்பருமன்)
31. அரசு (1அடி நீளம் கைப்பருமன்)

(குறிப்பு : 1 முதல் 19 வரை உள்ள சமித்துகள் 9 அங்குல நீளம், விரல் பருமானகவும் 20 முதல் 29 முடிய 6 அங்குல நீளம் விரல் பருமனாகவும் இருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாக குண்டம்

| | | |
|---|---|---|
| 1) சதுர குண்டம் | 4) திரியகோண குண்டம் | 7) விருதத குண்டம் |
| 2) யோனி குண்டம் | 5) ஷட்யோன குண்டம் | 8) அஷ்ட கோண குண்டம் |
| 3) அர்த்த சந்ததிர குண்டம் | 6) பதம குண்டம் | 9) பிரதானமான விருதத குண்டம் |

## குடத்தில் சுற்றப்படும் நூல்

குடத்தில் சுற்றப்பட்டுள்ள நூல் மூன்று உள்ளதாக இருக்க வேண்டும். இந்த சுற்றுக்கள் உத்தமம், மத்திமம் அதமம் என்படும்

1) உத்தமம் :- நூல் சுற்றப்பட்டுள்ள இடைவெளி எள் அளவு இருப்பது
2) மத்திமம் :- நெல் இடைவெளி உள்ள சுற்றாக இருப்பது
3) அதமம் :- யானையின் கண் இடைவெளி உள்ள சுற்றாக இருப்பது

## அஷ்டபந்தன திரவியங்கள்

| | | |
|---|---|---|
| 1) சுக்கான்கல் | 4) தேன்மெழுகு | 7) சாதிலிங்கம் |
| 2) குங்கிலியம் | 5) நற்காலி | 8) எருமை வெண்ணெய் |
| 3) கொம்பரக்கு | 6) செம்பஞ்சு | |

## கணபதிக்கு உரிய சிறப்பு திரவியங்கள்

அறுகு, மோதகம், அவல், நெல்பொரி, சத்துமா, கருப்பங்கழி, தேங்காய்கீற்று, சுத்தமான எள், வாழைப்பழம், இவற்றில் தேன், நெய், பால், வெல்லம் இவற்றைச் சேர்த்து ஹோமம் செய்ய வேண்டும்.

## தீர்த்தங்கள்

திருக்குடங்களில் சேர்க்கப்படும். தீர்த்தங்கள், கங்கை யமுனை கிருஷ்ணா, கோதாவரி, நர்மதை, சிந்து, காவேரி, சரசுவதி, குமரி, பயோஷ்னி சரயு மற்றும் அவ்வித தலங்களில் பிரதானமாக விளங்கும் தீர்த்தத்தைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

## வாசனைப் பொருள்கள்

| | | |
|---|---|---|
| 1) கொட்டம் | 2) துருக்கம் | 3) தகரம் |
| 4) அகில் | 5) சந்தனம் | |

## எட்டுவகைத் தானியங்கள்

நெல், கம்பு, வரகு, தினை, சாமை, சோளம், துவரை, மூங்கில்நெல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்ச குண்ட விபரம்

| | | |
|---|---|---|
| 1) கிழக்கில் | - அஹவயாக்கினி | - சதுரகுண்டம் |
| 2) தெற்கில் | - தக்ஷிணாக்னி | - அர்த்தசந்திர குண்டம் |
| 3) மேற்கில் | - கர்ஹபத்யம் | - விருத்த குண்டம் |
| 4) வடக்கில் | - கேவலாக்னி | - பத்ம குண்டம் |
| 5) வடகிழக்கில் | - சிவாக்னி, விருத்தம் | அல்லது சதுர குண்டம் |

## நவகுண்டம்

| | | |
|---|---|---|
| 1) கிழக்கு | - அஹவயாக்னி | - சதுரக்குண்டம் |
| 2) தென்கிழக்கு | - விருத்தாக்கினி | - யோனிகுண்டம் |
| 3) தெற்கு | - தக்ஷிணாக்னி | - அர்த்தசந்திர குண்டம் |
| 4) தென்மேற்கு | - யௌவனாக்கினி | - திரிகோண குண்டம் |
| 5) மேற்கு | - கார்ஹபத்யாக்கினி | - விருத்தகுண்டம் |
| 6) வடமேற்கு | - பாலாக்கினி | - அறுகோண குண்டம் |
| 7) வடக்கு | - கேவலாக்கினி | - பத்மகுண்டம் |
| 8) வடகிழக்கு | - சாமான்யாக்கனி | - எண்கோண குண்டம் |
| 9) ஈசான்யம் | - சிவாக்னி | - விருத்த குண்டம் |

## ஸ்நபனங்களின் எண்ணிக்கை (கும்பங்கள்)

| | | | |
|---|---|---|---|
| 01. | நவகலச ஸ்நபனம் | 06. | நவோத்ரசத் கலச ஸ்நபனம் |
| 02. | சப்த தச கலசஸ்நபனம் | 07. | நவோத்ர சதுர்விசத் கலச ஸ்நபனம் |
| 03. | பஞ்சவிம்சதி கலச ஸ்நபனம் | 08. | நவோத்ர சகஸ்ர சகல ஸ்நபனம் |
| 04. | ஏகோநபஞ்சாசக் கலச ஸ்நபனம் | 09. | நவோத்ர சகஸ்ர சகல ஸ்நபனம் |
| 05. | ஏகாதசி கலச ஸ்நபனம் | 10. | சகஸ்ர சங்க மகா ஸ்நபனம் |

## உதக திரவியங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | ரத்னோதகம் | 9. | பரிமார்ஜன உதகம் | 17. | மூலதோயம் |
| 2. | லோகோதகம் | 10. | புஷ்போதகம் | 18. | சாந்தியூதோகம் |
| 3. | தாதூதகம் | 11. | மான்யோதகம் | 19. | புஷ்கரோதகம் |
| 4. | பீஜோதகம் | 12. | அஸ்திரோதகம் | 20. | கோதுமை |
| 5. | சுத்தோதகம் | 13. | பலோதகம் | 21. | குளச்செந்நெல் |
| 6. | மிருதூதகம் | 14. | காஷாயோதகம் | 22. | சந்தனாதித் தைலம் |
| 7. | மார்ஜன உதகம் | 15. | ஆர்கோதகம் | 23. | நெல்லி முள்ளி |
| 8. | பத்திரரோதகம் | 16. | காந்தோதகம் | 24. | மஞ்சள் மா |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசனம்

1. பிருதிவி தத்துவம் கூர் மாசனம்
2. உபவேதிகை - அனந்ததாசனம்
3. நெல் - யோசானம்
4. அரிசி - பதுமாசனம
5. எள் - விமலாசனம்
6. நெல் மற்றும் மலர்

சத்தியாசனமுமாகப் பிருதுவி முதல் குடிலையீறாகிய தத்துவங்களுக்கும் பஞ்சாசனமாக அமைந்துள்ளன.

## மந்திரவாதிகள் (பொது)

1. மூலமந்திரம்
2. பீஜமந்திரம்
3. பஞ்சமந்திரம்
4. சடங்க மந்திரம்
5. சம்ஹிதா மந்திரம்
6. பதமந்திரம்
7. மாலா மந்திரம்
8. சம்மேள மந்திரம்
9. காயத்திரி மந்திரம்
10. அசபா மந்திரம்
11. பிராண பிரதிட்ட மந்திரம்
12. மாத்ருகா மந்திரம்
13. மோன மந்திரம்
14. சாத்ய மந்திரம்
15. நாம மந்திரம்
16. பிரயோக மந்திரம்
17. அத்திர மந்திரம்
18. விஞசன மந்திரம்
19. பசிநீக்கு மந்திரம்
20. விண்ணியக்க மந்திரம்
21.. வேற்றுரு மந்திரம்
22. துயில் மந்திரம்
23. திரஸ்கரிணி மந்திரம்
24. சட்கர் மந்திரம்
25. அஷ்டகர்ம மந்திரம்
26. பங்சகிருத்திய மந்திரம்
27. அகமருடண மந்திரம்
28. ஏகா மந்திரம்
29. திரியக்ஷரி மந்திரம்
30. சடாஷிர மந்திரம்
31. அஷ்டாகூர மந்திரம்
32. பஞ்சாட்சிர மந்திரம்
33. நவாக்கரி மந்திரம்
34. தசாஷிர மந்திரம்
35. துவாசதசநாம மந்திரம்
36. பஞ்ச தசாக்கரி மந்திரம்
37. சோடாசாக்ஷிரி மந்திரம்
38. தடை மந்திரம்
39. விடை மந்திரம்
40. பிரசாத மந்திரம்
41. உருத்திர மந்திரம்
42. சூக்த மந்திரம்
43. ஆயுள் மந்திரம்
44. இருதய மந்திரம்
45. கவச மந்திரம்
46. நியாச மந்திரம்
47. துதி மந்திரம்
48. உபதேச மந்திரம்
49. தாரக மந்திரம்
50. ஜெப சமர்ப்பண மந்திரம்
51. நீல கண்டம்
52. மிருத்யுஞ்சயம்
53. தட்சணா மூர்த்தி
54. சரபம்
55. வீரபத்திரம்
56. விநாயகம்
57. சண்முகம்
58. வைரவம்
59. நரசங்கம்
60. நவக்கிரகம்
61. வாலை
62. புவனை
63. திரிபுரை
64. துர்க்கை
65. அசுவாருடி
66. சப்தமாதா
67. முப்பத்துமுக்கோடி தேவர்கள்
68. பதினெண்கணம்
69. போகினியர்
70. காலக்கடவுள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சப்த கோடி (முடிவு) மகா மந்திரங்களின் விளக்கம்

1. நம :- வணக்கம், தர்ப்பணம் - நிலைநிறுத்தல். இறைத்திருவருள் தன்னில் நிலைக்க வேணடல், இது மூல மந்திரங்களின் முடிவில் வைக்கப் படும்.

2. ஸ்வாஹா :- இது பெரும்பாலும் ஓமிர்தலில் பயன்படுகின்றது. ஒரு மந்திரத்தின் உபாசனா தேவதைக்கு ஒரு மந்திரத்திரன் உபாசனா தேதைக்கு ஓமத்தில் அளிக்கப்படும் பொருள் கொண்டு அத்தேவதை திருப்தியுற வேண்டும் என வேண்டுதல் . ஆகும்.

3. வஷட் :- இதன் மூலம் நம் விளைவு எதையும் தன் வயப்படுத்தல். (வசியம்) என்பது உணர்த்தப்படுகிறது.

4. வௌஷட் :- இது நமது விருப்பம், எப்பொருளையும் தன் அருகாமையில் ஈர்த்துக் கொள்ளல் (ஆகர்ஷணம்) ஆகும்.

5. ஸ்வதா :- இது எரியிலிடாது தேவர்கட்கும், இருடிகட்கும் முனிவர்க்கும் பிதிர்கட்கும் கணங்கட்கும் உலய்ய ஆன்ம கோடிகட்கும் அளிக்கப்படும். பொருள்கள் அவ்வப் பிரிவினர்க்கு மகிழ்வு (துஷ்டி) அளிக்க வேண்டுதலாம்.

6. ஹம் :- இது மந்திர அஸ்திர தேவதைகள் தன் பகைவரை அச்சுறுத்தி அவர்களைத் தனக்குப் பணிய வைப்பதை வேண்டுவதாம்.

7. பட் :- ஏவிய காரியத்தை உடன் முடிக்க வேண்டுதல் (விஜர்ஜனம்) இதன் குறிக்கோள் ஆகும்.

குறிப்பு :- பெரும்பாலும் இவையிரண்டையும் கூட்டி ஹம்பட் என்றே பயன்படுத்துவர்

8. ஹைஹை :- இதன் பயன் பகைகள் முற்றிலும் செயலற்றநிலை (மரணம்) பெற உந்துவதாகும்.

இவ்வாறு இக்கோடி மந்திரங்களைத் தனித்தனியாகவும் இரண்டு அல்லது மூன்றினைக் கூட்டியும் பயன்படுத்துவது மந்திர சாஸ்திரத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாக சாலைக்குரிய திரவியங்கள்

மஞ்சள் பொடி
குங்குமம்
நல்லெண்ணெய்
பசும்பால்
நாரத்தம்பழம்
பாக்கு
குங்குமப்பூ
கிராம்பு
தேங்காய்
பச்சரிசி
மூங்கில் தட்டு
பயறு
ஆரஞ்சு
விளாம்பழம்
பலாப்பழம்
மாம்பழம்
கடுக்காய்
மாசிக்காய்
பனைவெல்லம்
அவல்
சாதிலிங்கம்
யவைநெல்
தினை
நெறி அரிசிபால்
சாதிக்காய்
சவ்வாது
கோரோசனை
தேன்
காணாகருணை
அன்னாசிப்பழம்
ரஸ்தாளிப்பழம்
முத்த காசு
திரிநூல்கள்
குடங்கள்
உத்தரணி
நெச்சிப் பத்திரம்
உதிரிப்பூக்கள்

திரவிய பொடி
சந்தனம்
கடலை எண்ணெய்
பசுந்தளிர்
பூவன்பழம்
சீவல்
பச்சைக் கற்பூரம்
பன்னீர்
இளநீர்
தென்னை
விசிறி
கூடம்
சாத்துக்குடி
கொடிமுந்திரிப்பழம்
கரும்பு
திராட்சை
பேரீச்சம்பழம்
உருண்டை வெல்லம்
கருப்பட்டி
தர்ப்பை
கங்கா தீர்த்தம் முலியன
சாமை நெல்
ஜடாமஞ்சு
அகுபாக்கு
சாதிப்பத்திரி
கச்சோலம்
அரகஜா
சர்க்கரை
சேப்பங்கிழங்கு
நாவல்
நெல்
பச்சை நெல் உமி
சூரியகாந்தக் கண்ணாடி
செம்புகள்
வில்வப் பத்திரம்
விளாபத்திரம்
மருக்கொழுந்து

மாப்பொடி
புஷ்பம்
பசுநெய்
எலுமிச்சம் பழம்
வெற்றிலை
சாம்பிராணி
ஏலக்காய்
ஜலதிரவியம்
வாழையிலை
வாழைக்காய்
உளுந்து
பத்தி
தம்பரத்தம் பழம்
வில்வப்பழம்
கருப்பஞ்சாறு
விளாமுச்சி வேர்
நெல்லி முள்ளி
அச்சுவெல்லம்
நெற்பொரி
முப்புரிநூல்கண்டு
மூங்கில் அரிசி
மட்டிப்பால்
வால்மிளகு
புனுகு
கஸ்தூரி
சந்தனாதித்தைலம்
கற்கண்டு
மலைப்பழம்
பப்பளிமாஸ்பேயன்பழம்
நீவாரம்
மாவிலை
மண்மடக்குகள்
அர்க்கிய பாத்திரங்கள்
அச்சகத் தகடு
பன்னீர் செட்டு வகையறா
மாவிலங்குப் பத்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தாழம்பூ | கிழுவைப் பத்திரம் | வெள்ளைத் துண்டு |
| வெட்டிவேர் | தங்கநிற மஞ்சள் துண்டு | அறுகு |
| கறுப்புத் துண்டு | நவக்கிரக வஸ்திரங்கள் | சிகப்புத் துண்டு |
| மஞ்சள் துண்டு | நீலநிறத் துண்டு | சித்ர வர்ணத் துண்டு |
| கணபதிக்கு துண்டு | கும்பவஸ்திரம் (சுவாமி) | பூர்ணாஹுதிக்கு பட்டு |
| உரித்த தேங்காய் | பூர்ணபலம் | கும்பவஸ்திரம் (அம்பாள்) |
| சுவாமி வேதிகை | (வஸ்திரம்) | ஆசார்ய வஸ்திரம் |
| வாஸ்து சாந்தி வஸ்திரம் | பரிசாகர வஸ்திரம் | அவிசு பாத்திரம் |
| ரக்ஷாபந்தனக் காப்பு | பொன்தகடு | கூர்மாதி பிரதிமைகள் |
| ஸ்வர்ண பங்கஜம் | நீலோத்பலம் பவித்ரம் | பொன்ஊசிக்கம்பி |
| வெள்ளிக்கம்பி | கடுகு | பிள்ளைப்பூண்டு |
| கடலை | கோதுமை | மொச்சை கொள்ளு |
| எள் | அகில் | முகில் |
| தேவதாரு | சந்தனக்கட்டை | கோரைக்கிழங்கு |
| பூலாங்கிழங்கு | செண்பக மொட்டு | ரோஜா மொட்டு |
| வலம்புரி | இடம்புரி | கஸ்தூரி மஞ்சள் விரளி |
| மஞ்சள் | தாமரைக் கிழங்கு | தாமரைக் காய் |
| சுக்கு | அரிசி | திப்பிலி |
| சித்திரத்தை | வெள்ளை மிளகு | கிராம்பு |
| வெண்கடுகு | | |

## தனலட்சுமி ஜை வகையறா

| | | |
|---|---|---|
| ரவிக்கைத் துண்டு (சிவப்பு) | சீப்பு | கண்ணாடி |
| குங்குமச்சிமிழ் | பழங்கள் | சந்தனம் |
| தங்கக்காசு | | |

## பூசைகள்

| | | |
|---|---|---|
| அனுக்ஞை | பிராமன அனுக்ஞை | தேவதா அனுக்ஞை |
| விக்னேஸ்வர பூசை | புண்ணியாகவாசனம் | பஞ்சகவ்வியம் |
| வாஸ்துசாந்தி | மிருகத்சங்கிரஹகணம் | அஸகரார்ப்பணம் |
| ரக்ஷாபந்தம் | பிரச்னனாபிஷேகம் | கும்பஸ்தாபனம் |
| பிரதான கலசம் | வர்த்தினி பரிவாரக கலசம் | ஸப்தவிம்சதி கும்பம் |
| அட்வித்யேஸ்வர கும்பம் | விநாயகர் யாகம் | நவக்கிரக பரிவாரக கலசம் |
| நவக்கிரக யாகம் | வர்த்தினி பரிவாரகலசம் | ஸ்வர்ண புஷ்பம் ஸ்ருக் |
| ஸ்துவம் | யாத்ராதானம் | அபிஷேக தட்சணை |
| அஷ்டபந்தன மருந்து | சுவர்ண பந்தம் | ராஜபந்தம் |
| மருந்துக்கு பசுவெண்ணெய் | யாகசாலை அமைத்தல் | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஷ்டமிர்திகை அபிஷேகம்

| | |
|---|---|
| சமுத்திர மண் | காவேரி மண் |
| யானையடி மண் | புற்றுமண் |
| தர்ப்பை மூலமண் | நண்முவளை மண் |
| காளைமாட்டுக் குளம்புமண் | புண்ணிய ஸ்தல மண் |
| கூர்மா சனபலகை | ஆசனப் பலகை(பிரதானம்) |
| அஷ்டங்களப் பலகைகள் | தசாயுபலகைகள் |
| தோரண வாயில் | தீபஸ்தம்பம் (விளக்கு) |
| முக்காலி | ஸ்நான வேதிகை |
| மணதோட்டிகள் | கடத்திற்று முப்புரி நூல்கண்டு |
| கலர் நூல் கண்டுகள் | மண் மடக்குகள் |
| பாலிகைகள் - 12 | |

## சமித்துகள்

| | | | |
|---|---|---|---|
| மா | பாதிரி | பலா நெல்லி | |
| அரசு | மூங்கில் | புரசு அறுகு | |
| அத்தி | தர்ப்பை | வில்வம் | தர்ப்பைக் கயிறு |
| வன்னி | மோது | நாயுருவி | பூசணிக்காய் |

## வாஸ்து சாந்திகள்

| | | |
|---|---|---|
| மண்வெட்டி | உபநிடதகோஷ்டி | மூங்கில் தட்டுகள் |
| ஆகம கோஷ்டி | தாம்பாளங்கள் | புராண கோஷ்டி |
| வலம்புரிச்சங்கு | சாஸ்திர கோஷ்டி | வேட்டி - துண்டு |
| திருமுறை கோஷ்டி | சுவர்ண புஷ்பம் | கோஷ்டிகளுக்கு வஸ்திரம் |
| சோடச சாமான்கள் | மற்றும் தட்சணைகள் | வேத கோஷ்டி |

## விசேஷ யாகத் திரவியங்கள் - பலன்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பொரசு | - | பிரஜாவிருத்தி | வெள்ளப்பெருக்கு | - | ரோகநாசம் |
| கருங்காலி | - | விஜயம் | நாயுருவி | - | விஷநாசம் |
| இத்தி(இச்சில்) | - | சௌபாக்கியம் | மா | - | ஐஸ்வரியம் |
| அத்தி | - | போகம் | பாதிரி | - | சந்ருக்ஷயம் |
| சந்தனம் | - | சாந்தி | மூங்கில் | - | சாந்தி |
| ஆல் | - | ஆரோக்கியம் | பலா | - | கீர்த்தி |
| வன்னி | - | வசியம் | அறுகம்புல் | - | தரித்ரநாசம் |
| வில்வம் | - | இஷ்டசித்தி | தர்ப்பை | - | ஞானசித்தி |
| | | | நெய் | - | ரோகநாசம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹவிஸ்

| | | | |
|---|---|---|---|
| சுத்தான்னம் | - சுபவிருத்யீத | தேங்காய் சாதம் | - புஷ்டி |
| பாலன்னம | - ஆயுள் | எலுமிச்சை சாதம் | - வசியம் |
| எள்ளன்னம | - பாபநாசம் | பாயாசன்னம் | - திருப்தி |
| மிளகன்னம | - சத்ருநாசம் | உளுந்தன்னம் | - க்ரோசசமை |
| தயிரன்னம | - ஆரோக்கியம் | வெண்கடுகு | - க்ரோதசமை |
| பருப்பன்னம் | - வித்யாலயம் | உளுந்து | - பசுவிருத்தி |
| தேன்னனம் | - சந்தோஷம் | நெல்பொரி | - சாயுஜ்யம் |
| கடுகு அன்னம் | - பயநாசம் | | |

## சத்துமாவு

| | | | |
|---|---|---|---|
| ரிபுநாகம் | - கடன் நீக்கம் | கரும்பு | - பிராணி சுகம் |
| பால் | - சௌபாக்கியம் | வெள்ளரிக்காய் | - விருத்தி |
| தயிர் | - சுகம் | தேன் | - சந்தோஷம் |
| வெல்லம் | - செல்லப்பேறு | சர்க்கரை | - சத்துருநாசம் |
| வாழைப்பழம் | - துக்கநாசம் | அவல் | - இஷ்டசித்தி |
| மாம்பழம் | - ரோகநிவர்த்தி | லட்டுகள்(இட்லி) | - சுபிட்சம் |
| பலாப்பழம் | - சுபம் | மாஷாபூகம் | - யட்சு |
| விளாம்பழம் | - புத்ரலாபம் | அப்பம் | - சந்தோஷம் |
| மாதுளம்பழம் | - புத்ரலாபம் | நீர்க்கொழுக்கட்டை | - இஷ்டசித்தி |
| பேரீச்சம்பழம் | - வலிமை | திலாபூபம் (எள்கொழுக்கட்டை) | - பாபநாசம் |
| நாரத்தம்பழம் | - சோரநாசம் | திலகண்டம்(எள் உருண்டை) | ஆயுள் |
| எலுமிச்சம்பழம் | - வசியம் | மோதகம் | - ஆனந்தம் |
| திராட்சைப்பழம் | - இஷ்டசித்தி | அகில் | - வலிமை |
| தேங்காய் | - சர்வானுகூலம் | தேவதாரு | - சுகம் |
| பயறு | - ஆயுள் | வெண்மொச்சை | - சௌந்தர்யம் |
| கொண்டைக்கடலை | - சிரேயசு | கிழங்குகள் | - பூமிலாபம் |
| கோதுமை | - ஸாதிகாரம் | வெட்டிவேர் | லாபம் |
| குளச்சல் நெல் | - வீர்யம் | விளாமிச்சை வேர் | - மோகம் |
| யவைநெல் | - இராஜவசியம் | மருக்கொழுந்து | - விருத்தி |
| மூங்கில் அரிசி | - தேக காந்தி | குங்கிலியம் | - சாருயம் |
| கொள்ளு | - தேகபலம் | சிற்றேனம் | - ப்ரீதி |
| கருமொச்சை | - வம்சவிருத்தி | கிராம்பு | - பயநாசம் |
| துவரை | - வீர்யம் | சாதிக்காய் | - விரோதசமனம் |
| தினை | - இஷ்டசித்தி | சாதிபத்திரி | - அனுகூலம் |
| வெள்ளை எள் | - சோக நாசம் | பன்னீர் | - பிரியம் |
| அவரை | - பந்துலாபம் | குங்குமப்பூ | - ப்ரீதி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| நெல் | சுபிட்சம் | பச்சைக் கற்பூரம் | ப்ரீதி |
| பொற்சம்பா நெல் | | சந்தனக் கட்டை | ப்ரீதி |
| செம்பாளை நெல் | | கஸ்தூரி | ப்ரீதி |
| வால்நெல் | | புனுகு | ப்ரீதி |
| வெள்ளைச்சம்பா நெல் | | கோரோசனை | ப்ரீதி |
| சிவப்புச் சம்பா நெல் | | செஞ்சந்தனம் | ப்ரீதி |
| புனுகு சம்பா நெல் | | தாமரை முதலான மலர்கள் | செல்வம |
| பெருஞ்சம்பா நெல் | | பத்திரங்கள்(தளிர்கள்) | ஆரோக்கியம |
| செம்பவள நெருப்பு | | வில்வம் | பாநாசம் |
| பன்றி நெய் | | நீலோத்பலம் | அருள |
| கூர் நெல் | | சாமை | மழை |
| முத்துச் சம்பா நெல் | | வரகு | மலநாசம் |
| வாசனைத் திரவியங்களுடன் கூடிய தாம்பூலம் | | | இஷ்ட சித்தி |

**அபிஷேகப் பலன்**

| | |
|---|---|
| கந்த தைலம் | இன்பம் |
| மாப்பொடி | கடன்தீரும் |
| மஞ்சட் பொடி | அரசுவசியம் |
| நெல்லி பருப்புப் பொடி | பிணிநீக்கம் |
| திருமஞ்சனத் திரவியம் | பிணிநீக்கம் |
| பஞ்சகவ்வியம் | சுத்தம், கலபாப நீக்கம் |
| பஞ்சாமிர்தம் | முக்தி |
| பழபஞ்சாமிர்தம் | முக்தி |
| பால் | ஆயுள் விருத்தி |
| தயிர் | குழந்தைப்பேறு |
| நெய், இளநீர் | முக்தி |
| தேன் | சுகம், சங்கீத குரல் வளம் |
| இளநீர் | இராஜயோகம் |
| சர்க்கரைச் சாறு | சத்துருநாசம் |
| கரும்புச்சாறு | ஆரோக்கியம் |
| தமரத்தம் பழச்சாறு | மகிழ்ச்சி |
| எலுமிச்சம் பழச்சாறு | பயம்போக்கும் |
| நாரத்தம் பழச்சாறு | மந்திர சித்தி |
| கொலுஞ்சிச்சாறு | சோகம் போக்கும் |
| மாதுளம் பழச்சாறு | பகைமை அகற்றும் |
| அன்னாபிஷேகம் | விளைநிலங்கள் நலன்தரும் |
| வில்வோதகம்(லவம் கலந்த நீர்) | மகப்பேறு |
| குசோதகம்(தருப்பை கலந்தநீர்) | ஞானம் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| பன்னீர் | - | குளிர்ச்சி |
| விபூதி | - | சகல ஐஸ்வரியம் |
| ஸ்வர்யோதகம் | - | சகல சௌபாக்கியம் |
| ரத்னோதகம்(ரத்னம் கலந்த நீர்) | - | ஞானம் |
| கோரோசனை | - | சகல ஆரோக்கியம் மிக்க புகழ் |
| சகஸ்ரதாரை | - | சகல ஆரோக்கியம் மிக்க புகழ் |
| ஜவவாது | - | சகல ஆரோக்கியம் மிக்க புகழ் |
| புனுகு | - | சகல ஆரோக்கியம் மிக்க புகழ் |
| குங்குமபபூ | - | சகல ஆரோக்கியம் மிக்க புகழ் |
| சஙகாபிஷேகம் | - | சகலபாபரிஷ்டம |
| ஸ்நப கும்பாபிஷேகம் | - | சித்த சுத்தியடைந்து சிவதரிசனம் |

ஒவ்வொரு அபிஷேகத்தின் பின் வடிகட்டிய சுத்த ஜலத்தால் அபிஷேகம் செய்யப் பரம சாந்தம் உண்டாகும்.

*சுபம்*

# வைணவ ஆகமமும் சித்தாந்தமும்

ஆகமங்கள், வைகானசம், பாஞ்சராத்ரம் என்று இரண்டு வகை. ஆலய வடிவமைப்பு, ஆண்டவனின் உருவமைப்பு, அணிகலன்கள், ஆராதனை விழாக்கள் இவைகளைப் பற்றிய விவரங்கள் கொண்டது ஆகமம்.

திக்தகந்தம் இரண்டு வகை

ரஹஸ்யத்ரயசாரம், ஸ்ரீ பாஷியம், பகவத்கீதை, உபநிஷத்து ஆகியவை ஒரு வகை. இவைகளை எளிய முறையில் தொகுத்து நமக்கு அளித்தவர்கள் ஸ்ரீ ராமானுஜர் என்ற பாக்ஷியக்காரரும், ஸ்ரீ வேதாந்த தேசிகரும்.

திவ்ய பிரபந்தங்கள் என்று இரண்டாவது வகை.


இவைகளை வகைப்படுத்தி நமக்கு அளித்தது ஆழ்வார்கள். இந்த இரண்டு வகை சித்தாந்தங்களை கற்ற வைணவர்களை உபய வேதாந்திகள் என்று சொல்வது மரபு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஷஷ்டியப்த பூர்த்தி விழாவின் போது
நியாய சிரோமணி இ. சுப்பிரமணிய
சாஸ்திரிகளோடு குருபீடாதிபதி தம்பதிகள்



குரு பீடாதிபதியின் தத்துப் புதல்வனான
அவரது பேரன் மணிவண்ண - பிருந்தாபனுக்கு
ஆயுஷ்ஹோம வைபவத்தின்போது



தன் வழியே தன் பேரனும் வரவேண்டும்
என்று பேராசை கொண்டு அன்பு
அரவணைப்பால் நெறிப்படுத்துகிறார்.



அதி உத்தம முன்னாள் ஜனாதிபதி
திரு. J. R. ஜெயவர்த்தனா அவர்கள்
குருபீடாதிக்கு மலர் மாலை
அணிவித்து கௌரவிக்கிறார்



சபரிமலை சாஸ்தாபீட விழாவின்போது நயினை சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள்,
நவாலி சாமி விஸ்வநாதக் குருக்கள், சதா சுப்பிரமணியப் பட்டர்,
சுன்னாகம் நா. சர்வேஸ்வரக் குருக்கள் "கலைமாமணி" சாம்.
சோமஸ்கந்த சிவாசாரியார் ஆகியோருடன் குருபீடாதிபதி அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குருபீடாதிபதியின் ஷஷ்டியப்த பூர்த்தியில்
சுப்பிரமணிய சாஸ்திரிகள் 1988. 08. 22




எட்டியாந்தோட்டை ஸ்ரீ விநாயகர் ஆலய வருடாந்த
உற்சவ ஆரம்ப தினத்தில் உபன்னியாசம்



மருமகன் சிவஸ்ரீ பத்மநாப குருக்களுக்கு
ஆசார்ய அபிஷேக வைபவத்தின்போது



மகன் ஆசார்ய அபிஷேக வரவேற்பு
விழாவில் கம்பவாரிதி இ. ஜெயராஜ்
உடன் குரு பீடாதிபதி



தம்பியார் அமரர் பாலசுப்பிரமணியக்
குருக்களுடன் பீடாதிபதி அவர்கள்



பீடாரோஹண வரவேற்பு விழாவில் பேரன்
பிருந்தாபன் உடன் குருபீடாதிபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

**BRAHMA SRI. SAMY VISVANATHA KURUKKAL**
"Prathisda Sironmani, Kriya Kirama Jothy,
Swanupoothy, Sivachariya Thurantharar"

42/9, Suvisuddharama Road,
Wellawatte, Colombo - 06
Sri Lanka.
T.P. & Fax : 01-585063

பிரம்மஸ்ரீ சாமி. விஸ்வநாதக் குருக்கள்
(பிரதிஷ்டா சிரோன்மணி, கிரியாகிரமஜோதி, பிரதிஷ்டாகலாநிதி,
சிவாச்சார்ய சக்கரவர்த்தி, சுவானுபூதி)

42/9, சுவிசுத்தாராம வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு-06.
இலங்கை.
தொலைபேசி/ தொலைநகல் : 01-585063

**இலங்கை இந்து மத பீடாதிபதியாக இருந்த அமரர் பிரம்மஸ்ரீ ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியப் பெருமகன் உத்தம சிவாச்சாரியராகவும், கிரியாஞானியாகவும், சிறந்த ஆகம புராண வல்லுனராகவும், ஆகம வைதீக கிரியாதுரந்தரராகவும் அமைந்த பெருமைக்குரிய அந்தணர் திலகம் பிரம்மஸ்ரீ ஸ்கந்த சாம்பசிவக் குருநாதரின்**

## 80வது ஜயந்தினப் பெருவிழா



"அந்தணர் என்போர் அறவோர் மற்று எவ்வுயிருக்கும்' செந்தண்மை பூண்டு ஒழுகலான்" என்ற முதுமொழிக்கு அமைந்த உத்தமகுருவாகவும், கிரியா ஞானியாகவும், சிறந்த சித்தாந்த, வேதாந்த, புராணீக வித்தகராகவும், நல்லை நகரில் பிறந்து இந்துமத குரு பீடாதிபதியாகச் சிறந்து விளங்கிய பெரியாரும், தத்துவஞானியும் ஆகிய குருக்களின் 80வது ஜயந்தி விழா.

அவரின் மகன்மாரில் சிறந்த கலைத்திறனும் ஆகம அறிவு ஆற்றலும் கொண்டு சர்வசாதகபோதகதிலகமாக விளங்கும் இலங்கையில் மாத்திரமன்றி சிங்கப்பூர் மலேசியா, லண்டன் பொன்ற நாடுகள் எல்லாம் சென்று சமயக் கிரியைகள் கும்பாபிஷேகம் மஹோற்சவங்களைத் தலைமைதாங்கி நடத்திய பெருமைக்குரிய சர்வசாதகதிலகம் சாம்பசிவ ஜெகதீஸ்வரக் குருக்கள் தனது தந்தையாரின் இந்த 80வது ஜயந்தி தின விழாவைச் சிறப்புற நடத்துகின்றார். அவ் விழாவினையொட்டி பல வித்துவான்களால் எழுதப்பெற்ற கருத்துரைக் கட்டுரைகள் அடங்கிய மலர் ஒன்றும் வெளியிடப்படுகின்றது. மலர் வெளியீடும் ஜெயந்தி விழாவும் நல்லைக்கந்தனதும், குருக்களின் குலதெய்வம் ஸ்ரீராஜராஜேஸ்வரி அம்பாளினதும், அளப்பரும் கருணையுடன் சிறப்புற வேண்டுமென எனது பிரார்த்தனையுடன்கூடிய ஆசியையும் அன்புடன் சமர்ப்பித்துக்கொள்கிறேன். விழாவின் போது 06-08-2002 தினத்தில் அன்னாரின் ஞபகார்த்தமாக விசேஷசந்தி, பூதசுத்தி அந்தர்யாகம் ஆகிய கிரியைகள் (C.D) இறுவெட்டு மூலம் வெளியீடு செய்யப்படுவதை மனமகிழ்ச்சி யுடன் வரவேற்கிறேன்.

வாழ்க அந்தணர்,
வாழ்க வேதஆகம கூற்றுக்கள் யாவும்
வையகம் போற்றுக

சுபம்

இங்ஙனம்
அன்புக்குரிய
சாமி. விஸ்வநாதக் குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மனோ கணேசன்**
பாராளுமன்ற உறுப்பினர்
கொழும்பு மாவட்டம்.

**Mano Ganeshan**
Member of Parliament
Colombo District.

# பெருமைமிக்க குருபீடாதிபதி



ஈழமணித் திருநாட்டின் முதலாவது இந்துமத குருபீடாதிபதியாகவும் ஈடிணையற்ற பெருஞ் சிவாச்சாரியாராகவும் திகழ்ந்த பெருமதிப்புக்குரிய டாக்டர் ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களின் 80வது ஜெயந்தி தினம் பெரு விழாவாகக் கொண்டாடப்பட இருப்பதை அறிந்து மகிழ்வடைகிறேன். செயற்கரிய செய்தோரை நாம் நினைவிலிருத்திக் கௌரவிக்க வேண்டும்.

இந்தப் போற்றுதற்குரிய பணியில் ஈடுபட்டிருக்கின்ற அனைவரையும் வாழ்த்தி அமைகிறேன். மேலும் ஜயந்தி மலரும் 'ஆத்ம பஞ்சகம்' எனும் (C.D.) இறுவெட்டு ஒன்றினையும் சிவாச்சாரியாருடைய ஞாபகார்த்தமாக வெளிவருவது பாராட்டுக் குரியது.

நன்றி


வணக்கம்.

திரு. மனோகணேசன் (பா.உ)
கொழும்பு மாவட்டம்,
மேல் மாகாண மக்கள் முன்னணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## ஸ்ரீ நகுலாம்பிகா சமேத
# ஸ்ரீ நகுலேஸ்வர சுவாமி கோவில்


ராஜராஜ ஸ்ரீ கு. நகுலேஸ்வர குருக்கள்
ஆதீனகர்த்தாவும் பிரதம சிவாச்சாரியாரும்
தொலைபேசி : 021-2440

நகுலேஸ்வரம்,
கீரிமலை,
காங்கேசன்துறை,
ஸ்ரீ லங்கா


## ஆசிச் செய்தி

அகில உலக இந்துமத குருபீடாதிபதியின் 80வது ஜெயந்தி தின விழாவும் ஜெயந்தி மலரும் நிகழும் சித்திரபானு வருஷம் ஆடித்திருவாதிரையில் மலர இருப்பதறிந்து மகிழ்கின்றோம்.

எல்லாம் வல்ல பார்வதி பரமேஸ்வரனின் அநுக்கிரகத்தால் விழா இனிது நிகழவும் மலர் மணங்கமழவும் முதலாவது குரு பீடாதிபதியான சாம்பசிவ சிவாச்சாரியாரின் புகழ் நிலைக்கவும் எனது நல்லாசியைத் தெரிவிக்கின்றேன்.

ராஜராஜ– ஸ்ரீ –கு. நகுலேஸ்வரக் குருக்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஸ்ரீ ராம ஜெயம்

கிரியா சிரோன்மணி
சிவஸ்ரீ சோ. சந்திரகாந்தக் குருக்கள்
பிரதம குரு
தெஹிவளை ஸ்ரீ நெடுமால் தேவஸ்தானம்
கொழும்பு, இலங்கை.

# வைஷ்ணவ நெறி

தமிழர் கண்ட சமயங்களுள் தொன்மையானவை சைவமும் வைணவமுமாகும். சிவபெருமானை முழுமுதற் பொருளாகக் கொண்டு வழிபடுகிற சமயம் சைவ சமயமாகும். அதுபோல திருமாலாகிய பெருமாளை முழுமுதற் கடவுளாகக் கொண்டது வைஷ்ணவம். சைவத்தையும், வைஷ்ணவத்தையும் இணைத்து அதனுடைய கோட்பாடுகளையும் தத்துவ நெறிகளையும் கண்ட பெருமையுடையது நம் தமிழினம். சைவசமயத் திருமுறைகளை அடிப்படையாகக் கொண்டு 'மெய்கண்டார்' சைவசித்தாந்தம் எனும் தத்துவ நெறியை வகுத்தார். அதேபோல் 'இராமானுஜர்' ஆழ்வார்களின் அருட்பாடல்களாகிய நாலாயிரம் திவ்யப் பிரபந்தங்களை அடிப்படையாகக் கொண்டு !விசிஷ்டாத்வைதம்' எனும் தத்துவ நெறியை வகுத்தார்.

விசிஷ்ட என்றால் குணங்கள் கூடியது, சிறப்புமிக்கது என்று பொருள். அத்வைதம் என்றால் 'இரண்டின்மை உள்ளது ஒன்றே' என்றும் பொருள். அதாவது சிறப்புமிக்க அத்வைத நெறி என்பதே விசிஷ்டாத்வைதம், இந்த நெறியினை தத்துவம், ஹிதம், புருஷார்த்தம் என்று மூன்று வகையாகப் பார்க்கலாம். தத்துவம் என்பது மெய்ப்பொருட் கோட்பாடு எனவும் ஹிதம் என்பது நற்பயன் விளைவிக்கும் மந்திரங்கள் எனவும், புருஷார்த்தம் என்பது இறுதியில் உயிர்கள் அடையும் இலக்கு என்பதையும் சுட்டும்.

தத்துவம் என்பது சித்து (உயிர்), அசித்து (உடல்), ஈஸ்வரன் (இறை) ஆகிய மூன்றினைக் குறிக்கும். 'சித்த சித்தோடு ஈசன் செப்புகின்ற மூவகைத் தத்துவத்தின் முடிவுகண்ட சதுர்மறைப் புரோஹிதன்' என்று வில்லிபாரதம் நம்மாழ்வாரைப் போற்றுகின்றது. இம்மூவகைத் தத்துவக் கூறுகளையும் 'தத்வத்ரையம்' என்று குறிப்பிடுவார்கள். இறை எனப்படும் திருமாலே சர்வ வியாபியாக எங்கும் இருப்பவன். விஷ்ணு எனும் சொல்லுக்கே எங்கும் நிறைந்தவர் என்றும் பொருள். "உண்ணும் சோறு, பருகும் நீர், தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் எம்பெருமான் கண்ணீர் மல்கி" என்பது நம்மாழ்வார் கூற்று.

சித்து எனப்படுகின்ற உயிரானது உடல், இந்திரியங்கள், மனம், பிராணன், புத்தி என்பவற்றிலிருந்து வேறுபட்டது. ஆன்மா மூப்பு, இறப்பற்றது: ஈஸ்வரனது ஆணைக்குட்பட்டது. பக்தர், நித்தியர், முக்தர் என்ற மூவகைப்பட்டது. பக்தர் எனப்படுவோர் உலகோடு சேர்ந்து

உலகியலில் ஈடுபடும் பக்தி செய்வோரைக் குறிக்கும். முக்தர் என்பது பரமபதத்தி இறைவனுக்குத் தொண்டு செய்பவர்களையும், நித்தியர் என்பது இறைவனுடைய வடிவழகிலே ஈடுபட்டுத் திளைத்திருப்பவர்களையும் குறிக்கும்.

அசித்து எனப்படுகின்ற இவ்வுடல் காலம், இயற்கை முதலியவற்றையும் உள்ளடக்கியு பந்த பாசங்களை உணர்த்தும் சித்தும், அசித்தும் இந்தச் சரீரத்திலே அடங்கியுள்ள ஹிதம் என்பது உயிர் இறைவனை அடைவதற்குரிய நெறிகளாகிய பக்திக்கும் பிரபத்திக்கு ஆதாரமான மூவகை மந்திரங்களைச் சுட்டி நிற்கும். வைஷ்ணவ சமயத்திலே இம்மந்திரங்கை மூவகைப்படுத்துவர். அட்டாச்சரம் (எட்டெழுத்து) துவய மந்திரம் (இருதலைமாணிக்க எனும் சரணாகதி மந்திரம்), சரம ஸ்லோகம் என்பதே அந்த மூவகையாகும். எட்டெழுத் மந்திரம் என்பது இறைவனுடைய திருப்பெயராகிய 'ஓம் நமோ நாராயணாய' என்ற தொடரை குறிக்கும்.

துவய மந்திரம் என்பது கடவல்லி உபநிடதத்திலே இருவேறு இடங்களிலுள்ள இ வாக்கியங்களை ஒன்றாக இணைத்து மந்திரமாக்கி பக்தர்கள் நற்கதி அடைய வேண் இறைவன் பிராட்டியாருக்கு அருளிய ஒன்றாகும். சரமஸ்லோகம் என்பது கீதையி இறுதிப்பாடலாகும். கண்ணபிரான் பக்தர்கள் தன்னைச் சரணடையும்படி கூறும் சிறந் மந்திரம். சரணாகதி எனப்படுவது இறைவனின் திருப்பாத கமலங்களே சரணென இருப்பதாகு இதுவே பிரபத்தி நெறியாகும். பக்தி நெறியே இதற்கு வித்து.

இம்மூன்று மந்திரங்களும் வைஷ்ணவ சமயத்தின் உயிர் நாடியாய் விளங்குபவை புருஷார்த்தம் என்பது ஆன்மா அடைய வேண்டிய இறுதி இலக்கினைச் சுட்டும். ஆன்ம முதலில் பக்தி நெறியிலிருந்து முத்தியடைந்து இறைவனுக்குத் தொண்டு செய்து பரமபதத்திலே திளைத்து நிற்பதே இறுதி இலட்சியம் என்று வைஷ்ணவம் கூறுகிறது.

நாராயணனுக்குப் பணிந்து பக்தி செலுத்தி சரணாகதி அடைந்து நின்றாலே திருமாலுக்குப் பரமபதத்திலே தொண்டு செய்யும் பெரும்பேற்றினை அடையலாம் என்பதே வைஷ்ணவ நெறியின் அடிப்படையாகும். இப்படியான பெரும்பேற்றினை அடைய நாமனைவரும் முயல்வோமாக!

மேலும் இலங்கை இந்துமத குருபீடாதிபதி அருள்ஜோதி டாக்டர் ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சார்யார் அவர்களின் 80வது ஜயந்திதின விழாவையொட்டி ஜயந்திதின மலர் ஒன்று வெளியிட இருப்பதை அறிந்து மகிழ்வுறுகிறோம். அந்தவகையிலே குருபீடாதிபதியின் பணிகள் தொடர்ந்தும் நிலைபெற பரந்தாமனைப் பிரார்த்திக்கின்றேன்.

வணக்கம்

**சிவஸ்ரீ சோ. சந்திரகாந்தக் குருக்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதிஷ்டா பூஷணம், பிரதிஷ்டாகலாநிதி, சிவாகமஞான பாநு
நயினை சிவாசார்ய சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள்
ஆதீன குரு
ஸ்ரீ நாகபூஷணி அம்பா கோவில்
நயினாதீவு.

உ
சிவமயம்

# சிவஸ்ரீ ஸ்கந்த சாம்பசிவ சிவாசாரியர் அவர்களின் 80வது ஜயந்தி விழா

'அன்புடனே நின்று அமுதமும் ஏந்தியே'
பொன்செய் விளக்கும் புகைதீபம் திசைதோறும்
துன்பம் அகற்றி தொழுவோர் நினையுங்கால்
இன்பமுடனே வந்து எய்திடும் முத்தியே

*-திருமந்திரம்.*

திருக்கோயில்கள் பரம்பொருளை உணர்வதற்குக் கருவியாகவும் பக்திநெறியைப் பரப்புவதற்குரிய சாதனமாகவும் விளங்கி வருகின்றன. வழிபாட்டில் இறைவன் திருமேனியைத் தொடாமற் செய்யும் தொண்டுகள் சரியைச் செயல்களாகும். இறைவன் திருமேனியைத் தொட்டுச் செய்யும் தொண்டுகள் கிரியைநெறிச் செயல்களாகும். கிரியை நெறியைச் செய்யும் சிவாச்சார்யர்கள் பூஜைகள் கிரியைகட்கு முன்பாகச் செய்வது ஆத்ம பஞ்சகம் எனப்படும் கிரியை ஆகும். அது விசேஷ சந்தி, பூத சுத்தி, அந்தர்மாத்திருகா, பஹிமாத்திருகா, அந்தர் யாகம் என்ற ஐந்தாகும் சாம்பசிவ சிவாச்சாரியார் மேற்கூறிய ஆத்ம பஞ்சகம் (C.D.) இறுவெட்டு ஒன்று சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களின் 80வது ஜயந்தி தின விழாவன்று வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

சாம்பசிவாச்சார்யர் என்றவுடன் நாயன்மார்கட்டு இராஜராஜேஸ்வரி அம்மன் கோவிலும் அவர்கள் வெளியிட்ட பூர்வ அபரம் என்ற நூலும்ஞாபகத்துக்கு வரும். அப்போது நமது பீடாதிபதி அவர்கள், புஸ்தகமும் கையுமாக இருக்கும் தோற்றம் மனக்கண்முன்னே வரும். சிவாச்சாரியார் அவர்கள் மந்திரங்களைக் கசடற உச்சரிப்பதும் அவற்றின் கருத்துக்களை விளக்கமுடன் கூறுவதும் என்றும் எம் நினைவை விட்டகலாது. செயற்கரிய செயல் செய்த பெருமை உடையவர் அவர். அவரின் விழா மலரினை எண்பதாவது பிறந்ததினத்தில் வெளியிடுகிறார் சர்வசாதகத்தில் சிறந்து விளங்குபவரும் சாரீர வளமுடையவரும் பத்ததி வாசிப்பதில் தேர்ச்சியுற்றவருமான அன்னாரின் புத்திரன் ஜகதீஸ்வரக் குருக்கள் அவர்கள். இது தந்தை மகற்காற்றும் உதவியாகும் நூல் வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற குலதெய்வமாகிய நயினை நாகபூஷணி அம்பாள் அருள் தர வேண்டுகிறேன்.

அன்பின் உருகுவன் நாளும் பணி செய்வன்
செம் பொன் செய்மேனி கமலத்திருவடி
முன்நின்று ஆங்கே மொழிவது எனக்கு அருள்
என்பினுசோரி யில்ங்கின்றனே.

சுபம்

51/33A. சுவர்ணா றோட், கொழும்பு-6
Ph. 075 520139



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# தந்தையாரின் அடிச்சுவட்டில்

முதன் முதலாக சர்வதேச இந்துமத குருபீடாதிபதியாக விளங்கிய அமரர் டாக்டர் ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களின் 80வது ஜயந்தி தினத்தையொட்டி வெளிவரும் நூலுக்கு ஆசி கூறுவதில் நாங்கள் மிகவும் பெருமைப்படுகின்றோம். எங்கள் இந்துமத குருமாரின் வளர்ச்சிக்காக மிகவும் சிரத்தையுடன் சேவையாற்றிய பெருந்தகை இவர். சமயக் கிரியைகள், கோயிற் கும்பாபிஷேகங்கள் முதலியவற்றில் சிறப்பாகத் தன்னை ஈடுபடுத்தியவர். இவரின் நடை, உடை, பாவனை மக்களை ஈர்க்கும் சக்தியுடையது. இவர் நித்திய சிவபூஜை, நித்தியாக்கினி செய்து இராஜராஜேஸ்வரி அன்னையின் அருளைப் பெற்ற உத்தம புருஷராகவும் விளங்கினார்.

இவரின் சேவைகளையும், வழிகாட்டல்களையும் பின்பற்றி நடந்தால் எமக்கும் முன்னேற்றம் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. தந்தைக்கு மகன் ஆற்றும் சேவை மிகவும் பாராட்டுதற்குரியது. நாம் அனைவரும் அவருக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளோம். இவரின் சேவைகளுக்கும் மகன் ஆற்றும் சேவைகளுக்கும் இந்துமத குருமார் ஒன்றியம் பெருமையடைகின்றது.

குருபீடாதிபதியை உள்ளக் கமலத்தில் நிறுத்திப் போற்றி ஆசி பெறுவோமாக

சிவஸ்ரீ பரமேஸ்வர மனோகரக் குருக்கள்
தலைவர் - சர்வதேச இந்துமத
குருமார் ஒன்றியம்
தலைமைச் செயலகம் -
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூதசுத்தி

ஆத்ம ஸமஸ்காரம் பூதசுத்தி எனப்படும ஆத்மாவிற்கு பஞ்ச பூதங்கள் பின்னா பின்னஸ் வரூபமாகும். பிருதிவி முதல் ஆகாசபரியந்தம் ஜடபரிணாம ரூபமாகும் ஆத்மா தனது ஸ்வரூபமாகிய சித்தஸ் வரூபத்தை அறியாதபடி தன்வசப்படுத்தி பரிணமிக்கின்றது. சிவாக்நியால் இந்த அசத் பாவத்தைப் போசுக்கி சதபாவம் செய்தல் அவசியமாகின்றது.

முதலில் தஹனாப்லாவனம் செய்தல் வேண்டும். அமிருதத்தால், திரும்ப உற்பத்தி செய்து சதபாவ மாதற் பொருட்டும், அசுத் பாவ நிவிருத்தியின் பொருட்டும், பூதசுத்தி செய்தல் வேண்டும். சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், திரோபவம், அனுக்கிரஹம் எனப் பூதசுத்தி ஐந்து வகைப்படும். இவற்றில்

* சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், இம்மூன்றும் ஹடயோகம் எனப்படும்.
* திரோதானம் லம்பிகாயோகம் எனப் படும்.
* அனுக்கிரஹம் - சிவராஜயோகம் எனப் படும்

சமயதீக்ஷை செய்து கொண்டோர்க்கு சிருஷ்டிக் கிரமத்தையும், விசேஷ தீக்ஷை செய்து கொண்டவர்களுக்கு ஸ்திதிக் கிரமத்தையும், நிர்வாண தீக்ஷை கொண்ட வர்களுக்கு சங்காரக் கிரமத்தையும், ஆசாரிய அபிஷேகம் செய்தவர்களுக்கு திரோதானக் கிரமத்தையும் செய்தல் வேண்டும்.

ஆதிசைவர்கள் எழுவகை சம்ஸ்கார முடையவர்கள். இவர்களை அத்தர்,சிவாஸ்ரம் என்றும் கூறுவர். இவர்களுக்கும் சிவனுக்கும் பேதமில்லை. இவ்வாறான ஆதி சைவர்கள் அனுக்கிரஹக் கிரம பூத சுத்தியை செய்தல் வேண்டும். ஆலயங்க ளிலும் மற்றும் பூஜாதிகளிலும், அனுக்கிரஹ கிரம பூதசுத்தியே செய்தல் வேண்டும். ஆத்மாவிற்கு சிவத்துவம் உண்டாதற் பொருட்டே பூதசுத்தி செய்யப்படுகிறது.

தனது தேகம், பிருதிவி முதலாய பஞ்ச பூதங்கள் விதையாகவும், பிரம்ம விஷ்ணுக் களால் முளை உண்டாக்கப்பட்ட தாயும், ராகம், துவேஷம் தர்மம், அதர்மம் மோகம் என்பன வேராகவும், வித்தை, அவித்தை அதிபதிகளாய் ரக்ஷிக்கின்றதாயும், கலை முதலான தத்துவங்கள் சாரமாகவும், தன் மாத்திரைகளான இந்திரியங்கள் கிளை உபகிளைகளைக் கொண்டும், விஷயம் தளிராகவும், பிரபஞ்சம் புஷ்பமாகவும் புத்தி விவசாயகன் ஆகவும், சங்கல்பம் பழமா கவும் அதின் சாறு புசித்தற்குரியதாகவும் உள்ளது. இவ்வாறான ஆலமரத்தில் புருஷனாகிய பட்சி வசிக்கின்றது. மூர்த்தா முதல் பாதம் வரை ஆகாசத்தினின்று வாயுவும், வாயுவிலிருந்து அக்னியும், அக்னியிலிருந்து ஜலமும், ஜலத்திலிருந்து பிருதிவியும், பிருதுவி முதல் ஆகாசமீறாக ஒன்று சேர்ந்து விதையாகவும் பாவித்து ஜாதி, குலம் என்பவற்றிற்கு ஸ்தானமாக உள்ள ஸ்தூல தேகமெனத்தியானிக்க வேண்டும்.

இந்திரியங்கள், சூக்ஷ்ம பூதங்களாகவும் இதை யோனி க்ஷேத்திரத்தில் வைத்து பிரம்மா சிருஷ்டிப்பதாயும் விஷ்ணு பரிபாலிப்பதாயும், பின்னமற்ற முளையாக பிரம்ம விஷ்ணுக்களைத் தியானித்தல் வேண்டும்.

ஆணவம், மாயாஸ்தான பீஜமாகவும், கர்மம் மூலமாகவும், தர்மம், அதர்மம், ராகத் வேஷம், மோகம் என்பன உபமூலமாகவும், அசுத்தமான அவித்தை மாயா கர்ப்பத் திலிருந்து உண்டானதாய் வித்தை பரமெ னவும் இந்தப்பரை பரிபாலிப் பதாகவும் பாவித்து, நடந்தது, நடக்கின்றது, நடக்க இருப்பது இந்த மூன்று காலங்களுக்கு முரிய கலாதத்தவம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருக்ஷம், அசையாதிருத்தற் பொருட்டு சாரமாகப் பாவித்தல் வேண்டும்.

தன் மாத்திரரேந்திரியம், ஞானம், கர்மம் என இரண்டு பிரிவாகும். இதை சாகையாகவும், உபசாகையாகவும் தியானித்து பல்லவம், பிந்துரூபம், சப்தம் என்பனவற்றிற்கு உரியதாயும், ஐந்து துளிரோடு கூடியதாய்த் தியானித்து,விவசாயத்தில் சங்கல்பித்த பழமானது புத்தியின் ஸ்வரூபமாகவும் இது ஆத்மாவுக்கு தர்மமாயுள்ளதெனவும், ஆத்மா, பட்சி ரூபமாகவும், புசிக்கத்தக்கதை புசிப்பது புருஷனெனவும் இவ்வாறாக ஆலமரமாகத் தியானிக்க.

நிவிருத்தி கலாபீஜத்தால் பத்திரம், புஷ்பம் இல்லாத ஆலமரத்தை அசை வற்றிருப்பதாய்ப் பாவித்து, பிரதிஷ்டா கலா பீஜத்தால் ஜலத்தால் நனைக்கப்பட்டதாய் இலை புஷ்பத்தோடு கூடியதாய்ப் பாவித்து, வித்தியா கலா பீஜத்தால் வலது கால் கட்டை விரலிலிருந்து உண்டாகும் காலாக்னியால் உலர்ந்த பத்திரம் முதலிய பேதமற்று பொசுங்கியதாய்ப் பாவிக்க வேண்டும். சாந்தி கலா பீஜத்தால் பொசுங்கிய சாம்பலை பத்துத் திக்கிலும், காற்றினால் சோடிகா முத்திரையாலும், அஞ்சலியாலும் சிரசைச் சுற்றிலும் பரந்ததாய்த் தியானித்து, சாந்தியதீத கலா பீஜத்தால் திக்குகளில் வியாபித்துள்ள பஸ்மத்தை ஆகாசத்தில் சேர்த்து சுத்த ஸ்படிகநிறமாய், நிர்மலமான ஆகாசம் தலையிலிருப்பதாய்த் தியானித்து, யாவும் சூனியமாய்ப் பாவித்து இந்த ஆகாசத்துள் அடங்கிய சிவா பின்னமான ஆத்மாவை, சிவனிடத்தில் லயிப்பித்து, பிந்து நாதத்தை அடைந்து எல்லாப் பாதைகளிலும் நின்று நீங்கி ஓம் ஹ்ராம் சிவாய வௌக்ஷட் என சிகையினின்றும் அதோமுகமாய் இருக்கும், பத்மத்தில் அமிருதம் பெருகி வருவதாய்ப் பாவித்து இதனால் உள்ளும் புறமும், நனைந்ததாய்த் தியானித்து, ஹ்ருதய கமலத்தில் அகார உகார மகார என சுத்த வித்யாசன மூர்த்தி மூலத்தால் சுத்த வித்தை அதிக தேஜசோடும் சர்வக்ஞாதி ஷட் குணங்க ளோடும் எல்லா வித்தைகளும் அதனிடத்து உண்டானதாய் தியானித்து கர்ணிகையின் நடுவில் ஆத்மாவை, புர்யஷ்டக தேஹ முடைய ஆத்மாவுக்கு உள்ளிருக்கும் பரமாத் மஸ்வரூபமானது, எல்லா ஐஸ்வர்யங்களையும் கொடுப்பதாயும், சாந்தஸ்வரூபியாகவும், ஷட்குணதரராயும் ஆத்மாவை சிவஸ்ரூபமாக பாவனை செய்து, சாந்தியதித கலைகளை பிரணவத்தால், தாண்டியதாய் பாவித்து ஐந்து கலைகளையும், தாண்டி, பஞ்சம் பிருமத்தை ஆவாஹித்து, அஸ்த்தரத்தால் திக்பந்தனஞ் செய்து மூன்று கோட்டை உண்டானதாய்ப் பாவித்து அவகுண்டனஞ் செய்வது கலாமயத்தைத் தாண்டிய பாவமாகும். சிவ தத்துவம் உண்டாதற் பொருட்டே கலா பீஜத்தை தாண்டுவதாகும்.

இடைகலையால் பூரகஞ் செய்து, சுழுமுனை நாடியால் கும்பகஞ் செய்து ஜீவாத்மாவைக் கொணர்ந்து, ஜோதீஸ்வ ரூபமாயப் பாவித்து ஓம் ஹ்ராம் சக்தியை வௌக்ஷட் எனும் பீஜமந்திரத்தால் புருவ மத்தியில் சுத்த சக்தியால் பிரவாகித்து வரும் அமிருதத்தால் தனது சரீரத்தை நனைத்து, சிவனோடு ஐக்கியமாகி சிவோஹம் பாவனை செய்வதே பூத சுத்தியாகும்.

குருபீடாதிபதியின் பதிவேட்டிலிருந்து ஒரு பகுதி
தொகுப்பு சிவஸ்ரீ சிவ. நித்தியானந்த குருக்கள்
சங்கானை முருகமூர்த்தி தேவஸ்தான பிரதம சிவாச்சாரியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

பிரம்மஸ்ரீ பா. சண்முகரத்தின சர்மா
பிரதம குருக்கள் – சமாதான நீதவான்
சிவாகம திலகம் – சிவாகம பூஷணம்
தலைவர் – ஸ்ரீ ராம கான சபா
தலைவர் – அகில இலங்கை சிவப்பிராமண சங்கம்
ஸ்ரீ பால செல்வ விநாயகமூர்த்தி கோவில்
11/9, கப்பித்தாவத்தை, கொழும்பு–10
தொலைபேசி கோயில் : 687111
வீடு : 693922

**Brahmashri B. Shanmugaratna Kurukkal**
Chief Priest - Justice of The Peace
Sivakama Thilagam - Sivakama Bhooshanam
President : Shri Rama Gana Sabha
President : All Ceylon Siva Brahmana Sabha
Sri Bala Selva Vinayaga Moorthy Temble
**11/9, Captain's Garden, Colombo - 10**
**Telephone Temple : 687111**
**Residence : 693922**

# சிவாச்சாரியாருடன் அந்த நாட்களில்



எனது ஆத்ம நண்பன் இலங்கை இந்துமத குருபீடாதிபதியாகவிருந்து செயற்கரிய செய்த பெரியார் சிவாகமஞானி, வித்யாசாகரம், அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்கள். அவருடனான எனது தொடர்புகள் இன்று, நேற்றல்ல, நீண்டகால மிக ஆழம்மிக்க பிணைப்பாகும். நீராவியடி-நாயன்மார்கட்டு என்கிற தொடர்புகளையும் கடந்து சிவாச்சார்யார் அவர்கள் இலங்கை ஆயுள்வேதக் கல்லூரியில் மருத்துவம் படித்த காலத்தில் என்னுடன் கப்பித்தாவத்தையிலே தங்கியிருந்து படித்தவர். அந்தக் காலப்பகுதியில் சிவாச்சார்யார் அவர்களுக்கும் எனக்குமிடையிலான தொடர்புகள் மேலும் இறுக்கமாகின. அந்த நாட்களில் நாமிருவரும் சேர்ந்து வேதாகம ஆய்வுகளையும் கிரியை முறைகள் பற்றியும் நமக்கிடையே பகிர்ந்துகொண்டோம். அந்த இனிமையான நாட்களை என்னால் மறக்கமுடியது.

அந்த வகையிலே குருபீடாதிபதி அவர்களின் மறைவு என்னை மிகவும் வாட்டியது. அவர்களுடைய நித்யாக்னி, நித்ய சிவபூஜை ஒழுக்கங்கள் என்னை மிகவும் கவர்ந்தவை.

மேலும், அவர்களுடைய வழியிலே நின்று சைவ உலகுக்கு நற்சேவையாற்றி வரும் அவருடைய குமாரர்கள், சிவாச்சாரியார் அவர்களுடைய 80வது ஜயந்தி தினத்தை வெகுவிமரிசையாகக் கொண்டாடுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். இந்த நன்னாளிலே வெளியிடப்படும் ஜயந்தி மலரிலே எனது நினைவுகளையும் அவர்களுடன் பகிர்ந்துகொள்கிறேன்.

மேலும் சிவாச்சாரியாருடைய புத்திரர்களில் ஒருவரும் சர்வசாதகராக தனக்கென ஒரு இடத்தைத் தேடிக்கொண்டவருமான 'சாதக கலாமணி' 'சாம்பசிவதாசன்' சாம்பசிவ - ஜெகதீஸ்வர சிவாசாரியார் அவர்கள் 'ஆத்ம பஞ்சகம்' எனும் இறுவெட்டு (C.D) ஒன்றினை முதன்முதலாக இலங்கைத் திருநாட்டிலே தனது குரல் வண்ணத்திலே வெளியிட இருப்பதை அறிந்து பெருவகை அடைகிறேன். நாம் எல்லோரும் பெருமைப்படத்தக்க பாராட்டக்கூடிய நன்முயற்சி அது. அவர்களுடைய பணிகள் மென்மேலும் சிறந்தோங்க வேண்டுமென கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயகர் திருவடித் தாமரைகளைப் பிரார்த்தித்து ஆசிகூறுகின்றேன்.

சுபம்

கப்பித்தாவத்தை பாலசெல்வ விநாயகர் ஆலய
பிரதமகுரு
பிரம்மஸ்ரீ பா. சண்முகரட்ண சர்மா J.P.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# மறை மதிக்கும் மறையவன்

"மனிதனால் உணரக்கூடிய எல்லைகளைக் கடந்து உள்ளே இருப்பவரையே கடவுள் என்று போற்றி வணங்குகிறோம். அவர் நாம் பார்க்கவும் கேட்கவும் உணரமுடியாத ஒரு சக்தி என்பதையே வேதகால முனிவர்கள் வலியுறுத்தி இருக்கிறார்கள்." எங்கே கண்பார்வை செல்ல முடியவில்லையோ, எங்கே பேச்சின் குரல் எட்டவில்லையோ, எங்கே மனத்தின் சிந்தனை போக முடியாதோ அங்கே உள்ள சக்தியை நாம் உணருவது கடினம். அதைப் பற்றிப்போதனை செய்யவும் இயலாது' என்று கூறுவார் யாக்ஞவல்கியர்.

அறியமுடியாத அந்த நுண்பொருளை விளக்கிக் காட்டும் உருப்பெருக்கி ஆடிகள் தான் வேதங்களும் ஆகமங்களும். அந்தணனாகப் பிறந்த ஒவ்வொருவரதும் கடமை வேதங்களைக் கற்று அறிந்து அதன்படி நடப்பது. 'வித்' என்ற சொல்லின் அடியாகப் பிறந்ததே வேதம். அறிவது என்பது இதன் பொருள். எதை அறிய வேண்டும் என்ற வினாவை எழுப்பினால் பரம்பொருளை அறிய முயலவேண்டும் என்பதே விடை. 'ஷட்கர்ம நிரதர்கள்' என்ற அந்தணர்கள் ஓதல், ஓதுவித்தல், கேட்டல், கேட்பித்தல், ஈதல் ஏற்றல் என்ற அறுவகைத் தொழிலிற்கும் உரியவர்கள். இவற்றுள் வேத ரக்ஷணத்தை, வேதத்தைக் காப்பதை தனது முக்கிய பணியாக மேற்கொள்வேண்டும்.

வேதம் தான் அந்தணனின் உயிர்மூச்சு. 'வேதம் ஓதும் அந்தணர்க்காகவே வான் பொழிகின்றது. அந்தணச் சிறார்கள் ஒவ்வொருவருக்கும் வேதத்தைக் கற்பிக்க வேண்டும். வேதத்தைக் காதால் கேட்டுப் பாடம்பண்ண வேண்டும். 'ச்ருதி'-'ச்ரு' என்ற பதத்திற்குக் கேள் என்பது பொருள். இசையும் வேதமும் காதால் கேட்டு மனத்தில் இருத்திக்கொள்ள வேண்டியவைகள் தமிழில் 'கேள்வி' என்ற சொல்லே வேதத்தைக் குறித்து நிற்கின்றது. காதால் கேட்டு 'அத்யயனம்' செய்ய வேண்டும். மற்றவனுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும் - இது 'அத்யாபனம்'. (ஓதல் - ஓதுவித்தல்)

வேதம் சப்தத்தை அடிநாதமாகக் கொண்டது. அண்டத்தையும் பிண்டத்தையும் பிணைக்கக் கூடிய பெருநிலை அது. மந்திரங்களின் பொருளைவிட அதன் சப்தத்திற்கே அதிக சக்தி உண்டு. அவற்றின் அக்ஷரத்திற்கும் அவற்றைச் சொல்ல வேண்டிய ஸ்வரசுத்தத்திற்கே விசேஷ சக்தி உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படி ஸ்வரசுத்தமாக அக்ஷர சுத்தமாக மந்திரங்களைக்கூறி அதன் பயனால் மக்கள் நலனைப் பேணுபவர்கள் சிவாச்சாரியார்கள். தெய்வ அருளைப் பெற்று அதனை மக்களுக்கு வழங்குபவர்கள்.

இலங்கைத் திருநாட்டின் சிவாச்சாரியார்களுள் தன்னிகரற்று, ஒப்பாரும் மிக்காரும் இல்லாமல் நக்ஷத்திரமாக ஒளிர்ந்தவர் அமரர் சிவஸ்ரீ ஸ்கந்த சாம்பசிவக் குருக்கள் அவர்கள். 'மாந்திரீக பூஷணம்' என்றும் 'சாதக சக்ரவர்த்தி' என்றும் போற்றப்பெறும் பெரியவரின் எண்பதாவது ஜன்ம நக்ஷத்திரத் திருநாளன்று அவரின் சாதனைகளை நன்றியுடன் நினைவுகூர அனைவருமே கடமைப்பட்டுள்ளோம்.

சிவாச்சாரியார் அவர்களை முதன் முதலில் நான் கண்டது 1971ல் காலி ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் நடந்த மகாகும்பாபிஷேகப் பெருவிழாவில் ஆகும். பிரதிஷ்டாபூஷணம் நயினை சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் அவர்களின் தலைமையில் வரலாறு கண்டிராத வகையில் எனது துணைவர் பிரம்மஸ்ரீ செ. வைத்தியநாதன் அவர்களின் அயராத முயற்சியினால் அக்கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற்றது. வந்திருந்த சிவாச்சாரியார்களுள் தனித்த கம்பீரத்துடன் அக்னி சுவாலையைப் போன்று கணகணவென்று வேத மந்திரங்களையும், கிரியைகளையும் தனக்கே உரித்தான பாணியில் நிகழ்த்திய சிவஸ்ரீ ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அனைவரது இதயங்களிலும் தனித்த இடத்தைப் பெற்றுக்கொண்டார். பல கும்பாபிஷேகங்களைச் சிறப்பித்த பெருமை மிக்கவர். வேத-ஆகம கிரியா வல்லுநர். இந்துமத குருபீடாதிபதியாகத் திகழ்ந்து அனைவருக்கும் வழிகாட்டியவர்.

இன்று தந்தை காட்டிய வழியிலே தனித்துவம் மிக்க தனயன்களாக அவர்களது புதல்வர்கள் திகழ்கின்றார்கள். தந்தையின் பணிகளை முன்னெடுத்துச் செல்லும் மைந்தர்களின் பொறுப்பு போற்றத்தக்கது. 'மகனறிவு தந்தையறிவு' என்ற பொன்மொழியை மெய்ப்பிக்கும் அவர்களது கடமையுணர்வு சிறக்கட்டும்.

வாழ்க!

'அருள்மொழியரசி'
வித்துவான்
திருமதி வசந்தா வைத்தியநாதன் – ஜே.பி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ். மட்டுவில் வேற்கேணி கந்தசாமி கோவிலில் 1995 ல் நடைபெற்ற
17 குண்ட கும்பாபிஷேகத்தில் மாதகல் செல்லப்பா குருக்கள், சாம்பசிவதாசன்,
மகாதேவக் குருக்கள், ஞானசர்மா, ஆகியோருடன் குருபீடாதிபதி



முன்னாள் கால்நடை அபிவிருத்தி அமைச்சர்
திரு. செள. தொண்டமான் அவர்கள்
குருபீடாதிபதியை வணங்கி ஆசி பெறுகிறார்.



குருபீடாதிபதியின் இறுதி கும்பாபிஷேகம்.
மலேசியா பெந்தொங் மாரியம்மன் தேவஸ்தானம்



முன்னாள் அதி உத்தம ஜனாதிபதி
J. R. ஜெயவர்த்தனா அவர்களுக்கு குருபீடாதிபதி
மாலை அணிவித்து வரவேற்கிறார்.



நல்லை சிவன் கோவில் கும்பாபிஷேகத்தின்போது
இருபெரும் விப்ர சிரேஷ்டர்கள் கிரியைகள்
தொடர்பாக கலந்துரையாடுகின்றனர்.



குருபீடாதிபதியின் இளைய சகோதரர் அமரர்
ஸ்கந்த திருஞானசம்பந்த குருக்களுடன் பீடாதிபதி



திரு. யோகராஜன் பா. உ. அவர்கள்
குருபீடாதியிடம் ஆசி பெறுகிறார்.



ஆசார்ய அபிஷேகத்தின் போது மாமா, மாமி
ஆகியோருக்கு தீபாராதனை செய்து வழிபடுகிறார்
ஸ்ரீமதி நர்மதா ஜெகதீஸ்வரக் குருக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குருபீடாதிபதியின் மூன்றாவது மகன்
காலஞ்சென்ற "சிற்பக் கலாநிதி"
சாம். கௌரி கணேச சிவாசாரியார்



1994இல் குருபீடாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்டு
பீடாரோஹண விழாவின்போது சட்டநாதர் கோவிலிலிருந்து
விழா மண்டபமான திவ்ஜ ஜீவன சங்கத்திற்கு



நல்லைச் சிவன் கும்பாபிஷேகத்தில் தன பூஜை செய்து
சுவர்ணத்தட்டை யாழ். கொமர்ஷல் வங்கி முன்னாள்
முகாமையாளர் வைத்தியநாத ஐயர் ஏந்தி வரும்போது அருகில்
பீடாதிபதியுடன் நியாய சிரோமணி கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள்,
பாப்பா குருக்கள், ஸ்ரீ கிருஷ்ணானந்த சர்மா ஆகியோர்.



கொழும்பு மணிகண்ட சேவா பீடத்தினால்
நடாத்தப்பட்ட பீடாதிபதி பீடாரோஹண வரவேற்பு
விழாவில் பாப்பா குருக்கள் கிரீடம் அணிவித்து
கௌரவிக்கிறார் பீடாதிபதிக்கு.



உடம்பு முடியாத நிலையிலும் பேரன் மேல்
கொண்ட அன்பினால் குருபீடாதிபதி அவர்கள்
பேரனுடன்



தனது பேரன் நி. நித்யசிவதாண்டவ சர்மாவின்
உபநயனத்தை நடாத்துகின்றபோது



நல்லை சிவன் தேவஸ்தானத்தின்
கும்பாபிஷேகத்தில் பூர்வாங்க கிரியைகளின்போது



சம்பந்தி தெல்லியூர் சதாசிவ ஐயரின் 2வது மகன்
யோகேஸ்வர சர்மா தம்பதிகளின் சீமந்த விழாவில் இறுதியாக
குருபீடாதிபதியின் சேவை முடிவுற்றது. 05. 05. 1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலங்கள் பல நல்கும் நவக்கிரங்கள்

நவ என்றால் ஒன்பது என்ற எண்ணைக் குறிக்கும். கிரகங்கள் என்பது வான மண்டலத்தில் உள்ள கோள்கள் எனப்படும். கிரகங்கள் ஏராளம் இருப்பினும் நாம் ஜோதிட சாஸ்திரத்திற்காக எடுத்துக்கொள்வது சூரியன், சந்திரன், செவ்வாய், என்ற அங்காரகன் , புதன், வியாழன், என்ற குரு பகவான், வெள்ளி என்ற சுக்கிரன், சனி என்ற சனீஸ்வரன், இராகு கேது என்ற ஒன்பது கிரகங்கள் ஆகும்.

இந்தக் கிரகங்கள் அவரவர்களுக்கு உரிய வடிவத்தில் வேகத்தில, சூரியனை ஆதாரமாக வைத்துச சுழன்று கொண்டு இருக்கின்றார்கள். அவரவர்கள் செய்த பாவ புண்ணித்திற்கேறப நன்மையும தீமையும் வாழ்க்கையில் நிகழ்கின்றன. அவ்வாறு நிகழக்காரணமாக, ஆதாரமாக இருப்பவர்கள் நவகிரக்கங்களே. நமது இந்து தர்மத்தில் பாவ புண்ணியங்களைக் கூட்டிக் கழித்து மிஞ்சியதைக் கணக்கிட்டுப் பலன் தரும்முறை இல்லை. பாவம் என்பது பாவம் தான் புண்ணியம் என்பது புண்ணியம் தான். நாம் தெரியமாமல் பல பாவங்களைச் செய்து விடுகின்றோம். தெரிந்து பல தவறுகளைச் செய்கின்றோம். ஆகவே துன்பங்கள் வரும்போது அதை எதிர்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் தெரியாமல் நன்மைகள் செய்கிறோமா? அதைக் கணக்கிடுவது கடினம்தான்.

எனவே தெரிந்து பல நன்மைகளைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்யும் அல்லது செய்தால் கஷ்டங்களைக் கண்டு கலங்காத மன உறுதியும் அவைகளைக் கடந்து நிம்மதியாக அமைதியாக வாழ சேர்த்து வைத்த பலனும் வேலை செய்யும். ஒரு ஆன்மா அல்லது ஜீவன் ஒரு ஜென்மாவை முடித்துக் கொண்டு இறைவன் முன்போய் நிற்கும் போது, தான் வாழ்ந்த உலகில் இருந்துகொண்டு அவனுடன் போகும் செல்வம் இரண்டு உண்டு. ஒன்று பாவம். மற்றொன்று புண்ணியம். இந்த பாவ, புண்ணியம் என்ற இரண்டு துலாக்கோல்களைக் கையில் கொடுத்து அவற்றிற்குத் தகுந்தாற்போல் வேறு ஜென்மாவையும் கொடுத்து பாவத்தின் கணக்குக்கான தண்டனையை எங்கே? எப்போது? எவ்வாறு நிறைவேற்ற வேண்டும் என்பதையும் புண்ணியங்களுக்கான பலன்கைள எப்படிப் பெறவேண்டும் என்பதையும் இறைவன் அனுக்கிரகித்து விடுகின்றான். இதைத்தான் நல்லது நடக்கும்போது பூர்வஜென்ம புண்ணியம். என்றும் கெட்டது நடக்கும் போது பூர்வ ஜென்ம பாவம் என்றும் பெரியவர்கள் சொல்லுகின்றார்கள். இந்த விபரங்களை எல்லாம். நமக்குச் சொல்வது ஜெனன ஜாதகத்தில் உள்ள நவக்கிரக நிலைகளும்ஆகும். இது முற்றிலும் உண்மை.

வாழ்க்கையில் கஷ்டங்கள் ஏற்படுகின்றபோது ஜோதிடர்களைச் சந்திக்கின்றோம். நவக்கிரகப் பலன்களைத் தெரிந்து கொள்கின்றோம். பரிகார பூஜைகள் செய்து துன்பங்களையம் துயரங்களையும் குறைத்துக் கொள்ளவும் அவற்றில் இருந்து விடுபடவும வழிதேடுகின்றோம். அவரவர்கள் ஜாதகத்தில் எந்தக் கிரகத்தால் கஷ்டங்கள் உண்டாகின்றன என்று கண்டு அவற்றிற்குரிய பரிகாரங்கள் செய்யும்போது பெரிய நிவாரணங்களைத் தராவிட்டாலும் அதனால் உண்டாகும் புண்ணிய பலன்களால் வேறு ஒரு காலகட்டத்தில் நமக்கு உயர்ந்த பலன்கள் கிடைக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நவக்கிரக வழிபாட்டினை முழுமையாகத் தெரிந்து கொள்ள இவர்கள் பன்னிரண்டு இராசிகளில் எங்கெங்கு அமர்ந்துள்ளனர் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். அவர்களுக்குரிய மற்றைய பெயர்கள், நட்சத்திரங்கள், தேவியர், வாகனம், அதிதேவதை, உலோகம், வஸ்திரம், இராசிகளில் சஞ்சரிக்கும் காலம், தான்யம், சமித்து இரத்தினங்கள், நைவேத்தியம் போன்ற விபரங்களைத் தெரிந்து கொள்வது அவர்களை வழிபடப் பெரிதும் உதவும் அப்படிச் செய்வதே முறையான வழிபாடாகும். அந்த விபரங்களை கீழே கண்டுள்ளபடி பின்பற்றினால் பயன் உள்ளதாக இருக்கும்.

## 1. சூரியன்

சூரிய காயத்திரி

அஸ்வத்வஜாய வித்மஹே ஹஸ்தாய
தீமஹீ தந்நோ சூர்யப் பிரஸோதயாத்!

| | |
|---|---|
| பெயர் | : ஆதித்யன் |
| நட்சத்திரம் | : விசாகம் |
| தேவியர் | : உஷா, ப்ரத்யுஷா |
| வாகனம் | : தேர், மயில் |
| அதிவேதைதை | : சிவபெருமான் |
| உலோகம் | : தாமிரம் |
| வஸ்திரம் | : சிவப்பு |
| சஞ்சரிக்கும் காலம் | : ஒரு மாதம் |
| தானியம் | : கோதுமை |
| சமித்து | : எருக்கு |
| இரத்தினம் | : மாணிக்கம் |
| நைவேத்தியம் | : சர்க்கரைப் பொங்கல் |

## 2. சந்திரன்

சந்திர காயத்திரி

பத்மத்வஜாய வித்மஹே ஹேம ரூபாய
தீமஹீ தந்நோ ஸோமப் பிரஸோதயாத்!

| | |
|---|---|
| பெயர் | : ஸோமன் |
| நட்சத்திரம் | : கார்த்திகை |
| தேவியர் | : ரோகிணி |
| வாகனம் | : முத்து விமானம், நரி |
| அதிதேவதை | : அம்பிகை |
| உலோகம் | : ஈயம் |
| வஸ்திரம் | : வெள்ளை |
| சஞ்சரிக்கும் காலம் | :21/4 நாள் |
| தானியம் | : நெல் |
| சமித்து | : பளாசம் |
| இரத்தினம் | : முத்து |
| நைவேத்தியம் | : நெல், பாயாசம் |

## 3. செவ்வாய்

செவ்வாய் காயத்திரி

வீரத்வஜாய வித்மஹே விக்ன ஹஸ்தாய
தீமஹீ தந்நோ பௌமப் பிரஸோதயாத்!

| | |
|---|---|
| பெயர் | : அங்காரகன், குஜன் |
| நட்சத்திரம் | : அவிட்டம் |
| தேவியர் | : சக்தி தேவி |
| வாகனம் | : அன்ன பட்சி |
| அதிதேவதை | : முருகன் |
| உலோகம் | : தாமிரம் |

## 4. புதன்

சந்திர காயத்திரி

கஜத்வஜாய வித்மஹே சுக ஹஸ்தாய
தீமஹீ தந்நோ புதுப் பிரஸோதயாத்!

| | |
|---|---|
| பெயர் | : புதன் |
| நட்சத்திரம் | : திருவோணம் |
| தேவியர் | : ஞான தேவி |
| வாகனம் | : குதிரை |
| அதிதேவதை | : மஹாவிஷ்ணு |
| உலோகம் | : பித்தளை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வஸ்திரம் : சிவப்பு
சஞ்சரிக்கும் காலம் : 1 1/2 மாதம்
தானியம் : துவரம் பருப்பு
சமித்து : கருங்காலி
இரத்தினம் : பவளம்
நைவேத்தியம் : அன்னம்

வஸ்திரம் : பச்சை
சஞ்சரிக்கும் காலம்: ஒரு மாதம்
தானியம் : பச்சை பயறு
சமித்து : நாயுருவி
இரத்தினம் : மரகதப் பச்சை
நைவேத்தியம் : பால் கலந்த அரிசி மாவு

## 5 வியாழன்

குரு காயத்திரி

வ்ருஷப த்வஜாய வித்மஹே க்ருணிஹஸ்தாய தீமஹீ தந்நோ குரு பிரஸோதயாத்!

பெயர் : பிரகஸ்பதி, குரு
நட்சத்திரம் : உத்திரம்
தேவியர் : தாரா தேவி
வாகனம் : யானை
அதிதேவதை : பிரம்மா
உலோகம் : தங்கம்
வஸ்திரம் : மஞ்சள்
சஞ்சரிக்கும் காலம் : ஒரு வருடம்
தானியம் : கொண்டை கடலை
சமித்து : அஸ்வத்தம்(அரசு)
இரத்தினம் : மஞ்சள் புஸ்பராகம்
நைவேத்தியம் : தயிர் அன்னம்

## 6 சுக்கிரன்

சுக்ர காயத்திரி

அஸ்வத்வஜாய வித்மஹே தனூர் ஹஸ்தாய தீமஹீ தந்நோ சுக்கிரப் பிரஸோதயாத்!

பெயர் : வெள்ளி
நட்சத்திரம் : பூசம்
தேவியர் : கருடன்
வாகனம் : சுகீர்த்தி
அதிதேவதை : இந்திரன்
உலோகம் : வெள்ளி
வஸ்திரம் : வெள்ளை
சஞ்சரிக்கும் காலம் : ஒரு மாதம்
தானியம் : மொச்சை
சமித்து : அத்தி
இரத்தினம் : வைரம்
நைவேத்தியம் : நெய் அன்னம்

## 7 சனீஸ்வரம்

சனி காயத்திரி

காகத்வஜாய வித்மஹே கட்க ஹஸ்தாய தீமஹீ தந்நோ மந்தப் பிரஸோதயாத்!

பெயர் : சனி, மந்தன்
நட்சத்திரம் : ரேவதி
தேவியர் : நிலா
வாகனம் : காகம்
அதிதேவதை : எமன்
உலோகம் : இரும்பு
வஸ்திரம் : கரு நீலம்
சஞ்சரிக்கும் காலம் : 2 1/2 வருடம்
தானியம் : எள்ளு
சமித்து : வன்னி

## 8 இராகு

இராகு காயத்திரி

நகத்வஜாய வித்மஹே பத்ம ஹஸ்தாய தீமஹீ தந்நோ ராகுப் பிரஸோதயாத்!

பெயர் : ஸர்பி
நட்சத்திரம் : அஸ்வினி
தேவியர் : ஸிம்ஹி
வாகனம் : ஆடு
அதிதேவதை : காலன்
உலோகம் : கருங்கல்
வஸ்திரம் : கறுப்பு
சஞ்சரிக்கும் காலம்: 11/2 வருடம்
தானியம் : உளுந்து
சமித்து : அறுகம்புல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்தினம் : நீலம்
நைவேத்தியம் : எள்ளு அன்னம்

இரத்தினம் : கோமேதகம்
நைவேத்தியம் : உளுந்து அன்னம்

## கேது காயத்திரி

அஸ்வத்வஜாய வித்மஹே சூல ஹஸ்தாய
தீமஹீ தந்நோ கேது பிரஸோதயாத்!

| | |
|---|---|
| பெயர் | : சிகி |
| நடசத்திரம் | : ஆயிலிம் |
| தேவியர் | : சித்ரலேகா |
| வாகனம | : சிங்கம் |
| அதிதேவதை | : சித்ரகுப்தன் |
| உலோகம | : துருக்கல் |
| வஸ்திரம் | : பல நிறம் |
| சஞ்சரிக்கும் காலம் | : 11/2 வருடம் |
| தானியம் | : கொள்ளு |
| சமித்து | : தர்ப்பை |
| இரத்தினம் | : வைடூர்யம் |
| நைவேத்தியம் | : சித்ர அன்னம் |

வினைகளின் காரணமாகவே பிறவிகள் உண்டாகின்றன. இந்த பிறவியிலாவது. பக்தியுடன் சத்காரியங்களைச் செய்துவந்தால் பிறவித்தளையை அறுத்துக் கொள்ளலாம் என்று நமது இந்து தர்ம சாஸ்திரங்கள் கூறுகின்றன. பூஜைகளும் வழிபாடுகளும் மட்டுமே நமது கஷ்டங்களைத் தீர்த்துவிடாது, தர்மசிந்தனையுடன் தான தர்மங்களைச் செய்து இந்தப் பிறவியின் பயனை நாம் அடைவோமாக.

குருபீடாதிபதியின் 80 வது ஜெயந்தி தின மலரிலே எனது தந்தையும் குருவுமானவருக்கு மனம் வாக்கு, காயம் என்கின்றவற்றினால் அஞ்சலி செய்து அவர் குருவருளைப் பெறுவோமாக

இங்ஙனம்
சம்ஸ்கிருத பண்டிதர்
வேதசாகரம்
சிவஸ்ரீ சாம்பசிவ – தணிகா லேஸ்வரக் குருக்கள்
(ராஜாக் குருக்கள் தென். ஆபிரிக்கா)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயமும் பிரார்த்தனையும் மனிதப் பிறவியின் உயர் நோக்கத்தை நிறைவு செய்கின்றன

சிவஸ்ரீ சாம். அகிலாண்டேஸ்வரக் குருக்கள்

ஆலயம் ஆண்டவனின் சந்நிதியாகும். இறைவனின் ஆலயம். ஆன்மீகத்தை விளங்க வைக்கின்றது. ஆன்மீகம் மனித வாழ்க்கையுடன் கலக்கும்போதே வாழ்க்கை செழுமையும் சீரும் பெறுகின்றது. இதனாலேயே 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்றும் 'கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்றும் சான்றோர்கள். கூறி வைத்துள்ளனர்.

சைவப் பண்பாட்டின் சிகரமாகத் திருக்கோயில்கள் திகழ்கின்றன. கோயில் என்றால் இறைவன் உறையும் இல்லம் எனப் பொருள் கொள்ளப்படுகின்றது. இறைவன் உயிர்க்கு உயிரானவன். எம்மையெல்லாம் படைத்துக் காத்து, அருள்பாலிப்பவன், இப்பிரபஞ்சம் முழுதுவற்கும். கருத்தாவாக உள்ளவன். எங்கள் யாவரினதும் ஒப்பற்ற தலைவன் அவன் எம் இறைவன். திருவருட் சக்தியோடு கூடியிருப்பதால், 'சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்' என்கிறார் உமாபதிசிவம்.

சைவம்-சிவ சம்பந்தமுடையது. சிவம், சக்தி சம்பந்தமுடையது. சிவம் இன்றேல் சக்தி இல்லை. சக்தி இன்றேல் சிவம் இல்லை. சிவசக்தி இணைப்பு சைவத்தின் சிறப்பு. இதனை விளக்குவது அர்த்த நாரீஸ்வர மூர்த்தம், அம்மையே அப்பா எனத் தீர்க்கமாகக் கூறுகின்றார் மாணிக்காவாசகப் பெருமான். சிவபெருமானைத் தோடுடைய செவியனாகவே திருஞானசம்பந்தர் தரிசித்துள்ளார். கண்டதைக் கண்டபடி, உள்ளதை உள்ளபடி சொல்லும் இயல்பு மூன்று வயதுக் குழந்தையுடையது. தோடு, பெண்கள், அணியும் ஆபரணம், குண்டலம் ஆண்கள் காதில் அணியும் ஆபரணம் என்பது. குழந்தையின் அறிவுக்கு எட்டிவிட்டது.

ஆலயங்கள், ஆகமங்களில் விதிக்கப்பட்ட விதிமுறைகளை ஆதாரமாகக் கொண்டே அமைக்கப்படுகின்றன. நித்திய, நைமித்தியக் கிரியைகள் வழிபாடுகள் என்பனவும் ஆகம விதிப்படியே நடத்தப்படுகின்றன. தெய்வ சாந்நியத்தியம் ஆலயங்களில் பேணப்படுதவற்கு இவையே அநுசரணையாக உள்ளன.

ஆலயங்கள் தனிமனித நல் வாழ்விற்கும் நாட்டின் வளம் மற்றும் ஆட்சி மேம்பாட்டிற்கும் உலகத்தவர் நன்மைக்கும். பண்பாட்டு ஒழுக்க வளர்ச்சிக்கும் சமூக கலாச்சார விருத்திக்கும் நிலைக்களான விளங்கி வருகின்றன. ஆன்மீகப் பண்பாட்டின் ஊற்றுக்கள் ஆலயங்களேயாகும்.

## ஆலயம் ஏன்?

அண்டங்கள் அனைத்திலும் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்து, எல்லாவிடமும் வியாபகமாய் உள்ள பரம்பொருளுக்கு நான்கு பக்கங்களிலும் எல்லைகள் வகுத்து, சுவர்கள். அமைத்து ஒரு சிறிய நிலப்பரப்பிற்குள் கோயில் நிறுவி அதனையே இறைவனின் இல்லமாகக் கொள்ளுதல் எவ்வாறு அறிவிற்குப் பொருந்தக் கூடியதாகும் என வினா எழுப்புகின்றார்கள். சிலர். அவர்களுக்குத் தக்க பதில் அளிக்க வேண்டியது நம் கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவுள் என்னும் பதத்தின் பொருளை நாம் அறிந்துகொள்ளுதல் வேண்டும். மனம், வாக்கு காயம் என்பவற்றிற்கு எட்டாததும், அவற்றின் எல்லையைக் கடந்ததும், அவற்றிற்கு எட்டாததும், அவற்றின் எல்லையைக் கடந்தும் அவற்றிற்கு உள்ளும் நிற்கும் பொருள் என்பதால் அப்பொருள் கடவுள் எனப்படுகின்றது. அவ்வாறிருந்தும் கடவுள் எவர் கண்ணிற்கும் புலப்படக்கூடிய பொருள் அன்று. அதுவே, கடவுளின் இயல்பு மாகும். கடவுளின் சுய நிலை அருவம். அதாவது உருமற்றது. உரையற்றது. குணங்குறிகள் அற்றது. நாமமற்றது.

அருவமாக எங்கும் எதிலும் நிறைந்துள்ள கடவுளைத் தியானிக்கவோ அதனுடன் உறவு கொள்ளவோ பேசவோ ஞானிகளுக்கு மட்டுமே முடியும். எம்மில் மிகப் பெரும்பான்மையினர் ஞானிகள் அல்லர். நாம் சிற்றறிவும், சிதறிய எண்ணங் களும் உடையவர்கள். ஒரு கணமேனும் சிந்தையை அடக்கிச் சும்மா இக்கின்ற திறன் அற்றவர்கள். அந்த வகையில் நாம் கடவுளுடன் பேசுதல் வேண்டுமாயினும் சரி, கடவுளை வேண்டுதல் செய்யினுஞ் சரி ஏன் கடவுளை நினைப்பதற்கும் தியானிப்பதற்கும் கூட நமக்கு எம் முன்னால் ஒன்றை உருவ மாக முன்னிலைப்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை உள்ளது.

ஆரம்பக் கல்வி பயிலும் பிள்ளை களுக்கு மலையைப் பற்றிய எண்ணக் கருவை ஏற்படுத்துவதற்கு, ஒன்றில் மலையை நேரடியாகக் காண்பிக்க வேண்டும். அல்லது மலையின் மாதிரி உரு ஒன்றைக் காட்டவேண்டும். முதிர்ச்சி குறைந்த பிள்ளைகள் தூலமாக ஒரு பொருளைப் பார்க்காமல் அது பற்றிய விளக்கத்தைப் பெற மாட்டார்கள். ஒன்றை விளங்கிக் கொள்வதற்கு அவர்களுக்கு நேரடி அனுபவம் தேவையாகும். அவ்வாறே சாதாரண மக்களுக்கும் கடவுளை அருவ மாகத் தியானிப்பதற்கோ, அருவ நிலை யிலான கடவுளுடன் பேசுவதற்கோ சிரமமாக உள்ளது. இந்த நிலையில் ஒன்றில் உருவம் தேவைப்படுகின்றது. அன்றேல் உருவத்தின் சாயல் வேண்டப்படுகின்றது. இவற்றுள் ஒன்றையேனும் முன்னிலைப்படுத்தாமல் சாதாரண மக்களுக்குக் கடவுள் பற்றிச் சிந்திக்கவோ தியானிக்கவோ அல்லது கடவுளுடன் பேசவோ, உறவாடவோ, இயலாமற் போய்விடுகின்றது. ஆகமங்களின் தோற்றம், எமக்கு எந்த வகையில் இப் பாிசேதனையைத் தீர்ப்பதற்கு உதவிற்று என்பது சிந்திக்கற்பாலது.

ஆலயங்களை அமைப்பதற்கும் தேவைப்பிரதிட்டைக்கும், நித்திய நைமித் தியக் கிரியைகள் வழிபாடுகள் மூலம் தெய்வ சாந்நியத்தை ஏற்படுத்துவதற்கும் சிவாகமங்களே வழி வகுத்தன. உருவ வழிபாட்டை அதிகாரபூர்வமாக்கிய பெருமை ஆகமங்களைச் சாரும். கடவுளை உருவமாக முன்னிலைப்படுத்தித் தியானிக்கவும், வழிப டவும் கடவுளுடன் பேசவும் உறவா டவும் சாதாரண மக்களுக்கு இயலுவதா யிற்று. ஆலயங்கள் ஏன்? என்பதற்கு இப்பொழுது விடை கிடைத்துள்ளதல்லவா?

## ஆலயத்தில் அமைதியும் தூய்மையும்

அமைதி, தூய்மை ஆகிய இரண்டும் தெய்வீகம் பொருந்தியவை. அவை ஆலயத்திற்கு சான்னித்தியத்தை ஏற்படுத்து பவை. அதனால் ஆலயத்தில் அமைதியை யும், தூய்மையையும் நிலவச் செய்ய வேண்டியது. வழிபாட்டிற்குச் செல்லும் அடியார்களின் கடமையும் பொறுப்புமாகும். "ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே!" என மெய்கண்டார் அறிவிக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்திலுள்ள ஒவ்வொரு பொருளும் ஒவ்வொரு அங்கமும் தொழுது வணங்குவதற்குரியவை. வணக்கத்திற்குரிய இடம் தூய்மையாக வைத்திருத்தலும் ஆங்கு அமைதி பேணப்படுதலும் அவசியமாகும்.

ஆலயங்களில் இறை சிந்னையோடு மனதை ஒருமுகப்படுத்தி வழிபாடு செய்வதற்கு ஆலயச் சூழலில் அமைதி காக்க வேண்டியது முதல் நிபந்தனையாகும். கவனக் கலைப்ான்கள் காணப்படின் மன அடக்கம், புலன் அடக்கம், இரண்டுமே கலைந்துவிடும்

ஆலயங்களில் சுவாமி தரிசனம் செய்யும் முறை, மற்றும் ஒழுங்கு விதி முறைகள் எல்லாமே சைவர்கள் எல்லோருக்கும் தெரியும். ஆனால் அங்கு அவர்களில் பெரும்பாலோர் நடந்துகொள்ளும் விதம், அவை யாவற்றையும் மீறுவதாகவே காணப்படுகின்றது. தெரிந்து கொண்டு செய்யும் குற்றங்கள் மகாபாவம் என்பதை அவர்கள் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். அத்தகைய பாவங்களுக்கு விசேமாசனம் கிடையாது. குளிக்கப்போய்ச் சேறு பூசிக் கொளளுதலுக்கு இது சமமாகும்.

கோயிலுக்குள் கோபுர வாயிலினூடாகவே செல்லுதல் வேண்டும். அவ்விடத்தில் சிலர் கூடிநின்று பேசிக் கொண்டும். வீண் வார்த்தைகளை உதிர்த்துக் கொண்டும். ஒருவரையொருவர் குசலம் விசாரித்துக் கொண்டும் இருந்தால் பிறருக்கு இடையூறுகளை விளைவித்தவர்கள் ஆகின்றனர். அத்துடன் அமைதிக்குப் பங்கமும் ஏற்படுகின்றது. இதைப் பலர் சிந்திப்பதில்லை.

அமைதி தேடி ஆண்டவன். சந்நிதிக்கு வந்தும் அங்கேயும் அமைதி இல்லையென்றால் வேறெங்கு தான் அமைதியைக் காணமுடியும்? இவ்வாறு கேட்டு எத்தனையோ அடியார்கள் கவலை கொள்கின்றார்கள்.

சில கோயில்களின் உட்பிரகாரங்களில் ஒலி பெருக்கிகளை அமைத்து அடிக்கடி ஒலிபரப்புச் செய்கின்றனர். பக்திப் பாடல்கள் என்ற பெயரால் ஒலிகளை உரக்கக் கிளப்புகின்றனர். இத்துணை சத்தங்கள் இரைச்சல்களின் மத்தியில் மனதை ஒருமுகப்படுத்தி இறைவனை வழிபாடு செய்வதென்பது எப்படிச் சாத்தியமாகும்.?

அமைதி, சாந்தி, நிம்மதி,- இவைதான் இன்று எமக்கு அத்தியாசியமாகத் தேவைப்படுபவை. இவை வீட்டில் இல்லை. வேலைத் தலத்தில் இல்லை. வாழும் சமூகத்தில் இல்லை. ஏன் நாட்டிலும் இல்லை. இவற்றை ஆலயங்களில் அடைவதற்கு நாம் ஒவ்வொருவரும் ஒத்துழைக்க வேண்டியது அவசியமாகும்.

அமைதி பேணல், தூய்மை பேணல், வழிபாட்டு முறைகளைக் கடைப்பிடித்தல், பிறருக்கு இடையூறுகள் தொல்லைகளை ஏற்படுத்தாதிருத்தல், ஆண்டவன் சந்நிதியில் அனைவரும் சமம் என்பதை உறுதிப் படுத்துதல், என்பவற்றின் மூலம், திருவருட் துணை கொண்டு திருக்கோயில்களில் தெய்வ சான்னித்தியம் நிலைபெறச் செய்தல் வேண்டும்.

## செய்தக் தகாதன

திருக்கோயில்கள் ஆகம விதிப்படி அமைக்கப்பட்டு நித்திய நைமித்தியங்கள் நடத்தப் பெற்று வருகின்றன. கும்பாபிஷேகம் மூலம் தெய்வ விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பெற்று தெய்வ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சான்னித்தியம் நிலவ வழி செய்யப்படுகின்றது. அத்தகைய திருக்கோயில்களில் ஆகமங்களில் விதிக்கப்பெற்றிருப்பவற்றிற்குப் புறம்பாக எதுவும் நடைபெறக் கூடாது, நடைபெற அனுமதித்தலும் ஆகாது.

சுவாமி விக்கிரகங்களைச் சிவாச்சாரியர்கள். அர்ச்சகர்கள் என்போரைத் தவிர வேறெவரும் தீண்டுதல் ஆகாது என்பது விதி. ஆனால் வழிபடுவோர் சிலர் விக்கிரகங்களைத் தொட்டுத் தீண்டுவதையும் கைகளால் அளைவதையும் காண்கிறோம். வேறு சிலர் பூக்களைக் கொண்டு வந்து வீசி எறிகிறார்கள். சிவாச்சாரியார் பூசை செய்யும்போது வழிபடுவோர் மலர்களையும் பத்திரங்களையும் விக்கிரகங்கள் மீது தாமும் போடுகின்றார்கள். சிலர் கோயில் மணிகளை தாம் நினைத்த நேரங்களில் அடித்துவிட்டுச் செல்கின்றார்கள். சுவாமி திருஉலா வருவதற்குப் பயன்படுத்தப்படும் வாகனங்கள், ஊர்திகள், பல்லக்குகள் என்பவற்றின் மீது சிலர் ஏறி உட்காருகின்றார்கள். பிள்ளைகளை அவற்றின் மீது இருத்திப் புகைப் படங்களும் எடுக்கிறார்கள். இவை யாவும் இன்றைய புதுக் குழப்பங்கள். இவ்வாறு செய்வதைப் பார்த்துவிட்டு பலர் செய்ய முற்படுகிறார்கள்.

விபூதிப் பிரசாதங்களை அலட்சியமாக வாங்கி நிலத்தில் சிந்தியும் விடுகின்றார்கள். சுவர்கள். தூண்கள் வாகனங்கள் என்பனவற்றில் பூசியும் விடுகின்றார்கள். பூக்கள், பத்திரங்கள் வில்வ தளங்களைக் கீழே போட்டுவிடுவதால் பிறர் கால்களால் அவை மிதிக்கப்பட்டு விடுகின்றன. பழங்களை உண்டுவிட்டு அவற்றின் தோல்களை ஆங்காங்கு போட்டு விடுவதால் பிரகாரங்களில் அசுத்தம் ஏற்படுகின்றது. இவை யாவும் பாவச் செயல்களாகும்.

விபூதிப் பிரசாதங்களை இரண்டு கைகளாலும் சிவாச்சாரியாரிடம் பணிந்து வாங்கி அண்ணாந்து "சிவ சிவ" என்ற சொல்லி நெற்றியில் அணிதல் வேண்டும். நெற்றியை நீட்டி விபூதியை அணிந்து விடும்படி சிவாச்சாரிரைக் கேட்பது முறையன்று. தீர்த்தத்தை இரு கைகளாலும் வாங்கித் தலையிலே பூசிக் கொள்ளலாகாது. சுவாமிக்கு அபிஷேகம் நடைபெறும் போது கோமுகியில் வடிந்து வரும் நீரைச் சிலர் எடுத்துத் தீர்த்தமாகப் பருகுகிறார்கள். அதுவும் முறையன்று.

கூந்தலை விரித்துவிடுதல், மூக்கு நீர் சிந்துதல் எச்சில் துப்புதல், காறி உமிழ்தல், தும்முதல், இருமுதல் என்பனவற்றையும் ஆலயங்களில் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும். ஆசௌசம் (தீட்டு) உள்ளவர்களும், வீட்டுக்கு விலக்கானவர்களும், மரணக்கிரியைகளில் கலந்து விட்டும் ஆலயத்திற்குள் செல்லுதல் ஆகாது. இவை யாவும் பாவச் செயல்கள் ஆகும். இச்செயல்களால் தெய்வ சாந்நித்தியம் பாதிப்படைகின்றது.

## பிரார்த்தனை

சைவ சமயிகள் கடவுள் பிரார்த்தனைக்கு முக்கியத்துவம் வழங்குவார்கள். ஆலயங்களிலும வீடுகளிலும் பிரார்த்தனைகளைச் செய்யும் வழக்கமே பொதுவாக உள்ளது. பிரார்த்தனைக்கு நேரம், இடம். என்பன இடையூறாக இருக்கக்கூடாது என்பதற்காகவே "நின்றும், இருந்தும் எவ்விடத்திலும் அவன்தாள் நினை" என்று பெரியோர் நமக்கு அறிவுரை பகன்றுள்ளார்கள். இறைவனுடன் நாம் கொள்கின்ற தொடர்பு பிரார்த்தனையாகும்.

பிரார்த்தனைகள் கடவுட் சிந்தனையைப் பிரார்த்திப்பவர்களின் மனங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைகின்றன. அதனால் மனத் தூய்மை, மொழித் தூய்மை, செயற்றூய்மை என்பன ஏற்படுகின்றன. அப்படியானவர்களின் வாழ்க்கையும் தூய்மை பெற்றுவிடுகின்றது. வாழ்க்கையில் தூய்மை ஏற்பட்டுவிட்டால் அவர்கள் எண்ணியவற்றை எண்ணியாங்கு எய்தப்பெறுவர். தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் நன்மைகள் கிட்டுகின்றன.

பிரார்த்தனைகள் காமியம் நிஷ்காமியம் என இரண்டு வகைகளாக உள்ளன. பயனை எதிர்பார்த்துச் செய்யப்படும் பிரார்த்தனை காமியம் எனவும், அவ்வாறு பயனை எதிர்பார்க்காது செய்வது நிஷ்காமியம் என்றும் அழைக்கப்படுகின்றன. பிரார்த்தனைக்கு மன ஒருமைப்பாடும் பக்தியும் முக்கியம். இறைவன் மீது கொள்கின்ற அன்பே பக்தியாகும்.

உண்மையான பக்தி என்பது இறைவனிடம் எந்த ஒன்றையும் கேட்காது அவனைப் பிரார்த்திப்பதும், அவனுக்குப் பணிந்து நடத்தலும், அவன் எமக்குத் தருவனவற்றை மனமார ஏற்று மகிழ்வது மாகும். பிரார்த்தனையின் அதிஉச்ச நிலை இறைவனிடம் எம்மை முழுமையாக ஒப்படைத்துவிடுதேலேயாகும். இதுவே பூரண சரணாகதி.

கடவுள் எங்கும் நிறைந்தவர் எல்லாம் அறிபவர். எலலாம் வல்லவர். எமது தேவைகளையும் விருப்பங்களையும் கடவுள் அறிவார். ஆயினும் எம்மில் பலர் உலகில் ஆசையெல்லாம் பூர்த்தி செய்ய வேண்டியே பிரார்த்தனைகளில் ஈடுபடுகின்றோம். எம்முடைய வேண்டுதல்கள் நிறைவேறாத விடத்துக் கடவுளை வைது தீர்க்கின்றோம். இவ்வாறு நடந்து கொள்ளுதல் பிரார்த்தனையைக் கொச்சைப்படுத்துவதாக அமையும். எனவே பிரார்த்தனை செய்வதே எமது பணி. மிகுதியைக் கடவுள் பார்த்துக் கொள்வார். "என் கடன் பணி செய்து கிடப்பதே." இறைவன் கடன் என்னைத் தாங்குதல் என்கிறார் அப்பரடிகள்.

பிரார்த்தனையை நாம் ஆன்மீகப் பயிற்சியாகக் கொள்ளுதலே முறையாகும். ஆலய தரிசனம், நாமசங்கீர்த்தனம், கூட்டு வழிபாடு, தியானம் செபம், விரதமனுட்டித்தல் தேவார திருவாசகப் பாராயணம் பூசை வழிபாடு, சைவ ஒழுக்க வாழ்வு என்பன பிரார்த்தனையின் அங்கங்கள் ஆகும். "பொன் வேண்டேன், பொருள் வேண்டேன். உன் திருவருள் தான் வேண்டும்." என்கிறார் ஓர் அருளாளர் . மனம், மொழி மெய்த்தூய்மை வேண்டும். அதேவேளை பிரார்த்தனைகள் நம்மை மேலும் தூய்மையுடையோராக்குகின்றன.

மனிதப் பிறவியின் நோக்கம் கடவுளை வணங்கி முக்தியின்பம் பெறுதல் என்கிறார் நாவலர் பெருமான். ஆலயமும் பிரார்த்தனையும் இவ்வுயர் நோக்கத்தை நாம் அடையப் பெறுதலுக்கு உறுதுணையாக விளங்குகின்றன என்பதை உணர்வோமாக.

## காயத்திரி செப மகிமை

காயத்திரி மந்திரம் 10 முறை செபித்தால் மூன்று தினத்தில் செய்த பாவம் ஒழியும். 100 தரம் செய்தால் பாவ ராசிகளைச் சாந்தி செய்யும். 1000முறை நியமமாகச் செபித்தால் உப பாதங்களை நாசம் செய்யும் 10,000 தரம் செபித்தால் மகா பாவங்கள் ஒழியும். கோடி முறை செபித்தால் நாம் இச்சித்த பலனெல்லாம் கிட்டும் என்பது வியாச பகவான் திருவாக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குங்குமம்

பராசக்தியின் அடையாளம் செந்நிறம். இது சக்தியின் செயலாற்றலைக் குறிக்கின்றது. இறைவனின் திருவருளாகிய பராசக்தியின் துணைகொண்டு செயல் புரிகின்றோம் என்பதைக் குங்குமம் உணர்த்துகின்றது. மங்கலம், செல்வம் நன்மை ஆகியவற்றையும் குறிக்கும். மாங்கல்ய தாரண வைபவத்தில் குங்குமம் முதலிடம் பெறுகின்றது.

## சந்தனம்

குளிர்ச்சிப் பொருள் சந்தனமும் மலரும் முறையே இறைவன் உலக சுகபோகங்களையும் செல்வத்தையும் வழங்குகின்றான் என்பதைக் குறிக்கும். இறைவனின் தண் கருணைக்கும் சந்தனம் அடையாளமாகும்.

## தெய்வங்கள்

இந்த சமயத்தில் அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்று சொல்லப்படுகிறது. குருவைத் தெய்வமாக மதித்துப் போற்ற வேண்டும் என்று சொல்லி இருக்கிறது. இதனால் மாதாவோ, பிதாவோ, குருவோ தெய்வமாகிவிடமாட்டார்கள். ஆனால் அவர்களை மதித்து வணங்கும்போது தெய்வ உயர்வு நம்மிடம் ஏற்படும். இதுவே அதன் கருத்து. மரம், பிராணிகள் ஆகியவற்றில்கூட இறைவனை உணரும் மனப்பான்மையை நம்மிடம் இந்த மதம் ஏற்படுத்துகிறது. தலவிருட்சம் என்று சொல்லி மரத்தையும், வணங்குகிறோம். இதைப் போலவே கிரக தேவதைகளை வணங்கும் போதும் நாம் தெய்வ உணர்வை நாடிப் பெற வேண்டும். இந்தத் தேவதைகள் நமக்கு சிறுபலன்களை அளிக்க வல்லவை. வாழ்க்கையின் தொல்லைகளை நீக்கிக் கொள்ள இவை உதவும். ஆகையால் இவற்றுக்குப் பிரீதியாகவும், பரிகாரமாகவும் பூஜைகளையும், ஹோமங்களையும் நாம் செய்கிறோம்.

ஜகத் குரு ஸ்ரீகாஞ்சிகாமகோடி
பீடாதிபதி
ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி
சுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உ
ஶ்ரீரஸ்த்து

# துன்னையூர் 'சாரதா பீடம்' ஜோதிஷ நிலையம்.
# THUNNAIUOOR "SARATHA PEEDAM" ASTRO CENTRE



'செஞ் சொற் கவிதா சிரோமணி'
சிவப்பிரம்மஸ்ரீ.
**ராம். தேவலோகேஸ்வரக் குருக்கள்**
(ஜோதிடர், பிரதமகுரு) லண்டன்.

SIVASRI RAM. THEVALOGESWARA KURUKKA
(ASTROLOGER, CHIEF PRIEST)



'இலங்கை இந்துமத குரு பீடாதிபதி' 'சிவாச்சாரிய சிம்மம்' 'கலாநிதி' அமரர் சிவப்பிரம்மஸ்ரீ ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களின் 80வது ஜனன தினத்தை முன்னிட்டு உடலால் மறைந்தாலும், உள்ளத்தில் தம் செயற்பாட்டாலும், அவரின் அருமைப் புதல்வர்களின் செயற்பாட்டாலும் அந்தணர்கள் மனங்களில் நிறைந்து வாழுகின்ற அந்த அமரர் சிவாச்சாரியப் பெருந்தகைக்கு 'நின் நினைவு மாறாது மாறாது' என்கின்ற கவிமலரைத் துன்னையூர் சாரதாபீடம் சார்பில் சமர்ப்பிக்கின்றோம்.

## நின் நினைவு மாறாது மாறாது

(1) மறை நான்கும் மாண்புறக் கற்று
மாட்சியுடன் மலர்ந்த குருவே
குறைவின்றி நற்குணக்குன்றாய்
குலம்காத்த இந்துமதக் குருபீடாதிபதியே
இறையோடு ஈர்ந்து இணைந்திட்ட
இணையற்ற சிவாச்சாரிய சிம்மமே
நிறைவான சாம்பசிவக் குருதேவே
நிகரற்ற நின்நினைவு மாறாது மாறாது.

(2) ஆகமம் சேர்ந்த அறிவுச் சுடராய்
அருமை நூல்பல ஆக்கித்தந்தாய்
தாகமாய் வேதத்தை நீவீர்நினைந்து
தரும் அளவில் கற்றுத் தேர்ந்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகமாய் எம்சமூகம் வளர்ந்திட
வந்த குருவாய் மிளிர்ந்தாய்
தேகவியோக மானாலும் எம்மனத்தே
தெவிட்டா நின்நினைவு மாறாது மாறாது

(3) மனநலிவு அகற்றி விட்டேகும்
மாந்திரீக பூஷணம் பட்டம்பூண்டு
சினமுடை விஷக்கடி சேர்நோய்தீர்
சித்த வைத்தியம் கற்றுத்தேர்ந்து
கனவான் பலரும்புகழ் சிவாச்சாரியாராய்
கல்வி நிறைமக்கள் பலரைத் தந்து
மனதில் நிலைத்த சிவாச்சாரியாரே
மதிநிறை நின்நினைவு மாறாது மாறாது

(4) சிகரமாய் ஸ்ரீதேவி குருகுலம்பூண்டு
சிங்காரக் குரலினால் வேதமோதி
நகரான நாயன்மார் கட்டுப்பதியே
நானிலம் போற்றிடு குருவாய்மேவி
அகரமுதல தமிழ்வேத மதையறிந்து
அரிய தத்துவநல் விளக்கம் தந்த
சிகரசாம்ப சிவசிவாச் சாரியாரே
சிந்தையில் நின்நினைவு மாறாது மாறாது

- சுபமஸ்து-

துன்னையூர்-
சிவப்பிரம்மஸ்ரீ ராம். தேவலோகேஸ்வரக் குருக்கள்
(மங்களபதி வேல்முருகன் கோவில், லண்டன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள் இருக்கும் உள்ளானை பூஜித்தல்

அந்தர் யாகம் என்பது வேள்வி எனவும் அகப்பூஜை எனவும் உள்முக வழிபாடு எனவும் பொருள் கொள்ளலாம். பூஜையின் மூலம் எல்லாச் செயல்களும் நிறைவு பெறுகின்றது. பூஜையில் ஈடுபடுபவன் ஆத்ம ஞானத்தை அடைகின்றான். பரார்த்தம், ஆன்மார்த்தம் என இருவகைப்பட்ட பூஜையில் தனக்கும் தன்னைச் சார்ந்தவர்களுக்கும் நன்மை அளிப்பதன் பொருட்டு நிகழ்த்தப்படுவது ஆன்மார்த்தம் எனவும். எல்லாருடைய நன்மையையும் கருதி தேவர்கள் முனிவர்கள் ஆகியோரால் பிரதிட்டிக்கப்பட்ட லிங்கத்தில் நிகழ்த்தப்படும் வழிபாடு பரார்த்தம் எனவும் கொள்ளப்படும். குருவினால் வழங்கப்பட்ட லிங்கத்திலோ, தண்டிலத்திலோ கோமயம் முதலான க்ஷணிகலிங்கங்களிலோ மண்டலத்திலோ, ஜலத்திலோ அல்லது தனது ஆன்மாவிலோ ஆன்மார்த்த பூஜை நிகழ்த்தலாம். எனக் காரணாகமம் செப்புகின்றது. ஆன்மார்த்த பூஜை எல்லோருக்கும் உரியது. பரார்த்த பூஜைக்கு வித்து விஜர்களான அந்தணர்களே உரியவர்கள் என்பது ஆகம நூல்களின் அபிப்பிராயம் மேலும் சிவனாக ஆன ஒருவன்தான் சிவனைப் பூஜிக்க வேண்டும் என்ற நியமம் இருப்பதால், ஆசாரியவனானவன் பூதசுத்தி நியாசங்கள் என்பவற்றின் மூலம் தன்னை சித்தமலம் அனுபவித்து சிவமாகப்பாவனை செய்து கொள்ள வேண்டும். ஆத்மார்த்த, பரார்த்த பூஜைகளுக்குரியவர்கள் அந்தர் யாகம் என்னும் அகவழிபாடு செய்து உள்ளொளி பெருகச் செய்துகொள் வேண்டும். யாண்டும் மெய்ப்பொருளா இருக்கும் "உள்இருக்கும் உள்ளானை எ நிருவம்மானையில் மணிகவாசகர் குறிப்பி கின்ற மெயப்பொருளாகிய சிவனை பூசிதது ஆத்ம ஞானத்தை அடைவதாகி பூஜையின் பலனை அடைந்தவனா "அகம்பிராமாஸ்மி" "சோகமஸ்மி" என்று தத்துவார்த்த நிலையில் சிவனாகத் தன்ை மாற்றி சிவடிவினாக ஆகிறார்.

ஆத்மார்த்த பூஜைக்குரியவர்களு பரார்த்த பூஜைக்குரியவர்களும் அந்த யாகம் என்னும் அகப் பூஜையில் அகவொ வடிவினான சிவனைத் தம் உள்ளத்தி வழிபடுவர். இருதயத்தில் இரத்தினமயமா மண்டபத்தைக் கல்பித்து, பூஜைக்குரிய சகல சுத்தி செய்யப்பட்ட திரவியங்களை யும் மனதாற் கொண்டு வந்து துவாசாந்த மாகிய சிரசிலுள்ள சந்திரமண்டலத்திலிருந்து பெருகின்ற அம்ருத மயமான நீரினால் அர்க்கி பாத்திரத்தை நிரப்பி, பொன்மயமான நாபிக்கமலத்திலிருந்து உண்டான நீல வர்ணமான தாமரைத் தண்டினையும், எட்டுத் தளங்களோடுகூடிய மிகவும் வெண்மையான வர்ணத்தையுடைய இருதய கமலத்தின் கர்ணிகையில் இருக்கும் குண்டலினி சக்தி யாகிய பிந்துவடிவான பீடத்தில் சக்தியை யும், இலிங்கத்தில் சிவனையும் அர்ச்சித்து துவாசாந்திலுலுள்ள அம்மருதமயமான நீரில் அபிஷேகம் நிகழ்த்தி கொல்லாமை, இந்திரிய நிக்கிரகம், பொறுமை, தானம்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானம்:, தபசு, சத்தியம், அன்பு என்னும் எட்டுப் புஷ்பங்களினாலும் அர்ச்சித்து மன மென்னும் பாத்திரத்தில் பிராணனென்னும் அக்கினியையும் அகங்காரமாகிய தூபத்தையும் சமர்ப்பித்து, சிவஞானமாகிய தீபத்தையும் சமர்ப்பித்து, விடயங்களிலிருந்து திருப்பட்ட மனதை நைவேத்ய மாகச் சமர்ப்பிக்க வேண்டும். சுழு முனையின் வழியான மூச்சுக் காற்றை ஜபமாகவும் பஞ்சபூதங்களின் சேர்க்கையினால் செய்யப்பட்ட சதாசிவருடைய அவயங் களுக்கு தியானத்தாற் செய்யப்பட்ட ஆபரணங்களால் அலங்கரித்தல் வேண்டும். தன்னை சிவனாகப் பாவனை செய்து சிவனிடம் தன்னை நிவேதனம் செய்தல் வேண்டும்.

இவ்வழிபாட்டில் தாந்திரிக முறைமை, மற்றும் யோக முறைமை இணைந்துள்ளமை குறிப்பிடக்கூடியதாகும். அகப்பூஜை இன்றி புறப்பூஜை பலன் தராது ஆதலால் எத்தகைய வழிபாட்டு முறைகளிலும் அவசியமாக அந்தர் யஜனம் செய்யப்படுதல் வேண்டும். உள்ஒளிபெருக்கி தன்னுள்ளே சிவனைக் கண்ட ஒருவர் தான் கண்டவற்றை உணர்ந்த வற்றை மற்றவர்களுக்கு காண் பிக்கவும் உணர்த்தவும் முடியும்.

இந்நிலை அடைந்தவன் ஆன்மாவை உணர்ந்தவனாகின்றான். நான் அதுவாக ஆகிறேன். நானே பிரமம் என்னும் உபநிடத வாக்கியங்களுக்கு ஏற்றவாறு ஆத்ம அனுபவம் அடைந்தவனாகின்றான்.

இந்நிலையிலேயே உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பு ஆலயம் எனவும் காயமே கோயிலாக, மனமணி லிங்கமாக எனும் வரிகள் மூலம் திருமுறைகள் உணர்த் துகின்றன. இவ்விதமாக சித்தத்துள்ளிருக் கின்ற சிவனை வழிபாடு செய்து கொள்கின்ற உத்தமமான வேள்வியாக அந்தர் யாகம் என்னும் கிரியை விளங்கு கின்றது.

சிவன் கோயில்
நல்லூர்

பிரம்பஸ்ரீ கிருஷ்ணானந்த சர்மா
விரிவுரையாளர் சமஸ்கிருதத் துறை
பல்கலைக்கழகம்
யாழ்ப்பாணம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



இலங்கையின் முதலாவது இந்துமத குருபீடாதிபதியான அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்கள் இலங்கை இந்து குருமார் ஒன்றியத்தின் மூலம் 1995 ஆண்டு பீடாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் கொழும்பு ஜிந்துப்பிட்டி கோவில் மண்டபத்தில் மணிகண்ட சேவா பீடம் ஏற்பாடு செய்த பீடாரோகண வரவேற்பு விழாவிற் கலந்துகொண்டு ஆசிபெற்றவர்களில் நானும் ஒருவன் என்பதில் மன மகிழ்வடைகிறேன். தான் மட்டுமல்லாமல் தனது புதல்வர்களையும் சிறப்பான முறையில் இந்துமத சேவையில் ஈடுபடும் திறனுடன் வளர்த்தவர். மேலும் அவரது 80வது ஜயந்தி விழாவில் நான் கலந்துகொள்வதிலும் பெருமையடைகிறேன். மேலும் அவரது ஞாபகார்த்தமாக வெளிவரும் ஜயந்தி மலருக்கு சாம்பசிவ தாசன் சாம்பசிவ ஜெகதீஸ்வரக் குருக்கள் அவர்களின் உருவாக்கத்தில் 'ஆத்ம பஞ்சகம்' என்னும் மந்திர இறுவெட்டு (C.D.) வெளியிடுவதும் ஆன்மீக வளர்ச்சிக்குப் பெரும் உறுதுணையாக இருக்கும் என்பதைத் தெரிவித்து ஜயந்தி விழா சிறப்புற வாழத்துகிறேன்.

**ஆர். யோகராஜன்**
கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்,
தேசிய அமைப்பாளர்,
இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



இலங்கை இந்துமத குருபீடாதிபதியின் 80வது ஜயந்தி விழாவினைக் கொண்டாடுவது குறித்து மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

எமது நாட்டில் இந்துமதத்தின் வளர்ச்சிக்குக் குருபீடாதிபதி அவர்கள் மிக உன்னதமான சேவை செய்துள்ளார். மிகவும் சிரமமான காலகட்டங்களிற் கூட இந்துமத பக்தர்கள் சமய வழிபாடுகளில் ஈடுபட பல விதமான பணிகளை குருபீடாதிபதி அவர்கள் செய்துள்ளார். இது போற்றக்கூடிய விடயமாகும். அந்தவழியில் வந்த அவரது மைந்தன் சாம்பசிவதாசன் ஜெகதீஸ்வரக் குருக்கள் இலங்கையில் முதன்முறையாக வேத ஆகம மந்திரங்கள் அடங்கிய இறுவெட்டு (C.D.) ஒன்றினை வெளியிடுவது மிக்வும் சிறப்பான தொண்டு என நான் நினைக்கிறேன். ஸ்ரீதேவி குருகுலபீடம் இவ்வாறான சமயத்தொண்டுகளை மென் மேலும் செய்வதற்கு எல்லாம்வல்ல இறைவன் அருள்புரிவாராக.

கலாநிதி பீ. ராமானுஜம்
செயலாளர்,
சுற்றுலாத்துறை அமைச்சு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

"சிவாகமவித்பத் ஜோதி" "சித்தாந்த பாணு" சிவாகமகிரியா பூஷணம்

# பண்டிதர் - சிவஸ்ரீ து.கு. ஜெகதீஸ்வரக் குருக்கள்

(நல்லை ஆதீன சிவாச்சாரியார்)

மருதடிப்பிள்ளையார் கோவிலடி,
விளைவேலி
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி

ஆகாயக்கடவைபிள்ளையார் கோவிலடி,
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
சுன்னாகம்.

சிவாச்சாரியார் - மரபில், அந்தணர்க் குரிய வருணாச்சிரம நெறியைத் தன் வாழ்வில் பூரணமாகக் கடைப்பிடித்து வாழ்ந் தவர் சிவாகமஞான குருபீடாதிபதி அருள் ஜோதி மறைந்த திரு. ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்கள்

அவரின் 80வது ஜயந்தி ஆடிக் கிருத் திகை என்று அறிகின்றபோது அப்பெரியா ரின் நினைவுகள் பல மனதில் அலை அலை யாக எழுகின்றன இவ் அலைகள் அவர் சைவ உலகிற்கு ஆற்றிய சேவையை ஓயாது பறை சாற்றிக் கொண்டேயிருக்கின் றன. அவற்றிற் சிலவற்றை நினைவு மீட்க விழைகின்றேன். எமது சமூகத்தினரும் குறிப் பாக இளம் சந்ததியினரும் சைவ உலகும் தெரிந்த அவ் உத்தம புருஷராகத் திகழ்ந்த சிவாச்சாரியாரின் வாழ்க்கை நெறி, அறிவி யல் நெறி என்பவற்றைப் பின்பற்ற அவர் நினைவாக வெளிவரும் மலரிலே இடம் பெறும் கட்டுரைகளும் கருத்துக்களும் உறுதுணையாக அமையும் என்பதில் நம்பிக்கையுடன் நானும் அப்பெரியாரின் சிறப்பு இயல்புகள் சிலவற்றை இங்கே குறிப்பிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

கடந்த நூற்றாண்டில் வாழ்ந்தவர்களில் சிறப்புமிக்கவராகத் திகழ்ந்தவர் மறைந்த சிவஸ்ரீ. ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார்



அவர்கள். நிறை ஒளியாகத் திகழ்ந்த இவர் சமஸ்கிருதம், சித் தாந்தம், வேதாந் தம், வேத, ஆக மம், சாஸ்திரம், சிற்பம், சோதிடம், மாந்திரிகம், புரா ணம், திருமறை, இசை, ஆகிய அனைத்திலும் மிகுந்த பாண்டித்தியம் உடையவராகவும் தனக்கு ஈடு இணையற்றவராகவும் திகழ்ந்தார்.

நான் முப்பது ஆண்டுகளுக்கு முன்னா அவரைச் சந்தித்த நாள் முதல் அவரின் இறுதிக் காலம் வரை, ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அவரின் புத்தி, செயல் திறன் ஆற்றல் என்பவற்றையும் ஒவ்வொரு துறையிலும் அவருக்கு இருக்கும் ஈடு இணையில்லாத திறனை வியந்தும், ரசித்தும், பார்த்தும் மகிழ்ந்துள்ளேன்.

## சிறந்த சிவாச்சாரியார்

சிவாச்சாரியார் அவர்கள் பல கும்பா பிஷேகங்களை, மகோற்சவங்களைத் தலைமை தாங்கியும், முன்னின்று நடாத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் சிறப்பித்த பெருமை மிக்கவர். ஆகம நெறி பிறழாது ஆத்ம சுத்தியோடு கிரியைகளை அழகூட்டிச் செய்யும் திறன் மிக்கவராய் இருந்தார் தீபாரதனை விஷேட பூஜைகள் முதலியவற்றை பக்குவமாக அடியவாகள் மெய்சிலிர்க்க வைக்கும் வண்ணம் நிகழச் செய்யும் தன்மையும் இயல்பாகவே இவரிடம் கண்ட தெய்வீக சக்தியாகும். இவரின் சிவாச்சாரியப் பொலிவும் தோற்றமும் தெய்விக ஒளி நிறைந்த முகமும் ஆன்மீக வழிபாட்டுக்கு இழுத்துச் செல்லும் சக்தி மிக்கது.

## வேத, ஆகம அறிவு

நான்கு வேதங்களிலும் இந்திய சிவாச்சாரியர்களுக்கு நிகரான அறிவும், ஓதி ஓதுவிக்கும் ஆற்றலும் பெற்றவர். இவரின் கணீர் என்ற குரல், வேத மந்திரத் திற்கு அட்சர சுத்தமானது. வேதங்களைப் பொருள் அறிந்து சொல்வதில் வல்லவராகவும் திகழ்ந்தார். ஓதும் ஆற்றலும் உள்ளவர்.

## ஆகம அறிவு

ஆகமத்தில் நிகரில்லா அறிவு மிக்க வர். பல ஆகமங்களில் வழக்கில் உள்ள காமிகம், காரணம் மாத்திரம் அன்றி ஏனைய பல ஆகமங்களையும் முழுமையாகப் பலமுறை வாசித்துத் தெளிந்த ஆகம ஞானியாக விளங்கினார். யார் எந்த நிலையில் எந்தக் கோணத்தில் கேள்வி கேட்டாலும் ஆகம ரீதியாக ஆதாரத்துடன் விளக்கும் ஆற்றல் இவருக்கு தனித்துவ மானது. தான் கற்ற ஆகமங்களை எல்லாம் தொகுத்துக் காலத்துக்கு ஏற்றவகையில் பத்ததிகளாகத் தன் கைப்பட எழுதியுள்ளார். மகோற்சவங்கள், பிரதிஷ்டை இன்னும் ஆத்ம பூசைக்குரிய பத்ததிகள் எல்லாம் அனைவரும் விளங்கக்கூடிய அமைப்பில் தன் கைப்பட எழுதியவை ஏராளம். இவர் கைப்பிரதியை யாரும் வாசிக்கலாம் அவ் வளவிற்குப் பிரித்து அழகுற எழுதிய வையைப் பல தடவை நான் பார்த்தும் கையாண்டும் உள்ளேன்.

யாரிடமும் இல்லாத பத்ததிப் பிரதி களை இவர் தொகுத்துப் பலருக்கும் பயன்படச் செய்துள்ளார். இவரின் பத்ததி களில், ஆத்ம பூஜைக்குரியனவும் பூதசுத்தி, அந்தர்யாகம், என்பவற்றுக்குரியனவும் தனித்துவம் வாய்ந்தவை. விளக்கமானவை அத்துடன் நவகுண்ட, 17குண்ட, 3 குண்ட, பத்ததிகள், அக்கினி விபயன முறைகள் ஆகியற்றின் தொகுப்பு சிறப்புடையவை. அதில் இவர் கையாளும் ஒழுங்கு சிறப்பு மிக்கது.

இவரின் ஸ்பர்சாகுதி ஒழுங்கு, சைவ சித்தாந்த அடிப்படையில் யாரும் விளங்கி கொள்ளக்கூடிய மாதிரி பத்ததிக் கிரமமாக உள்ளது. பத்ததிகளாக எழுதியதுமாத்திர மல்லாமல் மிகுந்த அட்சர சுத்தியோடு அதனை வாசிக்கும் திறனும் மிக்கவர். பத்ததிகளை வாசிக்கும் முறை, வாசிப்பின் தெளிவு எவரையும் கவரக்கூடிய முறையில் அமைந்திருக்கும் கிரியைகளும் சுலபமாக விளங்கக் கூடிய தன்மையில் அமைந்தி ருக்கும். கிரிகளைத் தான் செய்யும் போது விளங்கியும், விளக்கம் கொடுத்தும் தான் ரசித்தும், ரசிக்கவைத்தும் செய்யும் தனித் தன்மை வாய்ந்தவராக இருந்தார். இதனால் தெளிவாகக் கிரியைகளைச் செய்வதில் தலை சிறந்தவராக அருள் ஜோதி சிவாச் சாரியார் மிளிர்ந்தார் என்றால் மிகையல்ல. வேத ஆகம அறிவுடன் சிறந்த சமய பிரசாரகராகவும் திகழ்ந்தவர். சிவாச்சாரியப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணியுடன் மாத்திரம் இல்லாது சிறந்த சமய பிரசாரகராகவும், சொற்பொழிவாளராகவும் விளங்கினார். புராணக்கதைகள், சமயகுரவர் வரலாறுகள் சைவ சித்தாந்தக் கருத்துக்கள், கிரியை விளக்கங்கள், தத்துவங்கள் ஆகியவற்றை உள்ளடக்கி தொடர் பிரசங் கங்களைச் செய்யும் ஆற்றல் மிக்கவராகவும் மிளர்ந்தார்

எங்கு சென்றாலும் கிரியைகளுக்கும், நிகழ்வுகளுக்கும், பூசைகளுக்கும் மக்க ளுக்கு விளக்கம் கொடுக்காமல் இவர் செல்வதில்லை. இதனால் இவரின் கும்பாபி ஷேகக் கிரியைகளை சைவ உலகும் மக்களும் பெரிதும் விரும்பினர்

## சோதிடம் மாந்திரிகம்

சிவாச்சாரியர் ஒருவருக்கு தெரிந் திருக்க வேண்டிய சோதிடக்கலையையும் நான்காவது வேதமாகிய அதர்வண வேதத் தில் வியந்து கூறும் மாந்திரிகத்தையும் நன்கு கற்றுத் தெளிந்தவராய் இருந்தார். இவ்விரு கலைகள் மூலமும் மக்களின் துன்பங்க ளுக்கு ஆலோசனையும். வழிமுறைகளையும் கூறுவதில் பிரபல்யமடைந்திருந்தார்.

## சிற்பசாத்திரம்

சிற்பசாஸ்திரத்தில் வல்லவரான இவர் ஆலய நிர்மாண அமைப்புக்களுக்கு ஆலோ சனை கூறுவதிலும் வல்லவராகத் திகழ்ந் தார். இவர் புராண படனம் செய்வதிற் திறமையுள்ளவர். குறிப்பாக கந்தபுராணம், திருவாதவூரடிகள் புராணம், திருசெந்தூர் புராணம், பெரிய புராணம், போன்றவற்றிற்கு இசையுடன் பயன் சொல்லும் திறன்மிக் கவர். விடயத் தெளிவுடைய புராணிகர்கள் கூட இவரின் பயன், விருத்தி உரைகளைக் கேட்கக் கூடுவர்.

பல் துறையில் உள்ள தன் ஆற்ற லால் இவர் உரை நீண்டு விரித்தியுரையாக அமைந்து சிந்தனைக்கு மகிழ்வைத் தரும். மந்திரங்களை அட்சரசுத்தியுடன் ஒலிக்க ஓதும் திறன் மிக்கவர். மந்திரம் வாயில் சொல்வது என்ற நிலையை மாற்றி அட்சர சுத்தியுடன் அழுத்தம் திருத்தமாக சுர வேறுபாடுகளுடன் மந்திர உச்சாடணம் செய்வதிலும் பத்ததி வாசிப்பதிலும், வேத மந்திரம் ஒலிப்பதிலும் உண்மையில் வல்ல வராகத் திகழ்ந்தார். இவருக்கு முன்னால் மந்திரம் சொல்ல எவரும் தயங்குவர். காரணம் அட்சர சுத்தி தவறிச் சொல்லி விடுவோம் என்று சிந்தித்தே அவர்கள் தவிர்ப்பர். அதுமாத்திரமல்லாமல் யந்திர பூசை, குறிப்பாக ஸ்ரீசக்கர பூஜை போன்றவை செய்வதில் மிக்க ஆற்றல் உள்ளவர் முத்திரைகள் இவர் காட்டும் விதம் தனித்துவமானது. முத்திரைக்கு லட்சணம் கொடுத்தவர் என்று கூடச் சொல்லலாம். இவ்வாறு இவரின் சிறப்பு மிக்க இயல்பான லட்சணங்களை அலை அலையாக கூறிக் கொண்டே போகலாம். இவரின் லட்சணங்களில் சிறப்புடையது சிவப்பொலிவு. அச்சிவப்பொலிவுக்கு ஏற்ப தினசரி சிவபூஜை சந்தியாவந்தனம் ஆத்ம பூஜை, ஆன்மார்த்த பூஜை என்பவற்றைச் செய்வதில் மிகுந்த சிரத்தையும் அக்கறை யும் உள்ளவர். விரிவாக இதனைச் செய்வ தற்கு தன் இல்லத்தில் தனி இடமும் வைத்தி ருந்தார்

சிவ பூஜை துரந்தரரான இவர், புலித் தோலின் மீதும், மான் தோலின் மீது இருந்து சிவபூஜையை நிறைவு செய்யும் காட்சியும், அருள் பொலிவும், நம் போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவாச்சாரியர்களைக் கவரக்கூடிய வகையில் அமைந்து இருக்கும். சிவபூஜை முடித்து அருள் ஜோதியாக மிதிவடியில் நடந்து வரும் போது சிவப் பொலிவு அவரில் காணப்படும். இன்று இவர் தம் பிள்ளைகளைப் பல நிலைகளிலும் சிறப்படையச் செய்தும் எல்லோரையும் தனக்கு நிகர்த்ததான சிவாச்சாரியராக மிளிர செய்தும் உள்ளார். இவரின் ஆத்ம பூஜையின் பலனாகவே இவரின் குமாரர்கள் சிறந்த சிவாச்சாரியர்களாக உலகின் பலபாகங்களிலும் மிளிர்கிறார்கள். இவரின் மருமக்கள் கூட இன்று நிகரற்ற சிறந்த அறிவு பூர்வமான சிவாச்சாரியர்களே.

## தந்தையின் வழியே

அனைத்துக் குமாரர்களும் சிவாச்சாரிய மரபைப் பேணி ஆத்ம பூஜையையும், சிவபூஜையும் குறைவின்றி கடைப்பிடித்து வருகிறார்கள். இவரின் புதல்வர்களில் நம்மவரான ஜெகதீஸ்வரக்குருக்கள் தந்தையின் பணிகளை அவரது பாணியிற் தொடர்வதில் வல்லவராகத் திகழ்கிறார். தந்தையாரின் நினைவாக ஆத்ம பஞ்சகம் என்னும் CD இறுவெட்டினை பூதசுத்தி, அந்தர்யாகம் என்பவற்றை உள்ளடக்கியதாக பத்ததிக் கிரமத்தில் வெளியிட்டுவைக்கிறார்.

"ஆத்ம பஞ்சகம்" என்னும் ஒலிநாடா சிவாச்சாரியார்களுக்கு ஓர் அனுபூதியாக அமையும் உள்ளுணர்வை ஏற்படுத்தும். இலங்கை, இந்திய, சர்வதேச சிவாச்சாரியர்களுக்கும் இது பயன்படும் என்ற நம்பிக்கையுடன் இதனைச் செய்கிறார். அவர் தம் பணிகளை அவர் மகன் சிவஸ்ரீ-சாம்-ஜெகதீஸ்வரக் குருக்கள் சமூகத்திற்குப் பல நிலைகளிலும் செய்ய வேண்டும் என்று இறையை வேண்டுவதுடன். 80வது ஜெயந்தி தினத்தையொட்டி வெளிவரும் மலரும் அறிவியல் ரீதியில் சமூகத்திற்கு CD உதவும். பல நாடுகளில் வாழும் நம்மவர்களுக்கும் சிவாச்சாரியார்களுக்கும் பயன்படும்.

குருபீடாதிபதி மறைதிரு ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியர் நம்மவர்களில் ஒரு நிறை ஞானியாகத்திகழ்ந்தவர், பல துறை சார்ந்த கலாநிதியாக மிளிர்ந்தவர். அவர் வாழ்க்கை நெறி, நம்மவர்களுக்கு ஓர் வழிகாட்டலாக அமைவுறும். குரு பீடாதிபதி நல்லை ஆதின சிவாச்சாரியராகச் செய்த சமயப் பணிகள் இன்றும் சைவ உலகில் முத்திரையாக விளங்குகின்றன.

"பண்டிதர்" சிவாகம வித்பத் ஜோதி
சிவஸ்ரீ து.கு. ஜெகதீஸ்வரக் குருக்கள்
புன்னாலைக் கட்டுவன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

SRI KATPAKAMBAL THUNAI

'Eyalisaivarithi' 'Kavimamani' 'Sathithyamamani' 'Muththamilvarithi' 'Muththamilviththakar'
'Sridignayiru' 'Arudkalaivatithi' 'Arudkavichemmal" 'Samvatheswarar' 'Gnanakkavimani' 'Aasukavi'
'Mathurakavi' **'Kalarathna' 'Kalabooshanam' 'Mahavidvan;**

Yalpanam,

Bramsri **M.T.N. Veeramany Aiyar M.A.,** J.P.
Rtd. Lecturer, Covt. Teachers Colleges, Kopay - Palaly.
Lecturer (Visiting) R.A.F.A. University of Jaffna.

INUVIL,
CHUNNAKAM,
**Sri Lanka.**

## சிவாகம ஞானி அருள் ஜோதி ஸ்கந்த சாம்பசிவ குருக்கள்

## முதலாவது இந்து மத குரு பீடாதிபதி அவர்களின்

# 80வது ஜெயந்தி விழா மலர் வாழ்த்து

தென்மொழியும் வடமொழியும் தேர்ந்து வேத
தெய்வீக ஆகமத்தின் கிரியா பாகம்
நன் முறையில் ஈழத்து திருத்தலங்கள்
நவில வரும் பல க்ஷேத்திரக் குடமுழுக்கு
இன்னமுதாம் வேதமொடு நியாஸத் தொடு
இனித்திடும் மாந்திரீகம் ஆயுள் வேதம்
தன்னிகரில் லாத்தொண்டு செய்த நூலோன்
திகழ் சாம்ப சிவக் குருக்கள் நாமம் வாழி

இந்து குரு பீடாதிபதி யாகி
இறைசேவை சமயநெறிச் சேவை செய்தே
பந்துமித்ரர் போற்றிடவே உதவி செய்து
பல்லோரும் மிளர சேவை யெ்த வேதன்
ஸ்கந்த சாம்ப சிவாச்சாரியார் காசினியில்
கல்விகலை தெய்வீகச் சேவையெல்லாம்
புந்தி மகிழ் பூவுலகில் எங்கணுமே
பொலிந்திடும் சைவம் தமிழ் நெறியைக் காக்கும்.

அந்தண சிரேஷ்ட அவர்தம் தொண்டு
அகிலமே உள்ளளவம் நிலைத்து நிற்கும்
சுந்தர வடமொழியின் பாண்டித்தியம்
சேர்ந்திடு ஸகந்த சாம்ப சிவக் குருக்கள்
தந்திடும் மந்திர சொல்லின்
ஓசை தார்மீக நன்றியை வளர்த்தே நிற்கும்
செந்தமிழ் சேவை செய்த அந்தணாளன்.
ஸ்கந்த சாம்ப சிவக் குருக்கள் நாமம் வாழி

– வீரமணி ஐயர் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ வடிவழகிதுணை

# ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னநாத சுவாமி தேவஸ்தானம்

திருக்கோவிற் பண்பாட்டிற்கு அடிப்படையாக விளங்குவது சிவாமங்கள். திருக்கோவிலோடிணைந்த பண்பாட்டு வளர்ச்சிக்கு உறுதுணையாக விளங்குவன திருக்கோவில்களாகும். திருக்கோவில் பண்பாட்டு மரபுசார்ந்தது. இம்மரபினைப் பேணுபவர்கள் வேதசிவாகமங்களைக் கற்றுணர்ந்தவர்களும் ஆதிசைவ குலத்திற்தோன்றியவர்களுமான சிவாச்சார்யார்களேயாவர்.

யாழ்ப்பாணத்து நல்லூரில் ஷடமர்ஷண கோத்திரத்தில் சிவாச்சார்ய மரபில் தோன்றியவரே சிவஸ்ரீ ஸ்கந்ததாசக்குருக்கள் சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்கள். இவர் வேதாகம, சிவாகம ஞானி, எனும் சிறப்புப் பெற்றவர். கிரியைகளை நிகழ்த்துவதிலும் கிரியைகளை நெறிப்படுத்துவதிலும் தன்னிகரற்று விளங்கியவர். அகில இலங்கைக் குருபீடாதிபதியாக விளங்கியவர். சிவபூஜா துரந்தரர், மாந்தீரக பூஷணம். ஆயுர்வேத வைத்தியர். தேவீ உபாசகர். இத்தகைய சிறப்புக்களையுடைய சிவாச்சாரியாரின் எண்பதாவது வயது ஜெயந்தி விழவன்று அப்பெருந்தகை அமரத்துவமடைந்த 05 வருடத்தில் அப்பெருந்தகையின் வழிகாட்டலில் உருவாகியவரும், அப்பெருந்தகையால் சிவாச்சாரிய அபிஷேகம் செய்யப்பெற்றவரும், அவர்மரபு பேணுகின்றவருமான இப்பெருந்தகையின் குமரர் சிவஸ்ரீ சாம் ஜெகதீஸ்வரக் குருக்கள் அவர்கள் தமது மரபில் என்றும் போற்றி வந்த அனுக்கிரகக்கிரம பூதசுத்தி, அந்தர்யாகம் இவையிரண்டினையும் மையமாகக் கொண்டு குருவந்தனம், விசேஷ சந்தி, அந்தர்மாத்ருகா, பகிர் மாத்ருகா, நியாசங்கள் என்பனவற்றோடு, ஆத்மநிவேதனம் ஆகியவற்றினை இணைத்து இறுவெட்டு (C.D)யில் தமது குரலில் வெளியிடுவதனையிட்டு பெருமகிழ்வடைகின்றேன்.

சிவஸ்ரீ, ஜெகதீஸ்வரக் குருக்கள் பேராசிரியர் கைலாச நாதக் குருக்கள் அவர்களின் மாணவர்களுள் ஒருவர். வளர்ந்துவரும் சிவாச்சாரியார். இவர் தமது குருவாகவும் தந்தையாகவும் விளங்கிடும் தந்தைக்குச் செய்யும் "ஆத்ம பஞ்சகம்" எனும் நிவேதனம் சிறக்க ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னநாதப் பெருமானை வணங்கி ஆசீர்வதிக்கின்றேன்.

கா. இரத்தின கைலாச நாதக்குருக்கள்
பிரதான குருவும் தர்மகர்த்தாவும்

ஸ்ரீ முன்னேஸ்வர தேவஸ்தானம்
முன்னேஸ்வரம்
சிலாபம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ச. மஹேஸ்வரக் குருக்கள்
ஆதீனகுரு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்,
நயினாதீவு.
பிரதம குரு - ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்
சுதுமலை, மானிப்பாய்



# பணிகளைத் தொடர்வோம்

தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று

என்ற வள்ளுவரின் வாக்கியத்திற்கு அமைவாக வழிகாட்டியாக வாழ்ந்து உலகம் போற்றும் உத்தமனாகச் சிறந்து விளங்கிய எனது அன்புக்கும், மதிப்புக்குமுரிய அமரர் டாக்டர் ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியாரின் 80வது ஜயந்தி தினத்தை முன்னிட்டு வெளிவரும் ஞாபகார்த்த நூலுக்கு இச் செய்தி வழங்குவதில் நான் மிகவும் பெருமைப்படுகின்றேன்.

இப் பெரியார் நான்கு பாஷைகளிலும் பாண்டித்யம் பெற்றவர் இவருடைய காலத்திலே இவர் அனைத்து இந்துக் குருமார் ஒன்றியங்களின் முதல் குருபீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட பெருமை இவருக்கே உரியது. அனைத்துக் குருமார்களையும் ஒரு கட்டுக்கோப்புக்குள் அமைப்பதற்கு மிகவும் பாடுபட்டு உழைத்தவர் இவர் மூத்தசிவாச்சாரியார்களால் பெரிதும் பாராட்டப்பட்டதுடன் தமிழ்நாட்டிலும் இவர் வெளியிட்ட நூல் மூலம் பெரும் மதிப்புப் பெற்றது தாம்பெற்ற கல்விமூலம் பல ஆகமங்களை நன்றாக ஆராய்ந்து அதன் ஆக்கங்களை எமது சமூகத்திற்கு நன்மைக்கு நூல்வடிவாய் அச்சிட்டு வெளியிட்ட பெருமைக்குரியவர் இவர் ஆகம சிற்ப சாஸ்திரங்களிலும் ஆர்வமுடையவராய்த் திகழ்ந்து பல கோவில்களை சாஸ்த்திரோத்தமான முறைகளில் அமைத்து சைவ உலகிற்கு பெரும் பணிபுரிந்தமையையும் இங்கே குறிப்பிடுவதில் தவறில்லை. இவர் மாந்திரீக பூஷணமாகவும் திகழ்ந்து மக்களினது பல இன்னல்களையும் தீர்த்துவைத்தவர். இவருடைய எண்பதாவது ஜயந்தி விழா தினத்தையொட்டி இவருடைய மகன் ஸ்கந்த- சாம்ப-ஜெகதீஸ்வரக் குருக்கள் அவர்களின் பெருமுயற்சியால் வெளிவரும் ஆத்மபஞ்சகம் எனும் C.D. (ஒலிநாடா முயற்ச்சி இவர் தந்தைக்கு மகன் ஆற்றும் உதவி" என்ற வாக்கியத்திற்கு அமையப் பெருமை பெறுகிறது முயற்சி பெருமைக்குரியது. இலங்கையில் முதன் முதலாக வெளிவரும் மந்திர ஒலிப் பேழை இதுவே. என்பதில் பெரும் மனநிறைவு அடைகிறேன். சர்வதேச ரீதியில் முதன்முதல் இந்துமத குருபீடாதியாக விளங்கிய அமரர் டாக்டர் ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களின் மறைவுக்குப் பின் அந்த இடத்தை நிரப்பிய அடியேனுக்கு நான் அவர் மேல் வைத்த அன்பு, பாசம், விசுவாசம், குருபக்தி என்பனவே காரணம் எனக் எண்ண வேண்டியுள்ளது. எனவே நாம் அனைவரும் அவர்விட்ட சேவைகளைத் தொடர்ந்து செய்து எமது சமூகத்தின் முன்னேற்றத்துக்கு வழி செய்வோமாக.

ஓம் சாந்தி சாந்தி நாந்தி

'வேதாகம பூஷணம்'
சிவஸ்ரீ ஜம்புகேஸ்வர மகேஸ்வரக் குருக்கள்
சர்வதேச இந்துமத குருபீடாதிபதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

## இலங்கையில் குருபீடாதிபதியின் காலம் பொற்காலமே



கும்பாபிஷேகங்களின் பொற்காலமாக விளங்கிய காலம் எங்கள் முதலாவது இந்துமத குருபீடாதிபதியாக விளங்கிய சிவஸ்ரீ ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்கள் அவற்றில் முன்னின்று கலந்துகொண்ட காலமாகும். அந்நாளில் அவர்கள் கும்பாபிஷேகக் கிரியைகளில் காட்டிய ஆர்வம் குறிப்பிடத்தக்கதொன்று. ஒவ்வொரு சிறிய கிரியைகளையும் கூட விஸ்தாரமாகவும் சிரத்தையாகவும் செய்யக்கூடியதாக அவர் தொகுத்து வைத்த பத்ததிகள் எல்லாம் போற்றுதற்குரியவை. சாதாரண ஸ்நபன கும்ப பூஜையாக இருந்தாலும்கூட அதைச் சிறப்பாக ஸர்வ நியாசங்களுடனும், விசேஷ திரவிய ஹோமங்களுடனும் பூரணமாகச் செய்து வைக்க சிவாசார்யார்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்துவந்தார்.

கும்பாபிஷேகங்களில் சிவாச்சாரியர்கள் ஆற்றுகின்ற ஆத்ம பூஜையில் மிகுந்த ஆர்வம்கொண்ட அவர் தம் கையினாலேயே விசேஷ சந்தி, பூத சுத்தி, அந்தர்மாத்ருகா, பகிர்மாத்ருகா, அந்தர்யாகம் முதலியவற்றை எழுதி வைத்தார். அதுவும் ஆகமத்தில் கூறப்பட்ட உத்தமோத்தம பூதசுத்தியாகிய அனுக்கிரக கிரமபூதசுத்தியை எழுதிவைத்தார்கள். மிகச் சிறப்பாக அந்தப் பூதசுத்தியில் கிரமமாக ஆகாசத்திற்குள் அடங்கி தான்வேறு, இவன் வேறு என்று இல்லாத ஆத்மாவை சிவனிடத்தில் லயிக்கவைக்கும் முறை வியப்பிற்குரியதாகும்.

"முதலில் நிவிருத்திகலா பீஜத்தால் பத்திரம் புஷ்பம் இல்லாத ஆலமரத்தை அசைவில்லாததாகப் பாவித்து..... பிரதிஷ்டாகலா பீஜத்தால் ஜலத்தால் நனைக்கப்பட்டதாய் இலை புஷ்பத்தோடு கூடியதாய்ப் பாவித்து....... வித்யாகலா பீஜத்தால் வலது கால் கட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரலிலிருந்து உண்டாகும் காலாக்னியால் உலர்ந்த இலைகள் எரிந்து சாம்பலாகியதாகப் பாவித்து...... சாந்தி கலாபீஜத்தால் பொசுக்கிய சாம்பலை பத்துத் திக்கிலும் காற்றினால் சோடிகா முத்திரையாலும் அஞ்சலியாலும் சிரசைச் சுற்றிலும் பரந்ததாய்த் தியானித்து சாந்தியதீத கலாபீஜத்தால் திக்குகளில் வியாபித்துள்ள பஸ்மத்தை ஆகாசத்தில் சேர்த்து சுத்தஸ்படிக நிறமாய், நிர்மலமான ஆகாசம் தலையிலிருப்பதாய்த் தியானித்து எல்லாம் சூனியம் என்று எண்ண வேண்டும்." இப்படியாக பூதசுத்திக் கிரியைகளை ஒன்றன் பின் ஒன்றாக அழகாகத் தொகுத்து எழுதியிருக்கிறார்.

அதன்பின் அந்தர்மாத்ருகா பகிர்மாத்ருகா நியாசங்களையும் அதைத் தொடர்ந்து அந்தர் யாகம் என்பதையும் மிகச் சிறப்பாக எழுதியிருக்கிறார்.

"சுத்தமாயை குண்டமாகவும் இச்சாஞான கிரியாசக்திகள் மூன்று மேகலைகளாகவும், சுஷும்னாநாடி ஸ்ருக்ஆகவும், இடாநாடி சுருவமாகவும், மூலாதாரம் ஆஜ்யபாத்திரமாகவும், இந்தப் பூமியே ஹோமதிரவியமாகவும், பிந்து மத்தியிலிருந்து பெருகுகின்ற அமிர்தம் நெய்யாகவும், குண்டத்தில் ஞானாக்னியை உத்பவித்து சூரியன், சந்திரன், அக்னி இவைகளுக்கு மேலும் துவதசாந்தத்தில் சேர்த்து, அந்தந்த தேஜசான அக்னியை சுஷும்னா மார்க்கத்தால் நாபிகுண்டத்தில் வைத்து பூரகஞ்செய்து பிந்துவினின்று பிரவகிக்கிற அமிருதமாகிய நெய்யால் பிரசாத மந்திரத்தாலும் 108 ஆகுதி செய்து ஹோமமுடிவில் சிருக்கு சுருவங்களால் வௌஷடந்தத்தோடு கூடிய பிரசாத மந்திரத்தினால் பூர்ணாகுதிசெய்து ஹோமம் செய்க."

இப்படியாக அவர் எழுதிய பூதசுத்தி விளக்கங்கள் எல்லோருக்கும் விளங்கக்கூடியதாக கிரியைகள் ஆற்றக்கூடியதாக இலகுவாக இருக்கின்றமை மிகப் பெருமைப்படக் கூடியதொன்றாகும்.

அவருக்கு நடைபெறுகின்ற அவரது 80வது ஜயந்தி விழாவில் அவர் தம் ஞாபகார்த்தமாக அவருடைய புத்திரன் சிவஸ்ரீ சாம்பசிவ ஜகதீஸ்வரக் குருக்கள் தனக்கே உரிய திறமையோடு பூதசுத்தியிலிருந்து அந்தர்யாகம் வரை இறுவெட்டு (C.D) வெளியிடுகிறார். அதைக் கேட்டுச் சுலபமாகச் சிறார்கள் பூதசுத்தியைப் பயின்று கொள்ளலாம். பெரியவர்களும் அதை வாங்கி அடிக்கடி கேட்டுச் சந்தேகம் தெளிந்து கொள்ளலாம். இது ஒரு சிறந்த கைங்கர்யம் என்று அவரை வாழ்த்தி ஆசிகூறி குருபீடாதிபதியின் பாத கமலங்களை மனதில் நிறுத்தி அவர்தம் குருவருளாசி பெறுவோமாக

சிவஞானபாஸ்கரன்
சிவஸ்ரீ நானு மகாதேவ சிவாசாரியார்
'காயத்திரி பீடம்'
(அதிபர் தர்மஸாஸ்தா குருகுலம், இணுவில்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**P. Vallipuram J.P. (All Island)**
Retd, Collector of Customs
Trustee
Sri Bathrakali Amman Devasthanam
17, A Mayura Place, Colombo 6
Tel : 500840

Residence:
124/3, Lauries Road,
Colombo- 4, Srilanka.
Tel : 584371

# தர்மகர்த்தாவின் பார்வையிலிருந்து

இலங்கை இந்துமத முதலாவது குருபீடாதிபதியும் அன்னை ஸ்ரீதேவி ராஜராஜேஸ்வரி உபாசகருமான சிவாகமஞானி, அருள்ஜோதி டாக்டர் ஸ்கந்த சாம்பசிவசிவாச்சாரியார் அவர்களின் 80வது ஜயந்தி தினப் பெருவிழா மிகவும் சிறப்பாக இன்று (06-08-2002) நடைபெறுவதையிட்டுப் பெருமகிழ்வடைகிறோம்.

சிவஸ்ரீ சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்கள், சிவபூமி எனப் போற்றப்படுகின்ற இவ்விலங்காபுரியின் புகழ்பூத்த அரும்பெருஞ் சிவாச்சாரியார்களுள் முதன்மையானவராகத் திகழ்ந்தவர். வேதம், ஆகமம், புராணம், இதிகாசம், ஜோதிடம், சிற்ப சாஸ்திரம் முதலியவற்றிலே விற்பன்னராக, போற்றத்தக்க தகைமையுடையவராகப் பல்வேறு பரிமாணங்களில் தனது குருத்துவ ஆற்றலை வெளிப்படுத்தியவர். அவர்கள் இறுதிக் காலத்தில் கொழும்பில் வசித்த பொழுது அவருடன் பழகக்கூடிய அருமையான ஒரு வாய்ப்பு எமக்குக் கிட்டியது. அந்த வகையிலே எமக்குப் புலப்படாத பலசமய விடயங்களைப் புலப்படுத்தியவர். தர்க்கரீதியாக விவாதித்து எமது சந்தேகங்களை நீக்கி வைப்பதில் அவருக்கு நிகர் அவரே எனின் மிகையாகாது.

மேலும், சிவாச்சாரியார் அவர்களுடைய புதல்வர்கள் எமது ஆலயத்தோடும் சமய சமூகப் பணிகளோடும் தொடர்புடையவர்கள். உலகெங்கும் அவர்களது சமயப் பணிகள் பரவியிருப்பது அவர்களுடைய புலமைக்குச் சான்றாகும்.

அந்த வகையிலே சிவாச்சாரியார் அவர்களுடைய புதல்வர்களினால் சிவாச்சாரியாருடைய 80வது ஜயந்தி மலர் வெளியிடப்படுவதைப் பாராட்டுகிறோம். மேலும் அவர்களுடைய புதல்வர்களுள் ஒருவரான சாதககலாமணி, சாம்பசிவதாசன் சாம்பசிவ-ஜெகதீஸ்வர சிவாச்சாரியார் அவர்களுடைய குரல் வண்ணத்திலே 'ஆத்ம பஞ்சகம்' எனும் (C.D) இறுவெட்டு ஒன்றினை வெளியிடுவதும் போற்றுதற்குரிய முயற்சி. இத்தீவிலே யாரும் இதுவரை ஈடுபடாத ஒரு நன்முயற்சி. இப்படியான பணிகள் முன்னெடுக்கப்படும் போது நாம் அதற்கு உறுதுணையாக இருக்கவேண்டும். ஆலய தர்மகர்த்தாக்களும் பரிபாலன சபையினரும் இப்படிப்பட்ட சமயத்தை முன்னெடுத்துச் செல்கின்ற காரியங்களுக்குத் தமது பேராதரவை நல்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டு, செயற்கரிய செய்கின்ற குருபீடாதிபதியின் புதல்வர்களை வாழ்த்தி, மென்மேலும் இப்பணிகளில் ஈடுபடவேண்டுமென எல்லாம்வல்ல மயூரபதி பத்ரகாளி அம்பாளின் பாதகமலங்களைப் பணிந்து பாராட்டுகிறேன்.

சுபம்

சு. வல்லிபுரம் (J.P.)
தர்மகர்த்தா
ஸ்ரீபத்திரகாளி அம்பாள்
தேவஸ்தானம்,
மயூரபதி.

இலங்கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவமும் வைணமும்

சைவமும் வைணமும் தென் பாரதத்தின் (தமிழ் நாட்டின்) இரு கண்களாக விளங்குவது கண்கூடு. சைவத் திருக்கோவில்களும் வைணவத் திருக்கோயில்களும் கலந்து விரவாத கிராமங்களே அங்கு இல்லை எனத் துணிந்து கூறலாம்.

பாரத நாட்டில் நிலவும் சமயங்களுட் சைவம் தனிப் பெருஞ் சிறப்புப் பெற்றது. உயரிய ஞானம் கூறும் சைவ சித்தாந்த தத்துவத்தை வழங்கிய சமயம் ஆதலால் உயர்ந்து விளங்கின்றது சைவம். ஒருவன் எத் தெய்வத்தை வழிபடினும் தன்னையறியாது சிவபிரானையே வழிபடுகின்றவனாகின்றான் என்ற உண்மையினை எடுத்துரைத்துச் சிவபெருமானது பரத்துவத்தை விதந்து கூறுவது சைவம்.

ஈழ நாட்டிற் சிவாலயங்கள் பெருமளவிற் காணப்படுகின்றன. வைணவ ஆலயங்களின் எண்ணிக்கை குறைவானதாகவே காணப்படுகின்றன. தனியே நிறுவப்பட்ட வைணவ ஆலயங்களிலும் சைவ மக்களே பெரும்பாலும் சென்று வழிபடுவதைக் காண்கின்றோம். இவ் வழிபாட்டு முறையானது பாரம்பரியத்துக்குப் பொருத்தமாக அமைந்திருப்பது உற்று நோக்கற்பாலது. அது எவ்வாறென நோக்குவோம்.

சிவாகமங்கள் விஷ்ணுவின் வழிபாடு பற்றியும் எடுத்தியம்பியிருக்கின்றன. சிவாலயத்தில் விஷ்ணு எவ்வாறு இடம் பெறுவார் என்பது பற்றியும் முக்கியமாகச் சிவாகமங்களுள் ஒன்றான காரணாகமம் எடுத்துக் கூறுகின்றது. காரணாகமம் 60வது படலம் சிவபெருமானது பரிவார தெய்வமாக விட்டுணுவைப் பிரதிஷ்டை செய்வதற்கும் இடம் வகுத்ததோடமையாது விட்டுணு வைப் பிரதிட்டிக்கும் முறையினையும் 99 ஆவது படலம் விரிந்துரைக்கின்றது. கிராமங்களில் விட்டுணுவின் ஆலயம் தனியாக அமையும் முறை பற்றியும் அங்கு பரிவாரங்களை நிறுவும் முறையானது விட்டுணு ஆலயங்களில் எவ்வாறு பாஞ்சராத்திர கிரமமாக நிகழ வேண்டும் என்பது பற்றியும் எடுத்துரைக்கின்றது. இது பற்றியே சைவப் பெருமக்கள் பெரும்பான்மையினராக வாழும் பிரதேசங்களில் விட்டுணுவிற்காகத் தனி ஆலயங்கள் நிறுவப்பட்டிருப்பதையும் சைவப் பெருமக்கள் அங்கு சென்று வழிபாடு நடத்துவதையும காண்கின்றோம். இதில் வியப்பேதுமில்ல.

சிவலிங்கத் திருமேனியிலும் மூன்று அம்சங்கள் விளங்குவதைச் சைவத் திருக்கோவிற் கிரியை நூல்கள் கூறும். ஒன்று பிரமபாகம். மற்றது விஷ்ணு பாகம். மூன்றாவது உருத்திர பாகம் எனப்படும். விஷ்ணு பாகம் இத்திருமேனியின் நடுவதான அம்சம் சிவலிங்க திருவுருத்தின் இம்மூவகைப் பாகுபாடுகள் சகல நிலையில் உள்ள திருமேனிகளுக்கும் வழங்கக் காணலாம்

உமைக்கும் திருமாலுக்கும் வேற்றுமை காணாத அப்பர் சுவாமிகள் திருத்தாண்டக மொன்றில் சிவபெருமானைத் "திருமாலோர் பாகத்தான்" என்றும், "அரியலால் தேவியில்லை, "ஐயன் ஐயாறனார்க்கே" என்றும் கூறியவை நோக்கற் பாலன. திருமாலையும் தனது சக்திக்குள் ஒரு சத்தியாகக் கொண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பாகத்தில் உடையவன் என்பது இதனால் தெளிவாககின்றது. சிவபெருமானது சக்தியொன்றே செயலாற்றவதற்காக நான்காகப் பிரிந்து நிற்கும். அங்ஙனம் நிற்குமாறாவது இன்பத்தில் பவானியும் ஆடவிடத்துத் திருமாலும் வெகுளியில் காளியும், போரில் துர்க்கையும் என்பது சிவாகமங்களின் துணிவு.

*ஏகைவ சக்தி: பின்னா சதுர்த்தா -*
*விநியோக காலே*
*போகே பவாணி புருஷேஷு விஷ்ணு கோபேது*
*காலி - சமரேச துர்க்கா*

சிவ ஆகமங்களுள் விதித்த மூர்த்தி பேதங்களில் ஹரேரர்த்த மூர்த்தியும், ஏகபாத்ரி மூர்த்தியும், உற்று நோக்கற்பாலன. ஒரு காலில் ஊன்றி நிற்கும் உருவத்தின் நடுவிலிருந்து கிளைத்தெழும் இரு தோற்றங்களில் ஒன்று பிரமனாகியும் மற்றது விஷ்ணுவாகவும் விளங்கும் உருவமே ஏகபாதத்திரி மூர்த்தித் திருவுருவமாகும். சிவபெருமானின் 64 வகை மூர்த்தி பேதங்களில் இதுவுமொன்று. ஹரேரர்த்த மூர்த்திக்கு உரிய மறுபெயர் ஹரிஹர மூர்த்தி இது சங்கர நாராயண மூர்த்தி எனவும் கூறப்படுகின்றது. இதில் அர்த்த நாரீசுவர வடிவத்தில் அமைந்திருப்பது போன்று ஒரு பாதி சிவபெருமானின் அம்சமாக விளங்கும். மறுபாதி திருமாலின் தோற்றத்தைக் கொண்டமையும்.

சைவத்தின் உன்னத நிலையைக் காட்டும் சிவபெருமானின் திருவுருவங்களில் விஷ்ணுவிற்குச் சக்கரம் வழங்கி அநுக்கிரகம் செய்யும் தோற்றம் வாய்ந்த விஷ்ணுவநுக்கிரக மூர்த்தியும் நரசிம்மத்தை யடக்கும் கோலம் காட்டி நிற்கும் சரப மூர்த்தியும் குறிப்பிடத்தக்கவை.

விட்டுணுவைத் தலைசிறந்த பக்தனாகச் சித்திரிக்கும் புராண வரலாறுகளும் இவ்வரலாறுகட்கு வடிவம் தரும் சிற்பங்களும் சிவவழிபாட்டில் விஷ்ணு ஈடுபட்டு நிற்கும் நிலையினை வெளிப்படுத்துவன. சிவபிரானை வழிபடும் விஷ்ணு ஆயிரம் தாமரை மலர்களால் அர்ச்சித்து வழிபட்டுக் கொண்டிருந்த பொழுது ஒரு மலர் குறையக் கண்டதும், தம் கண்ணைப் பெயர்த்து மலராக அர்ச்சித்த வரலாற்றைச் சித்தரிப்பன, இவ் வரலாறுகளும் சிற்பங்களும்

பக்தியின் உன்னத நிலையினை சித்திரிக்கும் பெற்றியினை வேறொரு தெய்வம் வேண்டாது தம் தெய்வத்தையே தனிப் பெருந் தெய்வமாகக் கருதும் முறையை விளக்குவதைச் சைவ மரபிலும் தனித் தனியே காணலாம்.

சைவநெறி தழைத்தோங்கி வளர்ந்து வரும் ஈழத்திலும், சைவர்களே பெரும்பாலாக வசிக்கும் இடங்களிலும் சிவாகமம் கூறும் மரபை அடிப்படையாக் கொண்டு போலும், தனி வைணவத் தலங்களும் பாஞ்சராத்திர ஆகம முறைகளைத் தழுவி நிறுவப்படலாயின. அதே முறைக்கமைய வழிபாடுகளையும் நடத்தி வரலாயின.

*(பேராசிரியர்*
*கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள்*
*அவர்களின் பதிவேட்டிலிருந்து)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுகளாக



ஸ்ரீ கிருஷ்ணானந்த சர்மா
விரிவுரையாளர் -சமஸ்கிருதத் துறை
பல்கலைக்கழகம்-யாழ்பாணம்

அகில இலங்கை இந்துமத பிடாதிபதியாக விளங்கிச் சிவபதமடைந்த நாயன்மார்கட்டு சிவஸ்ரீ ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களுடைய 80 வது ஜயந்தி தினத்தை ஒட்டி அவரது அன்புக்குரிய புத்திரன் சிவஸ்ரீ ஜெகதீஸ்வரக் குருக்கள் அவர்கள் தந்தையார் பின்பற்றி வந்த ஆத்மார்த்த சிவபூஜை நெறியிலுள்ள பூசுசுத்தி அந்தர்யாகம் ஆகிய கிரியைகளின் பகுதிகளை இறுவட்டில் பதிப்பித்து வெளியிட உள்ளமை பெரு மகிழ்வைத் தருகின்றது.

பீடாதிபதி அவர்கள் நாம் வாழ்ந்த காலத்தில் அர்ந்த்தணச் சமூக மேம்பாட்டிற் குறிப்பாக சிறார்களின் சமஸ்கிருதக் கல்வி வளர்ச்சி, கிரியை நெறி, விளக்கம், மந்திரங்களை உச்சரிப்போடு பொருள் அறிந்து வாசித்தல் என்பவற்றில் மிகவும் அக்கறையாகவும் கண்டிப்புடனும் வழி நடத்தி வந்தவர். அமரத்துவமடைந்த நியாயசிரோன்மணி பிரம்மஸ்ரீ நி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் அவர்களின் அன்புக்குப் பாத்திரமாக விளங்கி அவருடன் கிரியை விளக்கங்கள் பற்றி அளவளாவி அவ்வப்போது நூல்களையும் எழுதி வெளியிட்டவர்

தந்தையின் வழி மைந்தனும் பூதசுத்தி அந்தர் யாகம், ஆகியவற்றை இலகுவில் மாணவர்கள் வாசிக்கவும், மனனம் செய்து கொள்ளவும். ஏதுவாகச் சொற்களைப் பிரித்து நிறுத்த வேண்டிய இடங்களில் நிறுத்தி உச்சரிப்பு என்பவற்றையும் உரியவாறு அழுத்தத்துடன் வாசித்து நவீன தொழில் நுட்ப உலகில் இணைந்து இறுவட்டு (CD) மூலம் பதிப்பித்து வெளியிடுவது காலத்தின் தேவையை உணர்ந்து செய்யும் ஓர் கைங்கரியமாகும்.

இதனைப் பயன்படுத்தி மாணவர்கள் வாசிப்புத்திறனை மேம்படுத்த முடியும். இத்தகைய முயற்சிகளிற் தொடர்ந்தும் சிவஸ்ரீ - குருக்கள் அவர்கள் ஈடுபட்டுத் தாம் பெற்ற அனுபவங்களையும் அறிவையும வழங்கி எதிர்காலத்தில் ஆகமப் பிறழ்வு அற்ற செயல்கள் இடம் பெறத் தந்தையின் வழியில் ஆக்க பூர்வமாகச் செயற்படவும், எல்லாச் செயல்களும் சிறப்பாக அமையவும் வாழ்த்தி அம்பிகையைப் பிரார்த்திக்கின்றேன்.

சுபம்

ஸ்ரீ கிருஷ்ணானந்த சர்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப.சிவானந்த சர்மா B.A(Hons)
(கோப்பாய் சிவம்)
முதல்வர். சமஸ்கிருத கலைக் கல்லூரி.
நிர்வாக இயக்குநர். மில்லேனியம் கணனிப் பயிற்சி நிலையம்.
வித்யா பவனம் - நூலக சேவை.
உரிமையாளர். ஸ்ரீ வித்யா கணனி அச்சகம்.
ஆசிரியர் "விவித வித்யா"
தலைவர். சர்வானந்தமய பீடம்
கந்தசாமி கோவில் வீதி,
இணுவில், சுன்னாகம், இலங்கை

P.Sivananda Sarma B.A(Hons)
(Kopay - Sivam)
HEAD - THE COLLEGE OF SANSKRIT & ARTS
MANAGING DIRECTOR - MILLENNIUM COMPUTER INSTITUTE
VIDHYA BHAVANAM - LIBRARY SERVICES.
PROPRIETOR - SRIVIDYA COMPUTER PRESS.
EDITOR - "VIVITHA VITHYA"
PRESIDENT - SARVANDAMAYA PEEDAM.
KANDASAMY KOVIL VEETHY
INUVIL CHUNAKAM, SRI LANKA



உ

முதலாவது இந்து மத குருபீடாதிபதியாக, அந்தணப் பெருமக்கள் யாவருக்கும் வழிகாட்டியாக இருந்த மேன்மைதாங்கிய சிவஸ்ரீ ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்கள் சிவபதமடைந்து விட்ட பிறகும் அவரது எச்சங்கள் நம்மிடையே அவரை என்றும் வாழ வைக்கின்றன.

'தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தாற் காணப்படும்'

என்ற வள்ளுவர் வாக்கை மனதிற் கொண்டு இங்கு எச்சங்கள் என்று கூறும்போது உலகெங்கும் பரந்து பெருமையுடன் புகழ்பெற்று விளங்கும் அவரது புத்திரர்களையும் சீடர்களையும் மட்டுமல்லாமல் அவரது படைப்புக்களையும் கூறலாம்.

ஆகமம் வைதிகம் இரு துறைகளிலும் அவரது பங்களிப்பு அளப்பரியது. பூர்வப்பிரயோகம் இரு பாகங்கள் தமிழ் விளக்கங்களுடன் அவரால் வெளியிடப்பட்டபோது அடுத்த பாகங்களை எதிர்பார்த்துக் காத்திருந்தோர் அநேகர். துரதிஷ்டவசமாக அவை வெளிவராமல் போயின. 'அனுக்கிரகக்கிரம பூதசுத்தி' அவரது கையெழுத்திலேயே வெளியிடப்பட்ட பத்ததி இன்றளவும் கும்பாபிஷேகங்களில் பலராலும் பயன்படுத்தப்படுகின்றது.

இப்போது அவர் நினைவாக ''ஆத்ம பஞ்சகம்'' என்ற இறுவெட்டு (C.D) வடிவில் வெளிவருகிறது. இது மிகப் புதுமையான முயற்சி. மிக அவசியமானதும் கூட. வரவேற்றுப் பாராட்டத்தக்க இந்தச் செயலில் ஈடுபடும் அவரது புதல்வர்களைப் பாராட்டி மகிழ்கிறோம். இந்த ஒலிநாடா சிவாச்சாரிய மாணவர்களுக்கு ஓர் அரிய வரப்பிரசாதமாகும். யாவரும் இதனை நன்கு பயன்படுத்தி நன்மையடைய வேண்டுமென்று வேண்டி ஒலிநாடா வெளியீடும் மலர் வெளியீடும் சிறந்து விளங்க வாழ்த்துரைத்து அமைகின்றோம்.

அன்புடன்
சிவானந்த சர்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அருள்ஜோதி சிவஸ்ரீ சாம்பசிவ சிவாச்சாரியார் 80வது ஜயந்தித்தின விழா



ஈழநாடு, வடமாகாணம் சிவாச்சாரியார்களாற் பெருமைபெற்றது. எத்தனையோ சிவாச்சாரியார்கள் பெரியோர்களாக, எல்லோர் மனதிலும் என்றும் நினைவில் நிற்பவர்களாக, மறைந்தும் மறையாத அவதாரபுருஷர்களாக இருந்திருக்கிறார்கள். அவர்கள் வரிசையில் இன்று 80வது ஜயந்தி தின விழா நாயகராகிய இந்துமத குருபீடாதிபதி சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களும் குறிப்பிடத்தக்க ஒருவர்.

குரு என்ற சொல்லுக்கு அறியாமையை நீக்குபவர் என்று பொருள். குருக்கள் ஐயா அவர்கள் வேதம், ஆகமம், புராணம், சோதிடம், சிற்பசாஸ்திரம் முதலிய பல்வேறு துறைகளிலே பாண்டித்தியம் பெற்றவர். குரு என்ற முறையிலே, யார் என்ன சந்தேகங்களைக் கேட்டாலும் அவற்றை ஐயம் திரிபற விளங்க வைக்கும் பெருந்தகையாக விளங்கியவர். தனக்கென்றொரு பாணியைக் கொண்டு கிரியைகளைச் சிறப்பாகவும் பக்தி சிரத்தையுடனும் செய்கின்ற ஆற்றல் மிக்கவர். அத்தோடு அந்தணர்களுக்குரிய வைதீகக் கர்மாக்களைத் தாமும் உணர்ந்து மற்றோரும் உணரும்படி மேற்கொண்டவர். அத்துடன் இவை சம்பந்தமான புத்தகங்களையும் வெளியிட்டு அனைவரும் பயனடையச் செய்தவர். இத்தகைய பெருமைக்குரிய குருக்கள் அவர்களின் 80வது ஜயந்தி மலர் ஒன்றை வெளியிடுவது பெருமைப்படத்தக்க விஷயமாகும். அந்த வகையில் இப்பணிகள் அவர்களது பிள்ளைகளினூடாகச் சிறப்புறத் தொடரவேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

வணக்கம்.

இங்ஙனம்
கிரியாபூஷணம்
மட்டுவில் கி. சோமசுந்தரக் குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# இந்து சமயப் பேரவை
# INTHU SAMAYA PERAVAI

(THE HINDU CONGRESS)

யாழ்ப்பாணம் - JAFFNA..

தலைமை அலுவலகம்: இல. 375, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். Head Office: No. 375, Temple Road, Nallur, Jaffna.
தற்காலிக முகவரி: கைதடி, சைவச்சிறுவர் இல்லம், ஏழாலை மேற்கு, ஏழாலை.
Temporary Address, Kaithady Saiva Children's Home, Erlalai West, Erlalai.

## இந்துசமயப் பேரவை
## கௌரவ செயலாளர் வழங்கிய
## வாழ்த்துரை

அமரத்துவம் அடைந்த முன்னாள் இந்துமதக் குருபீடாதிபதி சிவாகமஞானி சிவஸ்ரீ ஸ்கந்தசாம்பசிவ சிவாச்சாரியாரின் 80வது ஜெயந்தி தினத்தை ஒட்டி வெளியிடும் மலருக்கு வாழ்த்துரை வழங்குவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

எமது மதிப்பான சிவாச்சாரியார் சிவகதிப்பேறெய்தும்வரை சிவநெறி வழுவாது வாழ்ந்த சிறப்புக்குரியவர். அந்தணர்க்கு அருங்கலமாகிய அருமறை, ஆறங்கம் ஆகியவற்றைப் பூண்டொழுகியவர். ஆகம வைதிகக் கிரியைகளில் ஏற்படும் சந்தேகங்களுக்குத் தெளிந்த விளக்கத்தைச் சொல்லக்கூடிய வல்லமை பொருந்தியவராகத் திகழ்ந்தவர். சிவபூஜா துரந்தரர். மரணபரியந்தம் வரை சிவபூஜா காரியத்தைப் பேணிவந்த பெருமைக்குரியவர்.

"வேத அத்தியயனம்" செய்தல், வேதியர்க்கு அழகென விதிக்கப்பட்டுள்ளது. சிவாச்சாரியார்கள் ஆன்மார்த்த பூஜையில் சிவபூஜா காரியத்தைச் செவ்வனே நிறைவேற்றுவதோடு நித்தியாக்கினி காரியம் செய்து அந்திசந்திகளில் ஆகுதி பண்ணி தமது பூஜாகாரியங்களை நிறைவேற்றவேண்டியது அவசியமானதாகும். இவ்விதம் ஒழுகுவோர் மிகச்சிலரே. அந்நெறி நின்றவர்களில் அமரத்துவம் அடைந்த சிவாச்சாரியார் முதன்மையானவர். சிவாச்சாரியலட்சணம் அனைத்தையும் இவர் பெற்றுத் திகழ்ந்தார். எந்தநேரமும் சிவக்கோலத்தோடேயே காணப்படுவார். ஆக்ஞாசக்கரத்தில் மூன்று பொட்டுக்கள் தரித்தபடியே காணப்படுவார். சிவபூஜை செய்து சந்தனப்பொட்டினையும் அம்பிகையைப் பூஜித்து குங்குமத்தினையும் நித்தியாக்கினி காரியம் செய்து யாகரட்சையையும் தரித்துக் காணப்படுவதால் இவருடைய நெற்றியில் மூன்று பொட்டுக்கள் துலங்கும். இதனால் இவரை "மூன்று பொட்டுச் சாம்பசிவஐயா" என்று சொல்வார்கள். அந்தவகையில் சாம்பசிவ சிவாச்சாரியார் பற்றி அநேகம் எழுதலாம், பேசலாம். அன்புக்குரிய சிவாச்சாரியார் நடத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல கிரியைகளைப் பார்த்து மகிழ்ந்த பெருமை எனக்குண்டு. பலகிரியைகளில் சர்வபோதகராகச் சர்வசாதகராக இருந்து கிரியைகளைச் சிறப்புற நிறைவேற்றியமையைக் கண்டின்புற்றிருக்கின்றேன். கிரியை செய்யவருகின்ற சிவாச்சாரியார்கள் மிகுந்த அவதானமாக இவர் முன் நடந்துகொள்வதை யான் அவதானித்துள்ளேன்.

ஆகுதி செய்கிறபோதும் தர்ப்பணங்களின் போதும் பூஜைகளின் போதும் உரிய முத்திரைகளைச் சரியாகச் செய்கிறார்களா என்று பத்ததிகளை வாசிக்கின்ற போது அவதானிப்பார். அப்படிச்செய்யாது போனால் சாம்பசிவ ஐயா சிங்கமாக மாறிவிடுவார். அட்சர சுத்தியற்று சுலோகங்கள் சொல்வதைக் கேட்டுப் பொறுத்துக் கொள்ளமாட்டார். இப்படி மறைந்த சிவாச்சாரியாரிடம் பல சிறப்பம்சங்கள் காணக்கூடியதாகவிருந்தது. இவர் பல வடமொழிப் பத்ததிகளையும் வெளியிட்டுள்ளார்.

நியாய சிரோன்மணி கி. சுப்பிரமணிய சாஸ்திரிகள் சித்தாந்த ஞானபானு சிவஸ்ரீ சோ. சுப்பிரமணியக் குருக்கள், பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் போன்றோர் இவர் மீது மிகுந்த அன்பும், மதிப்பும் வைத்திருந்ததை யான் அறிவேன்.

இன்று எந்தக் கரைக்கு இழுத்தாலும் அந்தக் கரைக்கு இழுபடுமளவுக்கு எமது சைவ உலகம் மாறுபடத் தொடங்கிவிட்டது. ஆனால் சிவாச்சாரியார் அவர்கள் நிலையில் திரியாத பெருமைபெற்றவர். அன்புள்ளம் கொண்டவர். சைவசித்தாந்தம், தேவார திருவாசகங்கள் போன்றவற்றில் அபரிமிதமான அறிவாற்றல் படைத்தவர்.

யான் சம்பந்தப்பட்ட பல விழாக்களில் ஆசியுரை, அருளுரை வழங்கிச் சிறப்பித்தவர். எமக்கு என்ன தேவை என்பதை அறிந்து நாம் எதையும் கேட்காத போதே தானாகவே உதவும் உயர்ந்த தயாளகுணத்தோடு திகழ்ந்தவர்.

இன்று அமரத்துவம் அடைந்த சிவாச்சாரியாருக்கு கொழும்பு மாநகரில் ஜெயந்தி விழா நடைபெறுவது எமக்குப் பெருமகிழ்ச்சியை ஏற்படுத்துகின்றது. இந்நிகழ்ச்சி யான் நின்று நடத்தவேண்டியதொன்று என்ற கடமையுணர்வு எந்நெஞ்சில் உதிக்கின்றது.

இவரது அன்புப்பிள்ளைகள் எல்லோரும் இன்று சிவப்பணியில் சிறந்து விளங்கி நிற்பதைக்கண்டு மகிழ்கின்றோம்.

இவரது அன்பு மகன் வேதசிவாகம வித்தியாதிலகம் சாம். ஜெகதீஸ்வரக் குருக்கள் இவ் ஜெயந்திவிழாவை தனது சகோதரர்களுடனிணைந்து சிறப்பாகக் கொண்டாட அரிய ஏற்பாடுகளைச் செய்துவருவது எமக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இவ்வைபவம் சகல மங்கலப் பொலிவுகளுடனும் இனிது நிறைவேற எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாம சுந்தரி சமேத தில்லைநடராஜப் பெருமானைப் பிரார்த்தித்து மனமொழி மெய்களால் வாழ்த்தி குருபீடாதிபதி அவர்களின் பாதகமலங்களை வழுத்தி ஆசி பெறுவோமாக.

சுபம்

சி. சந்திரிவன்,
கௌரவ செயலாளர்,
இந்து சமயப் பேரவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ வித்யா குருகுல கலாசாலை

# Sri Vidya GuruKula Kalasali

## மஹா ஸ்ரீ வித்யா சர்வதேச இந்து மத பீடம்

## MAHA SRI VIDIYA INTERNATIONAL HINDU RELIGIOUS PEEDAM

**(Approved by Department of Hindu Religious and Cultural Affairs)**

**Office : 86/26A, St. Benedict Mawatha,**
**Colombo - 13. Sri Lanka.**
**T.P. 454561**

## மஹா ஸ்ரீ வித்யா சர்வதேச இந்துமத பீட செயலாளரின் நெஞ்சங்களிலிருந்து.....



இலங்கை வாழ் பிராமண சமுதாயத்திற்கு தலைமைத்துவ உணர்வையும், சமூகக் கட்டுப்பாட்டையும் ஏற்படுத்திய பெருமை நல்லூர் நாயன்மார்கட்டு வைத்தியர் பிரம்மஸ்ரீ ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களையே சாரும். பிராமண சமுதாயத்தின் எந்தச் சந்ததியினரதும் வணக்கத்துக்குரியவராக வாழ்ந்து காட்டியவர்.

யாழ்ப்பாணத்தின் அந்தண சமூகத்திற்கிடையே நிகழுகின்ற வைதீக, பூர்வ கிரியைகளை சிறப்புற நிகழ்த்தியவர். குருத்துவ பாரம்பரியத்தினை உரிய அடித்தளங்களுடன் உருவாக்க எண்ணம் கொண்ட இவர் ஸ்ரீதேவி குருகுலத்தை ஆரம்பித்து ஸ்வர அட்சர சுத்தங்களுடன் வேத மந்திரங்களை அத்யயனம் செய்தவர். மந்திரம், கிரியை, பாவனை என்பவற்றை தன்னகத்தே கொண்ட கிரியை எனும், கலையை நிகழ்த்துவதில் ஈடிணையற்று விளங்கியவர். தமது கற்பித்தற் பணியாலும், ஆராய்ச்சித் திறனாலும் தனது எண் புதல்வர்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராமண சமுதாயத்தின் அதியுயர் அந்தஸ்து பெறும் வண்ணம் உருவாக்கியவர். இந்து சமயத்திற்கும், சமூகத்திற்கும், அந்தண சிவாச்சாரிய சமூகத்திற்கும் அரும் பெரும் சாதனைகளைச் செய்து காட்டியவர். குறிப்பாக பிராமண சமுதாயத்திற்கு தனது ஆன்மீகப் பணிமூலம் நிறைகுடமாக, கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தவர். நல்லூர் ராஜராஜேஸ்வரி அம்பாளின் பூரண அனுக்ரஹம் பெற்றவர். கும்பாபிஷேகங்கள், மஹோற்சவங்கள், சிவாச்சாரிய அபிஷேகங்கள் பலவற்றை நடாத்தி இறுதிக்காலம் வரை ஆலய அமைப்புகள், கிரியைகள், நெறிமுறைகள் பற்றி விளக்கந் தருபவராகச் சிறப்புடன் திகழ்ந்தவர். பல மஹா கும்பாபிஷேகங்களுக்கு சர்வபோதகாசாரியராகவும் திகழ்ந்தவர். நவராத்திரி காலங்களில் ராஜராஜேஸ்வரி அம்பாளுக்கு மனதை லயம் அடையச் செய்யும் இவரின் ஸ்ரீசக்ர பூஜை தனித்துவமானது. யாழ் நகரில் இயங்கிவந்த பிராமண சமாஜத்தில், எனது தந்தையாரும் கொழும்பு முகத்துவாரம் ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் ஆலயத்தில் பிரதம குருவாக விளங்கியவருமான யாழ். வண்ணார்பண்ணை பிரம்மஸ்ரீ சோ. இராமச்சந்திர குருக்களுடன் சேர்ந்து இருந்து சமுதாயப் பணிகள் பலவற்றை மேற்கொண்டவர் என்பதில் நானும் எமது உறவினர்களும் பெருமை அடைகிறோம். மேலும் எனக்கு விஜயதசமி தினத்தன்று சம்ஸ்கிருத மொழியைக் கற்பதற்கான வித்யாரம்பத்தினைச் செய்து வைத்தவர் அவரே. அதன் பலனாக அந்தணச் சிறுவர்களுக்கான ஸ்ரீ வித்யா குருகுல கலாசாலையை கொழும்பு முகத்துவாரம் ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் ஆலய வளாகத்தில் ஸ்தாபிப்பதற்கான வல்லமையைப் பெற்றேன். எனது ஆன்மீகப் பணி தொடர்வதற்கு அவரது புதல்வர்களே காரணம் என்பதையும், அது என் வாழ்வின் நன்றி மறவாக் கடனாகும் என்பதையும் இந்த ஜயந்தி விழா நாளில் கூறுவதில் மகிழ்ச்சியடைகின்றேன். இவ்விழாவைச் சிறப்புடன் ஏற்பாடுசெய்த ஸ்ரீ தேவி குருகுல அதிபரும், மஹா ஸ்ரீ வித்யா சர்வ தேச இந்து மத பீட சிரேஷ்ட குருவுமான சாம்பசிவ ஜெகதீஸ்வர குருக்கள் அவர்களின் குடும்பத்தின் சிறப்புப் பணியைப் பாராட்டி சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளைப் பிரார்த்தித்து வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிரம்மஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா J.P.
செயலாளர்
மஹா ஸ்ரீ வித்யா சர்வதேச இந்துமத பீடம்
கொழும்பு - அமைப்பாளர் - சர்வதேச இந்து குருமார் ஒன்றியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீ சந்திரமௌலீஸ்வராய நமஹ

# வேதோ (அ) கிலோ தர்ம மூலம்

சிவாகம கிரியா பூஷணம், - ஈசான சிவாச்சாரியார்
சிவஸ்ரீ பால ரவிசங்கர சிவாச்சாரியார் J.P.
ஸ்ரீ ஞான பைரவர் தேவஸ்தானம் பிரதம குரு
ஸ்ரீ ஐயப்ப சேவா பீடம் - கிராண்ட்பாஸ்
சனாதன வைதீக இந்து தர்ம வேத பாக்கியா பதிப்பகம்
24, டிவாஸ் லேன், கிராண்ட்பாஸ்,
கொழும்பு-14, இலங்கை.



அண்ட சராசரங்களில் பதினான்கு உலகங்களும் ஒரு ராஜ்யம். இந்த ராஜ்யத்திற்கு ஒரு சக்கரவர்த்தி அந்தச் சக்கரவர்த்திக்கு எல்லா ஜீவராசிகளும் பிரஜைகள். ராஜ்யமும் அனாதி, சக்கரவர்த்தியும் அனாதி, ராஜ்யமும் சக்கரவர்த்தியும் பிரஜைகளும் இருந்தால் அதற்கு ஒரு சட்டம் வேண்டும் இவை எல்லாம் அனாதியானால் சட்டமும் அனாதியாகத் தானே இருக்க வேண்டும். அந்த அனாதிச் சட்டமே வேதம். இவற்றில் ராஜ்யமான பிரபஞ்சத்தை 'அனாதி' என்றாலும், அவ்வப்போது அதற்கு உற்பத்தி உண்டு, அழிவும் உண்டு. சக்கரவர்த்தியான பரமாத்மாவும், சட்டமான வேதமும் ஸர்வ சாஸ்வதம்!

அந்தச் சக்கரவர்த்தி அதிகார புருஷர்களைச் ஸ்ருஸ்டி செய்கிறான். அந்த அதிகாரிகளுக்கு வேண்டிய யோக சக்தியைக் கொடுக்கிறான். யோகசாஸ்த்திரத்தில் தன் ச்ரோத்திரத்திற்கும், வெளி ஆகாசத்திற்கும் அபேதமான ஒரு சாம்பரம் (ஸம நிலை) உபதேசிக்கப்பட்டிருக்கிறது. அதை அனுஷ்டிக்கும் போது திவ்ய ச்ரோத்திரம் கிடைக்கிறது. அந்தத் திவ்ய ச்ரோத்திரத்தைக் கொண்டு, வெளி ஆகாசத்தில் ஸ்திரமாய்க் கிடக்கும் அனாதி சபீத அலைகளை ஈசனுடைய அருள் சகாயத்தால் அந்த அதிகார புருஷர்கள் அடைகிறார்கள். அவர்களே முதன் முதலில் வேதத்தை அறிந்தவர்களாகிறார்கள். அவர்களே மந்திரங்களுக்கான மஹரிஷிகள்.

'அஹம் ப்ரஹ்மாஸ்மி' - நானே பிரம்மம் தான் - என்று தேவர்களில் பலபேர் கண்டுகொண்டு அப்படியே ஆனார்கள். ரிஷிகளிலேயும் அப்படி ஆனவர்கள் உண்டு. உதாரணமாக வாமதேவர், 'நானே மநுவாயிருந்தவன், நானே ஸூர்யனாயிருந்தவன்' என்று சொன்னதெல்லாம் இப்படிப்பட்ட ப்ரம்மாநுபவத்திலேதான். ஆதிகாலத்திலிருந்த அந்த தேவர்களும், ரிஷிகளும் மட்டுந்தானென்றில்லை, இப்போதும் இந்தக் காலத்தில் நம்மிலிருக்கின்ற மநுஷ்யர்களில்கூட 'அஹம் ப்ரஹ்மாஸ்மி' என்று ஒருவன் அறிந்துகொள்ள முடியும். இப்படிப்பட்டவனும் அவர்களைப் போலவே ஸவர்மும் ஆகிறான். அவனுடைய மஹிமையைக் குறைக்கத் தேவர்களாலும் முடியாது' என்ற அர்த்தத்தில் மந்திரங்கள் ப்ருஹதாரண்யகோபநிஷதத்திலே வருகின்றன.

திரேதாயுகத்திலோ துவாபரயுகத்திலோ தான் இப்படியான மஹாவீர்ய சதுர்வேத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தணர்குல சிரேஷ்டர்கள் வாழ்ந்தார்கள் என்றால், இல்லை. நம்மோடு இந்த இருபதாம் நூற்றாண்டிலும் கூடப் பலர் இப்படியான அவதார புருஷர்களாக வாழ்ந்திருக்கிறார்கள்.

சிவபூமி என்றும், தெட்ஷிணகைலாயம் என்றும், குபேர பூமி என்றும் போற்றப்படும் எமது இலங்கைத் திருநாட்டின் வரலாற்றிலும் பல அவதார புருஷர்கள் வாழ்ந்திருப்பதற்குச் சான்றாக, இருபதாம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் இலங்கையில் ஒரு அந்தண சாம்ராஜ்யமே, நடந்தது, என்றால் அது மிகையாகாது. அந்த வேத குல சாம்ராஜ் யத்தில் பேராசிரியர், மகோபாத்யாய சிவஸ்ரீ கைலாசநாதக் குருக்கள், நல்லூர் பிரம்மஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்திரிகள் சுப்ரமணிய சாஸ்த்திரிகள், நல்லூர் நாயன்மார்கட்டு சாம்பசிவ குருக்கள் ஆகியோரே அந்த சாம் ராஜ்யத்தின் மும்மூர்த்திகளாக விளங்கினர்.

அந்த மும்மூர்த்திகளில் இன்று சிவார்ப் பணமாகக் கலந்துவிட்ட பெருந்தகை சிவாகமஞானி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களின் காலப்பகுதியில் நாம் வாழ்ந்தோம் என்பதே ஒவ்வொரு பிராமணனும் பெற்ற பெரும் பாக்கியமாகும். அவதார அந்தண புருஷர்களுக்கே உரிய குணாதிசயங்களோடும், வேத சிவாகம இதிகாச புராண சாஸ்த்திர ஈடுபாட்டோடும் வைதீக கர்மனுஷ்டானங்களிலும் ஆத்ம பூஜையிலும் மிகுந்த ஸ்ரத்தையோடும் சிவாச்சாரியார் அவர்கள் திகழ்ந்தார் என்பது உலகறியும்.

வேத மதம் ஒரு தேவதாமூர்த்தி என்று வைத்துக்கொண்டால் அதற்கு ரிக், யஜுஸ், ஸாமம், அதர்வம் என்னும் நாலு வேதங் களின் ஸம்ஹிதைகள், ப்ராம்மணங்கள், ஆரண்யகங்கள், இவற்றில் முடிவாய் வரும் உபநிஷத்துக்கள் ஆகியவைதான் முக்கியமான உடம்பு மாதிரி, அதற்குள் எங்கும் பரவியிருக்கிற உயிர் மாதிரி, ரத்தம் மாதிரி. ஆக நான்கு வேதமே முக்கியமான ரூபம். இந்த ரூபத்துக்கு ஆறு அங்கங்கள். அவை சிக்ஷை, வ்யாகரணம், சந்தஸ், நிருத்தம், ஜ்யோதிஷம், கல்பம் என்பன இந்த ஆறு அங்கங்களோடு கூடின நான் மறையை "ஸாங்கஉபாங்கத்தில்" எனலாம். 'ஸாங்கத்திற்கு' உப அங்கமாகத் துணை உறுப்பாக இன்னும் நான்கு இருக்கின்றன. அவற்றுக்கு மீமாம்ஸை, ந்யாயம், புராணம், தர்ம சாஸ்த்ரம் என்று பெயர். நான்கு வேதம் + ஆறு அங்கம் + நான்கு உபாங்கங்களைச் சேர்த்து வேதமத தேவதையின் ஸாங் கோபாங்கமான பூர்ண வடிவமாகக் கொண்டிருக்கிறோம். இப்படி மொத்தம் வருகிற பதினான்கையும் 'சதுர்தச வித்யா' (பதினான்கு வித்யை) என்று சொல்வது வழக்கம்.

உப அங்கமாக இருப்பதோடு உப வேதமாகவே மேலும் நான்கைக் கூட்டி பதினெட்டு வித்தைகள், அஷ்டா தசவித்யா ஸ்தானங்கள் என்று சொல்வார்கள். இந்த நான்கு உபவேதங்கள் ஆயுர்வேதம், தநுர்வேதம், காந்தர்வ வேதம் அர்த்த சாஸ்திரம் (அர்த்தவேதம்) என்பனவாகும்.

உபவேதத்தில், ஆயுர்வேதத்தில் மிகுந்த பாண்டித்யம் உள்ளவர், சிவாகமஞானி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்கள். ஆயுர்வேதம் என்பது ஆயுள்விருத்திக்கு வழி சொல்லும் சாஸ்த்திரம் என்பது பொருள். ஆயுர்வேதம் தீர்க்காயுஷோடும், அப்படி இருக்கிறவரையில் சரீரசௌபாக்கியத்தோடும் இருக்கும் வழிகளைச் சொல்லும் வைத்திய சாஸ்த்திரமாகும். கர்மாநுஷ்டமான யோகம் சித்திக்க வேண்டுமானால், சரீர சக்தி அவசியமாகும். பிறக்கும் ஜன்மத்திலேயே தேகத்தைப் பக்குவமாக வைத்துக்கொண்டு சித்தசுத்தியைப் பெற்று ஜீவன் முக்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைவதற்கே ஆயுர்வேதம் வழிகாட்டு கின்றது. உபாங்கமாக ஆயுர்வேதம் விளங் குவதால் அது வேத சாஸ்த்திரங்களுக்கு இசைவாகவும் ஆசாரபங்கம் இல்லாமலும் அனுக்கிரகிக்கப்பட்டுள்ளது. இப்படியான வைத்திய சாஸ்த்திரத்தில் உள்ள பாண் டித்யத்தால் பல ஆஸ்திக அன்பர்களைக் குணப்படுத்தி நாயன்மார்கட்டு என்றாலே, டாக்டர் ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சார்யார் என்னும் அளவிற்கு அவர் புகழ் யாழ். மண்ணில் வியாபித்திருந்தது.

இதேபோன்று தேவ பாஷையாகிய சமஸ்கிருத மொழியிலும், மிகுந்த பாண்டித்யம் உடையவர். வடமொழியிலுள்ள பல வேதாகமங்களுக்கும், பத்ததிகளுக்கும் பாஷ்யம் எழுதியதோடு மட்டுமல்லாமல் மிகுந்த நுணுக்கமாகப் பல பத்ததிகளையும் விரிவாக வியாக்கியானம் செய்து வழங்கியவர். இதில் வேதமாகட்டும் ஆகமமாகட்டும் பதங்களைத் தெளிவாகப் பிரித்து சப்த ரூபம் மாறாமல் அப்படியே உச்சரிக்கப்பட வேண்டும் என சதாகாலமும் வலியுறுத்தும் வேதவித்தாகவே விளங்கினார். எனவே தான் தனது மாணாக்கரையும் அஷ்டவிக்ருதி (எட்டு விதமான "ஜடா, மாலா, சிகா, ரேகா, த்வஜோ, தண்டோ, ரதோ, கன:!)" எனும் பாடங்களில் தேர்ச்சி உடைய வர்களாக உருவாக்கினார். வேதாத்யயனம் ஒரு மந்திர யோகம். ஒவ்வொரு நாடி அசைவதாலும் சித்தத்திற்கு ஒவ்வொரு விதமான விகாரங்கள் ஏற்படுகின்றன. ஓர் எழுத்தை நாம் உச்சரிக்கும் போது நமது நாக்கு, உதடு மேல்வாய், கீழ்வாய், கண்டம் முதலியவற்றின் இடைவெளி வழியாக ப்ராணவாயு வெளிப்படுகிறது. அப்பொழுது தான் அக்ஷரத்வனி உண்டாகிறது. மந்திரங்களில் ஸித்திபெற்றுப் பூரண பலனைப் பெற வேண்டுமானால் அவற்றை எப்படி ஓதவேண்டும் என்று (சிக்ஷா சாஸ்த்ரத்தில்) சொல்லப்பட்டிருக்கிறது.

"கீத சீக்ர சிர: கம்பீ ததா லிகித பாடக:!
அனர்த்தக்ஞ: (ஹி) அல்பகண்டச்ச
ஷடைதே பாடகாதமா"

இப்படியெல்லாம் வேதத்தைத் தப்பாகப் பயில்பவர்கள் அதமர்கள் என்று இந்த ச்லோகத்தில் ஆறு தினுசான தப்புக்கள் சொல்லப்பட்டிருக்கிறது. 'கீதீ' என்றால் வேதத்தைப் பாட்டு (கீதம்) மாதிரி இஷ்டப்படி ராகம் போட்டுப் பாடுகிறவன். ஆனால் இப்படிப் பண்ணக்கூடாது வேதத்துக்கே உரிய ஸ்வரத்தில்தான் அதைச் சொல்ல வேண்டும். 'சீக்ரி' என்றால் வேகமாகச் சொல்லிச் சீக்கிரத்தில் முடிப்பவன். இதுவும் பிசகு. வேத அக்ஷரங்களை அவற்றின் காலப் பிரமாணப்படி சொன்னால்தான் பூரண பலன் உண்டாகும். 'சிர:கம்பீ' என்றால் தலையை ஆட்டிக்கொண்டு சொல்கிறவன். ஆடாமல் சமநிலையில் உட்கார்ந்து கொண்டு மந்திரங்களால் தானாக ஏற்படும் நாடிச் சலனங்களைத்தான் உண்டாக்கிக்கொள்ள வேண்டும். பாட்டுப் பாடுகிறவர் மாதிரி சிரக்கம்பம் பண்ணினால் நாடிச் சலனம் வித்தியாசப்படும். லிகித பாடகன் என்றால் எழுதி வைத்துக்கொண்டு படிப்பவன். இது தப்பு. வாயால் சொல்லி காதால்கேட்டே பாடம் பண்ண வேண்டும். 'அனர்த்தக்ஞ' என்றால் அர்த்தம் தெரியாதவன். அர்த்தம் தெரிந்துகொண்டுதான் மந்திரங்களைச் சொல்ல வேண்டும். வேத அப்யாசத்தில் சொன்ன ஆறு தப்புகளில் கடைசியில் வரும் 'அல்பகண்டன்' என்றால் மெல்லிய குரலில் வேதம் சொல்கிறவன் என்று அர்த்தம். இவனும் அதமன்தான். full throated என்று சொல்லுகிற மாதிரி நன்றாக கம்பீரமாக, உரக்க வாய்விட்டு வேத சப்தம் எவ்வளவு தூரம் வியாபிக்கும்படியாகச் சொல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியுமோ அப்படிச் சொல்ல வேண்டும்.

மேற்சொன்ன ஆறு விதிகளையும் பின்பற்றி வேதாகம மந்திரங்கள் முழுப் பிரயோஜனத்தை அடையும் வண்ணம் இன்றும் ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சார்யார் அவர்களின் புதல்வர்கள் மந்திரப் பிரயோகம் செய்வதை நாம் காணலாம். அதோடு 'மீமாம்சை'யிலும் தர்க்க சாஸ்த்திரத்திலும் வாதச் சண்டையிலும் அலாதியான ப்ரியம் உடையவராகவே சிவாகமஞானி அவர்கள் அருளாட்சி நடத்தினார்கள். எனவேதான், இலங்கை வரலாற்றிலேயே முதன் முறையாக அந்தணர்களுக்கோர் தலைமைத்துவ வழிகாட்டல் வேண்டும் என்ற அனைத்து அந்தணர்களினதும் வேண்டுகோளிற்கிணங்க இலங்கை இந்துமத குருபீடாதிபதியாக ஸர்வக்ஞ பீடாரோகணம் பெற்றார்கள்.

இன்று உலகெங்கிலும் சிவாகமஞானி அவர்களின் சிஷ்ய பரம்பரையும், புதல்வர் களும் தொடர்ந்தும் அவரின் சிந்தனை யினைச் செயற்படுத்திக் கொண்டிருப்பதைக் காணலாம். எண்ணிலடங்கா கும்பாபிஷேகங் களையும் மஹோற்சவங்களையும், முன்நின்று நடாத்தி வேதாகம பரிமாணத்தை அனைவ ருக்கும் விளக்கியவர் சிவாகமஞானி அவர்களே ஆவார்கள். அதர்வண வேதத்தின் ஒரு பகுதியாகிய மாந்திரீகத்திலும் மிகுந்த ஞானமும், மந்திரசக்தி யோகமும் கைவரப் பெற்று பல அசாத்தியமான விடயங்களைச் செய்தும் காட்டியவர்.

சிவாகமஞானி அவர்களின் வித்வத் சிரேஷ்டத்தை அறிந்தவர்கள் அவரிடம் நேரில் சென்று உரையாடவே அஞ்சிய காலமும் உண்டு. எனினும் பிற்காலத்தில் எதுவுமே அறியாத குழந்தை போல் ஞான யோகத்திலேயே முழுமையாக மூழ்கி யிருந்தார்கள், என்பது அவரின் குடும்பத் தவர்களுக்கே தெளிவாகும். ஆனந்த கிரீயத்தில் ஆச்சார்யார் ஸ்தூல சரீரத்தை ஸூக்ஷ்ம சரீரத்தில் கரைத்து, ஸூக்ஷ்ம சரீரத்தைக் காரண சரீரத்தில் கரைத்து அகண்ட சைதன்யமாகியிட்டார் என்று கூறியிருப்பது போல அருள்ஜோதியாக நமக்கு என்றென்றும் அருள் புரிவார்.

தெய்வாம்சம் பொருந்திய பெரியோர் களை நினைத்து அவர்களுடைய போற்று தற்குரிய குணாதிசயங்களையும், வேதாகம க்ரந்தங்களையும் போற்றிப் பாதுகாத்து வந்தனம் செய்வதே பொருத்தமாகும். எம்குல முதல்வரும், சிவாகம ஞானியும், வைத்திய கலாநிதியுமாகிய ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களின் 80வது ஜெயந்திதின ஞாபகார்த்த வெளியீடாக 'ஆத்ம பஞ்சகம்' எனும் சி.டி. ஒலி நாடா வினை அவரின் போற்றுதற்குரிய புதல்வர் "சாம்பசிவதாஸன் - சாஹித்ய சம்கிரகர்" சாம்பசிவ - ஜெகதீஷ்வர சிவாச்சார்யார் அவர்களால் இலங்கையிலேயே முதன் முறையாக வெளியிடப்படுவதையும் 80வது ஜெயந்தி தினத்தைப் பெருவிழாவாக நினைவுகூருவதையும், சிறப்பு மலர் வெளியிடுவதையும் அறிந்து மிகுந்த மகிழ்ச்சியடைகிறோம்.

எல்லாம் வல்ல வேதாந்த 'க்ருத்'தாக விளங்கும் சந்திரமௌலீஸ்வரப் பெருமானை நினைந்து ஆதிச சங்கர பகவத்பாதாள் அவர்களைப் போற்றி அனைத்து சற்கர் மாக்களும் சிறப்புற வாழ்த்தி வணங்கு கிறோம்.

வேதோ (அ) கிலோ தர்மமூலம்

இங்ஙனம்

சிவாகம கிரியா பூஷணம்
'ஈசான சிவாச்சார்யார்'
சிவஸ்ரீ பாலரவிசங்கர சிவாச்சார்யார் (J.P)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சரணாகதியே பேரின்பம்



உலகிலேயே உயர்ந்தது எதுவோ அதை நாம் எட்டிப்பிடிக்க முயன்று வெற்றி பெற்றால் நாமும் உயர்ச்சியடைவோம். இந்த உலக நியதியை உணர்ந்த நம் முன்னோர்கள் உலகிலேயே உயர்வானது எதுவென ஆராய்ந்தார்கள். மலைகள் தான் உயர்ந்தவை என்று மலைகளையும் அவற்றில் காணப்படும் மரங்களையும் தெய்வத்தன்மை படைத்தவை என எண்ணி வழிபட்டு வரலாயினர். வரை வரையான கோடுகளுடைய மூங்கில் மரங்கள் அடர்ந்து காணப்படும் மலைகளுக்கும் இக்காரணம் பற்றி வரை என்று பெயர் வந்தது. இலக்கண விதிப்பிரகாரம் தானி ஆகுபெயர் என்பர். 'வரைகளிற் சிறந்தது தணிகை மால்வரையே' என்று தணிகைப் புராணம் கூறும். 'வரையிடங்களிற் சிறந்தது தணிகைமால்வரையே' என் கந்தபுராணம் போற்றிப் புகழ்கின்றது. அப்படியாயின் இந்த மலைகள் தான் உலகில் உயர்ந்தனவா, என்று பார்க்கின் அல்ல! அல்ல. இம்மலைகள் யாவும் எம்பெருமானின் விஸ்வரூப தோற்றத்தின் போது அவரது உள்ளங்காலின் கீழேயுள்ள ரேகைக் கோடுகளாகத் திகழ்வதை சூரபத்மனும் ஏனையோரும் தரிசித்தார்கள். இதையே கச்சியப்பர் 'உன்னடி வரைகளா' என்கிறார்.

அப்படியானால் உயரியது எதுவோவெனில் இறைவனின் திருவடித் தாமரைகளேயாகும். வைஷ்ணவ பத்தியிலே ஆழ்ந்தவர்களை ஆழ்வார்கள் என்பார்கள். அவர்களிற் பெரியாழ்வார் வரலாற்றிலே - அந்நாட்டு மன்னனின் சந்தேகத்தை நீக்கும் படி பரந்தாமனே திருவுளங்கொண்டு பெரியாழ்வாருக்குக் கட்டளையிட்டார். அதன்படியே பெரியாழ்வார் சென்று உலகிலேயே உயர்ந்தது இறைவனின் திருவடிகளே என்றும் அவற்றைப் பணிந்தேத்துபவனுக்கு மேலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பம் சித்திக்கும் எனவும் மன்னனுக்கு உணர்த்தினார். 'நான்' என்ற ஆணவம் நீங்கி அன்பு ஓங்குகிறபோது இறைவனின் திருவடித்தாமரைகள் கண்ணுக்குப் புலப்படும். இறைவனைச் சரணாகதி அடைவதற்கு அன்பு மார்க்கமே சிறந்தது. இவ்வாறு நமது தலைபணிந்து இறைவன் தாள்களே சரணம் என்று இணையும்போது தானே அதுவாகி இரண்டு எனும் நிலைமாறி ஒன்றாகிவிடுகின்றோம். இதனையே சைவசித்தாந்தம் 'தாடலை' (தாள் + தலை = தாடலை) எனக் குறிப்பிடுகின்றது தாள், தலை என்கிற இரண்டும் இணைந்து எப்படி தாடலை என ஆகிறதோ அதுபோல் ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஒன்றிவிடுகிறது.

ஸ்ரீதக்ஷிணா மூர்த்தியாகவிருந்து பரமசிவன் ஞானபோதனை புரிந்தார். கையினால் அவர்காட்டிய முத்திரையும் அதனையே உணர்த்தியது. பெருவிரலாகிய இறைவனின் பக்கம் சேர்ந்த ஆன்மாவாகிய சுட்டுவிரல் (ஆள்காட்டி விரல்) ஆணவம், கன்மம், மாயையாகிய மூன்று விரல்களின் மீதுள்ள பற்று நீங்கியதும் பெருவிரலின் அடிப்பாகமாகிய இறைவனின் திருவடிகளை நோக்கி வளைந்து பணிகின்றது. பணிவினாலே அவர்கள் பரமபதமடைவர் என்பதனைச் சொல்லாமற் சொல்ல சனகர் முதலிய நான்கு முனிவர்களும் பார்த்தேயுணர்ந்தனர் என்பது புராணம். குருவின் உபதேச மந்திரத்தின் சின்னமாக ஒரு சித்திரம் போடுவார்கள். தாமரைப்பூ ஒன்றில் அன்னம் ஒன்று ஏறியிருக்கும் சித்திரம். அன்னத்திற்குப் பதிலாக வேறு எதனையும் வரையமாட்டார்கள். 'ஹம்ஸஹா' என்று வடமொழியில் அன்னத்திற்குப் பெயர். அதனை இரண்டாகப் பிரித்தால் 'அஹம் + ஸகா' என இருசொற்கள் வரும். அஹம் என்றால் நான் என்றும் ஸஹா என்றால் அவன் எனவும் பொருள்படும். இவ்விரண்டும் சேரும்போது 'நானே அவன்' என்னும் மனோநிலை உண்டாகும், என்பது யோகசாதனையின் ரகசியம். எனவே சரணாகதித் தத்துவத்தை விளக்க ஹம்ஸ எனும் அன்னத்தை வரைந்தனர். இதயத்தை விளக்கும் தாமரை மலரில் அன்னத்தை உட்கார வைத்துள்ளமை மிகவும் உயரிய தத்துவம். யோகிகள் மூச்சுக்காற்றை உள்ளிழுக்கும் போது ஹம் என்றும் வெளியிடும் போது ஸ என்றும் உச்சரித்து சுவாசித்து அப்பியாஸம் செய்வர். நாளடைவில் அதுவே ஹம்ஸ நாதமாகப் பரிணமித்து சுவாசத்துடன் கலந்து இதயத்தில் அமர்ந்து ஹம்சத்வனியாக நாதம் தோன்றும்போது தான் அதனைத் தெய்வீக ஒலியாக யோகிகள் கேட்டு லயப்படுவார்கள். எனவே நாம் இறைவன் தாள்களை எமது பக்குவ நிலைக்கேற்ற விதத்தில் பணிந்து போற்றி அருள் பெறுவது நமது கடனாகும்.

மேலும் இலங்கை இந்துமத குருபீடாதிபதியாக விளங்கிய மதிப்பிற்குரிய ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களின் 80வது ஜயந்தி விழாவிலே நாமும் பங்குபற்றக் கிடைத்தமை பெரும்பேறாகும் எனக்கூறி பீடாதிபதி அவர்களின் பாதாரவிந்தங்களைப் பணிந்தமைகிறேன்.

பிரம்மஸ்ரீ பொ. துளசீஸ்வர சர்மா
சுவிஸ்.

# மெய்ஞானத்தில் விஞ்ஞானம்

நித்தியானந்தக் குருக்கள் சுதானந்த சர்மா
முதலாம் ஆண்டு மாணவன் - HNDE(Elec)
மட்டக்குழி
கொழும்பு

ப்ரதிவ்யாதி பஞ்ச பூதங்களாகவும் அருவமாயும், உருவமாயும், அருவுருவமாயும் உள்ளும்புறத்தும் நின்று இந்த அண்ட சராசரங்களையும் பெருங் கருணைத் திறத்தி னாலே இயக்கி வருவதாய், ஏதோ ஒரு சக்தி மூலம் உள்ளதாக ஒரு சாரார் கூறிக் கொண்டிருக்கையில் மறு சாரார் இல்லை, விஞ்ஞானத்தினாலேயே உலகம் இயங் கின்றது. என்று சாதிக்கின்றனர். இவற்றை விளக்குவதை நோக்கமாய்க் கொண்டு இக்கட்டுரை வரையப்பட்டுள்ளது.

இந்தப் பிரபஞ்சம் யாராலே இயங்கு கின்றது என்கின்ற வினாவிற்கு, அவரவர் மதங்களின் தெய்வங்களை, கடவுள் உண்டு என்று கருதுவோர் முன்னிலைப்படுத்து கின்றனர். அவர்கள் தமக்குள்ளே மதச் சண்டை செய்து கொண்டாலும் கடவுள் இல்லை என்கிற கொள்கைக்கு இவர்கள் எதிரானவர்களே என்கிற அளவில் சந்தோ ஷப்படலாம். கடவுளைப் பற்றிப் பேசுவது மெய்ஞ்ஞானம். விஞ்ஞானம் பேசுபவர்கள் முதலில் ஒன்றைப் புரிந்துக் கொள்ள வேண்டும்.

இந்த உலகம் கண்ணுக்குப் புலப் படாத ஏதோ ஒரு சக்தியினாலேயே இயக் கப்படுகின்றது. விஞ்ஞானம் தோன்றி வளர்ச்சியுற்ற கால வரலாறுகள் வரை யறைக்குட்பட்டன. அப்படியாயின் விஞ்ஞா னம் தோன்ற முதல் உலகம் தோன்றக் காரணமாயிருந்த மூலம் எது? ஆதிமனிதன் தோன்றக் காரணமாயிருந்தது எது? பரிணாமக் கொள்கையிலே சாள்ஸ் டார்வின் மனிதன் ஆதி உயிரிலிருந்து எப்படி வளர்ச்சி யடைந்தான் என்று விளக்குகிறாரே என்று ஒரு வேளை இவர்கள் சாதிக்கலாம். ஆயினும் அந்த ஆதி உயிர் எப்படித் தோன்றியது? அதன் பிறப்பிற்கு கர்த்தா யார்? என்று சிந்திக்கவும் வேண்டும்? அப்பொழுதுதான் நமது எண்ணங்களுக்குச் சிக்காமல் இந்த விஞ்ஞானத்திற்குக் கட்டுப்படாத ஒரு சக்தி மூலம் உள்ளது என்பது புலப்படும். அதுவே கடவுள. இதன் பாற்பட்டதே மெய்ஞானம்

இதை விடுத்து அரைவேக்காட்டுத் தனமாய் விஞ்ஞானம் பேசுபவர்கள் ஒன்றைச் சிந்திப்பார்களாயின் அவர்கள் சிற்றறிவுக்குப் புலப்படும் ஒன்றைக் குறிப்பிட விரும்பு கின்றோம். அதாவது விஞ்ஞானத்தைத் தோற்றுவித்தவர்களாக அல்லது வளர்த்த வர்களாக உள்ள விஞ்ஞானிகளே பல சமயங்களில் தமக்கு எல்லாம் அப்பாற்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு சக்தி உண்டென இவர்கள் புரிந்து கொண்டுள்ளார்களா? இல்லை.

இந்த நூற்றாண்டின் தலைசிறந்த விஞ்ஞானியாக பேரறிஞராகக் கொள்ளப் படுபவர் அல்பேட் ஐன்ஸ்டீன் (Albert Einstein) அவர் ஒரு சமயம் பின்வருமாறு குறிப்பிட்டார்

*உலகமே என்னை மேதையாகக் கொண்டாடுகின்றது. ஆயினும் நான் இன்னும் சாதிக்க வேண்டியவை உள பரந்து விரிந்த கடற்கரை மணற்பரப்பிலே சிப்பிகளைச் சேர்த்து விளையாடுகின்ற ஒரு சிறுவனைப் போன்றவன் நான்*

எமக்கு மேலே எம்மையெல்லாம் ஆட்டுவிக்கின்ற சக்தியுள்ளது. என்கிறார். எனவே கடவுள் பொய் விஞ்ஞானமே மெய். என்று இவர்கள் பிதற்றுகின்றார்கள். இது அறிவீனம் அல்லவா?

இந்த நூற்றாண்டின் மாபெரும் விஞ்ஞானக் கண்டுபிடிப்பாகக் கூறப்படுவது அணுகுண்டு ஆகும். (Atomic bomb) ஆரம்ப காலத்திலே அணுவைப் பிளக்க முடியாது என்ற கருத்து நிலவியது. பொருட்கள் அணுக்களினாலேயே ஆக்கப்பட்டது. என்று 18ம் நூற்றாண்டுகளில் டால்டன் (Dalton) கண்டுபிடித்து அணு என்று பெயரிட்டார். அணு என்றால் மேலும் பிரிக்க முடியாத மிகச் சிறிய துணிக்கை என்று பொருள். ஆயினும் அணுவைப் பிளக்க முடியும் என்று விஞ்ஞானம் நிரூப்பதற்கு அநேக காலம் எடுத்தது.ஆனால் நமது மெய் ஞானமோ இற்றைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே அணுவைப் பற்றிக் கூறவைத்தது என்று சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள். ஆம் விநாயகர் அகவ லிலே தேன் வாசகமாக அணுவுக்கணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய் என்று கூறி வைத்து விட்டார்கள். அதாவது அணுவிற்கு அணுவாய் என்பதன் பொருள் அணு என்கின்ற ஒரு வஸ்துவின் மிகச்சிறிய துணிக்கையாக அதாவது அணுவைப் பிளக்க முடிகின்றதாலேயே அதற்குள்ளும் ஒரு துணிக்கையுண்டு என்பதை எவ்வளவு திண்ணமாயச் சொல்லி விட்டார். பார்த்தீர்களா?

அது மட்டுமின்றி ஔவைப் பிராட்டி திருக்குறளைப் பற்றி என்ன சொன்னார் தெரியுமா? அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகுத்தீ குறுகத் தறித்த குறள் என்கின்றார். இங்கே என்ன சொல்லப்படுகின்றதென்றால் அணு என்கின்ற ஒன்றைப் பிளக்க முடியும் என்று நேரிடையாகவே சொல்லிவிட்டார். இதற்கு மேலும் என்ன விளக்கம் வேண்டியிருக்கின்றது?


ஆதலினாலேயே அன்பர்களே விஞ்ஞானம் என்பது மெய்ஞ்ஞானத்தின் ஒரு குழந்தையே. மெஞ்ஞானமென்பது பரந்து விரிந்த ஒரு விருக்ஷமாகவும் அதனுடைய விழுதுகளாக விஞ்ஞானம் உள்ளதேயன்றி வேறல்ல என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீராமஜெயம்



# தெகிவளை ஸ்ரீ ஆஞ்சநேய சுவாமி தேவஸ்தான முதல்வர் வழங்கிய பாராட்டுரை



சர்வவியாபியாகிய எல்லாம்வல்ல எம்பெருமானைப் பிரார்த்தித்து இலங்கை இந்துமத குருபீடாதிபதி பெருமதிப்பிற்குரிய அருள்ஜோதி சிவாகமஞானி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களின் ஜயந்தி மலருக்குப் பாராட்டுரை எழுதுவதைப் பெரும் பேறெனக் கொண்டு மகழ்வடைகிறேன். செயற்கரிய செய்தவர்களுக்குரிய பாராட்டுக்கள், சிறந்த முறையிலே அவர்களைக் கௌரவிப்பதாகும்.

ஈழத்தில் குருபாரம்பரியத்திலே ஒப்பாரும் மிக்காரும் இல்லாத தனித்தன்மையுடையவராகச் சிவாச்சாரியார் அவர்கள் விளங்கினார்கள். அவருடைய இடத்தை யாராலும் நிரப்ப முடியாது என்பதே யதார்த்தம். உலகெங்கணும் விரவியிருக்கின்ற சிவாச்சாரியாரின் சிஷ்ய பரம்பரையினர் சிவாச்சாரியார் அவர்களுடைய பெயரை எங்கும் ஒலிக்கச் செய்துகொண்டிருக்கிறார்கள்.

குரு என்றால் அறியாமையை நீக்குபவர் என்று பொருள், மனத்தின் கண்ணே உள்ள அறியாமை எனும் இருளை அகற்றி, ஞானம் என்கிற ஒளியைப் பரப்பும் ஞானதீபமாக குரு விளங்குகிறார். அந்த வகையிலே சகல சிவாச்சாரிய லக்ஷணங்களுடனும் விளங்கிய குருபீடாதிபதி அவர்கள் ஒரு குருவாக ஆற்றிய பணிகள் போற்றுதற்குரியன. என்றும் நினைவில் நிறுத்தப்பட வேண்டியன.

மேலும், சிவாச்சார்யார் அவர்களுடைய புதல்வரும் எமக்கு நன்கு அறிமுகமானவருமாகிய சாகித்ய சம்கிரகர் சாதக கலாமணி - சாம்பசிவ ஜெகதீஸ்வர குருக்கள் தனது தந்தையாரின் 80வது ஜெயந்தி விழாவன்று ஜெயந்தி விழா மலருடன் 'ஆத்ம பஞ்சகம்' எனும் C.D. ஒன்றும் வெளியிட இருப்பதையறிந்து மனமுவந்து அவரைப்பாராட்டி, குருவருள் எல்லோர்க்கும் கிடைக்கவேண்டுமென எல்லாம் வல்ல ராமபக்தன் ஸ்ரீ ஆஞ்சநேயப் பெருமானின் பாதங்களை வேண்டிப் பணிகின்றேன்.

ஜெய ஆஞ்சநேயாய நமஹ

இவ்வண்ணம்
ஸ்ரீ சந்திரசேகர சுவாமி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அறப்பணிகள் தொடரட்டும்



"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்கிற் கிணங்க வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து, சிவாகம ஞானியாகவும், வைத்தியராகவும், மாந்திரீக பூஷணமாகவும், சிறந்த கிரியா விளக்கப் பேச்சாளராகவும், ஜோதிடராகவும், வைதீகக் கிரியைகளில் விற்பன்னராகவும், பிரகாசித்து விளங்கியது மாத்திரமல்லாது ஆகமக் கிரியைகளை மிக நுட்பமாக உணர்ந்து செய்துகாட்டிய மகானாகவும் விளங்கி, இவற்றுக்கெல்லாம் சிகரமாக அமைவது போல் 'இலங்கை இந்துமத குருபீடாதிபதி' யாக பீடத்தில் பிரகாசித்த உத்தமராம் அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்கள் விண்ணுலகெய்தி ஆண்டுகள் சில கழிந்தாலும், சைவ மக்கள் மத்தியில், அதுவும் விசேஷமாகச் சிவாச்சாரியார்கள் மத்தியில் இன்றும் அவர் மானசீகமாக வாழ்ந்து கொண்டே இருக்கிறார். அந்த வகையில் அவரது ஜன்ம நஷத்திரம் கூடிவரும் 2002.08.06ந் திகதியன்று அவரது ஞாபகார்த்தமாக ஜயந்தி விழா மலரும், "ஆத்மபஞ்சகம்" என்னும் (C.D.) இறுவெட்டு ஒன்றினையும் வெளியிடப்படுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

'மகன் தந்தைக்காற்றும் உதவி இவன் தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல்'

என்ற குறளுக்கிணங்க சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களுக்கு மேலும் புகழ் சேர்க்கும் வகையில், தனக்கென்றே ஒரு தனிப் பாணியில் சாதகாச்சாரியாராகவும், சிவாச்சாரியாராகவும் விளங்குபவரும். பீடாதிபதியவர்களின் திருக்குமாரனுமாகிய சிவஸ்ரீ சா. ஜெகதீஸ்வர சிவாச்சாரியார் அவர்கள் இந்த பூதசுத்தி இறுவெட்டியைத் தயாரித்திருப்பது மேலும் சிறப்பாகும்.

மின்சாரம் பாயும் பொருட்களில் கைவைத்து வேலை செய்பவர்கள் எப்படித் தற்பாதுகாப்புக்காக கைகளுக்குக் கையுறை போடுவது மட்டுமல்லாது வேறு பல பாதுகாப்பான ஏற்பாடுகளையும் செய்து கொண்டு வேலையைத் தொடங்குகிறார்களோ, அதேபோன்று 'தெய்வத்தன்மை' - 'தெய்வ சாந்நித்தியம்' என்கிற மின்சாரத்திலும் ஈடுபட்டு, வேலை தொடங்குமுன் அதாவது முக்கியமான 'தேவப்பிரதிஷ்டை' போன்ற கிரியைகளை ஆரம்பிக்கும் முன்னர் சிவாச்சாரியார் தன்னை மந்திரபூர்வமாகத் தயார்படுத்தும் ஒரு கிரியைதான் 'பூதசுத்தி' என்பது. இக் கிரியையைச் சிவாச்சாரியார்கள் செய்வதற்கு இந்த இறுவெட்டு பேருதவியாக அமையுமென்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். சிவஸ்ரீ சாம்பசிவ ஜெகதீஸ்வர சிவாச்சாரியாருடைய இத்தொண்டு மேலும் வளர இறைவன் அருள்புரிவாராக.

சுபம்

சிவஸ்ரீ பா. ஷண்முகேஸ்வர குருக்கள்
ஆலோசகர் - ஸ்ரீமுத்துமாரியம்மன் தேவஸ்தானம்,
கொழும்பு-13.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீகப் பெருந்தகை

அகில இலங்கை இந்து சமய குருபீடாதிபதி சிவஸ்ரீ ஸ்கந்த சாம்பசிவாச்சாரியார் அவர்களின் 80வது ஜெயந்தி தின விழாவை அவரின் புத்திரர்கள் பெருவிழாவாகக் கொண்டாடுவதையிட்டு மிக மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறோம். அவரின் நினைவாக மலர் வெளியீடும் ஆத்ம பஞ்சகம் என்னும் (C.D) இறுவெட்டு வெளியீடும் அவரின் சேவைகளையும், சமயத் துறைக்கு அவர் ஆற்றிய பணிகளை நினைவூட்டுவதாக அமையும்.

குருபீடாதிபதி அவர்கள் நாயன்மார்கட்டுப் பதியில் ஜனித்து ஆத்மீகத் துறையிலே தம்மை முழுமையாக ஈடுபடுத்தி அந்தணர் குல ஆசிரியனாய் அக்குல ஒழுக்க நெறிகளைக் கடைப்பிடிக்கும் நெறியாளனாய் வாழ்ந்த ஒரு பெருந்தகை. சைவசித்தாந்த, வேதசிவாகமக் கருத்துக்களில் ஆழ்ந்த அறிவும் கொண்டவர். வேதமந்திரங்களை அட்சர சுத்தமாக உச்சரிப்பதில் அவருக்கு நிகர் அவரே. தனது கணீர் என்ற குரலினால் மந்திரங்களை கம்பீரமாக உச்சாடனம் செய்து மக்கள் மனதைக் கவர்ந்தவர்.

நாயன்மார்கட்டுப் பதியில் தான் ஆற்றிய சமயப் பணிகளினாலும், அந்தணர்க்குரிய ஒழுக்க நெறிகளைப் பின்பற்றி வாழ்ந்தமையாலும் அகில இலங்கை முதல் பீடாதிபதியாக அவர் தெரிவு செய்யப்பட்டமையாலும் நாயன்மார்கட்டு பெரும் புகழ்பெற்றது. ஆன்மீக வாழ்க்கை முறைக்கு ஒரு வழிகாட்டியாக அவரும் நாயன்மார்கட்டுப் பதியும் விளங்கியது. அவரும் நாயன்மார்கட்டுப்பதியும் மக்கள் மனதினின்றும் சைவம் வாழும் மட்டும் மனதை விட்டு அகலாது.

குரு பீடாதிபதி அவர்கள் தனது வாழ்க்கையின் இறுதிக் காலத்தைக் கொழும்பிலே தனது மக்களுடனேயே கழித்து வந்தார். அச்சமயத்திலே எமக்கு அவரை அடிக்கடி சந்திக்கும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. ஒரு வகையில் எமக்கு அவர் உறவினராகவும் இருந்தார். வயதான காலத்திலும் அவரது தோற்றம் தனது கம்பீரத்தை இழக்கவில்லை. அதே கணீரென்ற குரலினால் வேத மந்திரங்களை ஓதுவார். சமயக் கிரியைகளிலும், கோயில் கிரியைகளிலும் மிகுந்த ஈடுபாட்டுடனேயே வாழ்ந்து வாழ்ந்தார். நித்ய பூஜையைத் தவறாது நடத்தி வந்தார்.

பீடாதிபதியைப் போன்றே அவரது குமாரர்களும் வேத ஆகமங்களிலும் சைவாகமக் கிரியைகளைச் செய்வதிலும் வேதமந்திரத்தை அட்சர சுத்தமாக உச்சாடனம் செய்வதிலும் ஆற்றல் உடையவர்களாகத் திகழ்கின்றனர். தந்தை வழி நின்று குல ஒழுக்க நெறிகளினின்றும் வழுவாது சமயத் துறை சார்ந்த செயற்பாடுகளிலும் தமது முத்திரையைப் பதித்து வருகின்றனர்.

தந்தையின் அடிச்சுவட்டில் மைந்தர்களும் தம் பணியைத் தொடர சமய உலகும் நன்மை பெற இறைவன் தாழ் பணிந்து நிற்கிறோம்.

30/36, P 1/1, சாள்ஸ் எபாட்மென்ட்,
டி சில்வா குறொஸ் றோட்,
களுபோவில,
தெஹிவளை.

இ. சண்முகசர்மா
ஹேமா சண்முகசர்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீகச் சான்றோன்



யாழ்ப்பாணம் நாயன்மார்கட்டுப் பதியிலே வேதாகமக் கிரியைகளிலும், மாந்திரிகத் துறையிலும் தனக்கே உரிய திறமையினாலே அந்தணர் குல சீலனாய் தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இன்றி வாழ்ந்தவர் இந்து மத குருபீடாதிபதி சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்கள். நாயன்மார்கட்டு என்ற அப்பதிக்கு ஒருவிசேடம் இருக்கிறது. அதுதான் இலங்கையின் முதலாவது இந்துமத குருபீடாதிபதி ஜனித்து வாழ்ந்த இடம். வேதாகமக் கிரியைகள் ஆகம விளக்கங்கள் என்பவற்றிலே அவருக்கு நிகர் அவரே என்று வாழ்ந்தவர். வேத மந்திரங்கள் அவர் நாவில் உச்சரிக்கப்படும் பான்மை, மந்திரங்களின் அட்சரசுத்தம் கணீர் என்று ஒலிக்கும் குரல், கிரியைகளில் அவர் செய்துகாட்டும் வழி முறைகள் அவரின் எடுப்பான தோற்றம் யாவும் அவரின் புருஷத்துவத்தைப் பறைசாற்றி நிற்கும்.

எனது மாமனார் என்ற வகையில் நான் அவரிடம் கற்றுக்கொண்ட வேத பாடங்கள், பெற்றுக்கொண்ட அனுபவங்கள் யாவும் எனக்கு அவர்பால் உயர் மதிப்பையும் மரியாதையையும் ஏற்படுத்தின. அவையே எனது வாழ்க்கைக்கு இன்னும் உறுதுணையாக, வழிகாட்டியாக அமைந்துள்ளன. ஆன்மீகத்திலே அவர் காட்டிய ஈடுபாடு, அதிலே மக்களையும் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட வழிவகுத்தது.

மேலும் மக்களுக்கு ஏற்படும் நோய் நொடிகளைத் தீர்க்கும் வைத்தியராகவும் மாந்திரிகத்திலே கொண்ட சிறப்பாற்றலினால் மக்களின் மன நல நோய்களையும் பிணிகளையும் தீர்த்து வைப்பவராகவும் இன்னும் பல்வேறு துறைகளிலே மக்களின் அன்றாட பிரச்சினைகள், துன்பங்களைப் போக்குபவராகவும் நாயன்மார்கட்டிலே கோலோச்சி வாழ்ந்தவர். நாயன்மார்கட்டு இவரின் ஆத்மீக வாழ்க்கையாலே சிறப்புப் பெற்ற பதியாகியது.

சமய அனுஷ்டானங்களை விதிமுறை பிழையாது தினமும் வாழ்க்கையில் கடைப்பிடித்து, சிவபூஜையிலே தன்னை ஈடுபடுத்தி, தனக்கென ஒரு சிறப்பான ஆத்மீக வாழ்க்கையை வாழ்ந்தவர் இவர். என்றும் ஆத்மீகத் தொண்டினை மேற்கொண்டிருந்தவர். தினமும் சிவபூஜை செய்வதனால் அவரின் முகத்தில் ஏற்பட்ட பொலிவு, முகத் தேஜஸ் சாத்வீகத் தோற்றம் ஆகியவை அவரை ஒரு சமயப் பெரியாராக ஆன்மீகச் சான்றோனாக மக்கள் உள்ளங்களிலே குடிகொள்ள வைத்தது.

சிவாச்சாரியார் அவர்களின் 80வது ஜெயந்தி விழாவை அவரின் புத்திரர்கள் அவர் நினைவாகக் கொண்டாடுவது அப்பெரியாருக்கு அளிக்கப்படும் பெரும் கௌரவமாகும். குருபீடாதிபதியின் ஜெயந்தி விழாவில் அவரது புதல்வர் சாம்பசிவ ஜெகதீச சிவாச்சாரியார் அவர் தந்தை நினைவாக ஜெயந்தி மலர் ஒன்றினையும் செளியீடு செய்வதும் அதனுடன் "ஆத்ம பஞ்சகம்" என்ற (C.D.) இறுவெட்டு வெளியீடு செய்வதும் சிறப்புமிக்க பணியாகும்.

அப்பணி மேலும் சிறக்க எல்லாம்வல்ல முருகப் பெருமானின் அருளை வேண்டி நிற்கிறேன்.

பிரம்மஸ்ரீ ஜெ. நாகராஜக் குருக்கள்
பிரதம குரு - புதிய கதிரேசன் தேவஸ்தானம்,
பம்பலப்பிட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

**இலங்கை இந்துமத குருபீடாதிபதியாகத் திகழ்ந்த**
**அமரர் ஸ்கந்தசாம்பசிவ சிவாச்சாரியாரின் மருகரும்,**
**சங்கானை இலுப்பைத்தாழ்வு முருகன் கோவில் ஆதீனகுருவுமான**
**சிவப்பிரம்மஸ்ரீ சிவநித்தியானந்த சிவாச்சாரியாரின்**

## இதயத்திலிருந்து.....

இலங்கை இந்துமத குருபீடாதிபதி அமரர் ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியாரின் கனிஷ்ட புத்திரன், ஸாஹித்திய ஸம்ஹிரகர் ஜெகதீஸ்வரக் குருக்களவர்கள், பூதசுத்தியை இறுவெட்டு (C.D) வடிவில் வெளியிட இருப்பதை அறிந்து உவகையுற்றேன். அத்துடன் 80வது ஜயந்தி விழாவன்று மலர் விழா ஒன்றையும் வெளியிடுகின்றார். இன்றைய காலகட்டத்தில் இவ்வாறான முயற்சிகள் சமுதாயத்திற்கு அவசியமாகவே இருக்கின்றன.

அன்னார் தன் தந்தையார் அரும்பாடுபட்டு தேடித் தொகுத்துவைத்திருந்த ஆத்மார்த்த சிவபூஜா விதி 32 கணபதி 64 சிவமூர்த்தங்கள் ஆத்மார்த்த பூஜா விதானம் (சம்மேளன அக்னிகார்யம் அடங்கலாக) என்ற நூல்களை புத்தக ரூபத்தில் வெளியிட்டு அந்தணர்கள் அனைவரது பாராட்டுக்களையும் பெற்றவர்.

நாயன்மார் கட்டு சாம்பசிவ சிவாச்சாரியாரின் கணீரென்ற சிம்மக் குரலைக் கேட்டு பிரமித்துப் போனவர்கள் எங்கள் ஊரில் இருக்கின்றனர்.

அத்தகைய சிம்மக் குரலைக் கெட்டு ஆனந்தமடைந்தவர்களுக்கு, அன்னாரது இழப்பு தாங்கமுடியாத சோகத்தை அளித்திருக்கின்றமையை உணரமுடிகின்றது.

அவரது கனிஷ்ட புத்திரர் ஜெகதீஸ்வரக் குருக்களும் அத்தகைய சிம்மக்குரலோனே. மிக அக்ஷர சுத்தமாகப் பிசிறின்றி வாயில் இருந்து மந்திரப் பதங்கள் வரும். தமிழகத்து சிவாச்சாரியார்களும், பத்ததி வித்தகர்களும்கூட அவரது பத்ததி வித்துவத்தைக் கண்டு வாயடைத்துப் போய் நின்ற சந்தர்ப்பங்களும் உண்டு. நல்ல சாரீரமும் கைவரப்பெற்றவர். பூதசுத்தியில் வரும் தியான ஸ்லோகங்களை அவர் பாடக் கேட்பதற்கு மிகவும் ரம்மியமாக இருக்கும்.

இப்படியான திறமைகள் கைவரப் பெற்ற ஜெகதீஸ்வரக் குருக்களவர்கள் ஆரம்பகட்டமாக பூதசுத்தியை இனசத்தட்டு வடிவில் வெளியிடுகின்றார். அதன் மூலம் இந்து ஆலயங்களிலும் விடுகளிலும் அட்சர சுத்தியுடனான கம்பீரமான குரலில் மந்திர ஒலி நிறைந்து ஒலிக்கும்.

ஆகமங்களில் 'ஸப்தார்த்தம்' பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளன. ஸப்தம் பிழைத்துவிட்டால் அர்த்தமும் பிழைத்துவிடும். மந்திரங்களை அதற்குரிய ஸப்தங்களுடன் ஓத வேண்டுமென்பது விதி.

இலங்கையில் முதன்முதலாக இத்தகைய முயற்சியில் ஈடுபடுகின்ற ஜெகதீஸ்வரக் குருக்களை சைவ உலகம் பாராட்டியே தீரவேண்டும். அவர் திறமையுள்ளவர், துடிப்புள்ளவர். மேலும் பல சாதனைகள் செய்ய திடகாத்திரத்துடன் வாழவாழ்த்தி பாராட்டுகின்றேன்.

சுபம்.

சங்கானை இலுப்பைத்தாழ்வு
முருகன் கோவில் "ஆதீன குரு"
சிவநித்தியானந்த சிவாச்சாரியார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிறந்த நாள் விழாவொன்றில்
குருபீடாதிபதி அவர்கள்



உலகிலேயே முதன் முதலாக தன் மகன் சர்வ சாதகர் சிவப் பிரம்மஸ்ரீ சாம். ஜெகதீஸ்வரக் குருக்களுக்கு பஞ்சகுண்டம் போட்டு ஆசார்ய அபிஷேகம் செய்து வைக்கிறார் குருபீடாதிபதி அவர்கள்



கான கதாராஸ்தி வை. நித்தியானந்த சர்மா அவர்களோடு குருபிடாதிபதி



தமிழ்நாடு காஞ்சிபுரம் ராஜப்பா குருக்களோடு குருபீடாதிபதியின் புதல்வர்களில் இருவரான சாம்பசிவதாசன், ஐயப்பதாசன் ஆகியோர்



குலதெய்வமாகிய ராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் நவராத்திரி ஸ்ரீசக்கர மகேத பூஜையில் சர்வ சாதகராக குருபீடாதிபதி அவர்கள்



சிவஸ்ரீ பத்மநாதக் குருக்களுக்கு ஆசார்ய அபிஷேகத்தினபோது குருத்துவ அதிகாரத்தை வழங்குகிறார் குருபீடாதிபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கப்பிதாவத்தை செல்வவிநாயகர் தேவஸ்தான பிரதமகுரு பிரம்மஸ்ரீ சண்முகசெல்வ சர்மா ஜே. பி. அவர்கள் குருபீடாதிபதியை மலர் மாலை அணிவித்துக் கௌரவிக்கிறார்.



முன்னாள் கொழும்பு நகரபிதா திரு. கணேசலிங்கம் அவர்கள் குருபீடாதிபதியிடம் ஆசி பெறுகிறார்கள்



டாகடர் சாம். மணிக்குருக்கள் தலைமையில் மணிகண்ட சேவா பீடத்தின் வரவேற்பின்போது குருபீடாதிபதி அவர்கள்.



கவிஞர் வேலணை வேணியன் அவர்கள் குருபீடாதிபதியிடம் ஆசி பெறுகிறார்



பீடாரோஹண வரவேற்பு விழாவில் மேட்டுத்தெரு ராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்திலியருந்து ஜிந்துப்பிட்டி முருகன் கோவில் வரவேற்பு விழா மண்டபத்திற்கு சண்முகரட்ண சர்மா, தமிழ்நாடு, தேவஸ்தான சாம்பமூர்த்தி சிவாச்சாரியார் அவர்களின் மகனோடு குருபீடாதிபதி



உலகின் முதல் பஞ்சகுண்ட பக்ஷ ஆசார்ய அபிஷேகத்தின்போது குருவழிபாடு செய்யும் மகன் சா. ஜெகதீஸ்வரக் குருக்களுடன் குருபீடாதிபதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோதார கௌரி விரத தத்துவம்

– S. ஜெகதம்பாள் –

திருக்கயிலாய மலையில் தேஜோமய நவரத்ன மணி மண்டபத்தில் மந்திர, கல்பித, ஸ்வர்ண, சிம்மாசனம் அமைந்திருக்கின்றது. சிவகணநாதர்கள் ஆயிரவர்களும் கின்னரர் கிம்புருகூஷர், வியாக்கிரதபாதர், பதஞ்சலி கந்தர்வர்கள் புடைசூழ சர்வலோக ரகூஷக ரான ஸ்ரீ பார்வதி பரமேஸ்வரன் எழுந்தருளி வீற்றிருந்தார்.

அந்த ரம்மியமான வேளையில் பிரிங் கிரிடர் என்னும் பிருங்கி முனிவர் எம்பெருமா னின் திருமுன்னிலையில் அற்புதமாக -மெய் மறந்து நடனமாடினார். அந்த தவமுனிவரின் அபிநயத்தில் பரமசுகம் கண்ட பரமேஸ்வரன் அவருக்குப் பேரருள் பாலித்தார்.

பேரருளைப் பரிபூரணமாகப் பெற்ற பிருங்கி முனிவர் தேவரீரை மட்டும் தனித்து வலமாக வணங்க அருட் கருணை புரிக என வேண்ட, பரமேஸ்வரனும் அப்படியே ஆகட்டும். என்று திருவாய் மலர்ந்தார். முனிவர் அம்பிகையை விடுத்து ஈசனை மட்டும் வலமாக வணங்கிப் போனார். பிருங்கி முனிவரின் இந்தச் செயல் சக்திக்குச் சினத்தை மூட்டியது. உடனே அன்னை, "ஆடிய பாதம் சக்தியை இழக்கட்டும்." என்று சாபங் கொடுத்தார். இது கண்ட ஈசன் புன்னகை பூத்தார். பக்தரைக் காக்கத் திருவுளம் கொண்டார் ஆடிய பாதம் இழந்த முனிவருக்கு மூன்றாவது ஒரு காலும், ஊன்று கோலும் கொடுத்துத் தன் பக்கத்தி லேயே அணுக்கத் தொண்டராக இருக்கும் படியான சிவபேற்றைக் கொடுத்து அருளி னார். இறைவனின் இச்செயல் இறைவிக்கு மேலும் கோபத்தை ஏற்படுத்தியது. இறை வனை வணங்குவோர் தன்னையும் சேர்த்து வணங்க வேண்டும் என்று எண்ணினாள். கோபத்தோடு கைலையை விட்டகன்ற அன்னை கௌதமர் ஆச்சிரமம் வந்தாள்

அம்பிகையின் கோபத்திற்கான காரணத்தைக் கேட்டறிந்த கௌதமர் அதற்கு ஒரு உபாயம் சொல்லுகிறார். 21 நாள் விரதமிருக்கும்படி பணித்தார். அதன்படியே அம்பிகை 21 நாட்கள் விரதமிருந்து, நாள் ஒன்றுக்கு ஒரு முடிச்சு வீதம் 21 நாட்களும் 21 முடிச்சுக்கள் போட்டு 21ம் நாள் சிவப்பு நூலைக் கட்டியவுடன் இறைவன் சுயம்பு லிங்கமாக தோன்றி அன்னைக்கு அருள் பாலித்து தனது திருமேனியில் இடது பாகத்தைக் கொடுத்தா. அதுவே சிவனும் சக்தியும் சேர்ந்த அர்த்த நாரீச்வர வடிவமாகும். சிவனும் சக்தியும் வெவ்வேறு அல்ல இரண்டுமே ஒன்றுதான். வெற்றிலை ஒன்றுதான் ஆனால் அதற்கு இரண்டு பக்கமுண்டு. ஒன்று சிவம். மற்றயது சக்தி. அதுவே சிவசக்தி ஐக்கிய சொரூபமாகும் அர்த்த நாரீஸ்வர வடிவமாகும். இதற்காக இறைவன் நடாத்திய அற்புத் திருக்கூத்தினை ஆன்மாக்களினால் உணரத்தான் முடியுமா? சிவசக்தி ஐக்கிய பாவத்தோடு வீற்றிருந்தே பக்தர்களுக்கு முக்தி கொடுத்து ஆட்கொள்ளுகின்றார் இறைவன்

அப்போதும் பிருங்கி முனிவர் அப்பனை மாத்திரம் வணங்க வேண்டும் என நினைத்தார். வண்டாக உருமாறி அர்த்த நாரீஸ்வர வடிவத்தில் சக்தியின் பாகத்தை விடுத்து சிவபாகத்தினை மட்டும் துளைத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு இறைவனை வலம் வந்தார். பிருங்கி முனிவரின் கொள்கைப் பிடிப்பைக் கண்ட பர்வத குமாரி பிருங்கி முனிவருக்கு அருள் பாலித்துத் தனது மைந்தனாக ஏற்றுக் கொண்டாள். பார்வதி தேவி அனுகூஷ்டித்த மகதத்தான விரதம் ஆதலால் இதற்குக் கேதார கௌளரி விரதம் என்று பெயர் ஏற்பட்டது.

அம்பிகை இந்த விரதம் அனுஷ்டிக் கும்போது சித்ராங்கதன் என்ற கந்தர்வன் அம்பிகைக்குத் துணை யாக இருந்து தொண்டுகள் புரிந்துவந்தான். கேதார கௌளரி விரத மகிமையால் அன்னை இறைவனி டத்தே இடப்பாகம் பெற்றதும் பரம சந்தோ கூஷமடைந்த சித்ராங்கதன் அன்னையை வேண்டினான்

அகிலாண்டகோடி பிரம்மாண்ட நாயகி அம்மையே! கற்பகவல்லியே! இந்த எளியேனுக்கு ஒருவரம் தரவேண்டும். தேவி! இத்தகைய சிரேகூஷ்டமான விரதத்தை பூவுலகத்தோரும் அனுஷ்டித்துச் சகல சௌ பாக்கியங்களையும் பெற்று சதிபதிகளாய் வாழ பேரருள் பாலிக்க வேண்டும்.ஷ என்று வேண்டினான். அம்பிகையும் அவ்வாறே ஆகட்டும். என்று அருள் பாலித்தாள். சித்ராங் கதன். ஊஜ்ஜியினி மன்னன் வஜ்ரதத்தனுக்கு கேதார கௌளரி விரத மகிமையைக் கூறி அனுஷ்டிக்கும் விதிமுறையையும் உபதே சித்தான். வஜ்ரதத்தனும் அவ்விரதத்தை அனுஷ்டித்து சகல பேறுகளையும் பெற்றான். யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம். என்பதற்கிணங்க நாடெங்கிலும:, விரதத்தின் மகிமையைப் பரவச் செய்து அனைவரும் கூேஷம முற வழிகாட்டியாக விளங்கினான்

விரதம் அனுகூஷ்டிக்கும் முறை

இந்த விரதத்தை புரட்டாதி மாதம் சுக்கில பகூஷ விஜய தசமித் திதியில் ஆரம்பிக்க வேண்டும். 21 நாட்கள் தினமும் விரதமிருந்து அனுதினமும் 21 தழையுடைய நூலினை ஒன்றாக முறுக்கி எடுத்து தினமும் பூஜையின் போது முடிச்சு ஒன்றாகப் போட வேண்டும். இவ்வாறு 21 நாடகளும் 21 முடிச்சுக்கள் போட வேண்டும். 21 வது நாள் தீபாவளி அன்று 21 முடிச்சுக்களைக் கொண்ட நூலைக் காப்பாக கங்கணமாக முழங் கையின் மேல் புஜத்தின் கீழுள்ள பகுதியில் கட்டிக் கொள்ள வேண்டும். அன்றைய தினமே விரதத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும். இந்த விரதமுடிவில். 21 பழங்கள் 21 பகூஷணங்கள் 21 வெற்றிலைபாக்கு அம்பிகைக்கு நிவேதனம் செய்து 21 அடிய வர்களுக்கு அமுது செய்வித்தல் வேண்டும் இவ்வாறு கிரமமாக இந்த விரதத்தை அனுடித்தால் கணவன் மனைவிடையே ஒற்றுமை நிலவும். பிரிந்த தம்பதியர் ஒன்று கூடுவர். செல்வம் கல்வி, புத்திர பாக்கியம், வாகனாதிகள் சகலசம்பத்தும் கைகூடும்.

சுபம்.

**S. ஜெகதம்பாள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானறிந்த குருநாதர்



இற்றைக்குச் சில ஆண்டுகளிற்கு முன்னர் இலங்கை இந்துமத குருபீடாதிபதி சிவாகமஞானி, வித்யாசாகரம், அருள்ஜோதி ஸ்கந்த-சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களும் நானும் ஊர்காவற்றுறை சிவன் ஆலய கும்பாபிஷேகத்தில் சந்தித்தோம். அங்கு தான் நானும் அவரும் முதன் முதலில் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது.

அன்று நான் பெருத்த ஆச்சரியடைந்தேன். ஏனென்றால் அவரைப் பற்றிய மற்றவர்களின் விமர்சனங்களுக்கு நேர்மாறாயிருந்தார். எல்லோரும் அவரைக் 'கோபக்காரர்' என்றே குறிப்பிடுவர். ஆனால் அன்றைய தினம் அவர் மிகவும் சாந்தமாகவும் மிக அன்புடனும், ஏற்கனவெ பழகியவர் போலவும் என்னுடன் பழகினார். அப்பொழுதுதான் கோபம் இருக்கிற இடத்திலேதான் குணமிருக்கும் என்ற உண்மையை நான் உணர்ந்துகொண்டேன். தவறுகள் செய்யப்படுகின்ற போதுதான் அவர் கோபமடைவார்.

அந்த வகையிலே எனக்கும் அவருக்குமிடையிலான நட்பு அன்று ஆரம்பமானது. கிரியைகள் பற்றியும் வேதாகமங்கள் பற்றியும் அவர் கூறுகின்ற கருத்துக்கள் என்னைப் பிரமிக்க வைத்தன.. என்னுடன் மிகவும் அன்போடு பழகிய. அந்த நாட்களின் நினைவுகளை இன்றும் நான் மீட்டிப்பார்க்கிறேன்.

அந்த மகானுடைய 80வது ஜயந்தி தினமாகிய இன்று வெளியிடப்படும் ஜயந்தி மலரும் அவர் குடும்பத்தினரால் வெளியிடப்படும் 'ஆத்ம பஞ்சகம்' என்கிற இறுவெட்டும் (C.D) சிறப்பான முறையிலே எல்லோர்க்கும் பயன்தரவேண்டுமென எல்லாம்வல்ல பரம்பொருளைத் தியானித்துப் பணிகின்றேன்.

'வாழ்க குருபீடாதிபதி நாமம்
வளர்க அவர்தம் புகழ்'

அன்புடன்

சிவஸ்ரீ க. சிவபாலக் குருக்கள்
கதிரேசன் கோவில்
செக்கடித்தெரு
கொழும்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவஸ்ரீ ச.கு ஸ்ரீதரக் குருக்கள்
சந்திர மௌலீஸ்வரர் தேவஸ்தானம்
3011, மார்க்கம் ரோட், யூனிற் – 63
ஸ்காபுரோ, ரொரன்டோ, கனடா
T.P. 416 7547338

# நெஞ்சைவிட்டகலா நினைவுகள்.....



அகில இலங்கை இந்து மத குருபீடத்தின் முதலாவது குரு பீடாதிபதியாக விளங்கிய அமரர் சிவஸ்ரீ ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பினை நான் சிறுவயதிலே பெற்றிருக்கிறேன். குமாரபுரம் கோவிலின் தேவஸ்தான அர்ச்சகராக நான் கடமையாற்றிய பொழுது முள்ளியவளைக்குச் சிவாச்சாரியார் அவர்கள் வந்து செல்வது வழக்கம். அப்பொழுது நானும் முள்ளியவளையில் உள்ள நாகராசமாமா, நீலுமாமியின் வீட்டுக்குச் செல்வது உண்டு. அந்த நேரங்களில் சிவாச்சாரியார் அவர்களுடன் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. அப்பொழுதெல்லாம் அவர் ஆலயக்கிரியை முறைகள் பற்றியும், கடைப்பிடிக்க வேண்டிய ஆச்சார அனுட்டான முறைகள் பற்றியும், ஆத்மார்த்த பூஜையின் முக்கியத்துவம் பற்றியும் தெளிவாக எனக்கு எடுத்துக் கூறுவார். நான் அமைதியாக இருந்து அவற்றையெல்லாம் கேட்பேன். இன்று அந்த நினைவுகளையெல்லாம் அசைபோட்டுப் பார்க்கிறேன். அந்தப் பெரியவரிடம் காணப்பட்ட அறிவுச் செழுமை, ஆளுமைத் திறன், திடசிந்தை, தற்துணிவு என்பனவெல்லாம் என்மனதிலே ஆழப்பதிந்துவிட்டது.

இன்று அவருடைய பிள்ளைகள் யாவரும் ஒவ்வொரு நாட்டிலும் சிறப்புடன் வாழ்ந்து வருகிறார்கள். தந்தையிடமிருந்து பெற்ற அறிவாற்றல் அனுபவங்களையெல்லாம் தமது வாழ்க்கையிலே பயன்படுத்திச் சிறந்த சிவாச்சாரியார்களாகத் திகழ்வது குறித்து மகிழ்வடைகிறேன்.

தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும் என்பது வள்ளுர் வாக்கு. அதற்கமைய சிறப்புடைய வாரிசுகளை இச் சமுதாயத்திற்குத் தனது எச்சங்களாக வழங்கிச் சென்ற சிவாச்சாரியார் அவர்கள் தகுதிவாய்ந்த தந்தையாராகப் பெருமைபெறுகின்றார். அவருடைய ஆத்மா என்றும் அமைதிபெற எல்லாம்வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

வணக்கம்

ச.கு. ஸ்ரீதரக் குருக்கள்
சிவாகம கிரியா பீடம்,
ரொரண்டோ,
கனடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

அருள்மிகு

# ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்

# Arulmiku Sri Nagapooshani Ambal Devasthanam

சீரணி - Seerani

சண்டிலிப்பாய் - Sandilipai

உ

## குருவருளாசி வேண்டி நிற்போம்



இலங்கை இந்துமத குருபீடாதிபதி வித்யாசாகரம், சிவாகமஞானி சிவப்பிரம்மஸ்ரீ டாக்டர் அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களுடைய 80வது ஜயந்தி தினப் பெருவிழாவிலே ஜயந்தி மலர் வெளியிட இருப்பது அறிந்து மகிழ்வடைகிறோம்.

சிவாச்சார்யார் அவர்கள் எமது உறவினரும் கூட. வேதாகம புராண இதிகாச விற்பன்னராக விளங்கிய அவர்கள் சிவாச்சாரியாராக மட்டுமன்றி புராணபடனம் செய்பவராக, பௌராணிகராக, வைத்தியராக, மாந்திரீக சக்கரவர்த்தியாக விளங்கியவர்கள். இத்தகைய சிறப்புக்களை ஒருங்கே கொண்ட விரல்விட்டு எண்ணக்கூடிய சிவாச்சாரியார்களுள் குறிப்பிடத்தக்கவர். எமது மாமனாராகிய சிவஸ்ரீ காமாஷிக் குருக்களோடு தோழமை பூண்டவர்.

மேலும் எமதருமை நண்பரும் சாதக கலாமணியும் ஆகிய சம்பசிவதாசன் சாம்பசிவ ஜெகதீஸ்வர சிவாச்சாரியார் அவர்கள் 'ஆத்ம பஞ்சகம்' என்கிற (C.D.) இறுவெட்டு ஒன்றினை தமது சிம்மக் குரல்வளத்திலே வெளியிடுவது பாராட்டுதற்குரியது, போற்றுதற்குரியது. இப்படியான கைங்கரியங்களைச் செய்து வரும் சிவாச்சாரியார் அவர்களுக்கும் அவர்களது குடும்பத்தவர்கள் அனைவருக்கும் எல்லாம் வல்ல பரம்பொருள் நீண்ட ஆயுளையும் சுகத்தையும் வழங்கவேண்டுமெனப் பிரார்த்தித்து குருவருளாசி வேண்டி நிற்கிறோம்.

இவ்வண்ணம்<br>
கிருஷ்சாமி பாலகிருஷ்ணக் குருக்கள்<br>
(பாலா குருக்கள்)<br>
சீரணி நாகபூஷணியம்மன் தேவஸ்தானம்,<br>
சண்டிலிப்பாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாற்பாதத்தில் இறைவன்

இப்பிரபஞ்சத்திலே உயிர்கள் இறைவனை அடைவதற்கு நமக்கு அளிக்கப்பட்ட வழி சரியை, கிரியை, யோகம், ஞானம், என நான்கு பகுதிகளாகச் சிவாகமங்கள் வகுத்துள்ளன இவை, நான்கு பாதங்கள் எனப்படும். இறைவனை நாம் அடைவதற்கு இச்சமயவழி சாதனைகள் வேண்டுவன.

## சரியை நெறி

ஆன்மாக்கள் இறைவனது உருவத் திரு மேனிகளைத் தமக்குப் புறத்தே வணங்கிச் சிவாலயங்களுக்கும் சிவனடியார்களுக்கும் திருத்தொண்டு செய்தல் சரியை வழிபாடாகும். இச் சரியை வழிபாடு சரியையிற் சரியை, சரியையிற் கிரியை, சரியையிற் யோகம், சரியையில் ஞானம் என நான்கு வகைப்படும். சமயதீட்சை பெற்று, சந்தியா வந்தனம் செய்தல், ஆலயத்தைக் கூட்டுதல் மெழுகுதல், தீவர்த்தி பிடித்தல், சாமரை வீசுதல் சுவாமி காவுதல், ஆலய வீதி பிரதட்சணம், கோபுர தர்சனம் ஆகிய ஆலயத் தொண்டுகள் சிவனடியார்களுக்குச் செய்யும் தொண்டுகள் என்பன சரியையிற் சரியை ஆகும். உருவத் திரு மேனிகளுள் ஒன்றைப் பூசித்தல் (அர்ச்சித்தல்) சரியையிற் கிரியை எனவும் மனத்தினுள் கோவிலை அமைத்து அதில் இறைவனைத் தியானித்தல் சரியையில் யோகம் எனவும், இந்த தியானத்தால், தான் பெறும் அனுபவம் முன் நடந்தவை, பின் நடக்கப்போவதை உணர்வதே சரியையிற் ஞானம் எனவும் கொள்ளப்படும். பின்பு இவை ஒவ்வொன்றும் உபாயநிலை, உண்மை நிலை என இரண்டு வகைப்படும். இம்மை மறுமைப் பயன்களை விடும்பிச் செய்வது உபாயநிலை. வீடு பேற்றை விரும்பிச் செய்வது. உண்மைநிலை சரியையாளர்கள் கடவுளில் அச்சமும் அன்பும் உடையவராதலின் சரியை "தாச மார்க்கம்" எனப்படும்.

சரியை வழிபாட்டில் வரும் பயன் சிவசாலோக முத்தியடைவதாகும் சிவசாலோக முத்தியாவது சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் சிவலோகத்தில் இன்புற்று வாழ்தல். இம்முத்தி பரமுத்தி எனவும், பத முத்தி எனவும் பெயர் பெறும்

திருநாவுக்கரசர் சரியை நெறியில் வழுவாது ஒழுகினார் இதனால் இவர் அடைந்த முத்தி சாலோகமுக்தி. இவர் தன் உடம்பை வருத்தி சரியை மார்க்கத்தில் நின்று உழவாரத் தொண்டு செய்தார். தாசமார்க்கம் என்று இதனைக் கூறுவர்.

## கிரியை நெறி

இஃது புறத் தொழிலாலும் அகத் தொழிலாலும் அருவுருவத் திருமேனியை விதிப்படி வழிபடுதலாகும். இது கிரியையில் சரியை, கிரியையில் கிரியை, கிரியையில் யோகம், கிரியையில் ஞானம், என நான்கு வகைப்படும் தான் ஆன்மார்த்தமாக சிவபூஜை செய்தல், வேண்டிய பொருட் களையெல்லாம் ஒழுங்கு செய்தல், வேத சிவாகம முறைப்படி சிவாலயம் அமைத்து அங்கே சிவலிங்க மூர்த்திக்கு செய்யும் நித்திய நைமித்ய பூஜை. கிரியையில் கிரியை எனப்படும், இதில் வரும் மானச பூஜை கிரியையில் யோகம் எனவும், மானச பூசையில் அனுபவத்தால் வரும் உணர்வு கிரியையில் ஞானம் என்றும் சொல்லப்படும். கிரியை பாதத்தில் அச்சம் குறைந்து அன்பு கூடி நிற்பதால் இது புத்திர மார்க்கம் எனப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டும். இக் கிரியையினால் புறக் கருவிகளும் அகக்கருவிகளும் ஒருங்கு தொழிற்படுகின் றன. கிரியை ஆன்மார்த்த வழிபாடாகும், கிரியை வழிபாட்டின் பேறாக யோக வழிபாட் டிற்கு உரிய உணர்வு தோன்றும். திருஞான சம்பந்தர் கிரியை நெறியில் ஒழுகினார் இவர் சாமீப முக்தியடைந்தார் என்றறிக. இவர் கடைப்பிடித்த மார்க்கம் சற்புத்திர மார்க்கம் என்பர்.

## யோக நெறி

அகத்தொழிலால அருவத்திரு மேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு. கிரியை வழிபாட்டின் அனுபவத்தால் வரும் அதிநுட்ப உணர்வே யோக வழிபாட்டிற்கும் காரணமாகிறது. இது நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம் தாரணை தியானம், சமாதி ஆகிய எட்டு உறுப்புக் களை உடையது. இதனால் அஷ்டாங்க யோகம் எனப்படும். அகிம்சை, வாய்மை, கள்ளாமை, அன்பு, பொறுமை, வஞ்சனை யின்மை, தைரியம், ஆசாரம், சுத்தி, பிரம்மச் சரியம், ஆகிய பத்தும் இயமம் எனப்படும். மகிழ்ச்சி, கடவுள்சிந்தனை, பழிக்கு அஞ்சு தல், பத்தி, ஞான நூல்கற்றல், ஈஸ்வரபூஜை, தானம், ஜபம், விரதம், தவம் ஆகிய பத்தும் நியமம் எனப்படும். ஆசனம் என்பது இருக்கை. அது பத்மாசனம் முதலியன. சுவா சத்தை அடக்கியாளுதல், பிராணாயாமம். அத்தியானத்தில் நிலை பெறுதல் சமாதி. இமயம், நியமம், ஆசனம், பிராணாயாமம் ஆகிய நான்கும் யோகத்தில் சரியை. கிரியை, தியானம் யோகத்தில் யோகம். சமாதி யோகத்தில் ஞானம். பயனை விரும் பாமல் செய்யின் உண்மை யோகமாகும். யோக பாதத்தில் அச்சம் நீக்கிப் பாசம் நிறைந்திருப்பதால் இது தோழமை மார்க்கம் அல்லது சகமார்க்கம் எனப்படும். சுந்தர மூர்த்தி நாயனார் இந் நெறியில் நின்று சாரூப முத்தியடைந்தார்.

## ஞானநெறி

இது சிவனைச் சச்சிதானந்த சொரூப நிலையில் அறிவுத் தொழிலினால் வழிபடுதல் ஆகும். ஞான நூல்களைக் கேட்டல், ஞானத் தில் சரியை. கேட்டவற்றை சிந்தித் தல் ஞானத்தில் கிரியை. சிந்தித்தவற்றைத் தெளிதல். ஞானத்தில் யோகம். நிட்டை கூடுதல் ஞானத்தில் ஞானம் எனவும் கூறப் படும். ஞான வழிபாட்டின் பயன் சிற்றின் பத்தை மறந்து பேரின்பத்தை அனுபவித்தல். மாணிக்க வாசக சுவாமிகள் இதற்கு உதாரணமாகத் திகழ்ந்தார்.

சுவாமிகள் ஒழுகிய நெறி ஞான நெறி யாகும். அவர் அதன் பயனாக சாயுச்சிய முத்தி பெற்றார். சாயுச்சிய முத்தியாவது மீண்டும் பிறப்பினாலே வருகின்ற வினை களைக் கடந்து ஞான வழியினாலே பெறு கின்ற முத்தியாகும். இதனைப் பரமுத்தி என்றும் கூறுவார். அந்த வகையிலே பிராம் மணத்வத்தைக் கடைப்பிடித்து சிவாச்சார்ய ஒழுக்கத்தைப் பேணிக்காத்த பெருந்த கையும், எனது வித்யா குருவும் மாமனாரு மாகிய குருபீடாதிபதி அவர்களின் ஜெயந்தி விழா நன்னாளிலே அவருடைய பாதக மலங்களைச் சிரமேற் கொண்டு பாத பூஜை செய்து குருவருளைப் பெறுவோமாக!

ஆத்ம ஸமஸ்காரம், பூதசுத்தி எனப்படும். ஆத்மாவிற்கு பஞ்ச பூதங்கள் பின்னா பின்னஸ்வரூபமாகும். பிருதிவி முதல் ஆகாச பரியந்தம் ஜட பரிணாம ரூபமாகும். ஆத்மா தனது ஸ்வரூபமாகிய சித்ஸ்வ ரூபத்தை அறியாத படி தன்வசப்படுத்தி பரிணமிக்கின் றது. சிவாக்நியால் இந்த அசத் பாவத்தைப் பொசுக்கி சத்பாவம் செய்தல் அவசியமா கின்றது.

"மறைவண்ணர்"
சிவஸ்ரீ – து – மணிவண்ண சிவாச்சார்யார்
வீணியவரை அம்பாள் தேவஸ்தானம் மாவிட்டபுரம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# மறைந்தும் மறையாத சிவக்ஞானி



"குரு நாதம் குரோ ஸூநும்
குரு ஸக்ராதி வந்திதம்
குரு ஞான பிரதாதாரம்
சர்வ லோக குரும் பஜே"

கரியமாலினும் கண்ணுதலானினும்
விரியும் தாமரை மேலுறை வானினும்
விரியும் பூதமோர் ஐந்தினும் மெய்யினும்
பெரியர் அந்தணர் (கம்பராமாயணம்)

உலகில் எண்ணற்ற பெரியோர்கள், சமயகுரவர், சந்தான குரவர், சனகாதியர், ஆழ்வாராதியர், த்வைத, அத்வைத மஹான்கள், ஜீயர்கள், பரமசாரியார்கள் எனப் பலரும் நம்மில் வாழ்ந்து ஆன்மீகம் வளர்த்து என்றும் நம்முடன் வாழ்ந்து வருகின்றனர். நம் நாடும் நாமும் செய்த புண்ணியம் காரணமாக அந்தணப் பெருமக்கள் நால்வேதம், ஆறங்கம், ஆகமாதி சாஸ்திரங்கள் பலவும் கற்றுணர்ந்து ஆத்மார்த்த, பரார்த்தபூஜை புனஸ்காரங்களில் சிறந்து விளங்கியோர் களாயிருந்தனர். இத்தனை யோக்யதாம்சங்களும் தன்னகத்தே கொண்ட சீலராக வாழ்ந்தவரே நம் பெரும்மதிப்புக்குரிய சிவாச்சாரிய செம்மல், வித்தியாவித்தக விபூஷண பிதாமகர் சிவஸ்ரீ ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்கள். மறைந்தும் மறையாத மறையோன். மனதில் துணிவு, சொல்லில் தெளிவு, செயலில் திறமை, ஆத்மதத்வ, வித்யா தத்வ, சிவதத்வசொருபம், இவை அவரிடம் பலரும் கண்டு வியந்த சிறப்புக்கள்.

இன்று அவர் நம்மிடம் இல்லை. எனினும் அவரின் இடத்தை யாரே நிரப்ப வல்லார்? நமது சிவாச்சாரிய பெருமக்கள் கிரியாவிஷயங்களில் சட, கசட, மூட, மட்டிகளாக இருந்துவிடக் கூடாது என்பதற்காக பல சபைகளிலும் தம் சிம்மக்குரலில் கிரியாக் கிரமங்களை எடுத்து இடித்து உரைக்கும் திறன்கண்டோர், வசிஷ்டனோ இல்லை விஸ்வாமித்ர மாமுனியோ என வியந்ததுண்டு. என்னே இவர்தம் மேன்மை! யாருக்கு வரும் இந்தத் திறமை, கம்பீரம். மஹான்கள் பிறப்பதில்லை, தோன்றுகிறார்கள். இறப்பதில்லை என்றும் நம்முடன் வாழ்கின்றார்கள்!

ஓம் சாந்தி !

குருவருள் வேண்டி நிற்கும்
சிவாகமக்கிரியா பூஷணம்
சிவப்பிரம்மஸ்ரீ சாமி சிவநாதகுரு
(ரகுபதிக்குரு)
அமெரிக்கா.

# வைரவக் கடவுள்

வைரவக் கடவுளானவர் சத்வ குணத்தில் தாமத குணத்தவர். அவர் "சங்கார ருத்திரர்" எனப்படுவார். சகல தத்துவ சம்பந்தங்களையும் அளித்து ஆன்மாக்களை ஈடேற்றுகின்ற வடிவினைக் கொண்டவர். வைரவருடைய உருவத்துக்கு உடைசாத்துவது இல்லை. ஏனென்றால் "உலகப்பற்றை விடுவதுடன் உடற்பற்றையும் விடு" என்பதைக் காட்டுவதற்காம். வினைகள் நீங்கும் போதுதான் உடற்பற்று நீங்கும். வினைக்குக் காரணமானது ஆசை. ஆதலினாலே ஆசையைத் துறக்க வேண்டும். வினைகள் நீங்குவதும் உடற்பற்றை அழிப்பதுமான கோலமே வைரவர் கோலமாகும்.

பிரம்மா, விஷ்ணு ஆதியான தேவர்கள் சிவனை மறந்திருந்த காலத்திலே அவர்களைத் திருத்தி நல்வழிப்படுத்த வேண்டும் என்கிற பெருங்கருணைத் திறத்தினாலே வைரவப் பெருமான் நகத்தினாலே பிரம்மனுடைய தலையைக் கிள்ளினார். இது பற்றியே சேக்கிழார் பெருமான்

'பரமனை மதித்திடாப் பங்கையாசனன்

ஒரு தலை கிள்ளியே ஒழிந்தவானவர்'

என்கிறார். பங்கயம் என்றால் தாமரை. தாமரையை ஆசனமாகக் கொண்டவர் பிரம்மா. சிவத்தினின்றும் வேறாகாத சக்தியாகிய வைரவர் 'சிவகுமாரர்' எனப்படுவார்.

வைரவருடைய வாகனம் நாய். நாய் வேதத்தின் வடிவமாகக் கொள்ளப்படுகின்றது. வைரவக் கடவுளை நாம் வணங்கும் போது நாம் கேட்க வேண்டியது 'அகந்தையை நீக்கிக் காத்தருளும் படியேயாம்' வைரவக் கடவுளைப் பின்பற்றும் பரிவாரங்களும் வைரவ நாமம் உடையவை.

ஊரின் பாதுகாப்பின் பொருட்டும் பிணி நீக்கத்தின் பொருட்டும் வைரவப் பெருமான் வழிபடப்படுகின்றார். ஆலயங்களிலே பூசைகள் நிகழ்கின்றபொழுது அர்த்தஜாமப் பூசையிலே வைரவருக்கே இறுதியாகப் பூசை நடைபெறுகின்றது. இதன்பின்னர் முத்திரா தண்டம் வைரவக் கடவுளிடம் வழங்கப்படுகின்றது. இதனாலேயே வைரவக் கடவுளே ஆலயத்தின் காவலர் என்று சொல்லப்படுகிறார். காவல் தெய்வமாகிய வைரவக் கடவுளின் கோயில்கள் ஊரெங்கும் நிறைந்திருப்பதை நாம் காணலாம். அந்நியராட்சிக் காலத்திலே நமது சமய விழுமியங்கள் அழிந்துவிடாமல் பாதுகாப்பதில் இக்கோயில்கள் நிலைக்களனாக விளங்கின என்பதை மறுப்பதற்கில்லை.

முத்திராதண்டம் வைரவரிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பது ஆலயத்திற்குக் கவசமாக உள்ள சூக்கும நிலையை அசுரர்கள் நாசஞ்செய்துவிடாதிருப்பதன் பொருட்டேயாம். ஆதலினாலே காலையிலே பூசை முதலிய கைங்கரியங்களிலே முத்திரைக் கோலைக் கையில் கொண்டுள்ள வைரவரின் அனுமதி பெற்றே காரியமாற்றப்படுகின்றது. அதனாற்றான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் ஆகமங்களிலேயும் "க்ஷேத்திரபாலர் அனுக்ஞை" செய்யப்பட வேண்டிய கிரியைகளில் முதற் கிரியையாக விதிக்கப்பட்டுள்ளது. (க்ஷேத்திரம் - ஆலயம், பாலர் - காவல் செய்பவர் (ஆலயத்தைக் காவல் செய்பவர்) அவரிடம் அனுமதி பெற்று பள்ளியறையைத் திறந்த பின்பு தான் மூர்த்திகள் சாந்நித்யம் பெறுவர். பரிவாரத் தேவர்கள் தொழிற்படுவர். அருட்தொழிலும் தொடங்கும். ஆலயமும் ஆராதனைக்குத் தகுதிபெறும்.

வைரவக் கடவுளின் தோற்றமானது செஞ்சடையும், மூன்று கண்ணும், நீல நிறத் திருமேனியும் சூலம், பிரமகபாலம், பாசம், உடுக்கு ஆகியவற்றை ஏந்திய நான்கு கைகளும் வச்சிர தந்தங்களும் கோபக் குறிப்புடன் கூடிய சிரிப்பும், வேதமாகிய நாய் வாகனம் என்பன கொண்ட கோரமூர்த்தமாகும். வைரவருக்கு மங்கல வாரவிரதம், சித்திரைப் பரணி விரதம், ஐப்பசிப் பரணி விரதம் சிறந்தவையாகும். வைரவருக்கு இஷ்டமான செவ்வாய்க்கிழமை விரதம் பிடிப்பதென்றால் தை மாதத்து முதற் செவ்வாயில் இருந்து ஆரம்பிக்க வேண்டும்.

ஐப்பசி மாதத்திலே வைரவக் கடவுளைக் குறித்து அனுஷ்டிக்கும் விரதம் ஐப்பசிப் பரணி விரதமாகும். வைரவக் கடவுளுக்குப் பிரியமான நிவேதனமாக வடமாலை சாத்துவது வழக்கம். ஆலயத்திலே கடைசியாகச் செய்யப்படும் நிர்மல வைரவருடைய தரிசனம் ஆன்மாவின் விடுதலையைக் குறிப்பிடுவதாகும். இப்படியாக வைரவ வழிபாடு என்பது இந்துசமய மரபிலே சிறப்பிடம் பெற்றுள்ளது.

சிவாச்சாரிய குலபூஷணம்
**சிவஸ்ரீ டாக்டர் சாம் – மணிக்குருக்கள்.**
இராஜராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம்
விவேகானந்தமேடு,
கொழும்பு-13.

**மந்திரங்கள்**

***மந்திரங்கள் யாவுமே அட்சர வடிவானவை. எழுத்து வடிவானவை. மந்திரங்களுக்கு முக்கியமானது உச்சரிப்பும் ஸ்வரமும்தானன். இவைதாம் மந்திரங்களுக்கும் சக்தியைக் கொடுக்கக் கூடியவை. ஆகவே ஒரு மந்திரத்தை உச்சரிப்பவரின் தகுதியைப்பொறுத்தும் உச்சரிக்க வேண்டிய முறைகளைப் பொறுத்துமே அந்த மந்திரத்தினால் பலன் கிடைக்கிறது. அப்படி இந்த மந்திரங்களைச் சரியான முறையில் உச்சரிப்பதன் மூலமாகத்தான் நாம் புனிதத் தன்மையை அடைய முடியும்.***

*ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சைவத்தின் தொன்மை

உலகத்திலே பிறந்த ஆன்மாக்கள் நல்வழிப்படுத்தப்பட வேண்டும் என்பதற்காகவே மதங்கள் தோற்றம் பெற்றன அல்லது தோற்றுவிக்கப்பட்டன. இம் மதங்களுள் நமது சைவம் தொன்மையானது. இன்றுவரை அது தோற்றம் பெற்ற காலத்தைச் சரியாக அறுதியிட்டுக் கூறமுடியாதுள்ளது. அதன் ஆரம்ப கர்த்தா யார், அதனது காலம், தோற்றம் போன்றவற்றை இன்றுங்கூட அறிஞர்கள் ஆராய்ந்து வருகின்றனர். ஆயினும் மற்ற மதங்களின் தோற்றம் அதன் கர்த்தா என்றவாறு அம்மதங்களின் வரலாறுகள் திட்டமாக வரையறுக்கப்பட்டிருக்கின்றன. புத்த சமயத்தைப் புத்தரும், இஸ்லாமிய மதத்தை நபிகள் நாயகமும், கிறிஸ்தவ மதத்தை இயேசு கிறிஸ்துநாதரும் தோற்றுவித்தார்கள். அம்மதத்தினை வளர்ச்சியடையச் செய்தார்கள். அதாவது இப்பெரியார்களின் பிறப்பினைக் கொண்டே அம்மதங்களின் தோற்றம் பற்றிக் கூறிவிட முடியும்.

நமது சைவ சமயத்திலே முப்பொருளாகிய இறைவன், உயிர்கள், மலங்கள் என்றும் உள்ளவை என்று கூறப்படுகின்றபடியால் உலகம் தோன்றிய காலத்திலிருந்தே நிலையான இப்பொருட்களும் தோன்றியிருந்தல் வேண்டும். ஆதலினாலே சைவம் அநாதியானது என்று நாம் கூறலாம். சைவத்தின் பழம்பெருமையை விளக்கும் நகரங்களாக 'மொகஞ்சதாரோ, ஹரப்பா' (இன்றைய பாகிஸ்தானின் பகுதிகள்) என்பவை கூறப்படுகின்றன. அங்கே கிடைத்த பழமையான சிலைகளும், ஆவணங்களும் காலவரையறை கூறமுடியாத சிவவழிபாடு நடைபெற்றதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். மற்றும் தமிழ் நாட்டிற் காணப்படுகின்ற திருக்கயிலை, திருவண்ணாமலை, மதுரை, காஞ்சி, சிதம்பரம் என்னும் நகரங்களிலும் மற்றும் காசியிலும் காணப்படுகின்ற பழமையான சிவஸ்தலங்கள் சிவவழிபாடு தொன்மையானது என்பதற்கான சான்றுகளாகும்.

இவை தவிர இந்துக்களின் இருபெரும் காப்பியங்களான மகாபாரதம், இராமாயணம் ஆகியவற்றின் காலப் பகுதிகளை ஆய்ந்து பார்க்கையில், மகாபாரதத்திலே அருச்சுனன் சிவனை வழிபட்டு பாசுபதாஸ்திரம் பெற்றான் என்கிற செய்தி அறியக் கிடைக்கின்றது. இராமாயணத்திலே இராமன் இராமேஸ்வரத்திலே சிவவழிபாடு செய்ததாகக் கூறப்படுகின்றது. மேலும் இராவணன் ஈழத்தின் கோணேஸ்வரத்திலே தனது தாயாருக்காக சிவப்பிரதிஷ்டை செய்ததாகக் கூறப்படுகின்றது. இவ்வாறான அநேகமான புராணக்கதைகள் சைவ சமயமும் அதன் ஆணிவேரான சிவவழிபாடும் தொன்மையானது என்பதை எடுத்தியம்புகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதி இலக்கியங்களை நாம் எடுத்து நோக்குகிற பொழுது இறைவனின் பெயரைக் குறிக்கும் அநேக குறிப்புக்கள் காணப்படுகின்றன. 'திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள்', 'முதுமுதல்வன்', 'ஆலமர் கடவுள்', 'நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன்' என்கிற இப்பெயர்கள் சிவனையே சுட்டுவதாக அறிஞர்கள் கூறுகின்றனர். சங்க கால இலக்கியங்களில் சிவவழிபாடு சம்பந்தமான குறிப்புக்கள் காணப்படுகின்றன. இதுமட்டுமன்றி நமது சைவத்தை வளர்த்தவர்களான நாயன்மார்களின் பாடல்களிலே இருந்து சிவம் அநாதியானது, அதனிடத்தே உண்டான சைவம் அநாதியானது என்பது புலனாகின்றது. மேலும் மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்தவரான திருமூலர் 'அன்பே சிவம்' என்கிற அருள்வாக்கை நமக்கு அருளிச் சென்றதன் மூலமும் நமது சைவம் அன்புமயமானது என்பது புலனாகிறது. அவருடைய திருமந்திரத்திலே பல பாடல்களிலே சைவம் அநாதியானது என்று கருதுவதற்கான எடுகோள்கள் உள்ளன.

சைவ சமயமானது ஆதிகாலத்திலே பாரதமும் அதனைச் சார்ந்த பகுதிகளும் தவிர இன்றைய சில இஸ்லாமிய நாடுகளிலேயும் பரவியிருந்ததற்கான சான்றுகள் உள. உதாரணமாக சிரியா, எகிப்து, ஈராக், கம்போடியா போன்ற நாடுகளை நாம் குறிப்பிடலாம்.

*(மறைந்த சிவஸ்ரீ சாம்பசிவாச்சாரியார் அவர்களின் கனிஷ்ட புதல்வன் அமரர் – சிவஸ்ரீ – கௌரி கணேசக் குருக்களின் பதிவேட்டிலிருந்து தொகுக்கப்பட்ட இச்செய்தி அவருடைய நினைவாக இடம்பெறுகிறது.)*

### பசுவைத் தெய்வமாக வழிபடும் காரணம்

பசுவைத் தெய்வமாக போற்றுவது இந்துக்களுடைய வழக்கம். எதற்காக இந்தச் சிறப்பு? பசுவின் பால் மிகச் சிறந்த உணவு. இதைக் குழந்தைகளுக்குக் கூட கொடுக்கலாம். குறையேதுவும் இல்லாது போஷிப்பவர்களுக்குத் தாராளமாக அது பால் தருகிறது. பசுவின் சாணம் கிருமிகளைக் கொல்லக் கூடிய சக்தி கொண்டது. அதனால்தான் வீடு மெழுக, வாசல் தெளிக்க இதைப் பயன்படுத்துகிறார்கள். பசுவின் பால், நெய், சாணம், கோமயம், தயிர் ஆகிய ஐந்தையும் பஞ்சகவ்யம் என்று கூறுவர். இது நோய் போக்கும் குணம் உடையது. எனவே பசுவைத் தெய்வமாகக் கொண்டாடுகிறோம்.


*காமகோடி பீட சங்கராச்சாரியார்*
*ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பீடாதிபதியின் குருவாகிய சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்களுடன் பீடாதிபதி



நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் பீடாதிபதி அவர்களுக்கு "சிவாகமசிரோமணி" பட்டம் வழங்கிய போது

வீணியவரை ராஜராஜேஸ்வரி அம்பாள் கும்பாபிஷேகத்தின்போது கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்த பீடாதிபதிக்கு சிவஸ்ரீ மணிவண்ண சிவாச்சாரியார் குருவணக்கம் செலுத்துகிறார்






நல்லை ஆதீன இரண்டாவது குருமஹா சந்நிதானத்தின் பீடாரோஹண விழாவின்போது பீடாதிபதிக்குப் பொன்னாடை போர்த்திக் குருவணக்கம் செய்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குருபீடாதிபதி அவர்கள் 1990



தனது குலதெய்வம் ஸ்ரீதேவி ராஜராஜேஸ்வரி
அம்பாளுக்கு நவசக்தி அர்ச்சனையின்போது
குருபீடாதிபதி அவர்கள் 1993ல்



பேத்தி ஜெகதீபாவின் பிறந்த நாள்
விழாவின்போது குருபீடாதிபதி ஆசி வழங்குகிறார்



திருமண விழாவொன்றில் குருபீடாதிபதி தம்பதிகள்



பேத்தி ஜெகதீபாவின் பிறந்த நாள்
விழாவின்போது குருபீடாதிபதி ஆசி வழங்குகிறார்



குருபீடாதிபதியை விப்ரசிரேஸ்டர் திரு. குஞ்சிதபாதக்
குருக்கள் வாழ்த்துகிறார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

**S. KETHEESWARANATHA KURUKKAL**
**"CHIEF PRIEST"**
**HINDU TEMPLE SOCIETY OF CANADA**
**RICHMOND HILL**
**CANADA.**

# சைவ சமய சேவை

சிவாகமஞான ஜோதி, நித்திய கலாநிதி, அகில இலங்கை சர்வதேச இந்து மத குருபீடாதிபதி டாக்டர் சிவஸ்ரீ ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களின் ஞாபகார்த்தமாக நடைபெறும் எண்பதாவது ஆண்டு ஜயந்தி விழாவை முன்னிட்டு ஜயந்தி விழாமலர் ஒன்றும், "ஆத்மபஞ்சகம்" எனும் (C.D.) இறுவெட்டு ஒன்றும் வெளியிடப்படுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம்.


குருக்களைய்யா அவர்கள் ஈழத்திலும் தமிழ்நாட்டிலும் நன்கு பிரபலமானவர். பல கும்பாபிஷேகங்களை முன்னின்று நடாத்திய பெருமகன் அவர். அவர் வைதீக ஆபஸ்தம்பபூர்வ கிரியை என்ற நூலையும் மற்றும் பலவைதீக நூல்களையும் வெளியிட்ட பெருமைக்குரியவர். தற்சமயம் அவர் ஞாபகமாக அவர்தம் புதல்வர் சிவஸ்ரீ சாம்பசிவ ஜெகதீஸ்வரக் குருக்கள் அவர்கள் இந்த மலரை வெளியிடுவது தற்காலத்தில் அனைத்துலக நாடுகளில் வாழும் சிவாசாரியர்கட்கு மிகவும் பிரயோசனத்தைத் தரக்கூடியது. அனைத்து அந்தணப் பெருமக்களும் இவ்விருவெட்டைப் பெற்று தியானம், பிரணாயாமம், பூத சுத்தி போன்ற ஆன்ம சுத்திகளைச் செய்து பல நன்மைகளை அடையலாம். இந்த வெளியீட்டு விழாவில் சிவாசாரியார் அவர்கள் இல்லாதது எமக்கு பெரும் குறையே. மேலும் இந்த வெளியீட்டு விழா மிகவும் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல கௌரியம்பாள் சமேத ஸ்ரீகேதீஸ்வரப் பெருமானின் திருவருளையும், கனடா ரிச்மண்ட் ஹில் இந்து ஆலயத்தில் வீற்றிருக்கும் ஸ்ரீ வரசித்தி விநாயகப் பெருமானின் திருவருளையும் வேண்டி நிற்கின்றேன்.

சுபம்

கண்ணப்பாக் குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# Brammasri G. Sabaratna Sarma

(Chief Priest)
Sivan Kovil - Sithankerny

# பிரம்மஸ்ரீ ஞா. சபாரட்ண சர்மா

(பிரதம குரு)
சிவன் கோவில் – சித்தன்கேணி.

## என்றும் நெஞ்சை விட்டு அகலா அருள் ஜோதி

எமது சிவபுண்ணிய பூமியில் மகாபுருஷர்கள் அனேகர் காலத்திற்குக் காலம் தோன்றித் தமது சிவ மானச பூஜையில் திளைத்து சிவானந்தமாக வாழ்ந்ததோடு மட்டும் அல்லாமல், தம்மைச் சார்ந்த மக்களையும் ஆன்மீக வழியில் ஈடுபடுத்திச் சென்றார்கள். இதன் அருட் பலனால் இன்று பரவலாக எங்கும் ஆன்மீக நிகழ்வுகள் நடந்து வருவதைக் காணமுடிகின்றது. இது மகா புருஷர்களாகிய பெரியவர்களின் நிறைஞான அருளின் விளைவே என்பதை நாம் உணர்ந்துகொள்ள முடிகின்றது. இப் பெரியார்களே அனைவராலும் குருவெனப் போற்றப்படுபவர்கள் ஆவர். குரு என்பவர் அஞ்ஞான இருளை அகற்றுபவர். மக்களின் இகபர வாழ்விற்கு வழி சமைப்பவர். அந்த வகையில் குரு என்னும் பதத்திற்குப் பொருளாய் விளங்கி இந்து குரு பீடத்தினை அலங்கரித்தவர் அருள் ஜோதி - ஸ்கந்த - சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்கள். இவர் தான் பெற்ற வேதாகம, புராண, இதிகாச வைத்திய, மாந்திரிக அறிவு ஆற்றல் அனுபவத்தைக் கொண்டு மக்களின் மனமாயா இருளைப் போக்கி ஆன்மீக வழியைக் காட்டி அவர்களை நல்வாழ்வுறச் செய்தவர். குரு பாரம்பரியத்தினைத் துலங்கச் செய்தவர். தோற்றத்தாலும், சிவ பூஜை பலத்தாலும் அருள் வடிவான சிவமே போலக் காட்சிதந்தவர். அவரது எண்பதாவது ஜெயந்தி தின நன்நாளில் அவர் செய்த ஆன்மீகத் தொண்டுகளையும் அவர் கூறிய நற்செய்திகளையும் நாம் எமது மனதிலே நிறைத்துக் கொள்கின்ற போது அவர் என்றும் எம் நெஞ்சை விட்டு அகலா அருள் ஜோதியே.

சுபம்

குருவருளை வேண்டி நிற்கும்
**ஸ்ரீஞான – சபாரத்தினசர்மா**
பொருளாளர் சிவானந்த குருகுலம்
கடைச்சாமி ஒழுங்கை,
நீராவியடி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமறையும் திருமுறையும்

உலகம் தோன்றிய நாள் முதல் இறை வழிபாடு இருந்து கொண்டுதான் இருக்கிறது. பல்வேறு சமயங்களும் பல்வேறு விதமாக இறைவழிபாட்டுண்மைகளைக் கூறுகின்றன. அவைகளுக்கிடையே பேதங்களும் பல வாறாய் அமைந்திருக்கிறன. அவ்விறைவழி பாட்டினைச் செய்யும் மக்கள் பிரதானமாக இந்துசமயம், கிறிஸ்தவ சமயம், இஸ்லாம் சமயம், புத்த சமயம் என்பவற்றின் அடிப் படையிலேயே தமது வழிபாட்டினைச் செய்கி றார்கள். எனினும் இப்பிரதான சமயங்களுக் குள்ளும் பல பிரிவுகள் இருக்கத்தான் செய்கின்றன. இந்து சமயத்தை எடுத்துக் கொண்டால் அதில் சைவம், வைணவம் சாக்தம், சைவம், காண பத்தியம் கௌமாரம், சௌரம் என ஆறு பிரிவுகள் இருப்பதைக் காணலாம். எனினும் நாம் எதுவித பேதமும் இன்றி இச்சமயப் பிரிவுகளின் கடவுளர்களை வழிபட்டு வருகிறோம். இப்பேதமற்ற சிந்த னைக்கு வித்திட்டவர் ஆதிசங்கர பகவத் பாதாள்

நமது இந்து சமயம் புராதனமானது. காலத்துக்குக் காலம் ஞானிகள், பெரியோர்கள். சமய குரவர்கள். போன்றோர் தோன்றி சமயத்தைப் பரப்பியும் வந்துள் ளனர். வேத ஆகமங்கள் எமது சமயத்தின் வித்து. எம்பெருமானின் மூச்சுக் காற்றில் இருந்து பிறந்தது தான் வேதம் என்பர். வடமொழி வேதபாஷை என்று கூறப்படு கிறது. இருக்கு, யஸுர், சாமம், அதர்வம் என்று நான்கு வேதங்களும், காமியகம் முதலாய் இருபத்தெட்டு ஆகமங்களும் இறைவனால் அருளப்பட்டவை என்றும் ஆன்ம ஈடேற்றத்திற்காக அவை கூறும் உண்மை வழி நின்று மக்கள் உயர் நிலை அடைய வேண்டும் என்றும் கூறப்படுகின்றன.

இறைவ வழிபாட்டில் ஒவ்வொரு ஆன்மாக் களும், இவ்வாகமங்கள் கூறும் சரியை, கிரியை யோகம், ஞானம் என்னும் நான்கு பிரிவுகளின் அடிப்படையில் தத்தம் தகுதி நிலைக்கேற்ப அவ்வவ் மார்க்கத்தின் வழி நின்று முக்தி அடைகின்றன.

வேதங்களின் விரிவாக அமைந்த புராணங்கள், இறைவனின் ஐந்தொழில்களின் வேத வாக்கியப் பொருளை தெளிவுபடுத்தி அறிவிப்பனவாகும். இவை போன்றவையே இதிகாசங்கள். புராணங்கள் வேதங்களில் உள்ள கதைகளை விளக்கிப் பெரிய கதை களாகச் சொல்வன. எனவே வேதங்களின் பொருளை எமக்கு சுவைபடக் கூடக்கூடியன வாக அமைந்தவையே. புராணங்களும் இதிகாசங்களுமாகும். புராணங்கள் பதினெட்டு என வகைப்படுத் தப்பட்டுள்ளன.

இந்து சமயத்தை சனாதன தர்மம் என்றும் கூறுவர். எப்போது எக்காலத்தில் தோன்றியது என்று எவராலும் கூறமுடியாது. சனாதனம் என்றால் தொடக்கம் முடிவும் இல்லை என்று பொருள். ஏனைய சமயங்க ளுக்கு தோற்றக் காலம் இருக்கிறது. மாணிக்கவாகர் எமது இறைவனை "ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதி" என்று பாடியுள்ளார். சமயக்குரவர்களான சம்பந்தர் முதலியோர் தேவார திருவாசகங் கள் மூலம் சமயத்தைப் பரப்பியவர்கள். இவர்கள் திருவருட்பாக்கள் மூலம் இறைவனைப் பாடித் துதித்து அவன் புகழ்பாடி சமயத்தை வளர்ந்தனர். எனவே திருமறைகள் என்பது சிவபெருமானின் புகழைச் சொல்லும் அருட்பாக்களாகும். இவை தெய்வத் தன்மை உடையவை. துதிப்பாடல்கள், பன்னிரு திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் வழிபாடு செய்யும் இடங்களை ஆலயங்கள் அமைந்துள்ளன. இவ்வாலயங்கள் கட்டப்படும் விதிமுறைகளை ஆகமங்கள் கூறுகின்றன. ஆகம விதிகளுக்கிணங்க உருவங்கள் அமைத்து பதவின்யாசகம் செய்து எந்தெந்த பதங்களிலே எந்தெந்த தெய்வத்தை வைக்க வேண்டும் என்று கூறப்படுகின்றதோ அதற்கமைய அவற்றை வைத்து, கல்லால் அமைக்கப்பட்ட உருவாக்கப்பட்ட விம்ப ரூபத்திற்கு மந்திர ரூபமாகக் கலைகளை பதிப்பித்து பூஜை வழிபாடுகள் செய்யப்படும் பொழுது இறை அருள் கிடைக்கப் பெறுகின்றது.

இவ்வாறு பூசை வழிபாடுகள் செய்வதற்கு உகந்ததாகக் கொள்ளப்படும் இடமாக அமைவனவே ஆலயங்கள். ஆலய வழிபாட்டுமுறைகளிற் சிறப்பிடம் பெறுவன மந்திரங்கள். ஆத்துமாக்களுக்கும் இறைவனுக்குமிடையிலான மந்திரங்கள் வடமொழியில் அமைந்துள்ளன. தமிழில் உள்ள ஒரு எழுத்தைச் சுட்டும் பல எழுத்துக்கள் வடமொழியில் உள்ளன. (உ+ம்) க என்ற தமிழ் எழுத்துக்கு வடமொழியில் ஐந்து வெவ்வேறு எழுத்துக்கள் உள்ளன. ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு வரி வடிவமும் வெவ்வேறு ஒலியமைப்பும் இருக்கின்றது. இந்த உச்சரிப்புகளை அதன் உண்மையான த்வனியோடு ஓதுதல் வேண்டும். வேத மந்திரங்களை மிக அட்சர சுத்தியாகவும் பொருளை உணர்ந்தும் ஓதுதல் வேண்டும். வேத மந்திரங்களுக்கும் அதன் சப்தத்திற்கும் அதிக சக்தி உண்டு. அட்சரத்திற்கும் அவற்றைச் சொல்ல ஸ்வரதத்திற்கும் அதிக சக்தி உண்டு என்பதை உணர வேண்டும். இதனை முறையாக உச்சரித்து ஓதுதல் மூலம் இறைவழிபாட்டுக்கு தெய்வ கடாட்சம் கிடைக்கப் பெறுகிறது. வடமொழியின் முக்கியத்துவம் இதுதான். ஆயினும் சிலர் தமிழிலே மந்திரங்களைச் சொல்ல வேண்டும் என்று ஆர்ப்பரிக்கிறார்கள். மந்திரங்களைத் தமிழாக்கி அதன் தனித்தன்மையான ஓசை நயத்தைப் பாழாக்குவதாகவே அவை அமையும். தேவார திருவாசகங்களுள் எமது பொக்கிஷங்களே அவற்றை ஓதுவதிலே பிழையில்லை. சமய குரவர்கள் தமது பக்திப் பரவசத்தை தமிழிலேயே தேவார திருவாசகங்களிலே புலப்படுத்தினர். அவற்றைத் தமிழிலே பாடியே முக்தியும் பெற்றனர். அதை நாமும் பாடி இன்புறலாம்.

இதனை விடுத்து தமிழிலே அர்ச்சனை செய்ய வேண்டும்.என்று ஆரவாரம் செய்வது ஏன்? முறைப்படி பஞ்ச புராணத்தை ஓதுங்கள். அவற்றை மனனம் செய்யுங்கள். அதனை வழிபாட்டு முறையிலே சேர்த்துக் கொள்ளுங்கள். ஆனால் இறைவனால் அருளிச் செய்யப்பட்ட வற்றை உள்ளதை உள்ளவாறே ஏற்றுக் கொள்ளுங்கள். அவை இந்து சமயத்தின் உயிர் நாடிகள். உயிர் மூச்சு. இவற்றை இழப்பது சமயத்தை இழப்பதற்குச் சமனாகாதா?

தெய்வீகத் தன்மை வாய்ந்த அவற்றுக்கு நாம் மாசு கற்பிக்காது இருத்தலே நாம் செய்யம் ஆன்மீகச் சேவையாகும்.

எனவே சைவ சமயத்தவர்கள் யாவருமே பெருமைக்குரிய நல்லை நகர் தந்த நாவலின் சைவ அனுஷ்டான விதி முறைகளுக்கிணங்க அவற்றுக்கமைய ஒழுகி இறை அருளைப் பெறுவோமாக.

சிவஸ்ரீ சாம்பசிவநாசன்
சாம்பசிவ – ஜெகதீஸ்வர குருக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# குருபீடாதிபதியின் சிறப்புக்கள்



சீரும் திருவும் பொலிவும் புண்ணியபூமியாம் இலங்கை மணித் திருநாட்டில் மகுடமெனத் திகழும் யாழ்ப்பாணமதில் நீர்வள, நிலவளங்களால் அருளும், பொருளும் சிறந்து ஆகமும் வேதமும் சைவமும் நற்றமிழும் தழைத்தோங்கும் நாயன்மார்கட்டில் சிறப்புடன் குன்றின் தீபமாய் வாழ்ந்த குருநாதனே நமஸ்காரம்

உறுதியும் திடமும் கொண்டு உயர் பண்பினால் ஓங்கி அந்தணர்க்குரிய அறவொழுக்கங்களினின்றும் வழுவாது, நற்குருவாய், நல்லாசானாய், சொல்லும் செயலும் ஒன்றாய், அன்புடனும், ஆதரவுடனும் நற்பண்பாளனாய்ப் பழகி பல் கிரியைகளையும், நற்கருமங்களையும் கற்பித்த நற்குருவே நமஸ்காரம்.

யாவரும் போற்றிட ஆல்ய நிர்மாணம் முதல் பூஜா கிரியைகள் ஈறாய், ஏற்படும் ஐயங்கள் தீர்த்து வேத ஆகம, திருமுறை விளக்கங்கள் அடியவர்க்கும் சிஷ்யர்களுக்கும் பக்குவமாய் உரைத்து, வாழ்வின் இலக்கணமாய் வாழ்ந்த பெருந்தகையே நமஸ்காரம்.

மணிகளுள் உயர்ந்தது மாணிக்கம், நதிகளில் உயர்ந்தது கங்கை, மலைகளுள் உயர்ந்தது இமயம், மாதங்களில் உயர்ந்தது மார்கழி, தலங்களுள் உயர்ந்தது காசி, சமயங்களில் உயர்ந்தது சைவம். மனங்களில் உயர்ந்தது மாசிலா மனமே. என்றவாறு அந்தணர்குல திலகமாய் ஞானாசிரியனாய் மக்கள் அஞ்ஞானத்தைப் போக்கி ஞானத்தை உபதேசித்த குருமணியே நமஸ்காரம்.

இளமையிற் கல்வி சிலையில் எழுத்து என்ற கருத்துக்களை உள்ளத்தே ஊன்றிய குருமணியே, சிறப்புறவே சிவபூஜா நெறி முறையில் அகத்தூய்மை புறத்தூய்மையாம், ஒழுக்கம் பணிவு நேர்மைகளை உயர்த்திக் கருத்தினொடு பூஜை செய்த இந்துமத குருபீடாதிபதியே நோய் பிணிகள் நீங்க திருநீறு பூசி, நூல் கட்டி, விஷம் நீங்க, பார்வை பார்த்து ஆறுதல் கூறி மக்களை வழிப்படுத்திய ஆசானே நமஸ்காரம்.

அன்னவரின் எண்பதாவது ஜெயந்தி விழா கொண்டாடும் திருவாதிரை நன்னாளிலே தான தர்மங்கள் தான் வழங்கி, மலர்களால் அர்ச்சித்து, பூமாலை, புகழ்மாலை தான் அவர் பாத கமலங்களுக்குச் சாத்தி எல்லாம் வல்ல மஞ்சவனப்பதி முருகப் பெருமானின் அருளோடும், ஆசிகளோடும் மைந்தர்கட்கும், மாணவர்கட்கும், அடியவர்க்கும் வையகத்தே வாழ்வதற்கு வானகத்தில் இருந்து நல்லாசி தந்தருளும் அருள்ஜோதியே நமஸ்காரம்.

ஓம் சாந்தி....

சிவஸ்ரீ வை. சுப்பிரமணியக் குருக்கள்
மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்,
கொக்குவில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# வரசித்தி விநாயகர் தேவஸ்தானம்

## ஜெனீவா, சுவிற்சர்லாந்து

## குருகுல வாசம்



இந்த லோகத்திலே நாம் இருக்கின்ற பொழுது நன்றாக இருப்பதற்காகவும், துஷ்டர்களாலும் திருடர்களாலும் கஷ்டம், பயம் உண்டாகாமல் இருப்பதற்காகவும், ஜனங்களுடைய இகலோக சௌக்யங்களை ஏற்படுத்தித் தருவதற்காகவும் ராஜாங்கம் அமைத்து ராஜன் ஒருவனை வைத்தார்கள். ஆனால் இப்போது ராஜா இல்லை. மந்திரி சபை என்று வைத்துக்கொண்டிருக்கிறோம். எதுவானாலும் பிரஜைகளாகிய ஜனங்களைக் காத்து ரக்ஷிக்க பலர் ராஜாங்கப் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டு சேவை செய்கிறார்கள்.

இந்த லோகம் நிலையானதல்ல. இங்கிருந்து கொண்டு சாஸ்வதமான இன்னொரு லோகத்திற்குப் போவதற்கு இடம்பிடிக்க வேண்டும். அதற்கு இங்கு உட்பகைவர்கள் அறுவர் நம்மைத் தடுக்கிறார்கள். காமம், குரோதம், லோபம், மோகம், மதம் (செருக்கு), மார்ச்சர்யம் (பொறாமை) என்று அறுவர்.

நாம் அடுத்த நாடு போக ராஜாவின் அனுமதி வேண்டும். அதேபோலப் பரலோகம் போவதற்கு ஆச்சாரியார் அனுமதி வேண்டும். அவரால்தான் சாஸ்வதமான லோகம் போவதற்கு திருவருளும் குருவருளும் கூடிவர, ஞானமும் வேண்டும். இதையெல்லாம் நோக்கமாகக் கொண்டுதான் பிராம்மணச் சிறார்களைப் பால பருவத்திலேயே பிரம்மச்சரிய ஆச்ரமம் ஆரம்பித்து சௌள, உபநயந சடங்குகளைச் செய்து குருகுல வாசம் பண்ண வைத்தார்கள். ஆத்ம வித்யா சாஸ்திரங்களையும் காவியங்களையும், நாடகங்களையும் கூடக் குருகுலத்தில் கற்றுக்கொடுத்தார்கள். குருகுலத்திலே வாசம் பண்ணி குருவிற்குரிய பணிவிடைகளைச் செய்து கொண்டும், சிறந்த ஒழுக்கங்களையும் மாணவர்கள் பழகிக் கொண்டும் குரு - சிஷ்யனுக்கிடையே ஒரு நெருக்கத்தை ஏற்படுத்திக்கொண்டும் செயலாற்றினார்கள். இதனாலே குருவானவர் அந்த மாணவனைச் சிறந்த வழியிலே இட்டுச் சென்றார். ஆயினும் தற்காலத்திலே குருகுலவாசம் என்பது அருகிக்கொண்டு வருகிறது அல்லது அப்படியொரு முறை இல்லை என்று சொல்லக்கூடிய நிலையும் காணப்படுகிறது.

பிரம்மச்சரியம் என்கிற குருகுல வாசத்திலிருந்து மாணவன் ஆனவன் சமாவர்த்தனம், விவாஹம் எனப்படுகின்ற கிருஹஸ்தாச்ரமத்திலே நுழைகிறான். அதிலே தாம்பத்யம், நற்சந்ததி விருத்தி முதலான சகல போகங்களையும் விதி முறைப்படி அனுஷ்டித்துக்கொண்டு மலரானவுடன் ஆரம்பித்து பிஞ்சு பிடித்ததும் வைராக்கியத்தோடு குடும்பத்தைவிட்டு வைதிக கர்மாவை விடாமல் அனுஷ்டித்து, வானப்ரஸ்த ஆச்ரமத்தை அடைந்து, ஜபம், தபம் இயற்றிக் காயாகிக் கனிகிற நிலையில், ஸந்நியாஸம் பெற்று சாஸ்வத பரமுத்தி பெறுகிறான். இதற்கு நான்கு படிகள் வைத்தார்கள். முத்திக் கரையைக் காண்பதற்கு தர்ம சாஸ்திரங்கள் ஏணியாக அமைந்தன. நான்கு படிகளையும் தாண்டினால் முத்திக் கரைசேரலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பேரானந்த மோக்ஷத்துக்கு எங்கே அஸ்திவாரம் போட்டிருக்கிறது என்றால் "சை சவே அப்யஸ்த வித்யாநாம்" பிரம்மச்சரிய குருகுலவாச படிப்பிலேயே முகப்பட்டா போடப்பட்டிருக்கிறது. அப்பொழுது போடப்பட்ட தர்ம நெறி அடிப்படைதான் ஜன்மம் முழுக்கக் கை கொடுத்துக்கொண்டு வந்து முதுமையிலே பிரம்ம ஐக்கியத்தை சாதிக்கத் துணைசெய்கிறது.

ஆகவே குருகுலவாசம் ஒரு சன்மார்க்கம். ஒற்றையடிப்பாதை, குழந்தைப் பருவத்தை ஒழுங்கில் கொண்டு செல்லும் ஒற்றையடிப்பாதை. அங்கு ஒழுக்கம், பணிவு, அடக்கம், விநயம், கட்டுப்பாடு கண்ணியம் என்பவை நெறிப்படுத்தப்படுகின்றன. துன்மார்க்கமென்ற தார் றோட்டுக்குப் போவிடாது தடுப்பது இக்குருகுலவாசம்.

(உப) நயநம் என்றால் என்ன பொருள்? உப என்றால் சமீபத்தில், நயனம் என்றால் அழைத்துப் போவது - சமீபத்தில் அழைத்துப் போவது என்பது பொருள். யாருக்குச் சமீபத்தில்? குருவுக்குப் பக்கத்தில். இதுதான் குருகுலவாசம், முதலில் அடக்கம் வேண்டும் என்பதற்காகவேதான் அந்நாள் தொட்டு குருகுலவாசம் செய்யப்பிள்ளைகளை அனுப்பி வைத்தார்கள். யக்ஞோபவீதம் என்ற (பூணூல் சடங்கு) கர்மாவைச் செய்து சீடனைப் பார்த்து பிதா 'பிக்ஷா சர்யம் சர' என்கிறார். பிச்சை வாங்கிக் குருவிடம் கொடுத்து அதில், அவர் கொடுப்பதைச் சாப்பிடும் நியமத்தை அறிவுறுத்தி மேற்கொள்ளச் சொல்கிறார். சிஷ்யன் அவ்வாறே பிச்சை வாங்கி வந்ததைக் குருவிடம் கொடுக்க அவர் பத்தினியிடம் கொடுக்கிறார். குரு உத்தரவுப்படி குருபத்தினி போட்டுத்தான் சாப்பாடு கிடைத்தாக வேண்டும் என்கிற அடக்கம் வேண்டும். பணக்கார வீட்டுப் பிள்ளையானாலும் குருகுலவாசத்தின் போது கோவணத்தைக் கட்டிக்கொண்டு வீடு வீடாகப் பிராம்மண அக்ரஹாரத்தில் சென்று 'பவதி பிக்ஷாம் தேஹி' என்று பிச்சை வாங்க வேண்டும். ஏன் இப்படி மகரிஷிகள் வைத்தார்கள், இவனிடத்தில் அகங்காரம் தலைதூக்கக்கூடாது, அடக்கம் வரவேண்டும் என்றுதான் செய்தார்கள்.

மேலும் காமம் உள்ளே புகுவதன் முன்பே காயத்திரி புகுந்து இவனைப் பரிசுத்தப்படுத்த ஆரம்பித்து விடுகிறாள். எனவே தினமும் மூன்று வேளை சந்தியா வந்தனம், தர்ப்பணம், காயத்ரி ஜபம், சமிதாதானம் என்பவற்றை முறைப்படி செய்துவர உட்பகைகள் நம்மைக் கெடுக்க மாட்டா. இவ்வாறு வேதத்தையும் மற்ற சாஸ்திரங்களையும் கற்பதற்கு 12 வருஷங்கள் ஆகும். இளமையிற் கல் என்கிறார் ஔவை. இளைமையிற் கல்வி சிலையிலெழுத்து என்பர்.

குழந்தைகளைத் தங்களோடு வைத்துக்கொண்டு பாடம் புகட்டினால் அது அவனுக்கு ஏறாது. இரண்டு காரணம் உண்டு. ஒன்று அப்பா பிள்ளை என்றால் அப்பா பிள்ளைக்குச் செல்லம் கொடுப்பார். பிள்ளையும் அடங்கி நடக்காமல் திரியப்பார்ப்பான். அதனால் அடக்கம் என்கிற வித்தையின் ஆதாரப் பண்பே இல்லாமற் போகும். வெறும் படிப்பினால் என்ன பிரயோசனம்?

குருகுல வாஸம் செய்யும் சிஷ்யனிடத்துக் குருவுக்குப் பெரிய பொறுப்பு இருக்கிறது. அவனுடைய வாழ்வே அவருடைய கையில்தான். பள்ளிக்கூடங்களிலும் காலேஜ்களிலும் படிக்கும் மாணவரிடத்து ஆசிரியருக்கு இவ்வளவு பொறுப்புக்கிடையாது. வந்தால் கல்வி புகட்டி வயிற்றுப்பாட்டுக்கு வழிசெய்து விடுவார்கள். ஆனால் குருகுலவாசம் அப்படியல்ல.

'ராஜா ராஷ்ட்ர க்ருதம் பாபம் ராஜா பாபம்
புரோஹிதம் பர்த்தாரம் ஸ்திரீ க்ருதம் பாபம் சிஷ்ய பாபம்

அந்த வகையிலே தனக்கென ஒரு குரு-சிஷ்ய பரம்பரையை உருவாக்கி மறைந்தும் மறையாத மாணிக்கமாய் எம்மத்தியிலே ஒளி வீசிக்கொண்டிருக்கும் இலங்கை இந்து மத குருபீடாதிபதி சிவாகமஞானி, டாக்டர் ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சார்யார் அவர்களின் பாதார விந்தங்களை மனதிற் பதிக்கின்றேன்.'

வணக்கம்

சிவஸ்ரீ து. உமாசங்கரக் குருக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# சங்கானை இலுப்பைத்தாழ் முருகமூர்த்தி தேவஸ்தான தர்மகர்த்தாவின் நினைவுகளில்...

இலங்கை இந்துமத குருபீடாதிபதியாகத் திகழ்ந்தவரும், எங்கள் ஆலய ஆதீன குரு சிவநித்தியானந்தக் குருக்களின் அன்பு மாமனாருமாகிய நாயன்மார்கட்டு சாம்பசிவக் குருக்களய்யா அவர்கள், எங்கள் ஆலயத்திற்குப் பல தடவைகள் வருகை தந்திருக்கிறார்.

மஹோற்சவம், திருவாசகவிழா லக்ஷார்ச்னை போன்ற முக்கிய வைபவங்களுக்கு வருகைதந்து சிறப்பித்தவர். அவர் நிகழ்த்திய ஆன்மீகப் பேருரைகள் இன்றும் எமது மனங்களிற் பசுமையாகவுள்ளன.

அவரது மந்திரஞ் சொல்லும் பாணியும், த்வனியும், தோற்றப் பொலிவும், அருளொழுகும் பார்வையும் எங்களை மிகவுங் கவர்ந்தவை. அவரிடம் ஆசிபெற்ற பாக்கியவான்கள் என்பதில் எங்களுக்கும் பெருமை.

நிறைவாழ்வு வாழ்ந்து வானுறையும் தெய்வமாகிவிட்ட தெய்வத் திருவுருவின் பாத கமலங்களை மனதால் வழுத்தி 80வது ஜெயந்தி தினத்தில் அவரை நினைவுகூருவோமாக.......

குருபாதம் துணை

சைவசேவாமணி
அ.க. சண்முகதாஸன்,
துவாரகை,
சேச் றோட்,
சங்கானை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆகம வழிபாட்டில் பாலஸ்தாபனத்தின் சிறப்பும் விலக்கப்பட வேண்டிய விக்கிரகங்களும்

## ஆகம சிற்ப ஆய்வுக் கட்டுரை

பிரதிஷ்டா பூஷணம் சிவாகமஞானபானு சிவாச்சார்யார்

**சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள்**

நயினை யாழ்ப்பாணம் - இலங்கை

"அரிது அரிது மானிடராதல் அரிது" என்ற முதாட்டியின் வாக்கிற்கு அமைய மக்களாகப் பிறந்தவர்கள் எல்லோரும் பெருமை கொள்ள வேண்டும். மனிதன் என்ற சொல் "மன்" என்ற வடமொழி வினையடியில் இருந்து பிறந்தது. அதை அடிப்படையாக வைத்துத்தான் பல மொழிகளிலும் மனிதன் குறிப்பிடப்படுகிறான். "மன்" என்றால் "நினைத்தல்' என்பது பொருள். நினைக்கக்கூடிய கருவியாகிய மனதை வைத்திருப்பவன் மனிதன். யாரை நினைக்க வேண்டும் என்ற கேள்விக்கு அப்பர் சுவாமிகள்,

வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்ந்த சென்னியும்
தந்த இறைவனை என்று கூறுவார்.

அப்படி இறைவனை நினைக்கத்தான் நமது முன்னோர்கள் கோயில்கள் என்ற இறை நிலையங்களை நிறுவியுள்ளனர்.

ஆதிகாலம் தொட்டே இந்து மதத்தவர்க்கு இறைவன் என்ற ஒரு உயர்பொருள் உண்டு எனும் எண்ணம் தோன்றியிருக்க வேண்டும். ஆதலால்தான் ஆதியில் உருவத்தைப் பார்க்க முன் இறை உயர்வைப் பார்த்தனர். இயற்கைச் சக்திகளை இறைவனாகக் கண்டு வழிபட்டனர். இவற்றை வேதங்களில் சிறப்பாகக் காணலாம். பின்பு உருவங்களைக் கொடுத்து வழிபட்ட இந்து மதத்தினர் அவற்றுக்குரிய ஒழுங்கு விதிகளை அறியாது இருந்தனர். இதை சிந்துவெளி காலப் பரப்பில் காணலாம். கோயில்களை அறியாத பழங்குடித் தழிழர்கள் காடு, ஆறு, குளக்கரை ஓரம், ஆலமரங்கள் போன்ற இடங்களில் இறைவனை வணங்கினர். இது சிறப்பாக சங்க காலத்தில் காணலாம். அக்கால நூல்களுள் ஒன்றான திருமுருகாற்றுப்படையில் நக்கீரர்.

"காடும் காவும் காவின் பெறு துருத்தியும்
யாதும் குளனும் வேறு பல்வைப்பும்" என்று குறிப்பிடுகிறார்.

சங்க மருவிய காலத்தில்தான் கோயில் என்ற நிலை உருப்பெறத் தொடங்கியது. விக்கிரகங்கள் அமைப்பதற்குரிய பொருட்களை ஆகமங்கள் சிறப்பாகக் கூறியுள்ளன. அப்பொருட்களை பயன்படுத்தியதாக மணிமேகலை என்னும் காப்பியம்.

"மண்ணிலும், கல்லினும், மரத்தினும்
சுவரினும், கண்ணி தெய்வதம் காட்டுநர் வகுக்க"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று குறிப்புத் தருகிறது. எவ்வாறுதான் விக்கிரங்கள் அமைக்கப்பட்டாலும் அவற்றை அமைக்க வேண்டிய விதிகளையும் வழிபாடாற்ற வேண்டிய நெறிகளையும் முறையாகப் பின்பற்ற வேண்டும். அவற்றை சிறப்பாக விளக்க வந்தவையே ஆகமங்கள் ஆகும். "ஆகமம்" என்றால் இறைவனிடம் இருந்து வந்தது என்று பொருள்படும். இதையே திருமூலர் 10ந் திருமுறையான திருமந்திரத்தில்.

"வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்" என நிறுவியுள்ளார். ஆகமங்கள் இருபத்தெட்டு உள்ளன. காமிகம் முதல் வாதுளம் வரையுள்ள 28 ஆகமங்களும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு மார்க்கங்களின் மூலம் இறைவனை அடைவதற்கான வழிகளைக் காட்டி நிறகின்றன. ஆகமங்கள் விளக்கும் கிரியைகள் கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் எனும் நான்கு பகுதிகளாக விளக்கம் தருகின்றன. அவற்றைப் பின்பற்றியே வழிபாடு செய்ய வேண்டும். விக்கிரங்களிலோ அல்லது கோயிலிலோ ஏதாவது குற்றம் ஏற்படுமாயின் அதற்குரிய ஆகம முறையைச் செய்து கொள்ள வேண்டும். குற்றமுள்ள விக்கரகங்களை வழிபடுவதால் அந்த தேசத்தில் மழையில்லாமல் போகும் என்பதை அஜிதாகமம் பின்வருமாறு கூறுகிறது.

"ஜீர்ண லிங்கத்து பேரம் வா யத்ர தேஸே து பூஜ்யதே
தத்ராநாவ்ருஷ்டி ஜாப்திர்வார்ததெ நாதர ஸம்சய."

இதையே திருமந்திரமும்

ஆற்றருநோய் மிக்கு அவன் மழையின்றி
போற்றரும் மன்னரும் போர்வலி குன்றுவர்
கற்றுவதத்தான் திருக்கோயில்கள் எல்லாம்
சாற்றிய பூசைகள் தப்பிடில்தானே

எனக் கூறுகிறது. (பாடல் 517) ஆகவேதான் கோயில் அமைப்பு முறையை ஆகமங்களும், சிற்பசெந்நூல்களும் சிறப்பாக கூறி அதில் அமைக்கப்படவேண்டிய விக்கிரககங்களை பிரதிகூஷ்டை செய்யும் முறையையும் நான்கு விதமாகக் கூறியுள்ளன.

அதாவது ஒரு கிராமத்தில் புதிதாக ஒரு ஆலயம் அமைத்து விக்கிரகத்தை எழுந்தருளச் செய்வது அநாவர்த்தனப் பிரதிஷ்டை எனப்படும். ஒரு இடத்தில் லிங்கம் (அல்லது ஏதாவது விக்கிரகம்) சமுத்திரத்தினாலோ நதியினாலோ அல்லது தீய மிருகங்களால் வேறு இடத்திற்கு அசைக்கப்பட்டால் அது ஆவர்த்தனப் பிரதிஷ்டை ஆகும். விமானங்களில் வர்ணம் இல்லாமல் புதிதாக வர்ணம் தீட்டி கோயிலைப் புதுப்பிப்பதற்காக பாலாலயம் அமைத்து பிரதிஷ்டை பண்ணுவது புனராவர்த்தனம் எனப்படும். சண்டாளர்கள், பாபிகள், திருடர்கள் விம்பங்களைத் தொட்டால் அந்தத் தோஷம் நீங்குவதற்காகச் செய்வது அந்தரிதம் ஆகும்.

ஆகமத்தில் "விக்கிரகம்" என்றசொல் "மேலான இடம்" அல்லது "விசேஷமாக எழுந்தருளும் இடம்" என்று பொருள்படும். "பிரதிஷ்டை" எனும்போது "பிர" என்பது "சிறப்பாக" அல்லது "உயர்வாக" என்ற பொருளையும், "திஷ்ட" என்பது "நிற்றல்" எனும் கருத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருகிறது. எனவே விக்கிரக பிரதிஷ்டை என்பது "விஷேடமாக எழுந்தருளும் சிலையில் இறைவனைச் சிறப்பாக நிற்கச் செய்தல்" என்று பொருள்படுகிறது. கும்பாபிஷேகத்தைத் தரிசிப்பதால் பாவங்கள் எல்லாம் நீங்குகின்றன என்பது சமய நம்பிக்கை. அதன் சிறப்பை சம்பந்தர் மயிலாப்பூரில் உள்ள கபாலீச்சரரைப் பற்றிப் பாடும்போது

"உரிஞ்சாய வாழ்க்கை யமனுடைய போக்கும்
இருஞ்சாக்கியர்க ளெடுத்துரைப்ப நாட்டில்
குருஞ்சோலை சூழ்ந்த கபாலீச்சர மமர்ந்தாள்
பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்"

என கும்பாபிடேகச் சிறப்பைக் கூறுகிறார். ஆதலால்தான் அன்றுதொட்டு இன்றுவரை கோயில் கட்டுவதிலும் அதைப் புதுப்பிப்பதிலும் இந்து மதத்தவர்கள் அதிக ஈடு பாடு கொடுத்து வருகின்றனர். இதையே அப்பர் சுவாமிகள் ஐந்தாம் திருமுறையில் திருமீயச்சூர் எனும் இடத்தில் கோயில் கொண்டு இருக்கும் இறைவனை நோக்கி,

"தோற்றுங் கோயிலும் தோன்றிய கோயிலும்
வேற்றுக் கோயில் பலவுற"

எனத் தோன்றியுள்ள கோயிலுடன் தோன்றும் கோயிலையும் சிறப்பித்துள்ளார்.

முன்பு அநாவர்த்தனம் செய்த கோயில்களை மீண்டும் 12 வருட முடிவிலோ அல்லது அதற்கு முன்னமோ புனராவர்த்தனம் செய்ய வேண்டும் என காமிகாகமம் கூறுகிறது. புனராவர்த்தனப் பிரதிஷ்டையில் பாலஸ்தாபனம் முக்கியமாகக் கருதப்படுகின்றது. இதனை இரண்டுவிதமாக காரணாகமம் கூறுகிறது.

முதலாவது கிராமம் அல்லது நகரம் அல்லது இராஜதானி இன்னும் மற்ற இடங்களில் பிரதான ஆலயம் கட்டியபின் முதன்முதலாக புனராவர்த்தனம் செய்வதற்காகக் கட்டப்படுவது பாலாலயம் அல்லது பாலஸ்தாபனம் எனப்படும் இதை காரணாகமம்,

"க்ராமேவா நகரேவாவி பத்தநே ராஜதாநிகே
ஏதேக்ஷஷ்வந்யேக்ஷஷு தேஸேஷு மூலஸ்தாநஸ்ய யத்பரா"

பாலாலயத்தில் பிரதிஷ்டை செய்து பின் மூலாலயத்தில் மூலலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்துவிட்டு பாலாலயத்தை நீக்கவேண்டும். பின்பு மூலாலயம், பீடம், விம்பங்கள் பழுதுபட்ட காலத்தில் இவைகளைக் கும்பத்தில் ஆவாஹித்து பாலவிம்பத்தில் சேர்ப்பதற்கு, இரண்டாவது அல்லது அதற்குப் பிற்பட்ட புனராவர்த்தனத்திற்காக அமைக்கும் ஆலயம் தருணாலயம் எனப்படும். இது சுப்பிரபேத ஆகமத்திலும், அம்சுமானாகமத்திலும் காணப்படுகின்றது.

"ஆத்யம் பாலக்ரஹம் கல்ப்யம் மூலகெஹம் தத் பரம்
மூலலிங்கம் பிரதிஷ்டாப்ய பச்சாத் பாலக்ரகம் தியஜேத்
புந: பிராசாதகரணெ சின்னேபிந்நே ரவீக்ருதே"

பாலாலயத்தில் ஸ்தாபனம் செய்தபின்பே மூலாலயத்தில் பிரதிஷ்டை செய்யவேண்டும். பாலஸ்தாபனம் இல்லாத பிரதிஷ்டை பல கெடுதல்களை உண்டாக்கும் என ஸூக்ஷமாகமத்தில் கூறப்பட்டுள்ளது. அதில் குறிப்பாக புத்திர பௌத்திரர்களுக்கு தீமை ஏற்படும் என்று விளக்கப்பட்டுள்ளது.

"பாலஸ்தாபந விநாயதர புத்ர பௌத்ர விநாசநம்"

பாஸ்தாபனம் அமைக்கபட வேண்டிய நிக்குகளை காமிகாமமம் சிறப்பாகக் கூறுகின்றது. இக்காமிகாமமம் பாலஸ்தாபனம் இன்றி மூலஸ்தாபனம் இல்லை என்றும் கூறுகின்றது.

"பாலஸ்தாநம் விநாவித்வான் மூலஸ்தானனம் ந காரயேத்"

மூலவிக்கிரகம் சிலாவிக்கிரகமாக இருந்து அதில் ஏதேனும் பழுது (ஜீர்ணம்) ஏற்பட்டால் அவற்றை அகற்றும் அல்லது சீர்திருத்தும் விதி முறைகளை ஆகமங்கள் வகுத்துள்ளன. எந்தப் பொருளால் விக்கிரகம் அமைக்கப்பட்டிருக்கிறதோ பின் அது பழுதுபட்டபின் அதே பொருளால் அமைக்கப்பட வேண்டும் என்பதை விம்பாகமம் சுறுகிறது.

"ம்ருண் மயம் சேத் ம்ருதாகுர்யாத் தாருசேத் தாருணாதரு
லோகஜம் யதி லோகெந சிலாயாம் சைலயம் யதி"

(சிலை) விக்கரகத்தை நோக்குமிடத்து அதன் முகம் இமைகள், மூக்கு, கண் போன்றவை குற்றமுடையதாயின் அதை விலக்கி புதியதொரு விம்பத்தை ஸ்தாபிக்க வேண்டும் என ரௌரவ ஆகமம் விளக்கி அப்பழைய விக்கிரகத்தைச் சமுத்திரத்தில் விடும்படியும் கூறுகிறது.

"ப்ருரேகா பக்ஷம ரேகா ச ஆஸ்யரேகா ச நாஸிகா
ஸர்வாங்கானாம் க்ஷயம் த்ருஷ்டவா ப்ரதிமாம் ச விஸர்ஜயெத"

"சைலஜம் த்ருவபேறும் யதங்கஹீநம் பவேத்யதி
தத்பேரம் ச சமாதாய சமுத்ரெ பிரக்ஷி வெத்ததா"

மேலும் தலை, புஜம் கால்கள், சேதம் ஏற்பட்டாலும் அதை விலக்கி அவ் விக்கிரகத்தை சமுத்திரத்தில் விடவேண்டும் என்பதை பூர்வ காரணாகமம் (பாடல் 234) விளக்குகிறது.

"ப்ருரேகா பக்ஷ்மரேகா ச ஆஸ்யரேகா ச நாஸிகா
ஏதாஸாம் ச க்ஷ்யம் த்ருஷ்ட்வா ப்ரதிமாம் பதிவர்ஜயெத்
தத்பேரம் து பரிக்ராஹ்ய சமுத்ரே து விநிக்ஷியபேத"

இதையே சுப்பிரபேதாகமமும் கூறுகிறது.

"சர்வாங்கநாம் க்ஷயம் த்ருஷ் ட்வா ப்ரதிமாம் ச விஸரியெத்"

லலிதாகமம் எனும் ஆகமத்திலும்

"சிலாவிக்கிரகத்தில் ஏதாவது அங்கம் குள்ளமுடையதாயின் அதை எடுத்து சமுத்திரத்தில் விட வேண்டும்" என்று பின்வருமாறு கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சைலம் ச த்ருவபேரம் யதங்க உற்நம் பவேத்யதி
தத் பேரம் ச சமாதாய சமுத்ரே ப்ரக்ஷிவெத்தது"

விம்பாமத்திலே குற்றமுள்ள விக்கிரகத்தை நதியில் விடுத்து புதிய விக்கிரகத்தை அதே பொருள்கோண்டே அதாவது முன்பு எந்தப் பொருள் விக்கிரகம் அமைப்பதற்கு பயன்படுத்தப்பட்டதோ அதே பொருள் கொண்டே அமைக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது. இது பற்றி முதலிலியே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. இதே கருத்தை ஸுக்ஷமாகமம் 48வது படலம். (11வது வரி முதல் 14வது வரி வரை உள்ளவை) விளக்குகிறது. அதில் மண்ணால், உலோகத்தால், கல்லினால் செய்யப்பட்ட விம்பங்களில் குற்றம் அல்லது நெருப்பு பட்டால் அதைப் "பூஜையில் பயன்படுத்தக் கூடாது" என்றும் அப்படி பூஜை செய்யின் ராஜாவிற்கு அழிவும், நாட்டிற்கு கேடும் விளையும் என்றும் "அதை நீரில் விடவேண்டும்" என்பதையும் சுட்டிக்காட்டி எந்தப் பொருளால் விக்கிரகம் செய்யப்பட்டிருக்கிறதோ அதே பொருளால்தான் புதிய விக்கிரகம் செய்ய வேண்டும் என்றும் கூறுகிறது.

"தஸ்மாத் பேரம் சமுத்ருத்ய ஜலெ வாவி ஸ்தலே விவா"

மேலும் "சிலா சேச் சைலஜம் ஸ்வயம" என்றும் விளக்குகிறது. ரௌரவாகமும் சிலையில் செய்யப்பட்டிருந்தால் மீண்டும் செய்யும்போது சிலையால்தான் செய்யப்பட வேண்டும் என

"சிலையா சைலஜம் குரு"

(55வது) படலம் 10வது வரி) விளக்கி நிற்கிறது. குமாரதந்திரத்திலும் இக் கருத்து,

"எந்தப் பொருளினால் ஒரு விக்கிரகம் செய்யப்பட்டிருக்கிறதோ பின் ஜீர்ணமாகி விலக்கிய பின் அதே பொருளால்தான் விக்கிரகத்தைச் செய்ய வேண்டும்." என்றும் கூறுகின்றது

"யத்வஸ்துனா க்ருதம் பேரம் குர்யாத் தத்வஸ்துவர புன:"

ஸ்ரீமகுடாகம்த்தில்,

"சலிதம் பதிதம் வாவி நந் ஸ்ரேதோ விவேதிதம"

(150வது பாடல்) என்ற குறிப்பு காணப்படுகிறது. அதாவது

"விக்கிரகத்தில் ஏதாவது அசைவுகளோ அல்லது ஒரு அங்கம் விழுந்தாலோ அதை நதியில் சேர்க்க வேண்டும்." என்று கூறுகிறது. லலிதம் எனும் மூலாகமத்தில் இருந்து வந்த குமார தந்திரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சிலாவிக்கிரகம் பழுது அடைந்தால் அதை உரிய வாகனத்தில் சகடை, யானை, ரதம் அல்லது சிவிகையில் ஏற்றி சமுத்திரத்தில் அல்லது தடாகத்தில் அல்லது கிணற்றில் விடவேண்டும். என்று விளக்கப்பட்டுள்ளது.

"சைலஜம் ஜீர்ணம் சமுத்ருத்ய சகடே வா கஜே விவா
ரதே வா சிவிகாயாம் வா விநிநா ரோப்ய பத்திமான்
சமுத்ரெ வா தடாகேவா கூவேவாவி விசர்ஜயேத்"

இவ்வாறு விக்கிரகங்களுக்கு ஏற்பட்ட குற்றத்தை நீக்கும் முறையைக் கூறிய ஆகமங்கள்.

சிலா விக்கிரகமே எல்லோரும் வழிபடுவதற்கு ஏற்றது என்றும் கூறியுள்ளது. இது சிறப்பாக காமிகாமத்தில்

"சைலஜம்ச ப்ரஹ்மாநாதி சதுர்வானாதி ஸாரேன சதுர்விதம"

சுப்பிரபேதாகமத்தில் "எல்லோருமே கருமைச் சிலையை வழிபடலாம்" என்று கூறப்பட்டுள்ளது.

ஸர்வேஷாந்து சிலாக்ருக்ஷ்ணா ஸர்வஸம்பத் கரிஸ்ம்ருதா"

இதை சிற்ப ரத்னாகரம் எனும் சிற்ப நூல்

சூத்திரர்களுக்கு கருமைச் சிலையே ஏற்றது
சூத்ர ......................... கிருக்ஷ்ணாச்ச" என்று கூறுகிறது.

எனவே இவ்வாறு ஆகமங்கள் விதிக்கப்பட்ட விதிமுறைகளைப் பின்பற்றி இறைவனை பிரதிஷ்டை பண்ணி இறையருள் நிறைபெற்று முறைவாழ மறைபோற்றும் இறைவனையே வேண்டுவோம்.

சுபமஸ்து அனைவருக்கும் மங்கள முண்டாகட்டும்

உனக்குள் அளவற்ற ஆற்றலும், அறிவும் வெல்லமுடியாத சக்தியும் குடிகொண்டு இருக்கின்றன என்று நீ நினைப்பாயானால் அச்சக்திகளை உன்னால் வெளியே கொண்டு வர முடியுமானால் நீயும் என்னைப் போல் ஆக முடியும்.

*சுவாமி விவேகானந்தர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உ

# அந்தர் மாத்ருஹா நியாசம்

## சஞுஜ°ாதரூகாநூாவஸீ||

## ஆறு ஆதார தத்துவம்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மூலாதாரம் :-



காலெலும்பு இரண்டும் கதிரெலும்புங் கூடிய இடம் குய்யம் - குய்யத்துக்கும் குதத்துக்கும் நடுவே குண்டலி இருக்கும் வட்டமாய் - அந்த வட்டத்துக்குள் - நடுவே முக்கோணம் அதன் நடுவே நாலிதழுடைய ஒரு புஷ்ப வட்டமாய்ப் பூப்போன்றிருக்கும் அதன் நடுவில் ஓம் என்ற பிரணவம் நான்கு இதழோடு கூடிய கமலங்களில் முறையே வம் ஶம் ஷம் ஸம் என்ற இந்த நான்கு தளஷரங்களையும் யோக பாவனையினாற் தியானித்து ஓங்காரத்திற்கு நடுவில் சித்திலஷ்மி, வல்லபையோடு கூடிய கணபதியை சிவோகம் பாவனையாக மானசீகமாகத் தியானிக்க.

| | | |
|---|---|---|
| 1. முக்கோணம் | 2. வட்டம் | 3. நாலிதழ்கமலம் |
| 4. பிரணவம் | 5. வம் ஶம் ஷம் ஸம் | 6. மாணிக்கநிறம் |
| 7. குண்டலினிசக்தி | 8. கணபதி | 9. மூலாதாரம் |

ஸ்வாதிஷ்டானம் (குக ஸ்தானம்) :-



இது குதஸ்தானம் அது நாற் சதுரமும் அச் சதுரத்தின் நடுவே ஆறு இதழ்களையுடைய ஒரு புஷ்ப வட்டமும், அதன் நடுவில் லிங்கபீடமும் அதன் நடுவில் நகாரமும், ஆறு இதழ்களோடு வடிய கமலங்களில் முறையே பம் ஭ம் மம் யம் ரம் லம் என்ற இந்த ஆறு தளாக்ஷரங்களையும் பாவனையாக நியசித்து நகாரத்திற்கு நடுவில் சாவித்திரி - காயத்திரி சமேத பிரம்மாவைத் தியானிக்க.

இது பிருதிவியின் கூறு


| | | |
|---|---|---|
| 1. ஆறிதழ்கமலம் | 2. நாற் சதுரம் | 3. பிருதிவியின் கூறு |
| 4. நகாரம் | 5. செம்பொன நிறம் | 6. பிரம்மா |

சாவித்திரி, காயத்திரி
மூலாதாரத்திற்கு இரண்டு விரற்கடை மேலிருப்பது சுவாதிஷ்டானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


மணிபூரகம் :-



இது சுவாதிஷ்டானத்திற்கு எட்டு விரல் பிரமாணத்திற்கு மேல் இருப்பது கோழி முட்டை போல மூன்றாம் பிறை, அதன் நடுவே பத்து இதழ்களையுடைய ஒரு புஷ்ப வட்டம் அந்தப் புஷ்ப நடுவில் மகாரத்தையும் பத்து இதழ்களோடு கூடிய கமலங்களில் முறையே ஐம் ஐம் ணம் தம் யம் ஓம் யம் நம் வம் வம் என்ற இந்தப் பத்து இதழ்களையும் உரிய அசஷரங்களையும் பாவனையாக நியசித்து மகாரத்திற்கு நடுவில் தாரா லஷ்மி சமேத விஷ்ணுவைத் தியானிக்க இது அப்புவின் கூறு. இதை உந்திக் கமலம் என்பார்.

1. மகாரம்    2. பத்திதழ் கமலம்    3. அப்புவின் கூறு
4. மூன்றாம்பிறை (அரைவட்டம்)    6. மரகத நிறம்    7. 1008 நரம்பு நாடிகள்

அநாகதம் :-




மணி பூரகத்திற்கு மேற்பக்கத்து விரற்கடைக்கு மேலுள்ளது அனாகதமாகும். இருதய கமலம் தேயுவினுடைய ஸ்தானம். இது முக்கோணத்துள் நடுவே பன்னிரண்டு இதழ்களையுடைய ஒரு புஷ்ப வட்டம். அந்தப் புஷ்பவட்ட நடுவில் சிகாரமும் பன்னிரண்டிதழ்களோடு கூடிய தளங்களில் முறையே கும் வம் வம் ஐம் ஓம் ஊம் ஜம் ஙம் ஜம் டம் ஒம் என்ற இப் பன்னிரண்டு தளாஷரங்களை நியசித்து நடுவில் கௌரி அம்பிகை சமேத உருத்திரரைத் தியானிக்க.

1. முக்கோணம்
2. பன்னிரண்டிதழ் கமலம்
3. கௌரி உருத்திரன்
4. ஸ்படிக நிறம்
5. தேயுஸ்தானம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


விசுத்தி :-



அனாகதத்திற்குப் பத்து விரற்கடைக்கு மேலிருப்பது விசுத்தி. இது கண்ட ஸ்தானம் வாயு ஸ்தானமாயுள்ளது. அறு கோணத்தினுள் நடுவில் பதினாறு இதழ்களையுடைய ஒரு புஷ்ப வட்டமிருக்கும். அதன் நடுவில் வகாரமும் பதினாறு இதழோடு கூடிய தளங்களில் முறையே அம் ஆம் இம் ஈம் உம் ஊம் ஋ம் ௠ம் ஌ம் ௡ம் ஏம் ஐம் ஓம் ஔம் அம் அ: எனும் பதினாறு தளாக்ஷரங்களை நியசித்து வகாரத்திற்கு நடுவில் உந்மனீவாக்வாதினியோடு கூடிய மஹேஸ்வரனாரைத் தியானிக்க.

1. அறுகோணம் 2. பதினாறு இதழ்க்கமலம்
3. உந்மனி வாக்வாதினீ மஹேஸ்வரர்
4. மேக நிறம் 5. கண்டஸ்தானம்
6. வாயுஸ்தானமாகவுள்ளது.

ஆக்ஞா – நெற்றி - (லலாடஸ்தானம்) நெற்றி



விசுக்திக்கு மேல் 12 விரற்கடைக்கு மேல் ஆக்ஞாஸ்தானம். இது லலாட பீடத்திலிருக்கின்றது. இரு இதழ் புஷ்ப நடுவே யகாரத்தோடு பொருந்தியிருக்கும் யகாரத்தின் நடுவில் மனோன்மணி தர்ம சக்தியோடு கூடிய சதாசிவமும் இரண்டு தளங்களில் ஹம் க்ஷம் என்ற அக்ஷரங்களோடு சதாசிவத்தைத் தியானிக்க.

1. இரண்டிதழ் கமலம் 2. வட்டம்
3. ஸ்படிகநிறம் 4. யகாரம்
5. மனோன்மணி தர்மசக்தி சதாசிவம். இதற்குமேல் அதீதத்தில் சிவபெருமானைத் தியானிக்க துவாதசாந்த ஸ்தானத்தில் ஆயிரந் தளங்களோடு கூடிய கமலத்தின் மேல் சிவபெருமானை நாநாதவித வர்ணங்களையுடையவராகவும் சித்ஸ்வரூபியாகவும், மோக்ஷ சக்தி சமேதராகவும் தியானிக்க

துவாதசாந்தம் 3 பிரிவு

2. நெற்றிவரை 2. சிரசுக்கு மேல், 3. சிரசுக்குமேல் 12 அங்குலமாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயிரம் இதழ் தாமரை :-




அடுத்தது - ஸஹஸ்ரதளம் இது 1000 இதழ் தாமரை இப்படியாக அந்தர்மாத்ருகா நியாசம் என்பது விளக்கஞ் செய்யப்படுகிறது.

மேற்படி அந்தர்மாதிருகா நியாசம் முதலிய ஆத்ம பூஜைகளிலே மிக விருப்புடையவரும் இலங்கை இந்துமத குருபீடாதிபதியுமான சிவஸ்ரீ ஸ்கந்த சாம்பசிவ சிவாச்சார்யார் அவர்களின் 80வது ஜயந்தி தினத்திலே வெளியிடப்படும் ஆத்ம பஞ்சகம் எனும் C.D. இறுவெட்டும் ஜயந்தி மலரும் சிறப்புற வேண்டும் பரம்பொருளைத் தியானித்து பாராட்டுகிறேன்.

'குகபூஜா துரந்தரர்'
சிவஸ்ரீ வு. சரவண பவானந்த குருக்கள்
பிரதமகுரு, அடிஸ்வில் முருகன் தேவஸ்தானம்
(சுவிஸ்)

சப்த ரிஷிகள் :-

அத்ரி, வசிட்டர், கௌதமர், கச்யபர், பரத்வாசர், விச்வாமித்ரர், ஜமதக்னி ஆகியவர்கள்.

பெயரிபுராணம் எல்லா சாதியினருக்கும் பொதுவான நூல். பெரிய புராணத்தில் பல்வேறு சாதியினரும் இடம்பெற்றுள்ளனர். சேக்கிழார் வாழ்ந்த சோழர் கால சமுதாயம் சாதிப்பிரிவினையை ஏற்ற சமுதாயமாகும். இந்நிலையில் சைவ சமயம் எனும் ஒரு பொது ஒற்றுமை கோட்பாட்டை முன்னிறுத்தியவர் சேக்கிழார்.

பெரிய புராணத்தில் இடம்பெற்றுள்ள நாயன்மார்களில்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அந்தணர் | 13 | சாலியர் | 2 | | |
| ஆதிசைவர் | 4 | குயவர் | 1 | பாணர் | 1 |
| மாமாத்திகள் | 1 | தைலவினையர் | 1 | மற்றவர் | 6 |
| அரசர் | 6 | பரதவர் | 1 | | |
| குறுநில மன்னர் | 5 | சாணார் | 1 | | |
| வணிகர் | 5 | வண்ணார் | 1 | | |
| வேளாளர் | 13 | மறவர் | 1 | | |
| | | நீசர் | 1 | | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'கொள்கைப் பற்றாளன்'

நாயன்மார்க்கட்டு அமரர் சாம்பசிவ சிவாச்சாரியார் அவர்களை என் சிறுபராயம் முதல் அறிவேன். வேதசிவாகம, மாந்திரீக, வைத்திய நூல்களை நன்கு கற்றுணர்ந்தவர் என்பது வெள்ளிடைமலை. கொள்கைப் பற்றாளன். வட்டுக்கோட்டையில் பல சமயக் கிரியை நிகழ்ச்சிகளிற் கலந்துகொண்டவர். தெவிண்டப்பிராய் முருகன் ஆலய கும்பாபிஷேகம், அத்தியடி விநாயகர் கோயில், கூடத்து மனோன்மணி அம்பாள் கோயில், இலுப்பைத்தாழ் முருகன் கோவில் எனப் பல்வேறு ஆலயங்களிலும் கண்டுள்ளேன். அவர் கலந்துகொள்ளும் நிகழ்வுகளிற் கிரியை விளக்கம் அளிப்பார். தான் சார்ந்த துறைகளிற் தன் மக்களையும், ஏனைய அந்தணச் சிறுவர்களையும் நன்கு பயிற்றுவித்தவர். தானும் கற்று, கற்றதை மற்றவர்களுக்குக் கற்பித்தும் கொடுத்திருக்கிறார். ஒரு காலத்தில் அவருடைய மகள் ஜெகதாம்பாள் மூலம் கதாகலாட்சேபம் செய்வித்து சமயத்தைப் பரப்பியவர். சங்கானை இலுப்பைத்தாழ் முருகன் ஆலயத் திருவாசக முற்றோதலின் போது அவர் குருவாய் எழுந்தருளி அருளாசி வழங்கும் நிகழ்வு மிகச் சிறப்பான நிகழ்வுகளில் ஒன்றாகும்.

'தக்கார் தகவிலர் என்பது அவர்தம்
எச்சத்தால் காணப்படும்'

எனும் பொய்யா மொழிக்கொப்ப அவரின் புத்திரன் சிவஸ்ரீ ஜெகதீஸ்வரக் குருக்கள் சகலதுறைகளிலும் பிரகாசித்து வருகிறார். அவர் தனது. தந்தையின் 80வது ஜயந்தி தினத்தில் அவரின் நினைவாக மலர் ஒன்றினை வெளியிடுவது சிறப்பான விடயம். அத்துடன் "ஆத்ம பஞ்சகம்" என்ற "இறுவெட்டு" (C.D) ஒன்றையும் வெளியிடுவது குறித்தும் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இறைபணியில்
'கலைவாரிதி' சி. சபாநாதன்
சங்கரத்தை
வட்டுக்கோட்டை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# பெரிய புராணத்தில் - அந்தணர்கள்

**சிவ: சண்முகவடிவேல்,**

**ஏழாலை மேற்கு, சுன்னாகம்**

பெரிய புராணத்தில் அந்தணர்கள் பலபெயர்களால் அழைக்கப்படுவர். அவற்றுட் சில, அந்தணர், மறையவர், வேதியர், அர்ச்சகர், பூசுரர் என்பன. 17 மறையவர் பெரியபுராணத்தில் பேசப்படுவார்கள். அவர்கள்,

தில்லை வாழ் அந்தணர், குங்குலியக் கலய நாயனார், முருகநாயனார், உருத்திர பசுபதி நாயனார், சிறப்புலி நாயனார், கணநாத நாயனார், பூசலார் நாயனார், சண்டேசுர நாயனார், சோமாசி மாற நாயனார், நமி நந்தி அடிகள் நாயனார், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், அப்பூதி அடிகள் நாயனார், திருநீல நக்க நாயனார், புகழ்த்துணை நாயனார், சிறுத்தொண்ட நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் என்னும் இவர்கள் யாவரும் சிவவேதியர்கள், செல்வ மறையோர், மாமாத்திரர் என்னும் முப்பிரிவினர் ஆவர். இவர்கள் குல, ஆசார, ஒழுக்க, வேதநெறி, போன்ற பொதுவான ஒற்றுமை உடையவர்கள். செய்தொழில் வேறுபடுவதால் தனியான குலப்பெயருடையவராவார்கள்.

அத்துடன் செய்தொழில் வேறுபட்டாலும் கோத்திர மரபு மாறுபட்டாலும் வேதநெறியைக் கடைப்பிடிப்பவர்கள். சிவபெருமானுக்குத் தம்மை அடிமையாக ஒப்புக்கொடுத்தவர்கள். சிவனடியார்களைப் பேணுவதில் தம்முயிரோ தமக்கு வேண்டியவர் உயிரோ துறக்க நேரிடினும் நிலை தளம்பாதவர்கள் சிவதொண்டு எனின் நெஞ்சு நிலை குலையார்கள்.

"தங்கோனைத் தவத்தாலே தத்துவத்தின் வழிபடுநாள்
பொங்கோத ஞாலத்து வற்கடமாய்ப் பசிபுரிந்தும்
எங்கோமான் தனைவிடுவேன் அல்லேன் என்றிராப்பகலும்
கொங்கார்பன் மலர்கொண்டு குளிர்புனல் கொண் டருச்சிப்பார்'

'மாலயனுக் கரியானை மஞ்சனம் ஆட் டும்பொழுது
சாலவுறு பசிப்பிணியால் வருந்திநிலை தளர்வெய்திக்
கோலநிறை புனல்தாங்கு குடந்தாங்க மாட்டாமை
ஆலமணி கண்டத்தார் முடிமீது வீழ்த்தயர்வார்"

*- புகழ்த்துணை நாயனார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பூதி அடிகளார் அந்தணரின் மேம்பட்டவர். நாவினுக்கு வேந்தரை காண்தகைமை இன்றியும் கலந்த பெருங் கேண்மையினார். அப்பேருறவால் தந்தனயருடன் சாலை, கூவல், குளம், தரு, தண்ணீர்ப் பந்தர் முதலான பல அறங்களை எல்லாம் ஆண்ட அரசு எனும் பெயரால் அமைத்தார்.

அப்பூதி அடிகளார், ஆண்ட அரசு பொங்கு கடல் கல்மிதப்பில் போந்தேறும் பெருமையை உணர்ந்தவராதலின் மூண்ட பெருமகிழ்ச்சி கொண்டார். பெற்றெடுத்த புதல்வன் மூத்த திருநாவுக்கரசு. விடத்தினால் வீழ்ந்தான் என்று அறிந்த பின்பும் அதற்கு வருந்தாது, பெரியவர் அமுது செய்யும் பேறிது பிழைக்க சிறிது இடையூறு செய்தான் பிள்ளை, என்று ஏங்கினார் அப்பூதி அடிகள் நாயனார்.

அடியார் அமுது செய்வதற்கு அன்பில் பெற்றெடுத்த அரும் பாலகனை அக மலர்ந்து தாய் பிடிக்கத் தந்தை தலை அரிந்து கறி சமைத்தார் சிறுத்தொண்ட நாயனார்.

விசாரசருமர் சேகரித்த, சிவபெருமான் திருமஞ்சனக் குடாப்பாலை எச்சதத்தன் காலால் இடறிச் சிந்தினான். சிந்தும் பொழுதில் அது நோக்குஞ் சிறுவன் இமைப் பொழுதில் தந்தை என்று அறிந்தார். சிவ அர்ச்சனையில் இடையூறு அகற்றும் தகுதியினால் தாதையினுடைய இரு தாளும் துணித்தார் சண்டேசுர நாயனார்.

திருநீல நக்க நாயனார் அயவந்தி அமர்ந்த அருச்சனை புரிய ஒரு ஆதிரை நாளில் வந்தார். ஆகம விதி வழி நின்று வேதகாரணரைப் பூசனை புரிந்தார். பூசனை புரிந்த போது ஒரு சிலம்பி நிலையின் நின்று வழுவி சிவபிரான் திருமேனி மேல் விழுந்தது. அயலில் நின்ற மனைவியார் அச்செயல் கண்டு அஞ்சினர். இளங்குழந்தையில் விழும் சிலம்பி ஒழிந்து நீங்கிட ஊதிமுன் துமிப்பவர் போலப் பொழிந்த அன்பினால் துமிப்பவர் போல ஊதினார். பதைத்த செய்கையால் மனைவியார் முற்செயப்பந்தஞ் சிதைக்கு மாதவத் திருமறையவர் கண்டார்.

'அறிவிலாய் என்ன செய்தாய்...? என்றார்.

'சுதைச்சி லம்பிமேல் விழஊதித் துமித்தனன்' என்றார்.

“இச்செய்கை அறுசிதம் பெருமானுடைய திருமேனி மேல் விழுந்த சிலம்பியை வேறு ஒரு விதமாக விலக்கவில்லை. வாயினால் ஊதி உமிழ்நீர் சிந்திவிட்டாய். உன்னை இனி நான் துறந்துவிட்டனன்” என்றார்.

அஞ்சும் மனைவியார் அன்றிரவு நஞ்சணி கண்டர் கோவிலே தஞ்சம் என்றிருந்தார். கடிமனை சென்று பஞ்சணைப் பள்ளியில் பள்ளி கொள்கின்றார், செஞ்சொல் நான் மறைத்திரு நீலநக்கநாயனார்.

அருமறை வாய்மைத் துங்க வேதியர் குலத் தூயோர் உருத்திர பசுபதி நாயனார். அவர் செங்கண் மால்விடை யார்செழும் பொன்மலை வல்லி பங்க னாரடி மைத்திறம் புரிபவர். ஆய அந்தணர் அருமறை உருத்திரங்கொண்டு மாய னாரறியாமலர்ச் சேவடி வழுத்தும் தூய அன்பொடு தொடர்பினில் இடையறாச் சுருதி நேய நெஞ்சின ராகி அத் தொழில் தலை நின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் வைகறைப் போதில் அளவற்ற ஆரவாரம், பறவைகள் ஒலிக்க, சுரும்பு முரல, வரால் துள்ள, நீரிடை நெருப்பெழுந்தது போன்று செந்தாமரை நிறைந்த தடாகத்துட் புகுவார். குளிர்ந்த தண்ணீர் கழுத்தளவு செறிய, நீருடன் புக்கு நிற்பார். கைகளை உச்சி மேற குவிப்பார். "தள்ளு வெண்திரைக் கங்கைநீர் ததும்பிய சடையார் கொள்ளும் அன்பினில் உருத்திரங் குறிபபொடு" ஓதுவார். அருமறைப் பயனாகிய உருத்திரம் அதனை பகலும் இரவும் நியமம் வழுவாமல் உமை இடம் மகிழ்ந்தவர் உவந்திட உரைப்பார். இவர் உருத்திர பசுபதி நாயனார.

பெருநதி அணியும் வேணிப் பிரான் கழல் பேணுவார். நாளும் உருகிய அன்பர். கூர்ந்த சிந்தையார் ஒழுக்கம் மிக்கார். அவர்தாம் அருமறை முந்நூல் மார்பின் அந்தணர் குங்குலியக்கலய நாயனார். இரண்டு நாட்கள் இல்லத்தில் உணவு இல்லை. பேதுறும் மைந்தரோடும் பெருகு சுற்றத்தை நோக்கினார் காதல் செய் மனைவியார். அவர்தம் கணவனார் கையில் கோதில் மங்கல நூல் தாலியை நெற் கொள்ளக் கொடுத்தார். கலயனார் நெற்கொள்ளச் சென்றார். ஒப்பிலாத குங்குலியங் கொண்டு ஓர் வணிகன் வந்தான். இவன் தாலியை வாங்கிக்கொண்டு குங்குலியத்தை அவர் கைக் கொடுத்துச் சென்றான்.

'நான் இன்று பேறு பெற்றேன். நல்ல பேறு மற்று இதன் மேல் உண்டோ' என்று விடையவர் வீரட்டானம் சென்றார். பண்டாரத்தில் அடைவுறக் குங்குலியம் வைத்தார். அன்பு பொங்கச் சடையவர் மலர்த்தாள் போற்றிக் குங்குலியக் கலய நாயனார் இருந்தார்.

தூய வாய்மை வேதம் பயிலும் மறையாளர் குலத்தின் மேலோர் சோமாசி மாற நாயனார். உமை ஒரு பாகராகிய சிவபெருமானைப் போற்றும் சிவ யாகத்தினை வழிபடும் முறை தவறாது புரிபவர். ஏழு உலகங்களும் மகிழ்ந்து இன்புறச் செய்த பேற்றால்-உயிர்கள் நல்வாழ்வு அடையும் வழி-சிவனடி வாழ்த்தல் எனக் கொள்வார்.

எத்தன்மையராயினும் சிவனடியார்கள் என்றால் அவரே நம்மை ஆளாக உடையார் என்றும் துணிவுடையார் சித்தம் தெளியத் திருவைந்து எழுத்துத் துதிப்பார். அதுவே நியமமாகக் கொண்டு போற்றுவார். அப்பழக்கம் விழுப்பம் தரும் ஒழுக்கமாகக் கொண்டு ஒழுகுவார். இவர் சோமசிமாறநாயனார்

ஞாலமார் புகழின் மிக்கவர். நான் மறைக் குலத்தின் உள்ளார். நீலமார் கண்டத்து எண்தோள் நிருத்தர் தம் திருத்தொண்டு ஒழுகும் சீலத்தார். சிறப்புலி நாயனார். சிவனடியார்கள் வந்தபோது பாதங்களில் பணிவார். மூண்டெழும் அன்பு பொங்க முன்னின்று இனியன மொழிவார். நாளும் நல்ல அமுது ஊட்டுவார். நிதி மழை போலக் கொடையிற் சிறந்தவர். திருவைந்தெழுத்து ஓதுவார். நித்தியாக்கினி வளர்ப்பவர். நல்ல வேள்விகளைச் சிவனடியில் பொருந்தப் போற்றுவார். சிவனடியார்களுக்கு வரையாது வழங்குவார். சோமாசிமாற நாயனார் இறைவரது திருவடி நீழலில் இன்புற்றிருந்தார்.

தில்லைவாழ் அந்தணர்கள் மூவாயிரவர். நீற்றினால் நிறைந்த கோல நிருத்தனுக்குரிய தொண்டு போற்றினார். பெருகும் அன்பால் அடித்தவம் புரிந்து வாழ்வார். அங்கணர் கோயில் உள்ளே அகம்படித் தொண்டே புரிவார். வருமுறை எரி மூன்று வளர்ப்பார். அருமறை நான்கினோடு ஆறங்கம் வல்லவர். அறு தொழில் ஆட்சியாளர். பெறுவது சிவன்பால் அன்பாம் பேறெனப் பெருகி வாழ்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியை, கிரியை, யோகம், ஞானம் நான்கும் நவையறத் தெரிந்துள்ளார். தானமும் தவமும் வல்லார். முதல்வனாரை இம்மையே பெற்று வாழ்வார். இனிப் பெறும் பேறு ஒன்று இல்லார் தம்மையே தமக்கு ஒப்பான நிலைமையால் தலைமை சார்ந்தவர் - செம்மையால் தணிந்த சிந்தைத் தெய்வ வேதியர்களாவார் மும்மை ஆயிரவர்.

ஆரணங்கின் திருமுலைப்பால் உண்டதனால் தாவில் தனிச் சிவஞான சம்பந்த ராயினார், கவுணிய குல தீபர். 'பித்தா' என்று அடி எடுத்துக் கொடுத்துத் தூமறை பாடும் வாயார் சொற்றமிழ் பாடுவித்தார் சுந்தரமூர்த்தி நாயனாரை. தெரிந்துணரின் முப்போதும் செல்காலம், நிகழ் காலம், வருங்கால மானவற்றின் வழிவழியே திருத்தொண்டின் விரும்பிய அர்ச்சனைகள் செய்வதற்கு உரியவர்கள் சிவ வேதியர்கள். அவர்களே முப்போதும் திருமேனி தீண்டுவார் ஆவார்கள்.

நீண்ட செஞ்சடையினார்க்கு நினைப்பினால் மனக் கோயிலாக்கிப் பூண்ட அன்பிடையறாதவர் பூசலார் நாயனார்.

'புலரும் பொழுதின் முன்எழுந்து புனிதநீரில் மூழ்கிப் போய், மலரும் செவ்வித் தம்பெருமான் முடிமேல் வான்நீர் ஆறுமதி உலவு மருங்கு முருகுயிர்க்க நகைக்கும் பதத்தின் உடன் பறிப்பார். கோக்கும் கோவைகளும் இண்டைச் சுருக்கும் தாமமுடன் இணைக்கும் வாசமாலைகளும் தண்டில் கட்டும் கண்ணிகளும் தாளில் பிணைக்கும் பிணையல்களும் நுண்தா திறைக்கும் தொடையல்களும் சமைப்பார்.

ஆங்கப் பணிக ளானவற்றுக் கமைத்த காலங்களின் அமைத்துத் தாங்கிக் கொடுசென்று அன்பினொடும் சாத்துவார். வாய்ந்த அர்ச்சனைகள் புரிவார். பரமர் அஞ்செழுத்தும் ஓவா நாவின் உணர்வார் முருக நாயனார்.

ஆனிலை அடிகளார்க்குத் திண்ணிய அன்பு கூர்ந்தவர் சிவகாமி யாண்டார் என்னும் திண்ணிய முனிவனார். அவர் வைகறை உணர்ந்து எழுவார். புனலில் மூழ்குவார். வாயும் கட்டுவார். மொய்ம்மலர் நெருங்கு வாச நந்தன வனத்து முன்னிச் செல்வார். கையினில் தெரிந்து நல்ல கமழ்முகை அலரும் வேலைத் தெய்வநா யகர்க்குச் சாத்தும் திருப்பள்ளித் தாமம் கொய்வார். சிவபிரானுக்கு அலங்கல் சாத்தி உண்ணிறை காதலோடும் புண்ணிய முனிவனார் சிவகாமி யாண்டார் ஒழுகுவார்.

மாக்கதையில் வரும் மறையவர்கள் சிவபிரானை அன்றிப் பிறிதொன்று சிந்தியாதவர்கள். மதிசூடும் அண்ணலாரையும் அவர் அடியார் தமையும் ஆதரித்து அன்பு செய்தல் இம்மைப் பேறு என இன்புறுவர். பொய்யாய செல்வத்தில் புக்கழுந்தாது மெய்யாய மெய்ம்மையை உணரப்பெற்ற மெய்ஞ்ஞானிகள் அவர்கள். அவர்கள் வளர் திருத்தொண்டு எஞ்ஞான்றும் எவ்வுலகிலும் நின்று நிலாவுக.

வாழ்க அந்தணர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்/நாயன் மார்பதி ஸ்ரீ தேவிராஜ ராஜேஸ்வரி

அம்பாள் மீது குருபீடாதிபதியவர்கள் பாடிய

## திரு ஊஞ்சற் பாமாலை



பேரார் நாயன்மார் பதிவீற் றன்னைமீது
சீரார் திருவூஞ்சல் செப்பிடவே - நேராக
அஞ்சு முகவனளித்த ஆனைமுகத் தையனிரு
கஞ்ச மலர் செஞ்சரணம் காப்பு//



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. நலந்திகழும் பிரணவமே கால்களாக
நவிலுகின்ற நான்மறைகள் விட்டமாக
பலந்திகழும் புராணகலை கயிறதாக
பகருமருட் சிவாகமங்கள் பலகையாக
பொலந்திகழும் அம்பரமேல் விதானமாக
பொற்பொழுக வியற்றுமணி ஊஞ்சன்மீது,
நாயன்மார் கட்டிலுறை நாயகி ஸ்ரீதேவி//
ராஜ ராஜேஸ்வரியே ஆடீரூஞ்சல்//

2. மாலயனு மாதவரும் வடந்தொட்டாட்ட
மங்கை யுமைபாகரும் வளம் பாராட்ட
சாலமுறு நவகன்னியர் மாலை சூட்ட
சந்த்ர சூரியர் கவிகை யாடி நீட்ட
ஓலமுறு நாரதமுனி கீதநாதங்கூட்ட
ஒப்பரிய சதாசிவனும் மங்கல நாண்பூட்ட
நாயன்மார் பதியிலுறை நாயகியே ஸ்ரீதேவி
ராஜ ராஜேஸ்வரியே ஆடீரூஞ்சல்//

3. சின்மயஞ்சேர் செஞ்சுடர் பொலிந்து வீச
செப்பு நவ ரத்னமுகமும் பொலிந்து வீச
மின்மயஞ் சேரிளம்பிறையும் பொலிந்து வீச
விளங்குமர வுடனணிகள் பொலிந்து வீச
நன்நயஞ் சேரருட் கண்கள் பொலிந்து வீச
நின்னுருவ மென்கண்ணில் பொலிந்து வீச
நாயன்மார் பதியிலுறை நாயகி ஸ்ரீதேவி
ராஜ ராஜேஸ்வரியே ஆடீரூஞ்சல்//

4. பகர்தரு தேவமகளி ரணியணியாயாட,
பற்றுகுடை கொடி சாமரை பதிந்தேயாட,
நிகர்தரு பவளவடம் நிரைந்தேயாட,
நின்னுருவ மெய்யொளி நிறைந்தேயாட,
நின்னடிப் பேரின்பமெய்து பக்தராட
நிறை சென்னிமிசை நவரத்ன மகுடமாட
நலஞ் சூழ்ந்த நாயன்மார் நற்பதியுறையும்
நாயகி திரிபுர சுந்தரியே ஆடீரூஞ்சல்//

5. பக்தியொடு தேவர்கள் புரிதொட்டேயாட்ட
பூமகளும் நாமகளும் துதிபாடியாட்ட
பக்தியுறு தேவமகளிர் பரிந்தேயாட்ட
பற்றுமிகு விஞ்சையர் சுருதியோடேயாட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்திமுக விநாயகரு மசைத்தேயாட்ட
அறுமுகத்தையனுமருகு நின்றேயாட்ட
சித்தியுறு நாயன்மார் சீர்பதியிலுறையும்
ஸ்ரீ ராஜா ராஜேஸ்வரியே ஆடீரூஞ்சல்//

6. நச்சரவ நாகமணிப் படத்தினோடாட
நவமணிகள் நகர்ந்து நெளிந்தேயாட
பச்சைநிற விருதோளும் பரிந்தேயாட
பசுந்தோகை மயில்பீலி விரித்தேயாட
மச்சமுறுங் கடலையும் மோதியாட
மக்களது உள்ளங்களில் மகிழ்ந்தேயாட
இச்சையுறு நாயன்மார் பதியுறை ஸ்ரீதேவி
ராஜ ராஜேஸ்வரியே ஆடீரூஞ்சல்//

7. நிரந்தரி துரந்தரியே ஆடீரூஞ்சல்,
நிர்மலி நித்ய கன்னியே ஆடீரூஞ்சல்,
தரந்தரி புராதனியே ஆடீரூஞ்சல்,
தயாபரியே சகம்பரியே ஆடீரூஞ்சல்,
துரந்தரி திகம்பரியே ஆடீரூஞ்சல்,
தரணி புகழ் பூரணியே ஆடீரூஞ்சல்,
புரந்தரி சுந்தரியே ஆடீரூஞ்சல்
ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரியே ஆடீரூஞ்சல்//

8. தாயாகித் திகழ்ந்தவளே ஆடீரூஞ்சல்
தண்ணருளைச் சுரப்பவளே ஆடீரூஞ்சல்
மாயோன்றன் சோதரியே ஆடீரூஞ்சல்
மறைமுடிவி லிருப்பவளே ஆடீரூஞ்சல்
நாயேனை யடிமைகொண்டு ஆடீரூஞ்சல்
நலி மிடியைத் தொலைப்பவளே ஆடீரூஞ்சல்
சேயாருக் கருளநாயன் மார்பதியுறை
ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரியே ஆடீரூஞ்சல்//

9. அண்டபகி ரண்டநாயகி ஆடீரூஞ்சல்
அகிலாண்ட நாயகியே ஆடீரூஞ்சல்
தண்டமிழ்க் கலைநாயகி ஆடீரூஞ்சல்
துன்னுமறை வல்லநாயகி ஆடீரூஞ்சல்
கண்டமதில் நஞ்சுடை நாயகி ஆடீரூஞ்சல்
கயிலைமலை யரன்தேவி ஆடீரூஞ்சல்
மண்டலம் புகழ்நாயன்மார் பதியுறை ஸ்ரீதேவி
ராஜ ராஜேஸ்வரியே ஆடீரூஞ்சல்//



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழி

10. வேதசிவாகமமும் வைதிக நெறியும் வாழி/
வெண்ணீறு மைந்தெழுத்தும் ஓங்கி வாழி/
தீதகல் வேந்தர் செங்கோலோங்கி வாழி/
திருவளர் தொண்டர் திறம் ஓங்கி வாழி/
பேதமிலா தமிழ் மொழியும் ஓங்கி வாழி/
பேணியே பெருமழைபொழிய ஓங்கி வாழி/
ஓதுநாயன் மார்பதியிலுள்ளோர் வாழி/
ஒப்பரிய ஈஸ்வரி யருளும் வாழி, வாழி//

எச்சரிக்கை

11. சிற்சபையில் நடமிடுஞ் சித்ரூபி எச்சரிக்கை
சங்கரர்க்குத் தழும்புகந்த சங்கரியே எச்சரிக்கை
பொற்புமிகு குணபூஷண பூரணியே எச்சரிக்கை
பால்சுரந்த உண்ணாமுலையே எச்சரிக்கை
சொற்பதம் கடந்த சோதியுமையே எச்சரிக்கை
ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி யம்மையே எச்சரிக்கை
நற்பதி நாயன்மார்கட்டிலுறைதேவி எச்சரிக்கை
நாரணனார் சோதரியே நாரணியே எச்சரிக்கை//

பராக்கு

12. அங்கயற் கண்ணியாம் மாதே பராக்கு
அன்னமென மென்னடையாய் மாதே பராக்கு
பங்கய மிலங்கவரு மாதே பராக்கு
பக்தர்கள் புண்ணியர் பரவு மாதே பராக்கு
திங்களணி கொன்றையணி மாதே பராக்கு
திருவடியர் வினை தீர்க்கும் மாதே பராக்கு
துங்கமிகு நாயன்மார் பதியுறை மாதே பராக்கு
தாரகநற் பிரணவத்தின் மாதே பராக்கு//

லால

13. அன்புமிகு தேவர்கள் அறமியற்று மந்தணர்கள்
அதிசயிக்க நாயன்மார் பதியுறை தேவி லாலி/
துன்பம் துடைத்திடத் தோற்றினாயெங்கள்
துயரகைற்றித் துணைசெய்யுந் தூமணியே லாலி/
என்புருக எழுந்தருளி யென்றுமே எங்கள்
இதயக் கமலத்துறை உமையே லாலி/
இன்பமருள் நாயன்மார் திருப்பதியிலெங்கள்
ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி அன்னையே லாலி/



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்களம்

மங்களம் மங்களம் மங்களம் - ஜெயசுப
மங்களம் மங்களம் மங்களம் -
ஆதிசிவன் நாயகிக்கு அன்பருள வாசகிக்கு
சோதிமய பூரணிக்கு சுந்தரவதனியர்க்கு
பக்தர் தொழு நாயகிக்கு பவளச் செவ்வாயருக்கு
முத்தி தரு பூரணிக்கு மாது சுந்தரிக்கு மங்களம்
அத்திமுக னன்னையர்க்கு அயனைச்சிறைவைத்த
சக்திமிகு வேலவரின் சாற்றரிய தாயருக்கு மங்களம்
பொங்கு புகழ் ராஜேஸ்வரி அம்மையற்கு மங்களம்
தங்கு நாயன் மார் பதியில் உய்யவர்க்கு மங்களம்-மங்களம்.

கப்பற்பாட்டு

ஏலேலோ தத்தைதா ஏலவலி...........
பஞ்ச பூதங்களாம் பலகையினைச் சேர்த்து
பாங்காகக் கப்பலினைக் கட்டி அதன் நடுவே
மிஞ்சி ஒளிர் ஓங்காரப் பாய்மரம் நாட்டி
மிளிர்கின்ற நாற்கரண வட்டங்கள் நாட்டி
ஐந்து பொறி புலனைந்தும் சுக்கானாய்ப் பிடித்து
ஆகமம் மறை நான்கும் பாய்களாய் விரித்து
பஞ்சாட்சரச் சரக்கைப் பக்குவமாய் ஏற்றி
பரம் பொருளா மானந்தக் கடல் தனிலே மூழ்கி
பக்தியாம் காற்றடிக்க பக்குவமாய் ஆன்மா
முத்திக்கரை சேரப் போகுதடா கப்பல்
சக்தி ராஜேஸ்வரியின் சேவடியிலின்ப
சித்தியதைப் பேரின்பக் கரைசேரும் கப்பல்
- ஏலேலோ -

## பசுவைத் தெய்வமாக வழிபடும் காரணம்

பசுவைத் தெய்வமாகப் போற்றுவது இந்துக்களுடைய வழக்கம். எதற்காக இந்தச் சிறப்பு? பசுவின் பால் மிகச் சிறந்த உணவு இதைக் குழந்தைகளுக்குக் கூடக்கொடுக்கலாம். குறையெதுவும் இல்லாதது. போஷிப்பவர்களுக்குத் தாராளமாக அது பால் தருகிறது. பசுவின் சாணம் கிருமிகளைக் டிகால்லக்கூடிய சக்தி உள்ளது. அதனால் தான் வீடு மெழுக, வாசல் தெளிக்க இதைப் பயன்படுத்துகிறோம். பசுவின் பால், நெய், சாணம், கோமயம், தயிர் ஆகிய ஐந்தையும் பஞ்ச கவ்யம் என்று கூறுவர். இது நோய் போக்கும் குணம் உடையது. எனவே பசுவைக் கொண்டாடுகிறோம்.

காமகோடி பீட சங்கராச்சாரியார்
*ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# நெஞ்சில் நிறைந்த நன்றிகள்

எமது தந்தையார் - ஷடமர்ஷண கோத்திர திலகம், இலங்கையின் முதலாவது இந்துமத குருபீடாதிபதியாகத் திகழ்ந்து வானுறையும், தெய்வமாக ஓம்பப்படும் சிவாகமஞானி, சிவாச்சாரிய சிம்மம், அருள்ஜோதி டாக்டர் ஸ்கந்த சாம்பசிவ சிவச்சாரியார் அவர்களின் 80வது ஜயந்தி தினம் இன்று (06-08-2002) பெருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

முதற்கண், இவ் விழாவினைத் தலைமையேற்று சிறப்பாக நடாத்துவதற்கு பல சிரமங்களின் மத்தியிலும் இந்தியாவிலிருந்து வருகை தந்த பேரன்பிற்கும் பெருமதிப்புக்குமுரிய "சைவசித்தாந்த சாகரம்" காஞ்சிபுரம் K. ராஜப்பாக் குருக்கள் அவர்களுக்கும் "ஆத்ம பஞ்சகம்" என்கிற இறுவெட்டினை (C.D) குருபீடாதிபதியின் ஞாபகார்த்தமாக நாம் வெளியிடமுன் வந்த போது அம் முயற்சியினை சீர்தூக்கி ஆராய்ந்து ஊக்கமளித்து இன்று அவ் வெளியீட்டுரையை நிகழ்த்திய மதிப்பிற்குரிய "வேதபாராயண சாதகரத்னா" மயிலாப்பூர் டாக்டர் G. ஸ்ரீநிவாச சாஸ்திரிகளுக்கும் என் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

மேலும் இவ்விழாவில் பிரதம அதியாகக் கலந்து கொண்ட கௌரவ அமைச்சர் தி. மகேஸ்வரன் அவர்களுக்கும், சிறப்பு அதிதிகளாகக் கலந்து கொண்டு சிறப்பித்த கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் நன்றிகள் பல. விழாவினைச் சிறப்புற நடாத்த மண்டபத்தை நல்மனத்துடன் வழங்கிய பெருமதிப்பிற்குரிய தெ.ஈ. ஈஸ்வரன் அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம்.

பீடாதிபதியின் 80வது ஜயந்தி தினமாகிய இன்று வெளியிடப்படும் ஜயந்தி மலரிலே இடம்பெறுகின்ற ஆசியுரைகளையும், கட்டுரைகளையும் தந்துதவிய விப்ரசிரேஷ்டர்களுக்கும், ஆஸ்திகப் பெருமக்களுக்கும் நன்றிகள் பல. இம் மலரினைச் சிறப்பான முறையிலே வெளியிட வேண்டுமென்ற பேரவாவோடு எம்முடன் தோளோடு தோள் நின்று சிரமம் பாராது கருமமே கண்ணாயிருந்து மலரினைத் தொகுத்துதவிய திருமதி ஹேமா சண்முகசர்மா அவர்களுக்கும் மேற்பார்வை செய்த அவர்தம் கணவர் திரு. சண்முகசர்மா அவர்களுக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றிகள். மேலும் எம்முடன் கூடவிருந்து இப்பணியிலே தன்னை ஈடுபடுத்திக் கொண்டு உதவிகள் பல புரிந்த கிரான்பாஸ் ஞானபைரவர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பால ரவிசங்கர குருக்கள் அவர்களும், மஹாஸ்ரீ வித்யா சர்வதே குருபீட அமைப்பாளர் பிரம்மஸ்ரீ இ. பாபு சர்மா J.P. அவர்களும் என்றும் நினைவிற்கொள்ளத் தக்கவர்கள்.

இவ் விழாவிற்கு அனுசரணை வழங்கிய முன்னேஸ்வரம் தேவஸ்தானத்திற்கும் ஆலயத் தர்ம கர்த்தாக்களுக்கும், ஆன்மிகப்பெருமக்களுக்கும் எம் நன்றிகள் உரித்தாகுக. மேலும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீடாதிபதியின் இந்த ஜெயந்தி தினத்திலே வெளிவருகின்ற இலங்கையின் கன்னி வெளியீடாக உலாவிவருகின்ற வேதாகமநாதம் "ஆத்ம பஞ்சகம்;" என்கிற இவ் இறுவெட்டினை வெளியிடுகின்ற இத்தருணத்தில் இதற்குப் பலவழிகளிபும் உடனிருந்து உதவிபுரிந்த "இசைக்கலாபமணி" பிரம்மஸ்ரீ இரா. நீதிராஜ சர்மா அவர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். அத்துடன் இந்நூலினை அச்சிட்டு உதவிய கீதா பப்ளிகேஷன் நிறுவனத்தார்க்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## ஆத்மபஞ்சகம் C.D. வெளியீட்டிற்கும்
## ஜயந்தி மலருக்கும் அனுசரணை வழங்கியோர்:

01. சிவஸ்ரீ சாமி ரகுபதிக் குருக்கள் - (அமெரிக்கா)
02. சிவஸ்ரீ T. சரவணபவானந்தக் குருக்கள் - அடிஸ்வில் முருகன் கோவில் சுவிஸ்)
03. சிவஸ்ரீ துரை உமாசங்கரக் குருக்கள் (சித்திவிநாயகர் தேவஸ்தானம் ஜெனீவா)
04. சிவஸ்ரீ பேரானந்த - துளசீஸ்வரக் குருக்கள் (முருகன் கோவில், பேர்ண்)
05. சிவஸ்ரீ ராம் - தேவலோகேஸ்வரக் குருக்கள் (லண்டன்)
06. சிவஸ்ரீ சுப்பிரமணிய கண்ணப்பாக் குருக்கள் (கனடா)
07. முனீஸ்வரம் தேவஸ்தானம் - சிலாபம்
08. எமது சீடர் சைவக்குருமணி வைத்யநாதன் (லண்டன்)
09. சோ. சுகுமார சர்மா (பேர்ண் முருகன் கோவில் - சுவிஸ்)
10. T.K.T. அசோசியேற்ஸ் எசன்ஷல் உரிமையாளர் க. தம்பியப்பன் அவர்கள்.

மேலும் நினைவுக்கெட்டாத வகையிலே நன்றி கூறாது விடப்பட்டோருக்கும் எனது நன்றிகளைக் கூறிக் கொள்கிறேன்.



சுபம்

இவ்வண்ணம்
சாகித்ய சங்கிரகர்,
சாம்பசிவதாசன்,
ஷடமர்ஷண சாம்பசிவ ஜெகதீஸ்வர சிவாசாரியார்
ஸ்ரீதேவி குமுகுல சபரிபீடம் - இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப்ரஸ்தாவநா - அறிமுகம்

இசைக்கலாபமணி இரா-நீதிராஜசர்மா

குருவந்தநம் - குருவந்தனம்

கலைமாமணி–சாம்பசிவசோமாஸ்கந்தசிவாசாரியார்

விசேஷஸந்தி - விசேஷசந்தி

சர்வசாதகம் சாம்பசிவதாசன் ஷடமர்ஷண சா–ஜெ–சிவாசாரியார்

பூதசுத்தி - பூதசுத்தி

சர்வசாதகம் சாம்பசிவதாசன் ஷடமர்ஷண சா–ஜெ–சிவாசாரியார்

அந்தர்மாத்ருகா - அந்தர் மாத்ருகா

பண்டிதர் சாம்பசிவ ராஜாகுருக்கள், சா–ஜெ–சிவாசாரியார்

பஹிர்மாத்ருகா - பஹிர் மாத்ருகா

சர்வசாதகம் சாம்பசிவதாசன் ஷடமர்ஷண சா–ஜெ–சிவாசாரியார்

அந்தர்யாக: - அந்தர்யாகம்

சர்வசாதகம் சாம்பசிவதாசன் ஷடமர்ஷண சா–ஜெ–சிவாசாரியார்

ஆத்மநிவேதநம் - ஆத்மநிவேதனம்

சர்வசாதகம் சாம்பசிவதாசன் ஷடமர்ஷண சா–ஜெ–சிவாசாரியார்


ஒலிப்பதிவு: மதுரம் ஓடியோ சிஸ்ரம்ஸ் (077–882307)
**Mathuram Audio Systems**
*309 1/6, Galle Road, Colombo-6*





வெளியீடு
ஸ்ரீதேவி குருகுல சபரிபீடம்
இல. 68–1–1/4 ஜோசப் டயஸ் லேன்
கொழும்பு–15, இலங்கை
T.P. / FAX - 529709




श्री लङकायाः प्रथम गुरुपीठाधिपतिः अरुल्जोति स्कन्द शम्भशिवशिवाचार्य पूज्यस्य अशीतितम जयन्ति महा उत्सव अनुस्मरण प्रकाशितम्


இலங்கையின் முதலாவது குருபீடாதிபதி அருள்ஜோதி ஸ்ரீஸ்கந்த ஸாம்பசிவ சிவாசாரியார் அவர்களின் எண்பதாவது ஜயந்திவிழா ஞாபகார்த்த வெளியீடு

# ஆத்ம பஞ்சகம்
# ஆத்மபஞ்சகம்



வேதாகம நாதம்:
"சாஹித்யசம்கிரகர்" "சாம்பசிவதாசன்"
ஷடமர்ஷண
சாம்பசிவ. ஜெகதீஸ்வரசிவாச்சாரியார் அவர்கள்
ஸ்தாபகர், அதிபர்,
ஸ்ரீதேவிகுருகுல சபரிபீடம்
நாயன்மார்கட்டு
இலங்கை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org